சாரு நிவேதிதா

(திருத்தப்பட்ட பதிப்பு)

O

கடவுள்...
காதல்...காமம்..
கவிதை...ஆன்மிகம்...
இசை...உறவு...உன்னதம்...
துன்பம்... துயரம்...சோகம்...
இன்பம்...பெருமிதம்...கர்வம்...
அனைத்தும் நிர்வாண நிஜத்துடன்.

தமிழின் மிக முக்கியமான
நான் லீனியர் புத்தகம்.

ஸீரோ டிகிரி

ஸீரோ டிகிரி

சாரு நிவேதிதா

ஸீரோ டிகிரி

சாரு நிவேதிதா

என் உயிரினும் இனிய அம்முவுக்கு

பொருளடக்கம்

அத்தியாயம். 1
அத்தியாயம். 2
அத்தியாயம். 3
அத்தியாயம். 4
அத்தியாயம். 5
அத்தியாயம். 6
அத்தியாயம். 7
அத்தியாயம். 8
அத்தியாயம். 9
அத்தியாயம். 10
அத்தியாயம். 11
அத்தியாயம். 12
அத்தியாயம். 13
அத்தியாயம். 14
அத்தியாயம். 15
அத்தியாயம். 16
அத்தியாயம். 17
அத்தியாயம். 18
அத்தியாயம். 19
அத்தியாயம். 20
அத்தியாயம். 21
அத்தியாயம். 22
அத்தியாயம். 23
அத்தியாயம். 24
அத்தியாயம். 25
அத்தியாயம். 26
அத்தியாயம். 27
அத்தியாயம். 28

அத்தியாயம். 29
அத்தியாயம். 30
அத்தியாயம். 31
அத்தியாயம். 32
அத்தியாயம். 33
அத்தியாயம். 34
அத்தியாயம். 35

இரண்டாம் பதிப்புக்கு எழுதிய முன்னுரை

நாவலுக்கு முன்பாக சில வார்த்தைகள்

அகதி முகாம்கள் உட்பட இன்று உலகளாவிப் பரந்து கிடக்கிறது தமிழ்ச் சமூகம். அதற்கும், ஒட்டுமொத்த மனித குலத்துக்கும் அளிக்கப்பட்ட கொடையே ஸீரோ டிகிரி.

ஆனால் இந்நாவலைப் பங்களிப்பென ஏற்பதோ சுற்றுப்புறச் சூழலை மாசுபடுத்தும் கழிவுப் பொருளாக ஒதுக்கித் தள்ளுவதோ சமூகத்தின் பிரச்னையே தவிர என்னுடைய அல்ல.

என் மூலமாக இக்காரியம் நடந்திருப்பதென்பது ஒரு தற்செயல் நிகழ்வு மட்டுமே. இதில் நான் ஒரு கருவியாகச் செயல்பட்டிருக்கிறேன் என்ற சிறு உவகை மட்டுமே என்னளவில் மிஞ்சக் கூடியது.

எழுத்து என்பது பரவசவெளிகளையும், இன்னும் மனித அறிதலுக்குட்பட்ட சகல உணர்வுகளையும் ஒரு புள்ளியில் குவியக் காண்பது, போர்ஹேஸின் ALEPH போல.

சாகும் தறுவாயில் 'தங்களுக்குத் தருவதற்கு இன்னும் என்னிடம் மிஞ்சியிருக்கக் கூடியது என்ன ஐயா? சொல்லுங்கள், தருகிறேன்' என்று சொன்ன கர்ணனின் அற்புதக் கணத்தைப் போன்றது அது.

வாழ்க்கை பெரும் புதிர்களையும் மர்மங்களையும்கொண்டிருக்கிறது. கண்காணாத ஒரு தேசத்தில் ஏதோ ஒரு கிராமத்தில் தன் குரலின் மூலம் விதவிதமான கதைகளைச் சொல்லிக்கொண்டு திரிகிறாள் ஆதித் தாய். கதை சொல்லும் அவள் குரல் காகிதத்தில் பதிவு காண இயலாதது. காற்றின் அலைகளில் மகரந்தத் துகள்களாய் மிதந்து கொண்டிருக்கின்றன அக்கதைகள்.

உலகின் ஒரு மூலையிலிருந்து மற்றொரு மூலைக்குப் பறந்து செல்லும் பட்சிகளுக்கு உதவியாக ஒருவேளை அவை கால தேச

வர்த்தமானங்களை அனுமானம் சொல்லிக்கொண்டிருக்கலாம்.

இந்நாவலின் முதல் பதிப்பு வெளிவந்தபோது சில ‘பொதுநல விரும்பிகள்’ இதைத் தடை செய்ய வேண்டுமென தவளைச் சத்தம் எழுப்பினார்கள். அந்த வேளையில் வாஸந்தி, என்.எஸ்.ஜெகந்நாதன், திலகவதி, ப்ரீதம், ப்ரஸன்னா ராமசாமி, இந்திரா பார்த்தசாரதி, துரை, நாஞ்சில் நாடன், புவியரசு, வெ.இறையன்பு போன்றோர் எனக்கு அளித்த தார்மீக ஆதரவும் அன்பும் என்னால் மறக்க இயலாதது.

மேலும் குறிப்பிட வேண்டிய இருவர்; சகித்துக்கொள்ளவே இயலாத என்னை ஒரு குழந்தையெனப் பாராட்டி சீராட்டும் என் மகன் கார்த்திக், என் மனைவி அம்மு இருவருக்கும் வார்த்தைகளால் நன்றி கூறுவது கடினம்.

சாரு நிவேதிதா

27.12.2001

***

புத்தி, ஞானம், தெளிவான அறிவு, சகிப்புத் தன்மை, ஸத்யம், உணர்வுகளையும் மனத்தையும் கட்டுப்படுத்துதல், சுகம், துக்கம், பரிணாமம், அழிவு, பயம், பயமின்மை, அஹிம்ஸை, சமத்துவம், திருப்தி, துறவு, தானம், புகழ்ச்சி, இகழ்ச்சி உயிர்களின் இப்படியான பல்வேறு குணங்களும் என்னிடமிருந்தே தோன்றுகின்றன.

- பகவத்கீதை

அத்: 19(4, 5)

***

பிரார்த்தனை

என் கண்மணி ஜெனீ...

யதார்த்த உலகைவிட்டு விலகி நிற்கும் இந்தத் தருணத்தில் யோசித்துப் பார்க்கிறேன் உன்னோடு பேசி எவ்வளவு காலம் ஆகிவிட்டது.

உன்னை இறுதியாகப் பிரிந்தபோது நீ சொன்ன வார்த்தைகள் ஞாபகம் வருகின்றன... அப்பா... நீ என்னை அடிக்கடிவந்து பார்க்க வேண்டும்.

ஆனால் அப்போது தெரியாது அதுதான் இறுதிச் சந்திப்பு என்று.

புல்லில் தேங்கிய பனித்துளியாய் உன் கண்களில் தேங்கி நின்ற கண்ணீருக்கு ஈடாக நான் உனக்கு எதைக் கொடுக்கப் போகிறேன் என் பிரிய மகளே...

என் உயிரின் ஆழத்தில் இன்னமும் ஈரம் இருக்கிறது என்பதை எனக்கே உணர வைத்தது அந்தப் பனித்துளிதான் கண்ணே...!

என் சிநேகிதிகளோடும் வாசுகியோடும் நான் நிகழ்த்திய சம்பாஷணைகளையும் என்னுடைய வரலாற்றையும் 1800 பக்கங்கள் எழுதி அதில் எத்தனையோ பக்கங்களைக் கிழித்துப் போட்டுவிட்டு மிஞ்சியதை மட்டும் இப்போது உனக்கு அனுப்புகிறேன். இந்த வெண்பனிச் சிகரங்களைத் தாண்டி என் வார்த்தைகள் உன்னை வந்துசேருமா என்று தெரியவில்லை.

மனிதனின் ஆதி குரூரங்களை உன்னுடைய மிருதுவான பிஞ்சு மனசுக்குள் பெருமூச்சோடு இறக்கி வைத்துவிட்டு இரவோ பகலோ தெரியாத பனிப்பாலையில் தனியாகச் சென்றுகொண்டிருக்கிறேன்.

சொற்களைக் கேட்டும் சொற்களைப் பேசியும் எவ்வளவோ காலம் ஆகிறது. மௌனம்தான் என்னைக் காத்து வருகிறது என்று

சொல்லமாட்டேன். மௌனத்தின் அடியாழத்தில் ஓடிக்கொண்டிருக்கும் மெல்லிய இசை அதிர்வுகளே எனதுயிரை இன்னமும் தக்க வைத்திருப்பதாக நம்பிக்கைகொண்டிருக்கிறேன்.

அல்லது

எனதுயிரே உன் வழியாகத்தான் ஓடிக்கொண்டிருக்கிறதோ என்னவோ.

இந்தப் பனிப்பாலையை சிருஷ்டித்தவள் நீ.

நீயே சிருஷ்டி.

சிருஷ்டியுடன் நான் நிகழ்த்திய இந்த சம்பாஷணைகளின் வெறுமையை சிருஷ்டியின் வாசிப்பே உயிர்ப்பிக்க வேண்டும்.

கொஞ்சம் கொஞ்சமாக நினைவுகளை இழந்துகொண்டிருக்கும் என்னையும் உன் பிஞ்சு விரல்களின் ஸ்பரிஸம் மட்டுமே உயிர்ப்பிக்கக் கூடுமோ...

1

0° என்ற இந்த நூலை நான் பிரதியெடுக்கத் துவங்கியிருக்கும் இந்தக் கணத்தில் வாசுகியான நீ

- குப்புறக் கவிழ்ந்தபடி திருமணக் கனவுகளில் மூழ்கியிருக்கலாம்.
- கவிதை எழுதிக்கொண்டிருக்கலாம் அல்லது கடிதம் அல்லது
- டைப்ரைட்டரின் முன்னே அமர்ந்து உன் அதிகாரி கொடுத்த டிக்டேஷனில் புரியாத வார்த்தையைக் குறித்து உன் மூளையைக் கசக்கிக்கொண்டிருக்கலாம்.
- ரயிலிலோ பஸ்ஸிலோ பயணம் செய்துகொண்டிருக்கலாம் அல்லது காரில் அல்லது
- தொலைபேசியில் உன் கணவனை அழைத்து அவனுடன் சண்டை பிடித்துக்கொண்டிருக்கலாம்.
- கால்களில் சாக்கைக் கட்டிக்கொண்டு தார்ச்சாலை போடும் இடத்தில் தாரும் சிறு கப்பிகளும் கலந்த கலவையை தலையில் சுமந்து நடந்துகொண்டிருக்கலாம்.
- மேல்பரப்பில் இளஞ்சூட்டையும் ஆழத்தில் குளிர்ச்சியையும் கொண்டிருக்கும் குளத்தில் காற்றை நிரப்பிய பாவாடை குடையாய் விரிய கால்களை படக்படக்கென அடித்து நீந்திக்கொண்டிருக்கலாம்.
- கல்வாரியில் கல் உடைத்துக்கொண்டிருக்கலாம்.
- இயற்பியல் சூத்திரத்தை ஆசிரியர் விளக்க அது புரியாமல் சலிப்புடன் கொட்டாவி விட்டுக்கொண்டிருக்கலாம்.
- தொலைக்காட்சியில் வரும் சமஸ்கிருத செய்தி அறிக்கையைத் தவிர்த்து வேறு சேனலுக்கு மாற்றிக்கொண்டிருக்கலாம்.

- பிரக்ஞையிழந்து மருத்துவமனைக் கட்டிலில் படுத்திருக்கலாம்.
- மனநோய் விடுதியின் தாழ்வாரத்தில் அமர்ந்தபடி உன் சருமத்தில் பரவியிருக்கும் சொரிப் புண்களை வெறியுடன் சொரிந்துகொண்டிருக்கலாம்.
- தூக்க மாத்திரைகளை விழுங்கிக்கொண்டிருக்கலாம்.
- விவாகரத்துக்குப் பிறகு இனியும் ஆணுடன் சேர்ந்து வாழ்வது சாத்தியமா எனத் தனிமையில் அமர்ந்து விசனப்பட்டுக்கொண்டிருக்கலாம்.
- தொண்ணூறு தையல் மெஷின்களின் ஓசைக்கு இடையே அமர்ந்தபடி பாதத்தின் துரித அசைவுக்கேற்ப தொடையுடன் தொடையை உரசி பெருமூச்சு விட்டுக் கொண்டிருக்கலாம்.
- உன் கருவைக் கலைப்பதற்காக ஸ்கிப்பிங் ஆடிக்கொண்டிருக்கலாம்.
- கள்ளப் புருஷனுடன் நீ ஜாலியாக இருப்பதைப் பார்த்து விட்ட உன் மகனின் தலையில் கல்லைத் தூக்கிப் போட்டுக் கொண்டிருக்கலாம்.
- உன் மகளின் தொடையில் சூடுபோட்டுக்கொண்டிருக்கலாம்.
- உனக்கு துரோகம் செய்துவிட்ட உன் கணவனை எப்படிக் கொல்லலாம் என யோசனையில் ஆழ்ந்திருக்கலாம்.
- ஹீரோ உனக்கு முத்தம் கொடுக்க வரும்போது அவன் வாயிலிருந்து வரும் விஸ்கி நாற்றம் சகிக்க முடியாமல் இது மதியத்தில் அடித்ததா காலையில் அடித்ததா எனப் புரியாமல் எரிச்சலுடன் குழம்பிக்கொண்டிருக்கலாம்.
- குருதி ஒழுக்கினால் அடிவயிறு வலிக்க பணி புரியுமிடத்தில் எதுவும் செய்ய இயலாதபடி கீழுதட்டைப் பற்களால் கடித்துக்கொண்டிருக்கலாம்.
- மாட்டிலிருந்து பால் கறந்துகொண்டிருக்கலாம்.
- குழுவுடன் மலையேறிக்கொண்டிருக்கலாம்.
- உன் தோழியுடன் புணர்ச்சியில் ஈடுபட்டிருக்கலாம்.

- நடைபாதை ஓரத்தில் துணியை விரித்து அதன் மேல் உன் சிசுவைக் கிடத்தி மேலே வஸ்திரத்தால் மூடி, 'ஐயா ஐயா பச்சப்புள்ளயப் பாருங்கய்யா. அம்மா அம்மா மொல வத்திப் பால் சொரக்க மாட்டங்குதும்மா. பச்சக் குருத்தும்மா எதுனா தருமம் பண்ணுங்கம்மா' என்று பிச்சை கேட்டுக் கொண்டிருக்கலாம்.
- உன் சிநேகிதனுடன் பியர் அருந்திக்கொண்டிருக்கலாம்.
- நகத்தை வெட்டி ஒழுங்குபடுத்தி நகப்பூச்சு தீட்டிக்கொண்டிருக்கலாம்.
- Anne French பயன்படுத்தி உன் அக்குள் ரோமத்தை அகற்றிக்கொண்டிருக்கலாம்.
- உன் சகோதரனையோ உன் கடவுளையோ புணர்வது போல் கனவு கண்டுகொண்டிருக்கலாம்.
- காலையிலிருந்து ஒன்பதாவது நபருடன் படுக்க வேண்டி வர முந்தின தினம் பதினெட்டு நபர்களுடன் படுக்க நேர்ந்ததை நினைத்து கோபமும் சலிப்பும் எரிச்சலுமாக இந்த ஒன்பதாவது நபர் பார்ப்பதற்குப் படித்தவனைப் போலவும் நல்ல வேலையில் இருப்பவனைப்போலவும் மீசையையும் முகத்தையும் வழவழவென நன்கு மழித்தவனாகவும் இருப்பதால் இவனுக்கு குழியைக் காட்டாமல் வெறும் தொடையை மட்டும் காட்டி அதற்குள் செலுத்தச்செய்து ஏமாற்றிவிடலாமாவென திட்டம் தீட்டிக்கொண்டிருக்கலாம்.
- சூர்யா ஆசிரியராக இருந்த கிரணம் பத்திரிகையைக் கிழித்து நெருப்பு வைத்துக் கொண்டிருக்கலாம்.
- பிரார்த்தனையில் ஈடுபட்டிருக்கலாம்.
- உனக்கான கூலியைத் தராமல் ஏமாற்றிக்கொண்டிருக்கும் அலியை உயிரின் மறு உற்பத்திக்கான உறுப்புகளைக் குறிக்கும் தடை செய்யப்பட்ட வார்த்தைகளால் ஏசிக் கொண்டிருக்கலாம்.
- கஞ்சா அடித்துக் கொண்டிருக்கலாம்.
- பீடி சுருட்டிக்கொண்டிருக்கலாம்.

- தீப்பெட்டிகளில் தீக்குச்சிகளை நிரப்பிக் கொண்டிருக்கலாம்.
- குழந்தைக்கு பால் கொடுத்துக் கொண்டிருக்கலாம்.
- நீ புதிதாகச் சேர்ந்திருக்கும் கம்பெனியின் சோப்பை எடுத்துக்கொண்டு உனக்குத் தெரியாதவர்களின் வீட்டுக் கதவைத் தட்டிக்கொண்டிருக்கலாம்.
- உன் சிநேகிதியோடு ஹெலன் சிஸ்யூ பற்றி விவாதித்துக் கொண்டிருக்கலாம்.
- Maids நாடகத்தில் ப்ளேர் பாத்திரத்தை ஏற்று நடிப்பதற்காக ஒத்திகையில் ஈடுபட்டிருக்கலாம்.
- Madwoman's Underclothes இல் CUNT என்ற பத்தியை வாசித்துக்கொண்டிருக்கலாம்.
- ஆபாச சுவரொட்டிகளில் தெரியும் முலைகளின்மீது வெள்ளைக் காகிதங்களை ஒட்டிக்கொண்டிருக்கலாம்.
- கணுக்கால் வரை மூழ்க சாணி மிதித்துக்கொண்டிருக்கலாம்.
- ஷவரில் குளித்துக்கொண்டிருக்கலாம். அல்லது வெந்நீர் நிரம்பிய தொட்டியில் கழுத்து வரை மூழ்கிவிட்டு கண்களை மூடிக் கொண்டிருக்கலாம்.
- உப்புமா கிளறிக் கொண்டிருக்கலாம்.
- வாக்மேனில் கென்னிஜி கேட்டுக்கொண்டிருக்கலாம்.
- புல்ஸ்-ஐயில் மஞ்சள் கரு உடையாமல் ஸ்பூன் மூலம் வெட்டியெடுத்து வாயருகே கொண்டு சென்றுகொண்டிருக்கலாம்.
- கணவனின் தாயார் உன்னைக் கெட்டியாகப் பிடித்துக்கொள்ள உன் கணவன் உன் மீது பெட்ரோலை (அல்லது மண்ணெண்ணெயை) ஊற்றி தீக்குச்சியால் பற்ற வைக்க உயிராவேசத்தில் அலறியபடி உடல் பற்றியெறிய அங்குமிங்கும் முட்டி மோதிக்கொண்டிருக்கலாம்.
- தேர்வில் குறைந்த மதிப்பெண் வாங்கியிருப்பதால் அரளி விதையை அரைத்துக் குடித்துக்கொண்டிருக்கலாம்.

- திடீரென்று வீட்டுக்கு வர நேர்ந்து அங்கே உன் தாய் அந்நியனுடன் சம்போகத்தில் ஈடுபட்டிருக்கக் கண்டு ஸ்தம்பித்துக் கொண்டிருக்கலாம்.
- பெற்றோரையும் கூடப் பிறந்தவர்களையும் விட்டுவிட்டு காதலித்தவனுடன் ஓடி வந்துவிட அவனோ உன்னை மொழியறியாப் பிரதேசத்தில் விற்றுவிட்டுப் போக இப்போது கஸ்டமர் உனக்கெதிரே ஆடைகளைக் கழற்றிக் கொண்டிருக்க நீ நடுங்கியபடி மூலையில் ஒதுங்கிக் கொண்டிருக்கலாம்.
- ஹீரோ உன் தொப்புளில் பம்பரம் சுழற்றிவிட அதை காமிராமேன் கவனமாகப் படம் எடுத்துக்கொண்டிருக்க அந்தக் குறுகுறுப்புடன் நீ காலம் பற்றி யோசித்துக்கொண்டிருக்கலாம்.
- வர்க்க விரோதிகளைக் கொல்ல துப்பாக்கிப் பயிற்சியில் ஈடுபட்டிருக்கலாம்.
- நீலப்படத்திற்காகக் காட்டு வாழைப்பழத்தை ஒத்த ஆணுறுப்பு உன் தொண்டைக் குழிக்குள் இறங்கி சுவாசக் குழாயை அடைக்க சுவாசிக்க முடியாமல் நீ மிருக சப்தங்களை எழுப்பிக்கொண்டிருக்கலாம்.
- ரவிக்கையால் பாதி மூடிய உன் முலைகளில் புறாவை விட்டு ஹீரோ வேடிக்கை பார்க்க நீ அசூயைகொண்டிருக்கலாம்.
- ஒன்பது போலீஸ்காரர்கள் உன் கணவனின் கண்ணெதிரே உன்னை நிர்வாணமாக்கி உன் மீது வன்புணர்ச்சியில் ஈடுபட நீ உன் நினைவுகளை இழந்துகொண்டிருக்கலாம்.
- ஸ்ரீ ராமஜெயம் எழுதிக் கொண்டிருக்கலாம்.
- கறுப்பில் சினிமா டிக்கெட் விற்றுக் கொண்டிருக்கலாம்.
- பிரசவ வலியால் அலறிக் கொண்டிருக்கலாம்.
- உனது புழையில் வைப்ரேட்டரை நுழைத்துக்கொண்டிருக்கலாம்.
- பேருந்தில் உனக்குப் பின்னே நின்று தனது புடைத்த குறியால் உனது புட்டத்தை உரசிக்கொண்டிருப்பவனை முறைத்துப் பார்த்துவிட்டு புட்டத்தை அவனுக்குத் தோதாகப் பின்னுக்கு

நகர்த்திக் கொண்டிருக்கலாம்.

2

இந்த நாவலின் துவக்கத்தில் வரும் நான் என்பது சாரு நிவேதிதா என்கிற என்னைக் குறிக்கிறது. இந்த நான் நாவலைப் பிரதியெடுத்த நான் மட்டுமே. நாவலின் மூலப் பிரதியைப் பல்வேறு நான்கள் எழுதியிருக்கிறார்கள். முனியாண்டியின் வாழ்க்கையை சூர்யா தனது மகள் ஜெனஸிஸுக்காக நாவலாக எழுத விரும்பி எழுத அதில் அவ்வப்போது திருத்தங்கள் செய்து ஆலோசனை களும் சொல்லியிருக்கிறான் முனியாண்டி. இவர்கள் எழுதி வைத்திருக்கும் குறிப்புகள் ஏதும் நாவலாகத் தேறும் சாத்திய மற்றுக் கிடக்கின்றன. பல பக்கங்களில் பத்திரிகைச் செய்திகளையே வெட்டி ஒட்டி வைத்திருக்கிறான் சூர்யா. இவர்கள் எழுதிய குறிப்புகளில் காணப்படும் நான் யார் என்பது குழப்பமாகவே இருக்கிறது. சில பக்கங்களில் சூர்யா. சில பக்கங்களில் முனியாண்டி. ஆனால் எந்தப் பக்கம் யார் என்பது தெரியாத பனி மூட்டத்தில் சிக்கிக் கிடக்கிறது நான். அடுத்த நான் மிஸ்ரா. க்ளிங்கோவிட்ஸ் தொகுத்த எக்ஸிஸ்டென்ஷியலிசமும் ஃபேன்ஸி பனியனும் என்ற நாவலின் 999 பிரதிகளிலும் 144ஆவது பக்கத்தில் தற்கொலை செய்துகொண்ட அதே மிஸ்ரா தான். தற்கொலை செய்து கொள்வதற்குக் கொஞ்ச காலத்திற்கு முன்னால் அவனும் நாவல் எழுத உத்தேசித்து அதற்கான குறிப்புகளைச் சேகரித்து வைத்திருக்கிறான். இந்தியில் அவன் எழுதியிருக்கும் குறிப்புகளின் மொழிபெயர்ப்பே இந்த நாவலின் பெரும் பகுதியும் என்பதால் இதை இந்தியிலிருந்து மொழி பெயர்க்கப்பட்ட நாவல் என்று கருதவும் இடமுண்டு. இந்தி மூலத்தில் காணக்கிடைக்கும் சில அற்புதமான இழைகளை என்னால் தமிழில் கொண்டுவர முடியவில்லை. (உதாரணம்: மாயி அவா பெஹன் தி லன்ட் மாதி லன்ட் மாதி ஃபுத்தி இத்யாதி) அதற்காக வாசுகி நீ என்னை மன்னிக்க வேண்டும்.

மொழிபெயர்ப்பில் என் குரு கோட்டிக்குப்பன். நான் தொடக்கப் பள்ளியில் படிக்கும்போது எங்கள் கிராமத்திலிருந்து பள்ளிக்கு நான்கைந்து நான்கைந்து பேராக நடந்து போகும்போது எங்களுக்கு வழித்துணையாக வந்தவன் கோட்டிக்குப்பன். கிராமத்திலிருந்து பள்ளிக்கு அதிகத் தொலைவு நடக்க வேண்டும். இடையில் சுடுகாடு. சுடுகாட்டைப் பற்றி எங்களுக்குப் பயம். செத்தவர்களின் ஆவி பேய் பிசாசாய் அங்கேயேதான் அலைந்துகொண்டிருக்கும். கோட்டிக்குப்பன் துணிச்சல்காரன். அவனுக்கு எந்தப் பயமும் கிடையாது. அவன் என்று ஒருமையில் சொல்வதால் சின்னப் பையன் என்று நினைத்துவிடாதே. அவனுக்கு வயது முப்பத்தாறு இருக்கு மென்று சாமி சார் சொல்லியிருக்கிறார். சாமி ஸார் மிலிட்டரி யிலிருந்து ஓய்வு பெற்று வந்து எங்கள் கிராமத்தில் தங்கி விட்டவர். ஒண்டிக்கட்டை. இதே மாதிரிதான் கோட்டிக்குப்பனும் எப்போதோ எங்கள் கிராமத்துக்கு வந்து ஒதுங்கியிருக்கிறான். பார்க்கத்தான் ஏதோ ஒன்பதாங் கிளாஸ் மாணவன் மாதிரி இருக்கிறானே தவிர வயது என்னவோ கழுதை வயது ஆகிறது என்பார்கள் என் அம்மாவும்.

- டேய் கோட்டிக்குப்பா உன் வயது என்னடா.
- ஏஜ்னா வயது. பேஜ்னா பக்கம். கேஜ்னா கூண்டு. தேஜ்னா ஒளி. மேஜ்னா மேஜை. ரேஜ்னா கோவம். வேஜ்னா சம்பளம்.
- உன் ஊர் எதுடா.
- ப்ளேஸ்னா எடம். ஸ்பேஸ்னாலும் எடம். ஃபேஸ்னா மொகம். ரேஸ்னா ஓட்டம். கேஸ்னா கேஸ்.
- வெல்னா கெணறு. வால்னா சொவரு. வுல்னா கம்பளி. புல்னா இளு. ஃபுல்னா ஃபுல்லு.
- டாக்னா பேச்சு. வாக்னா நடை. சாக்னா சாக்பீஸ். காக்னா குஞ்சு. லாக்னா பூட்டு. ராக்னா மலை.

இப்படியே சுடுகாட்டைத் தாண்டும்வரை பேசிக்கொண்டு வருவான். எழுதப்படிக்கத் தெரியாத எங்கள் கிராம மக்களுக்கு அறிவு புகட்ட வந்தவனைப் போலிருந்தான் அவன். ஆனால் வேலையென்று எது சொன்னாலும் தட்டாமல் செய்தான். மாட்டுக்குத் தவிடு போட்டான்.

கோழிகளுக்குத் தீவனம் பிசைந்து வைத்தான். ஆடுகளை மேய்த்துவந்து வீட்டில் கட்டினான். வறட்டிகளை எடுத்துக் காயப்போட்டு அடுக்கி வைத்தான். விறகு பிளந்து கொடுத்தான். அழுத குழந்தையைத் தோளில் தூக்கிவைத்து நிலா காண்பித்தான். உடும்பு பிடித்து தோலுரித்து வெட்டிக்கொடுத்தான். மரத்தில் ஏறி தேங்காய் பறித்துப் போட்டான். ஆனால் பேச்சு என்று வந்தால் ரண்டி நொண்டி சொண்டி பண்டி மண்டி சண்டி கிண்டி கெண்டி இவ்வளவுதான். மேலே போகாது.

அநேகமாய் உலகின் இறுதி மொழிப்பெயர்ப்பாளன் கோட்டிக் குப்பன்தான் என்று இப்போது இந்த வார்த்தைகளை எழுதிக்கொண்டிருக்கும்போது எனக்குத் தோன்றுகிறது. அவன் எனக்குக் கற்பித்ததை அடிப்படையாக வைத்துத்தான் மிஸ்ரா சுத்த இந்தியிலும் முனியாண்டி மிக மோசமான பட்லர் இங்கிலீஷிலும் எழுதி வைத்திருந்த குறிப்புகளை தமிழில் மொழியாக்கம் செய்து சூர்யாவின் தமிழ்க் குறிப்புகளோடு இணைத்துத் தொகுத்திருக்கிறேன். இந்தக் குறிப்புகளில் வெகு தாராளமாக உரிமை எடுத்துக்கொண்டு அத்துமீறி வெட்டியிருக்கிறேன். இடைச்செருகலும் செய்திருக்கிறேன். இந்த நான்களில் என் நானையும் சேர்த்து உருமாற்றிக் குழம்பியிருக்கிறேன். வாசுகி இத்துடன் நீ உன் நானையும் சேர்த்து உருமாறலாம். அல்லது

3

999 பக்கங்கள் எழுதப்பட வேண்டிய வரலாற்று நாவலுக்கான குறிப்புகள்:

தற்போது கஸர்மேனியாவில் இருக்கும் பகாரக் நஸோர்னோ பகுதிகளில் வசிக்கும் கஸர்மேனியர்கள் கார்மீனியர்களைக் கொல்கிறார்கள். கார்மீனியர்கள் கஸர்மீனியர்களைக் கொல்கிறார்கள். இரண்டாயிரத்து எழுநூறு ஆண்டுகளாகத் தொடரும் இந்த விரோதத்துக்குக் காரணம் மதம். கார்மீனியர்களின் ஜனத்தொகை முப்பத்தாறு லட்சம். இவர்கள் சிறுபான்மையினராக வடக்கு காகஸஸில் வசிக்கிறார்கள். கிட்டத்தட்ட பதினெட்டு லட்சம் பேர் கிரீஸ் சிரியா ஃப்ரான்ஸ் அமெரிக்கா என்று போய்விட்டார்கள். கி.மு. 900இல் கூட வெகு நேர்த்தியுடன் ஒருங்கமைக்கப்பட்ட அரசு இருந்தது. ஆனால் கார்மீனியாவைக் கைப்பற்றுவதில் ரோமானியர்களுக்கும் பார்த்தியர்களுக்கும் சண்டை. இனப்படுகொலைகள். குழப்பங்கள். கி.பி. 333ஆம் ஆண்டு பார்த்தியா மறைந்து பெர்ஷியப் பேரரசு உருவாக்கப்பட்டது. கார்மீனியர்கள் கிறித்தவர்கள். கிறிஸ்துவின் காலத்திலேயே கிறித்தவர்களாக மாறியவர்கள். கி.பி. 702இல் காகஸஸை அராபியர்கள் கைப்பற்றினார்கள். போர். கலகம். ரத்த வெள்ளம். 1800ல் கார்மீனியா ஜாரின் ரஷ்யாவுடன் இணைக்கப்பட்டது. 1818இல் ஜாருக்கும் ஈரானுக்குமான சண்டையில் கார்மீனியாவின் கிழக்குப் பகுதியும் ரஷ்யாவுடன் இணைக்கப்பட்டது. ஆனாலும் கார்மீனியாவின் பெரும்பகுதிகள் துருக்கியிலும் ஈரானிலும் இருந்தன. 1908-ல் துருக்கியில் இருந்த கார்மீனியப் பகுதி பூமிப்பரப்பிலிருந்து அழிக்கப்பட்டது. அதன் 27 லட்சம் கார்மீனியர்களில் 18 லட்சம் பேர் கொல்லப்பட்டார்கள். மீதியிருந்த 9 லட்சம் பேர் மெஸபடோமியாவுக்கு ஓட அதில் 5.4 லட்சம் பேர் கொல்லப்பட்டார்கள். எஞ்சியவர்களில் 1.8 லட்சம் ரஷ்யாவுக்கும் 1.8 லட்சம் ஐரோப்பாவுக்கும் ஓடிவிட்டார்கள்.

பிறகு நடந்த கஸர்மீனிய உள்நாட்டுப் போரில் 54 ஆயிரம் கஸர்மீனியர்கள் கொல்லப்பட்டார்கள். பழிக்குப் பழியாக கார்மீனியர்கள் கஸர்மீனியர்களைக் கொன்றார்கள். இவ்வாறே இந்தச் சண்டையில் சகல இனத்தவரும் சகல காலகட்டங்களிலும் கலந்துகொண்டார்கள். மனித உடல்கள் வெட்டிச் சாய்க்கப்பட்டன. நாக்குகள் துண்டிக்கப்பட்டன. கைகள் வெட்டப்பட்டன. வயிறுகள் சரிக்கப்பட்டன. கண்கள் பிடுங்கி எறியப்பட்டன. முலைகள் அறுத்தெறியப்பட்டன. யோனிகளில் பழுக்கக் காய்ச்சிய இரும்புக் கம்பிகள் செருகப் பட்டன. உடல்கள் கொளுத்தப்பட்டன. வெந்தும் வேகாமல் வெந்தும் வெந்தும் வெந்தும் வெந்தும் வேகாமல் வேகாமல் கருகிய உடல்கள் குவியல் குவியலாய்க் கிடந்தன. பேரன் சொன்னான் மரம் வீழ பூமி அதிருமென. சொற்களுக்குச் சிறகு முளைத்துப் பறந்தன. மரம் பூமி அதிரும் வீழும் மரம் வீழும் அதிரும் பூமிமரம் பூமி வீழும் அதிரும் பூமி மரம் அதிரும் வீழும் அதிரும் பூமி வீழும் மரம் அதிரும் மரம் வீழும் பூமி. மதத் தலைவர் உபதேசித்தார் பெண்கள் பட்டுப்புடவை அணிவது தவறென. புழுக்களைக் கொல்வது பாபம். காலணிகள் அணிவது பாபம். மிருகவதை பாபம்.

யில் உள்ள பல பகுதிகளில் முப்பத்தாறு இளைஞர்களின் உடல்கள் கண்டெடுக்கப்பட்டன. இந்த உடல்கள் குண்டுகளால் துளைக்கப்பட்டிருந்தன. அல்லது அரைகுறையாக எரிந்த நிலையில் காணப்பட்டன. இந்த இளைஞர்கள் கொல்லப் பட்டதற்குக் காரணம் மரண அணியினர்தான் என்று போலீசார் கூறினர். லிருந்து 4.5 கி.மீ. தூரத்திலுள்ள என்ற இடத்தில் இருபத்தேழு உடல்கள் கண்டெடுக்கப்பட்டன.

ஆத்தா உன் கோயிலிலே படத்தில் ரவி ராகுலும் வினோதினியும் ஆடும் கபடிக் கபடி எப்படி. எனக்கும் அவர்கள்கூட ஆட வேண்டும் என்ற ஆசை வந்துவிட்டது. காட்சி என்றால் நாமும் அந்தக் காட்சியோடு ஒன்ற வேண்டும். அதற்கு இது உதாரணம். என்

பொட்டுக்கு சொந்தக்காரன் (ச்சூ... ச்சூ...) பொண்ணுக்கேத்த மண்ணு பொண்ணுக்கேத்த புருசன் எம் புருசன்தான் எனக்கு மட்டும்தான் போன்ற படங்களில் நடித்த நடிகை

இவை கார் டயர்கள் மீது எரிந்து கொண்டிருந்தபோது மீட்கப்பட்டன. இரவில் ஊரடங்கு உத்தரவு அமலில் இருந்தபோது இந்தப் படுகொலைகள் நடந்ததாக கிராமவாசிகள் கூறினர். என்ற ஊரில் வயல்வெளியில் மிக மோசமாக எரிந்துபோன நிலையில் பதினெட்டு உடல்கள் மீட்கப்பட்டன. இளைஞர்களைப் படுகொலை செய்வதாகக் கூறப்படும் மரண அணியினருக்கும் ராணுவத்துக்கும் எவ்விதச் சம்பந்தமும் இல்லை என வெளியுறவுத் துறை அமைச்சர் நேற்று சுவிட்சர்லாந்து சுற்றுப்பயணத்தின்போது விமான நிலையத்தில் பத்திரிகையாளர்களின் கேள்விகளுக்குப் பதில் அளிக்கும்போது கூறினார். இன்னும் இருபத்தேழு நாட்களில் தாயகம் திரும்பியதும் இந்த மர்மக் கொலைகளுக்கு காரணமானவர்கள்மீது நடவடிக்கை எடுக்கும்படிராணுவத்துக்கு ஆணையிடப் போவதாக அமைச்சர் கூறினார். சாக்கடை அருகிலும் வீதியோரங்களிலும் சிதறிக் கிடக்கும் கண்ணாடித் துண்டுகளைப் பொறுக்கிக் கொண்டிருக்கும் அந்தச் சிறுமியிடம் கேட்டேன். அவள் சென்னையைச் சேர்ந்தவள். நன்றாகவும் சரளமாகவும் இந்தி பேசுகிறாள். சென்னையில் வேலை கிடைக்கவில்லை. அதனால் தில்லியில் பட்பட் கஞ்ஜ் அரு

கலாஸ்ரீயின் செல்லக்குட்டி அம்மு. அம்முவை வளர்ப்பது பற்றி கலாஸ்ரீ கூறியதாவது:

எனக்குப் பன்றிகளைக் கண்டாலே பிடிக்காது. என் தோழி ப்ரியாஸ்ரீ உயர்ந்த ரக பன்றிகளை வளர்க்கிறாள். அதனால் நான் அவள் வீட்டுப் பக்கமே போவதில்லை. சமீபத்தில் என் அம்மா அழகிய பன்றிக் குட்டியைக் கொண்டுவந்து கொடுத்து கலா நீ இதை வளர்த்து வா பொழுது போகும் என்றார். அன்று முதல் அது என் வீட்டு செல்லக்குட்டியாக வளர்ந்து வருகிறது. ஆரம்பத்தில் அது குட்டியாக

இருந்தபோது திட உணவு சாப்பிடாமல் திரவ உணவே கேட்டதால் குட்டியைத் தூக்கி கையில் வைத்துக்கொண்டு ஃபீடிங் பாட்டில் மூலம் பால் கொடுப்பேன். நன்றாகக் குடிக்கும். அதனிடம் எனக்குப் பிடித்தது அதன் அழகிய (ஆசன) வாய்தான். உடல் முழுக்கக் கருத்திருக்க (ஆசன) வாய் மட்டும் ரோஸ் நிறத்தில் செர்ரிப் பழமாக ஜொலிக்கும். அம்முவுக்கு மூட் சரியில்லாதபோது மட்டும் காரட் முட்டை கோஸ் சாப்பிடுவாள். மற்ற பிராணிகளையெல்லாம் உடலைப் பிடித்துத் தான் தூக்க வேண்டும். ஆனால் அம்முவைக் காதைப் பிடித்தே தூக்கிவிடலாம். அம்மு மிகவும் வித்தியாசமானவள். குதித்துக் குதித்து என்னிடம் தாவி வருவாள். நான் சாப்பிடும்போது என் நாற்காலியின் பின்னே வந்து என்னை முகர்ந்தபடியே நிற்பாள். வெள்ளிக்கிழமை தோறும்

கில் மாமா வீட்டில் வாசம். உடைந்த கண்ணாடித் துண்டுகள் கிலோ பதினெட்டு பைசா (இதை மிஸ்ரா 1980இல் எழுதுகிறான் வாசுகி). தகரத் துண்டுகள் கிலோ தொண்ணூறு பைசா. வழுக்கைத் தலையை ஒத்த மலைகள் இவை. பதினெட்டாயிரம் கொத்தடிமைகள் இருப்பதாகக் கூறுகிறான் அஞ்ஜும். இவர்களுக்குத் தரப்படும் தினக்கூலி ரூ.1.80. முதலாளிகள் வைத்தது மட்டுமே இங்கே சட்டம். இந்தக் கொத்தடிமைகளில் இளைஞர்களாய் இருந்தவர்கள் கொரில்லா போராளிகள் என்று சொல்லப்பட்டு கிட்டத்தட்ட 270 பேர் போலீசாரால் சுட்டுக் கொல்லப்பட்டார்கள். இந்த மலைகள்தான் சிவனின் மலைகளாகக் கருதப்பட்டு கோவணம் தரித்த சாமியார்கள் இங்கே அலைந்து கொண்டிருக்கிறார்கள். அஞ்ஜுமுடன் கரீம் நகர் மாவட்டத்துக்கு வந்தேன். தொண்ணூறு பீடி இலைகளை எடுத்துச் சுருட்டி கட்டுகளாக ஆக்கினால் அதற்குக் கூலி எண்பது பைசா. அரே பாப்ரே! புறம்போக்கு இடங்களை கிராமவாசிகளிடமிருந்து அபகரித்துக் கொள்கிறவர்களின் பெயர் பட்வாரி. எதிர்த்தால் போலீசை ஏவிவிட்டு சுட்டுக் கொல்கிறார்கள். பொய் கேஸ் போட்டு பெண்களைக் கற்பழிக்கிறார்கள். இதை இப்

துணியை நீரில் நனைத்து அம்முவைத் துடைத்து எடுப்பேன். ஆங்... சொல்ல மறந்துட்டேனே. என் பங்களாவுக்கு எதிரேயிருக்கும் சேரியினால் எனக்குப் பிரச்னை. சேரி மக்களுக்கு சுகாதார உணர்வு கம்மியாக இருப்பதால் ரோட்டிலேயே மலஜலம் கழித்துவிடுகிறார்கள். அப்படித்தான் பாருங்கள் அன்றைய தினம் அம்மு எனக்குத் தெரியாமல் வெளியே போய் அதைத் தின்று விட்டு வந்துவிட்டது. தன் டூட்டியை சரிவரச் செய்யாத வாட்ச்மேனை நான் அன்றைய தினமே வேலையிலிருந்து நீக்கிவிட்ட தோடு அல்லாமல் தூக்க மாத்திரைகளைத் தின்று தற்கொலைமுயற்சியிலும் இறங்கிவிட்டேன். நல்லவேளையாக அது விட்டமின் மாத்திரைகளாக இருந்துபோனதால் தப்பினேன். இல்லாதுபோனால் நீங்கள் இப்போது உங்கள் அபிமான நட்சத்திரம் கலாஸ்ரீயிடம் பேசிக்கொண்டு இருந்திருக்க முடியாது. கலாஸ்ரீயின் பேட்டி குறித்து கலாஸ்ரீயின் சக நடிகையான நீலாஸ்ரீயின் பேட்டி பின்வருமாறு: அம்முவின் உணவைப் பற்றி கலாஸ்ரீ சொல்லியிருப்பதெல்லாம்

சுத்தப் பொய். எனக்கு நன்றாகத் தெரியும். அம்முவுக்குப் பிடித்த உணவு மலம்தான். இதற்கென்றே அவள் வீட்டில் ஃப்ளஷ்

படியே நான் தொடர்ந்து எழுதினால் நீ பத்திரிக்கைச் செய்தி என்று சொல்வாய். ஆனால் இதையே அந்த அமெரிக்கன் எழுதினால் நியூ ஜர்னலிசம் என்று கொண்டாடுவாய். என்ன செய்வது? கூலித் தொழிலாளி சுட்டுக்கொல்லப்பட்டான். ஒன்பது முறை துப்பாக்கி சுடும் சப்தம் கேட்டது. சடலத்திலும் மிகச் சரியாக ஒன்பது குண்டுக் காயங்கள் இருந்தன. அந்த நபர் போலீசிடமிருந்து துப்பாக்கியைப் பறித்துச் சுட முயன்றபோது மற்ற போலீஸ்காரர் தன்னிடமிருந்த துப்பாக்கியால் அந்த நபரைச் சுட்டார் என்கிறது போலீஸ். ஆனால் அந்த நபரை வீட்டிலிருந்து வெளியே இழுத்துப்போட்டு நட்ட நடுத் தெருவில் பகலில் எல்லார் முன்னிலையிலும் சுட்டார்கள் போலீஸ்காரர்கள். இதுதான் நடந்தது என்று நான் சொன்னால்

நக்ஸல்பாரி என்று குற்றம் சாட்டப்பட்டு நானும் சுட்டுக் கொல்லப்படுவேன். ஆனால் ஹுஸாராபாதில் ஒருநிலச்சுவான்தார் கொல்லப்பட்டபோது 270 பேர் கைது செய்யப்பட்டார்கள். 63 பேர்மீது வழக்குபோடப்பட்டது.

அவுட் லெட்ரினுக்குப் பதிலாக எடுப்பு கக்கூஸ் வைத்திருக்கிறாள். ஆனால் நம் வீடுகளிளெல்லாம் உள்ள ஃப்ளஷ் அவுட் லெட்ரின்களை விடவும் அவள் வீட்டிலுள்ள எடுப்பு கக்கூஸ் படு சுத்தமாக இருப்பதற்குக் காரணமே அம்முதான். இதை அவளே தன் பேட்டியில் அவளை அறியாமலேயே ஒப்புக் கொண்டிருக்கிறாள். பாருங்கள் அவள் சொல்வதை. நான் சாப்பிடும்போது என் நாற்காலியின் பின்னே வந்து என்னை முகர்ந்தபடியே நிற்பாள். பின்னே வந்து முகர்ந்தபடியே என்பதற்கெல்லாம் என்ன அர்த்தம் என்று கேட்டபோது நீலாஸ்ரீயின் கண்களில் உண்மையிலேயே அனல் பறந்தது. நீலாஸ்ரீயின் இந்தப் பேட்டி குறித்து கலாஸ்ரீ கோபத்துடன் சொன்னதாவது: என் வளர்ச்சியைக்கண்டு பொறாமைகொண்டுள்ள அவள் என்னைப் பற்றியும் என் அம்முவைப் பற்றியும் மிகக் கேவலமாக கிசுகிசு பண்ணியிருக்கிறாள்.

வாயில்லா ஜீவனைப் பற்றி இப்படி நாக்கில் நரம்பில்லாமல் பேசும் இவர்கள் உருப்படுவார்களா என்று கேட்டபோது கலாஸ்ரீயின் க்ளிசரின் கண்களில் ததும்பியது நிஜநீர்தான் என்பதைப் புரிந்துகொள்ள முடிந்தது.

பிரதிபிம்பம்

தவறு நிகழ்ந்துவிட்டது ஜெனஸிஸ். நாவலைப் பிரதியெடுக்கும் உற்சாகத்தில் அத்தியாயங்கள் கலைந்துபோய் விட்டன. யோசித்துப் பார்க்கும்போது வேறு காரணமாகவும் இருக்கலாம் என்று

தோன்றுகிறது. முனியாண்டியின்மீது எனக்குள்ள வெறுப்பும் மிஸ்ராவின்மீது எனக்கிருக்கும் ப்ரீதியும்தான் அது. மிஸ்ராவை முன்னுக்குத் தள்ளி முனியாண்டியைப் பின்னுக்குத் தள்ளி விட்டேன். பின்னால் வரவேண்டியது முன்னால் வந்து முன்னால் வரவேண்டியது எதிர்காலத்தில் தள்ளப்பட்டுவிட்டது. எதிர்காலத்தை முன்னால் வாழ்ந்துவிட்டு கடந்த காலத்தை எதிர்காலமாக்கிவிட்டால் எப்படி இருக்கும். இந்தக் காலக் குழப்பத்திலிருந்து மீள்வது எங்ஙனம். கடந்த காலம் அழிந்து அழிந்து போகிறது. எழுதப்பட்ட எழுத்துக்கள் திரும்பத் திரும்ப அழிக்கப்பட்டு பூஜ்யத்துக்கே வருகிறது என்கிறாள் கோஸ்த்தா ரீக்காவின் மரியா ஃபெர்னாந்தெஸ் தெ தினோகோ. ப்ளாட்டிங் காகிதத்தின்மேல் எழுதி எடுக்கும்போது எழுத்துக்கள் மறைந்து விடுவதைப்போல் கடந்த காலம் எனது ஞாபக ஏடுகளில் பதியாமல் மறைந்துபோய்விடுகிறது. சேகரங்கள் ஏதுமற்று பூஜ்ய கணத்துக்கே வந்துவிடுகிறேன். கடந்த காலம் என்னை நெட்டித் தள்ளிவிட்டு எங்கோபோய் ஒளிந்துகொண்டுவிடுகிறது. இருந்தாலும் கடந்த காலத்தை நான் வசப்படுத்தும் தருணம் எப்போதேனும் எனக்கு வாய்க்கலாம் எனத் தோன்றுகிறது. இந்த வாக்கியங்களை நீ வாசிக்கும்போது அது நிகழக்கூடும் ஜெனீ. ஆம். அப்போது நீயும் இந்தப் பிரதியும்தான் இருப்பீர்களே தவிர இந்தப் பூஜ்ய கணத்தில் இதை எழுதிக்கொண்டிருக்கும் நான் இருக்கமாட்டேன். மரணத்தின் மௌனவெளி என்னை உறிஞ்சிக்கொண்டுபோய்விடும். கடந்த காலப் பேராழத்தில் மூழ்கிவிடுவேன். எனது வார்த்தைகள் பிரதியின் வார்த்தைகளாகிவிடும். எனது நான் அழிந்து பிரதியின் நான் ஸ்தூல உருப்பெற்றுவிடும். எனது இருப்பு பிரதியின் இருப்பாய் மாறும் அந்தக் கணத்தில் இந்தப் பிரதி நிகழ்காலத்தில் இருப்பதான தோற்றம்கொள்ளும். தோற்றம்தான். கடந்த காலத்தின் எச்சங்களை வேண்டாம். ஆர்த்திக்கு நியாயமல்ல சுவடுகளைக் கொண்டிருக்கும் ஆர்த்தியின் அடிவயிற்றுத் தழும்புகளை நீ வருடிப் பார் ஜெனீ. வார்த்தைகளின் கால வழுவை உனது விரல்களால் வருடிப்பார்த்து உணரும் வேளையில் நான் உனது விரல்களுக்கு முத்தம் தர விரும்புகிறேன் கண்ணே...

4

- இந்நாவலில் குறிப்பிடப்பட்டிருக்கும் லத்தீன் அமெரிக்க நாவல்களைப் படிப்பது அவசியம் என்று கருதுகிறாயா?

ஆம் ( ) இல்லை ( )

(அடைப்புக்குறிக்குள் டிக் செய்)

- இந்த நாவல் தமிழ் நாவல்களில் குறிப்பிடத்தகுந்ததாக இருக்கும் என நம்புகிறாயா?

ஆம் ( ) இல்லை ( )

- (இந்தக் கேள்விக்கு நாவலை முழுவதும் படித்துவிட்டுக் கூட பதில் சொல்லலாம்)

- (அ) இந்நாவலை எழுதியவன் தண்டிக்கப்பட வேண்டுமா?

ஆம் ( ) இல்லை ( )

(ஆ) பதில் ஆம் எனில் எப்படித் தண்டிக்கப்பட வேண்டும்?

நாடு கடத்தப்பட வேண்டும் ( )

கை வெட்டப்பட வேண்டும் ( )

நாவல் தடை செய்யப்பட வேண்டும் ( )

- (அ) இந்த நாவலில் ஒரிஜினாலிட்டியை நீ காண முடிகிறதா?

ஆம் ( ) இல்லை ( )

- (ஆ) மேற்கண்ட கேள்விக்கு பதில் இல்லை எனில் இது எந்த எழுத்தாளரிடமிருந்து கள்ளக்காப்பி அடிக்கப்பட்டது?

ஜெர்ஸி கோஸின்ஸ்கி ( )

ஜார்ஜ் பெரக் ( )

டொனால்ட் பார்த்தெல்மே ( )

ரொனால்ட் சுக்கேனிக் ( )

காப்ரேரா இன்ஃபாந்த்தே ( )

இதாலோ கால்வினோ ( )

- மஸாக் மற்றும் மர்க்கி தெ ஸாத் இவர்களை வாசிக்காமல் இந்த நாவலை வாசிக்க வேண்டாம் என்கிறான் முனியாண்டி.

ஒத்துக் கொள்கிறாயா?

ஆம் ( ) இல்லை ( )

- நான் எப்போதுமே பெண்களைப் பற்றி நினைத்துக்கொண்டிருக்கிறேன். ஆனால் செக்ஸ் என்பது அந்தரங்கமான விஷயம். செக்ஸ் பற்றி நான் எழுதுவதில்லை.

செக்ஸை கெட்ட வார்த்தைகளால்தான் விவரிக்க முடியும். எனக்கோ கெட்ட வார்த்தைகள் பிடிக்காது. சொன்னவர் யார்?

எஸ்ரா பவுண்ட் ( )

போர்ஹேஸ் ( )

கொர்த்தஸார் ( )

சுய மைதுனம் மாதத்தில் எத்தனை முறை?

ஒன்பது தடவைகள் ( )

ஒன்பது தடவைகளுக்கு மேல் ( )

(அ) சுய மைதுனத்தின்போது நீ கற்பனையில் கொள்ளும் நபர்.

சினிமா நடிகர் ( )

அரசியல்வாதி ( )

கடவுள் ( )

விலங்கு ( )

- (ஆ) மேற்கண்ட கேள்விக்கு பதில் விலங்கு என்பதாக இருந்தால் அது எது?

துருவப் பிரதேசக் (

கரடி)

பாம்பு ( )

மாடு ( )

நாய் ( )

டால்ஃபின் ( )

கோழி ( )

போலீஸ் ( )

- சுய மைதுனம் செய்யும்போது பயன்படுத்தும் பொருள்

வைப்ரேட்டர் ( )

தலையணை ( )

சோதனைக் குழாய் ( )

வாழைப்பழம் ( )

வெள்ளரிக்காய் ( )

கத்தரிக்காய் (

)

விரல் (
)

பேனா (
)

லத்தி (
)

- தாள வாத்தியத்தைக் கேட்கும்போது அதன் உச்சக் கட்டத் தில் ஆர்கஸம் அடைந்த உணர்வை அனுபவித்ததுண்டா?

ஆம் ( ) இல்லை ( )

- இந்த நாவலுக்கும் இந்தக் கேள்விகளுக்கும் தொடர்பு உண்டா?

ஆம் ( ) இல்லை ( )

- உன் கர்ப்பத்திலிருந்த சிசுவைக் கலைத்திருக்கிறாயா?

ஆம் ( ) இல்லை ( )

- கருக்கலைப்பை நீ ஆதரிப்பவளா?

ஆம் ( ) இல்லை ( )

- ஊஞ்சல் ஆடும்போது ஆர்கஸம் அடைந்திருக்கிறாயா?

ஆம் ( ) இல்லை ( )

- அருவியில் குளிக்கும்போது ஆர்கஸம் அடைந்திருக் கிறாயா?

ஆம் ( ) இல்லை ( )

5

தங்களையெல்லாம் இவன் என்ன பாடு படுத்தப் போகிறானோ என்றெண்ணி அதற்கெதிரான திட்டத்தைத் தீட்டுவதற்காகத் தங்களுக்குள் கலந்தாலோசித்துக்கொண்டிருந்த வார்த்தைகள் முனியாண்டியின் படுக்கையைச் சுற்றி சிதறி இறுகிப் போயிருந்த இனப்பெருக்கத் திரவத்தின் மணத்தினால் ஈர்க்கப்பட்டு அவன் படுக்கையை நெருங்கி இனப்பெருக்கத் திரவத்தை மெதுமெதுவே சுவைத்து போதை தலைக்கேறி கிறக்கமுற்று முனியாண்டியின் நவத் துவாரங்கள் வழியே அவன் சரீரத்துக்குள் புகுந்து தங்களின் குறிக்கோளையும் மறந்து அவனோடு ஐக்கியமாக அன்றைய தினத்திலிருந்து வார்த்தைகளை முனியாண்டி இயக்கியது போக வார்த்தைகள் அவனை இயக்க ஆரம்பிக்க வெளிப் பார்வையில் இந்த நாவல் குறிப்புகளை எழுதியது முனியாண்டியாகத் தெரிந்தாலும் உண்மையில் வார்த்தைகளே இந்த நாவலை எழுதின என்பதற்கான மற்ற ஆதாரம் என்னவென்றால் கதாபாத்திரங்களே எழுத்தாளனைக் கொன்றுவிட்டன என்பதும் அதன் பிறகு நேர்ந்தது பெருஞ் சிதைவு என்பதும் ஆனால் அதற்கெதிரான ஆதாரங்களும் உண்டெனச் சொல்லி தனித்துப் போய்விட்ட கதாபாத்திரம் மட்டும் எழுத்தாளன் சாகவில்லை எழுத்தாளன் சாகவில்லை என திரும்பத் திரும்பப் புலம்ப நீ சொல்வதை நிரூபிக்க முடியுமாவென மற்ற கதாபாத்திரங்கள் வினவ அவன் சாகவில்லை வேறு பெயரில் ஒளிந்துகொண்டிருக்கிறான் எனச் சொல்ல எல்லாப் பாத்திரங்களும் அதை நம்ப மறுத்து என்னைப் பற்றி முனியாண்டி என்ன எழுதுவதாக நினைத்துக்கொண்டிருந்தானோ தெரியாது நல்ல வேளையாக இந்த நாவலின் ஆரம்பப் பக்கங்களிலேயே அவன் கொலை செய்யப்பட்டு விட்டதால் என்னுடைய பக்கங்களை நானே எழுதிக்கொள்ளலாமென அக மகிழ முனியாண்டி சாகவில்லையெனப் புலம்பிய கதாபாத்திரம் மட்டும் அவனைத் தேடி ப்ரஸீல் அர்ஹெந்தினா என்று எங்கெங்கோ

தேடியலைந்து கொஞ்ச காலம் ஆப்பிரிக்க கண்டத்தில் எ஽ஃபேக்களுடன் வாழ்ந்து யானைக்கறி தின்று டயரி எழுதி இறுதியில் முனியாண்டி நேநோ என்ற பாத்திரத்தில்தான் கூடுவிட்டுக் கூடு பாய்ந்திருக்கிறான் என்று தெரிந்து நம்மை உருவாக்கும் எழுத்தாளி கொல்லப்பட்டுவிட்டால் நாம் இல்லை இது நம் இருப்பைப் பற்றிய கேள்வி நமது இருப்பை நாமே உருவாக்க முடியுமா நம்மிடம் அதற்கான சூத்திரங்களோ வழிமுறைகளோ உண்டா we are condemned to live in this world in these pages in this verbal universe upto 999th page some of us may not see 999th may die before the end of this world before 999th page what then is it the end of the world is it the end of our life no cant be no no everything comes to an end suspension of our universe of discourse no no it continues in another book no it is suspended it continues in another world

6

சென்ற ஆண்டில் ஜலஜாஸ்ரீ தெலுங்குப் படத்தில் சிறப்பாக நடித்ததற்காக குடியரசுத் தலைவர் விருது பெற்று இந்தியாவின் தலைசிறந்த நடிகை என்ற அந்தஸ்தை அடைந்திருக்கிறார். தீவிரவாத இயக்கத் தலைவர் அவரது இயக்கத்தைச் சேர்ந்த மூத்த சகாவினால் கொல்லப்பட்டார். அதே சமயம் ஜலஜாஸ்ரீக்கு ஆந்திர அரசின் மாடு விருதும் வழங்கப்பட்டுள்ளது. ஞாயிறு அன்று கைது செய்யப்பட்டு தலைநகருக்குக் கொண்டுவரப்பட்ட பின்னர் அவர் கொல்லப்பட்டார். அவர் நடித்த புரட்சித் திலகம் சென்ற ஆண்டின் சிறந்த படமாகத் தேர்ந்தெடுக்கப் பட்டுள்ளது. இத்தகவல் திங்கள் அன்று அரசு அதிகாரபூர்வமாக அறிவித்தது. இந்தப் படம் புரட்சித் திலகம் ஐ.பி.எஸ். என்ற பெயரில் தமிழில் டப் செய்யப்பட்டு தமிழ்நாடெங்கும் அமோக வெற்றி பெற்றிருக்கிறது. மறைவிடங்களில் திடீர் சோதனை நடத்திய பாதுகாப்புப் படைகள் முப்பத்தாறு வயதான இயக்கத் தலைவர் அவரது மனைவி மற்றும் குழந்தைகளைக் கைது செய்தன. முப்பத்தாறு வயதாகியும் இவரே இன்றளவும் சூப்பர் ஸ்டாராகத் திகழ்கிறார் என்று ராணுவத் தளபதி அளித்துள்ள அறிக்கை கூறுவதாக வெளியுறவுத் துறை அமைச்சர் தெரிவித்தார். ஆனால் அவர் முதன் முதலில் அறிமுகப்படுத்தப்பட்டது தமிழ் உலகுக்கே என்பதும் அவரைத் தமிழில் அறிமுகப்படுத்தியவர் கம்பர் மைந்தன் என்பதும் நம்மில் பலருக்கு மறந்து போயிருக்கலாம். அரசுக்கு எதிராகப் பற்பல வன்முறைச் செயல்களில் ஈடுபட்ட இயக்கத் தலைவர் தமிழுக்குப் புதியவர் அல்லர். கம்பர் மைந்தன் அறிமுகம் பாதுகாப்புக் காரணங்களை முன்னிட்டு தலைநகருக்கு அழைத்து வரப்பட்டு விசாரிக்கப்பட்டார். விசாரணையின்போது என்றால் இதுவரை யாருமே சோடை போனதில்லை என்பது வரலாறு. வன்முறையைக் கைவிட்டு அஹிம்ஸா நெறியைக் கடைப்பிடிக்குமாறு ராதிகா ரத்தி ராதா ரேவதி ரஞ்சனி ரேகா ரேணுகா ராகினி ராஜேஸ்வரி ராஜகுமாரி ராஜநளா

ராஜ்யஸ்ரீ என்று RAW RAW என்று RAW பட்டியலே இருக்கிறது. கம்பர் மைந்தனால் இளைஞர் களைக் கேட்டுக் கொள்ள அவர் முன்வந்தார். புல்லுக்குள் கல் படத்தின் மூலம் முற்றிலும் சுய விருப்பத்தின் பேரிலேயே விடுக்கப்பட்ட இந்த வேண்டுகோள் தமிழ் உலகில் பெரும் வரவேற்பைப் பெறாமல் டப்பாவுக்குள் போய்விட்டது நாம் அறிந்ததே என்றாலும் வீடியோவில் பதிவு செய்யப்பட்டிருப்பதாக வெளியுறவுத்துறை அமைச்சர் தெரிவித்தார். அதற்குப் பின்னர் ராணுவம் மற்றும் போலீஸ் அதிகாரிகள் அடங்கிய புரட்சித் திலகம் ஐ.பி.எஸ். மூலம் அவர் தற்போது பெரும் வரவேற்பைப் பெற்றிருக்கிறார். விசாரணைக் குழுவை இயக்கத்தின் முக்கிய மறைவிடத்திற்கும் அங்குள்ள ரகசிய சூப்பர் ஸ்டாராகத் திகழ்ந்தவர்கள் ஸ்ரீதேவியும் ஜெயப்ரதாவும் ஆயுத சாலைக்கும் அழைத்துச் செல்ல ஒப்புக்கொண்டார் இயக்கத் தலைவர் ஆவர். தீவிரவாத அமைப்புக்கும் அதன் ராணுவப் பிரிவுக்கும் தலைமையிடமான குணச்சித்திர வேடங்களில் கொடிகட்டிப் பறந்தவர் தனது பொலிட்பீரோ உறுப்பினரும் இயக்கத்தின் முக்கியப் புள்ளியிடம் அங்கிருக்கும் அனைத்து தஸ்தாவேஜுகளையும் பொருட்களையும் ஜெயசுதா ஸ்ரீதேவி மற்றும் ஜெயப்ரதா இந்திப் படவுலகுக்குச் சென்ற பிறகு கவர்ச்சிக்கு விசாரணைக் குழுவிடம் ஒப்படைக்குமாறு இயக்கத் தலைவர் ஆணையிட ராதா பானுப்ரியா அதற்கு ஒப்புக்கொள்ளாத துணைத் தலைவர் யாரும் சற்றும் எதிர்பாராத வண்ணம் குணச்சித்திரத்துக்கு ஜெயசுதா திடீரென துப்பாக்கியை எடுத்து என்ற நிலை இருந்தது. இன்று இவர்கள் எல்லாரையும் சுட்டு விடவே அந்தத் துணைத் தலைவரை ராணுவ அதிகாரிகளே விஞ்சி கவர்ச்சியாகட்டும் குணச்சித்திரமாகட்டும் ஆவேச ஆக்ரோஷ வேடமாகட்டும் சுட்டுக் கொன்றனர். அதையடுத்து அவசரகால நடவடிக்கைகளின்படி எந்த வேடத்திலும் பலத்த பாதுகாப்புக்கிடையில் அந்த மூத்த தலைவர்களின் சடலங்களும் சக்கைபோடு போடுகிறார் ஜலஜாஸ்ரீ. எரியூட்டப்பட்டன என்று வெளியுறவுத் துறை அமைச்சர் தெரிவித்தார். இயக்கத் தலைவர் ஜலஜாஸ்ரீ விருது வாங்குவதற்காகக் கொல்லப்பட்ட சூழ்நிலை தில்லி குறித்து விசாரணை நடத்துமாறு போலீஸ் இன்ஸ்பெக்டர் ஜெனரலுக்கு உத்தரவிட்டுள்ளதாகவும் அமைச்சர் புறப்பட்டார்.

7

எழுத்தை எழுத்தால் எழுதிக்கொண்டிருக்கிறது எழுத்து.

அவன் தனது நிழலைப் புணர்ந்துகொண்டிருக்கிறான். உன் எழுத்தில் என் குருதியின் சுவையும் வாடையும் தெரிகிறதா உனக்கு?

உன் அனுபவங்களை நீ தணிக்கை செய்யாமல் முன்வைக்க முடியுமா?

எங்கோ பதுக்கி வைத்திருக்கும் அணு உலையாய் தகித்துக்கொண்டிருக்கும் உன் கவிதையை எனக்குத் தருவாயா?

எனக்குள் நிகழ்ந்துகொண்டிருக்கும் அணுப்பிளவின் பேரழிவை நீ உணர்கிறாயா?

உனது வாழ்வின் சில இழைகளை மட்டுமே அவள் பதிவு செய்ய விரும்புகிறாள்.

என் உள் அதிர்வுகளையே உனக்கு முத்தமாக மாற்றித்தந்தேன்.

உனது சிலிர்ப்பை நீ கவிதையென்று அழைத்தாய்.

கி.மு. ஒன்பதாம் நூற்றாண்டில் திராட்சை திருடியவர்களுக்கு மரண தண்டனை அளிக்கும் ட்ராகோவின் சட்டங்களை எதிர்த்துக் கிளர்ச்சி செய்து மடிகிறார்கள் தொழிலாளர்கள்.

அர்த்தமற்ற வெற்றுக் குமிழ்களாய் மிதந்துகொண்டிருக்கும் சொற்கள்.

உன் ஸ்பர்ஸத்திற்காக நான் காத்துக்கொண்டிருக்கிறேன்.

கண்காணாத தீவில் யாருமறியாத புராதனக் கோட்டையை காவல் காப்பதற்காக அனுப்பி வைக்கப்படும் போர்வீரன் மனச்சிதைவுக்கு ஆளாகிறான்.

பள்ளிக்குச் செல்லாமல் உதிர்ந்த பவளமல்லிப் பூக்களைப்

பொறுக்கிக்கொண்டிருக்கும் சிறுமிகள்.

எழுதப்படும்போதே வார்த்தை இறந்துவிடுகிறது.

ஜனநெரிசலில் அடையாளமற்று மறைந்துபோகும் கவி.

பெரூவின் Cuzeoவிலிருந்து 90 மைல் தூரத்தில் ஆந்தேஸ் மலைகளின் மாச்சு பீச்சூ சிகரத்தில் இன்கா அரசின் தலைநகராயிருந்து காலத்தில் தொலைந்துபோன அந்த சிதைந்த நகரத்தைப் பார்வையிடுகிறாள் நெரூதா.

my soul dressed in silence rises up and stands alone before you; can you see? என்று கேட்கிறாள் ரில்கே.

எழுதிக்கொண்டிருக்கிறேன். எழுதுவதைத் தவிர வேறு என்ன செய்ய இருக்கிறது? செத்துக்கொண்டிருக்கிறேன். சாவதைத் தவிர வேறு என்ன செய்ய இருக்கிறது, எட்செட்ரா. எட்செட்ரா.

evil is hidden inside good. good is hidden inside evil.

எழுத்து வாழ்க்கையைப் பற்றியது அல்ல. எழுத்து எழுத்தைப் பற்றியது.

neither nature nor art means anything apart from itself. they simply are. இப்படியாக ராப்க்ரியே ஏன் நான் எழுதாததை எழுத வேண்டும்?

we no longer look at the world with the eyes of confessor or doctor or of god himself (all significant hypotheses of the classical novelist) but with the eyes of man walking in his city with no other horizon than the scene before him no other power than that of his own eyes என ரொலான் பார்த் எழுதிச் சொல்லும் வார்த்தைகளை எப்படிப் புரிந்துகொள்வது?

மவுண்ட் ரோடில் தனியே அமர்ந்திருக்கிறான் அவன். ஞாயிறு மாலை. சக மனித வாடையற்றுக் கிடக்கும் இந்தப் பொழுதில் எங்கே செல்வதெனும் திடமற்ற நிலை. அறைக்குச் சென்று புத்தகம் படிக்கலாமா? முடிவெடுக்க இயலவில்லை. சிகரெட்டைப் புகைத்தபடி புகையின் சுருள் வளையங்களையே நோக்கியபடி அமர்ந்து கொண்டிருக்கிறான்.

சீன நெடுஞ்சுவரில் புதைக்கப்பட்ட அடிமைகள் எத்தனை பேர்?

அவனும் அவளும் அந்தக் கவிதையைத் தங்கள் குருதியால் எழுதிக் கொண்டிருக்கிறார்கள்.

எழுத்தை எழுத்தால் எழுத முடியவில்லை. எழுதுவதற்குள் வழுக்கிக்கொண்டு ஓடிவிடுகிறது. பிரயத்தனம்செய்து பிடித்துவிட்டால் கரைந்துபோய்விடுகிறது.

மனநோய் விடுதியின் ஜன்னல் கம்பிகளுக்கு ஊடாக நீளும் கைகள்.

ஆற்றங்கரை வேப்பமரத்தடியில் படுத்துறங்கும் பிச்சைக்காரன்.

செவிமடலில் உரசிச் செல்லும் தனித்த சிறகு.

ஊசிமுனை வழியே யானையை இழுத்துச் செல்லும் செப்படி வித்தை எழுத்து.

இலையுதிர் காலத்து இளங்காலையில் கனாட் ப்ளேஸ் வட்டச் சாலையின் மௌனம்.

நடிகைகள் ஏன் நாய் வளர்க்கிறார்கள் என்ற வாசகர் கேள்விக்கு நடிகைகளின் கணவர்களுக்கு நாக்கு நீளம் போதவில்லை என்ற பதிலை எழுதிக் கொண்டிருக்கிறார் பத்திரிகை ஆசிரியர்.

லெஸ்போஸ் தீவிலிருந்து உலகின் ஆதி லெஸ்பியன் குறிப்பு களை எழுதிக் கொண்டிருக்கிறாள் Sappho.

ஜனரஞ்சகப் பத்திரிகைக்கு அவன் அனுப்பிய கதையில் வரும் குண்டி என்ற வார்த்தையை வெட்டிக் கொண்டிருக்கிறார் பத்திரிகை ஆசிரியர்.

எனக்கும் உனக்குமான வித்தியாசத்தை அழித்துவிடு என்கிறாள் Hélèene Cixous.

பறங்கிப் பழ வயிறும் சுரைக்காய் கைகளும் பன்றியைப் பிளந்தது போன்ற தொடைகளும் பூசணிக்காய் முலைகளுமாய் குண்டு நடிகையின் சோப்பு விளம்பரம் ஓடிக்கொண்டிருக்கிறது.

சிறைச் சுவர்களில் இருக்கும் வார்த்தைகள் மனநோய் மருத்துவமனையின் சுவரில் பொதுக் கழிப்பறைச் சுவரில் பள்ளிக்கூட டெஸ்கில் காண்டம் டப்பாவில் பாடப் புத்தகத்தில் நீதிபதியின் தீர்ப்பு ஓலையில் பல்கலைக் கழக வராந்தாவில் டவுன் பஸ்ஸில்

போலீஸ்காரனின் ஜர்தா பீடா வாயில் பிரதம மந்திரியின் டைரியில் என எங்கெல்லாமோ வார்த்தைகள் குவிந்து கிடப்பதைப் பொறுக்கி எடுத்து வந்து கொட்டி வகை பிரித்து காயலான் கடையில் விற்றுக்கொண்டிருக்கும் சிறுமியின் கனவில் யாரது நடந்து போவது? தயவு செய்து ரொலான் பார்த் அந்தப் பக்கமாகப் போகாதே.

8

முனியாண்டியின் நாவல் குறிப்புகளுக்கு கி.பி. ஒன்பதாம் நூற்றாண்டு செத்த மூளை எழுதிய விமர்சனம்.

திருடர்களைக் கலகக்காரர்களாகப் பார்க்கும் முட்டாள்தனம் இது. புரட்சிக்கும் வறுமையின் காரணமாக நிகழ்கிற குற்றங்களுக்கும் வித்தியாசம் தெரியாத முட்டாளான முனியாண்டி லேவாதேவிக்காரர்களின் மீதான ஸந்தால்களின் தாக்குதல் வெள்ளைக்காரர்களுக்கு எதிரான முழுமையான கலகமாக உருவெடுத்ததை எங்கோ புத்தகத்தில் வாசித்துவிட்டு அதை நாவலின் இடையே செருகிவிட்டால் புரட்சிகரமான நாவலாகி விடும் என்று எண்ணுகிறார். இதற்காக முனியாண்டியின் கலகக் காரர்கள் வங்கியோடு நிறுத்தாமல் ஜவுளிக்கடையையெல்லாம் கொள்ளையடிக்கிறார்கள். போலீஸ்காரரைக்கூட கொன்றுவிடுகிறார்கள்.

வங்கிக் கொள்ளையில் ஈடுபடும் புரட்சிக் கதாநாயகன் மாய்த்தா என்னைப் போன்ற சாமான்ய வாசகனுக்கு வெறும் கொள்ளைக்காரனாகத்தான் தெரிகிறானே ஒழிய அதில் எனக்கு எந்தப் புரட்சியும் தெரியவில்லை. முனியாண்டிக்கு நான் குவார்ட்டர் விஸ்கியும் ஸ்ரீராமலிங்க விலாஸில் சிக்கன் பிரியாணியும் வாங்கிக் கொடுத்து இலக்கிய சமாச்சாரங்களைக் குறித்து அளவளாவிக்கொண்டிருந்த தினத்தில் அந்த பலஹீனமான மனநிலையில் அவர் உளறிவிட்டார். சில உண்மைச் சம்பவங்களை ஆதாரமாகக்கொண்டு nonfictional documentary narrative இல் இன்ஃபாந்தேயின் த்ரேஸ் த்ரிஸ்தேஸ் தீக்ரேஸ் என்ற நாவலைக் காப்பியடித்துத்தான் இந்த நாவலை எழுதியதாக.

முனியாண்டியின் புரட்சி நாயகன் மாய்த்தாவும் (இது என்ன பெயர் மாய்த்தா? இது எந்த மொழியைச் சேர்ந்த பெயர்? பேசாமல் முனியாண்டி இதைத் தமிழில் எழுதுவதற்குப் பதிலாக சம்பந்தப்பட்ட

பாஷையிலேயே எழுதியிருக்கலாம்) அவனது தோழர்களும் ஜவுளிக் கடையைக் கொள்ளையடிக்கும் சம்பவங்கள் லேவாதேவிக்காரர்களின் மீதான ஸந்தால்களின் தாக்குதலோடு இணைத்தன்மை கொண்டிருப்பதாக மிகத் தந்திரமான முறையில் சொல்லியிருக்கிறார். அறிஞர் அண்ணா நகரிலிருந்து செக்ரடேரியட் சென்று வேலை செய்து ஓய்வு நேரங்களில் பொழுதுபோக்காக சிறு சஞ்சிகைகளுக்குக் கதைகள் எழுதும் குமாஸ்தா எழுத்தாளர்கள் காலையில் 27சி பஸ்ஸில் தனது பக்கத்தில் நிற்பவரின் பர்ஸை ஜேப்படி செய்துவிட்டு இது அமெரிக்க ஏகாதிபத்தியத்துக்கும் IMFக்கும் எதிரான கலகச் செயல்பாடு என்று இனிமேல் பெருமையடித்துக்கொள்ளலாம். இது இப்படியிருக்க முனியாண்டி தனது நாவலை உண்மையான வரலாற்றுச் சம்பவங்களின் அடிப்படையில் எழுதியிருப்பதாகப் பீற்றிக்கொண்டிருப்பதால் நானும் எனது நாகர்கோயில் நண்பனும் இந்த ஜவுளிக்கடை கொள்ளைச் சம்பவத்தைப் பற்றி நேரிலே கேட்டறிந்து விடுவதென்ற எண்ணத்துடன் அந்த ஊருக்கே சென்றோம். தண்ணீர்க் குடமெடுத்து நடந்துகொண்டிருந்த சில பெண்களை விசாரித் தோம். கிடைத்த விபரம் இது ஊரில் வேலை வெட்டி ஏதுமின்றித் திரிந்துகொண்டிருந்த தறுதலைகள் சில திடீரென்று மாவோ புரட்சி அது இது என்று உளறிக்கொண்டு சம்பந்தப்பட்ட தினத்தில் மலைக்குக் கீழேயிருந்த ஜவுளிக் கடையில் புகுந்து அங்கிருந்த ஜவுளிக்கடைக்காரரை அடித்து நொறுக்கி விட்டு கல்லாவிலிருந்த நானூற்று நாற்பத்தோரு ரூபாயை களவாடிச் சென்றிருக்கிறார்கள். இந்தக் களவாணிப் பயல்களைத்தான் ஸந்தால் கலகக்காரர்களோடு ஒப்பிட்டு தமிழ் வாசகர்களின் காதில் பூ சுற்றியிருக்கிறார் முற்போக்கு எழுத்தாளர் முனியாண்டி. அந்த ஜவுளிக்கடை 18 x 9 அளவுள்ள பெட்டிக்கடை போன்றது. அதன் உரிமையாளர் பால்வண்ணம் பிள்ளைக்கு ஆறு பெண் குழந்தைகள் மற்றும் மூன்று ஆண்குழந்தைகள்.

என்னோடு வழித்துணையாக வந்த போலீஸ் இன்ஸ்பெக்டர் நான் இந்த விசாரணைகளை முடித்துக்கொண்டு சாராயக் கடைக்குப் போய்க்கொண்டிருந்தபோது திடீரென்று தனது கைக்குட்டையை எடுத்து கண்களைத் துடைத்துக்கொண்டு மூக்கையும் சிந்தினார்.

குஷ்டரோகிகளையும் விபச்சாரிகளையும் கண்டு மூக்கைச் சிந்திச் சிந்தி அந்த மூக்குச் சளியையே முற்போக்கு எழுத்தாக வெளிக்காட்டி பிராபல்யம் பெற்றுவரும் முனியாண்டியின் முதலைக் கண்ணீரைப் போன்றதல்ல அந்தப் போலீஸ்காரரின் கண்ணீர். புதுமைப்பித்தனின் எழுத்தின்மீது சத்தியமாக இதை என்னால் சொல்ல முடியும். என்ன போலீஸ் காரரே ஏனிந்த மூக்குச் சளியும் கண்ணீரும் என விசாரித்தேன். அவருடைய மூத்த சகா அந்தக் கலகக்காரர்களைத் துரத்திக்கொண்டு வந்தபோது கல் தடுக்கி விழுந்து பின் மண்டையில் பலமாக அடிபட்டு மரணமெய்திய ஸ்தலம் இது என்று கூறி மீண்டும் மூக்கைச் சிந்தினார் போலீஸ்காரர். அந்த இடத்தில் நின்று என் கண் முன்னே தெரிந்த கல்லையே வெறித்துப் பார்த்தேன். என்ன அபத்தமான வாழ்க்கை இது. ஆல்பெர் கம்யுவின் அந்நியன் நாவலில் இதை நாம் வாசித்திருக்கலாம். பித்தனைப்போல் சிரித்துக்கொண்டு வரும் சூர்யனின் கிரணங்களினால் மார்க்ஸிஸம் மற்றும் ஸ்ட்ரக்சுலிச சாயத்தைப் பூசிக்கொண்டு வெளிவந்திருக்கும் முனியாண்டியின் பொய்கள் யாவும் உலர்ந்து வெளிறிக் கொட்டிவிடுகின்றன என்று அந்தக் கல் என்னிடம் சொல்ல விரும்பியதாகத் தோன்றியது. வங்கிக் கொள்ளை தோல்வியில் முடிய வங்கியிலிருந்து தலைதெறிக்க ஓடிய மாய்த்தா மற்றும் அவன் தோழர்களின்மீது மஃப்டியிலிருந்த போலீஸ்காரர்கள் கல்லால் அடித்தபோது அவர்களோடு கிராம மக்களும் ஊடாடி இருந்ததால் அவர்களுக்கு ஏதும் நேர்ந்துவிடக் கூடாது என்பதற்காகவே மாய்த்தாவும் அவனது தோழர்களும் தங்கள் கையிலிருந்த AK45 ஆல் சுடவில்லை என்றும் AK45ஐக் கையில் வைத்திருந்தும் அதை உபயோகிக்கா மல் மாய்த்தாவும் அவனது தோழர்களும் கல்லால் அடிபட்டுச் செத்தார்கள் என்றும் எழுதி தனது கதாநாயகன் மாய்த்தாவை மாபெரும் மனிதாபிமானியாகச் சித்தரிக்கிறார் முனியாண்டி. மாய்த்தாவின் மனிதாபிமானம் கண்டு மூக்கைச் சிந்திய முற்போக்கு மூக்குகளுக்கு நான் இப்போது உண்மை நிலவரத்தைச் சொல்லுகிறேன்.

வங்கியிலேயே கேஷியருக்கும் மாய்த்தாவுக்கும் அவனது தோழர்களுக்கும் நடந்த கலகலப்பில் கேஷியர் மீது AK45 பிரயோகிக்கப்பட்டிருக்கிறது. கேஷியர் இன்னமும் மெடிக்கல்

லீவில்தான் இருக்கிறார் என்பதே இதை ருசுப்படுத்தப் போதுமானது. வங்கிச் சுவர்களில் பல இடங்களில் AK45 பதம் பார்த்திருக்கிறது. ஆனால் இந்தக் கலாட்டாவில் (வேறென்ன புரட்சி என்றா சொல்ல முடியும்?) யாரும் சாகவில்லை என்பதிலிருந்து மாய்த்தா மற்றும் அவனது தோழர்களின் துப்பாக்கிப் பயிற்சியின் மீதுதான் எனக்குச் சந்தேகம் வருகிறது. ஆனால் முனியாண்டிக்கோ இது மனிதாபிமானமாக அர்த்தமாகியிருக்கிறது. போகட்டும். நடந்ததைச் சொல்கிறேன். அந்தத் துப்பாக்கிச் சத்தத்தைக் கேட்டுக்கூட மக்கள் பயந்திடவில்லை.

மாறாக மாய்த்தாவையும் அவனது தோழர்களையும் கற்களை வீசித் தாக்கத் துவங்கியிருக்கிறார்கள் மக்கள். எப்படியும் இந்தக் கொள்ளைக் கூட்டத்தைத் தப்பவிட்டுவிடக் கூடாது என்ற வைராக்கியத்துடன் அவர்களை நோக்கி சீறிப் பாய்ந்த இளஞ்சிங்கங்கள் சிலரை நோக்கி மாய்த்தாவின் AK45 குறி பார்த்திருக்கிறது. ஆனால் அந்தோ அந்தச் சமயம் பார்த்து யாரோ மறவன் வீசிய கவண் கல் மாய்த்தாவின் கண்ணைப் பதம் பார்த்திருக்கிறது. கண்களில் குருதி பொங்க துப்பாக்கியின் விசையை மாய்த்தாவின் கைகள் தேட தொடர்ந்து வந்த கற்களுக்கு இமைப் பொழுதில் பலியாகி வீழ்ந்திருக்கிறான் மாய்த்தா. தங்கள் தலைவனின் வீழ்ச்சியே அவன் தோழர்களின் மனவுறுதியைக் குலைக்கப் போதுமானதாக இருக்க அவர்களும் பதற்றத்துடன் துப்பாக்கி விசையை அழுத்த துப்பாக்கி இயங்கவில்லை. வரலாற்றை நிர்ணயிக்கப்போகும் அந்த முக்கியத் தருணத்தில் தோழர்களின் துப்பாக்கிகள் இயங்காமல் போனது நாகர்கோவில் வேலிக்கருப்பன் நிகழ்த்திய அதிசயம்தான் என்று கிராம மக்கள் பேசிக்கொள்கிறார்கள்.

முனியாண்டியைப் பற்றிய கதை

எங்கோ புறப்பட்டுப் போய்க்கொண்டிருக்கிறாள். வழியில் கோயில் தென்படுகிறது. முச்சந்தியில் சாமி புறப்பாட்டுக்கான அலங்காரம்

நடந்துகொண்டிருக்கிறது. மாலைகள் (வெள்ளை சம்பங்கி) தென்படுகின்றன. நானும் அங்கே போய் தெருவில் கூட்டத்தோடு உட்காரப்போகும்போது யாரோ பெண் அந்தக் குப்பைத் தொட்டியில் பிரேதம் என்கிறாள். சட்டெனத் திரும்பிப் பார்த்து உறைந்துபோன குழந்தைக் கால்கள் தெரிய பயந்து போய் அலறி எழுந்துகொள்ள கோயில் இருக்கும் இடத்தில் சாவு நிகழ்ந்தால் புறப்பாடு ஏதுமிருக்காதே என வேகமாய் அங்கிருந்து வீட்டுக்குப் போகிறாள். கையிலிருந்த வஸ்துவைக் கீழே வைக்கக் குனிந்து நிமிர்கையில் மடாரென்ற சப்தத்தோடு கீழே விழுந்த பொருள் என்னவென்று பார்த்தால் பிரேதக் குழந்தை. இப்போது அது கண்ணை விழித்துப் பார்த்து கையைக் காலை உதைத்துக்கொண்டு அழுதது. பார்க்கப் பார்க்க அவளுக்கு வெறிபிடித்து அதைக் கொன்றுவிட வேண்டும் என்று நினைத்து அதை அமுக்க இரண்டு கைகளையும் விரித்து அருகே நெருங்கியதும் மனம் வராது போனது. அவன் வருகிறான். என்னென்னவோ திட்டுகிறான். ஏதோ முடிவு கட்டிவிட்டுப் போகிறான். வேகமாய். அவள் மீண்டும் சமைந்துபோய் குறிப்பே இல்லாமல் அந்தக் குழந்தையைப் பார்க்கிறாள். இப்போது அந்த சிசுவின் கை கால்களெல்லாம் என்னென்னவோ உருவத்தில் நத்தை ஓணான் ஆமை பல்லி சிலந்தி பாம்பு தேள் பூரான் மீன் என்று பல்வேறு ரூபங்களில் பிய்ந்து பிய்ந்து தெரிய அதை அவள் துடைப்பமும் முறமும் எடுத்துக்கொண்டு வந்து அள்ளியெடுக்க அது இப்போது பலவித புழுக்களாக மாறி நெளிய அருவருப்பை சகித்துக்கொண்டு வாசலுக்குப்போய் குப்பைத் தொட்டியில் போடுகிறாள்.

அளவின்றிக் குடித்துவிட்டு நடைபாதை ஓரத்தில் விழுந்து கிடந்த புச்சி இன்னமும் மயக்கம் தீராது குப்பைத் தொட்டியில் வாந்தியெடுக்கப் போக அதனுள் விரைத்துக் கிடந்த சிசுவைப் பார்த்து மிரட்சிகொண்டது. குப்பைத் தொட்டியின் ஓரத்தில் ஒண்டிக்கொண்டிருந்தது எலி. எலி குதறிய சிசுவின் வயிறு. பெண் சிசு பிழைப்புக்கு உதவுமென எடுத்து வந்து நீனாவிடம் கொடுக்க நீனா சிசுவைப் பார்த்துவிட்டு புச்சியை நையப்புடைத்தாள். போதையில் உனக்கு ஆணெது பெண்ணெது எனத் தெரியாமல் போகுமா எனக் கேட்டு. ஜனித்து இன்னும் முப்பத்தாறு மணி நேரம்கூட

ஆகியிருக்காது. மருத்துவரிடம் ஓடினாள். குளிரில் இரவு முழுவதும் கிடந்து எலிக்கடி பட்டிருந்தாலும் பிழைத்துக் கொண்டது சிசு.

பதினெட்டாயிரம் மில்லியன் ஆண்டுகளுக்கு முன்பு தோன்றியது இவ்வுலகம். இந்த சிசு மேற்கூறிய விதமாக மார்கழி மாதத்தில் புச்சியாலும் நீனாவினாலும் உயிர்பெற்று இந்தக் காகிதத்தில் இந்த வாக்கியத்தில் தோன்றியது.

Colostrum&குழந்தை பிறந்த சில தினங்களில் தாயின் முலைகளிலிருந்து வரும் மஞ்சள் நிறத் திரவம் contains lot of protein and vitamins. It has anitbodies against many common diseaes especially those that the mother has had earlier. சிசுக்கள் தாமாகவே இந்த antibodiesஐ உருவாக்கிக்கொள்ளும் வரை தாய்ப்பாலிலிருந்து கிடைக்கும் antibodies சிசுக்களை நோய்களிடமிருந்து காப்பாற்றுகிறது.

ஐஸ் தின்றால் தொண்டையில் சதை வளரும். ஆபரேஷன் செய்ய வேண்டி வரும். பாம்பே மிட்டாய் மீன் செதிலால் செய்தது. பூம் பூம் என்று ஊதிக்கொண்டு வருவான் பாம்பே மிட்டாய்க்காரன். குழந்தைகள் தங்களுக்குப் பிடித்த ப்ளேன் வாட்ச் கப்பல் மீன் என்று செய்து வாங்கிக்கொண்டு வெயிலிலும் வியர்வையிலும் அது உருகும்போது வேடிக்கை பார்க்கும். ஜவ்வு மிட்டாய் எச்சிலைத் தொட்டுச் செய்யப்படுகிறது.

முனியாண்டி எக்ஸிஸ்டென்ஷியலிஸ்டாக மாறியதன் வரலாற்றுப் பின்னணியையும் நீ தெரிந்துகொள்ளவேண்டும் வாசுகி. விபரம் தெரிய ஆரம்பித்தபோதோ அல்லது விபரம் தெரிய ஆரம்பிப்பதற்கு முன்னாலோ தான் எழுத்தாளன் ஆகிவிட வேண்டும் என்று அவாவுற்ற முனியாண்டி ஐன்ஸ்டைன் பிருஹதாரண்யக உபநிஷதம் குரும்பூர் குப்புசாமி க்ராம்ஸி அம்பேத்கர் மனு சாஸ்திரம் மகாபாரதம் ஆயிரத்தோரு அராபிய இரவுகள் ராபர்ட் ம்யூஸில் பன்றிகளின் கருவியல் ஆண்டாள் சே கெபாரா அலெஹோ கார்பெந்தியர் உடல் இயங்கியல் பொலிவிய வரலாறு மலையேறிகளின் வாழ்க்கை வரலாறு குற்றவாளிகளின் வாக்குமூலங்கள் எண்ணற்ற காதல் கடிதங்கள் எரிமலைகளின் வரலாறு கடல் வாழ் உயிரினங்களைப் பற்றிய உயிரியல் தல புராணங்கள் Gershom Sholem ரெனே தெகார்த்தே

என்று கையில் கிடைத்தது கையில் கிடைக்காதது எல்லாவற்றை யும் படிக்க ஆரம்பித்தான். அப்படிப்பட்ட தினத்தில்தான் பர்வீன் பாபி தன்னை எக்ஸிஸ்டென்ஷியலிஸ்ட் என்று பிரகடனப்படுத் திக் கொண்ட பேட்டியைப் படித்தான். அந்த வார்த்தை அவனால் உச்சரிக்கக் கூடியதல்லாததாக இருந்தது. திரும்பத் திரும்ப உச்சரித்துப் பார்த்து பிறகு கலைக் களஞ்சியத்தில் அர்த்தமும் பார்த்து அர்த்தத்தின் கவர்ச்சியில் மயங்கி அன்றே தன்னையும் எக்ஸிஸ்டென்ஷியலிஸ்டாக பிரகடனப்படுத்திக்கொண்டான் முனியாண்டி. தனது நோட்டுப் புத்தகத்தில் நான் எக்ஸிஸ்டென் ஷியலிஸ்ட் என்று எழுதியெழுதி அழகு பார்த்துக்கொண்டான். அதை எதேச்சையாய்ப் பார்த்துவிட்ட ஆங்கிலப் பேராசிரியை Are you existentialist என்று கேட்க எழுந்து நின்று சற்றே நாணத்துடன் யெஸ் மேடம் என்றான்.

பிஹாரிலுள்ள சுத்தா என்ற கிராமத்தில் ஒன்பது வயதுச் சிறுவனை நிலச்சுவான்தார் சுட்டுக் கொன்றார். நிலச்சுவான்தார் வீட்டிலிருந்த பெட்ரோமாக்ஸ் விளக்கை சிறுவன் திருடிச் சென்றுவிட்டதே காரணம் என்று சொல்லப்பட்டது. தாய் தந்தையின் பெயர் அறியாத முனியாண்டியின் வளர்ப்புத் தாய் வேசியாகப் பிழைத்தவள். இதை வெளியே சொல்வதில் அவனுக்குக் கூச்சம் எதுவும் கிடையாது என்றாலும் அவன் எழுதிய சுயசரித நாவலில் சொல்லாமல் விட்டுவிட்டான். மிர்ஸாபூர் மாவட்டம் காஸிபூர் நகருக்கருகே உள்ள கிராமத்தில் மீராபாய் என்ற பெண்ணின் கணவன் கம்பளம் தயாரிக்கும் கடை முதலாளியிடம் 180 ரூபாய் கடன் வாங்கினான். ஆனால் அவனுடைய தெருவாசிகளைப் பற்றியும் அவர்களின் குடிசைத் தொழில் பற்றியும் விலாவாரியாக எழுதியிருந்ததால் அவன் நாவலை விமர்சித்த ஆனந்தசாமி முனியாண்டி பொய்யன் என்றும் அவன் அம்மாவைப் பற்றிய விபரத்தை வேண்டு மென்றே மறைத்து அவளைக் கற்புக்கரசியாகக் காட்ட முயற்சித்து மோசமான முறையில் தோல்வியுற்றிருக்கிறான் என்றும் எழுதியிருந்தார். அதற்குப் பதிலாக அவனது குடும்பமே கம்பள முதலாளிக்கு அடிமைக் கூலிகளாயினர். அந்த ஜில்லாவின் சிறுவர் விடுதலை இயக்கத்துடன் சேர்ந்து இதை நான் நீதிமன்றத்துக்கு எடுத்துச் சென்றேன். எவ்வளவோ யோசித்துப்

பார்த்தும் தன் அம்மாவைப் பற்றிய விபரத்தை ஏன் எழுதாமல் விட்டோம் என்று முனியாண்டிக்குப் புரியவில்லை. மீராபாயின் மகன் உமாசங்கர் (வயது 9) அந்த முதலாளியிடம் இருபத்தேழு மாதங்கள் அடிமையாய் உழைத்திருப்பதால் அதற்கு ஈடுகட்ட கம்பள முதலாளி முப்பத்தாறாயிரம் ரூபாய் கொடுக்க வேண்டுமென தீர்ப்பாயிற்று. அவனுடைய இளமைக்காலம் முழுவதும் தன் அம்மாவின் கட்டிலுக்குக் கீழேதான் படுத்து உறங்கியிருக்கிறான். ஆனாலும் உள்ளூர் போலீசாரின் பக்கபலத்தின் காரணமாக மீராபாய் குடும்பத்துக்கு அந்தத் தொகையைக் கொடுக்காததோடு மட்டுமில்லாமல் உமாசங்கரின் அண்ணனை அவனும் அடிமையாக உழைத்து வந்தவன் ஜோடிக்கப்பட்ட வழக்கில் கைது செய்ய வைத்தார் முதலாளி. விளக்கை அணைத்துவிட்டுத் தூங்க ஆரம்பிக்கும் போது அவன் அம்மாவின் பக்கத்தில்தான் இருப்பான். சிறுவர்களுக்கும் மீராபாயின் கணவனுக்கும் காவல் நிலையத்தில் அடியும் உதையும் கொடுக்கப்பட்டது. அம்மாவின் மார்பில் தலையை வைக்க அவள் இருதயம் துடிக்கும் ஓசையில்தான் அவனுக்கு உறக்கம் வரும். இதை வெளியே சொன்னால் அவர்களின் கைகளும் கால்களும் துண்டிக்கப்படும் என்று அவர்கள் எச்சரிக்கப்பட்டார்கள். அந்த லப்டப் சத்தமும் மேலும் கீழும் ஏறியிறங்கும் மார்பும் அவனுக்கு ரயிலில் போவதுபோன்ற சுகத்தைத் தரும். இதே நிலையில்தான் ஆயிரக் கணக்கான சிறுவர்கள் ஃபரீதாபாதில் இருக்கும் கல்குவாரியில் வேலை செய்துகொண்டிருக்கிறார்கள் என்பதையும் நான் நேரில் கண்டேன். இல்லாவிட்டால் புரண்டு புரண்டு படுத்தாலும் அவனுக்கு உறக்கம் வராது. பாகிஸ்தானில் தொண்ணூறு லட்சம் குழந்தைகள் கொத்தடிமைகளாக இருக்கிறார்கள் என்று எங்கள் அமைப்பின் பாகிஸ்தான் கிளையின் அறிக்கை கூறுகிறது. அவளுடைய அணைப்பும் இருதயத்தின் சப்தமும் அவனுக்குப் பசியையும் மீறி தூக்கத்தைக் கொடுக்கும். அவர்களில் பலபேர் செங்கல் சூளைகளில் வேலை செய்கிறார்கள். ஆனால் எழுந்து பார்த்தால் கட்டிலின் கீழே கிடப்பது புரியும்.

தொண்ணூறு இளைஞர்கள் படுகொலை செய்யப்பட்டு கங்கையில் தூக்கியெறியப்பட்டார்கள். அந்த ஓசைதான் என்னைப் பல இரவுகளில்

தூக்கத்திலிருந்து எழுப்பியிருக்கிறது. குச்சி தேவியை அவள் கணவன் தனது எஜமானனுக்கு கூட்டிக் கொடுக்காததால் அவன் உயிரோடு எரிக்கப்பட்டான். முதல் முதலாக அப்படி எழுந்தபோது கட்டிலுக்குக் கீழே வந்து கிடக்கும் காரணம் புரியாமலும் கட்டிலின் விபரீதச் சத்தம் தந்த பீதியிலும் அவசர அவசரமாக வெளியே உருண்டு வந்து பார்த்தபோது அந்த உருவம் தன் அம்மாவின்மீது படுத்து மேலும் கீழும் அசைந்து கொண்டிருப்பதைக் கண்டான். அப்போதுதான் அவனுக்கு லேசாய் ஏதோ புரிகிறாற்போல் இருந்தது. அப்போது அவள் கர்ப்பம். கொஞ்சம் வயது வந்த பிறகு தன் அம்மாவிடம் வருகிறவர்கள் செய்வதையே அவனும் தன் பக்கத்து போர்ஷன் பெண்ணிடம் செய்து பார்த்தபோது அதை அந்தப் பெண்ணின் அம்மா பார்க்க நேரிட்டு குய்யோ குய்யோ என்று கத்த அவனுடைய அம்மாவும் அந்தச் சிறுமியின் அம்மாவும் தலைமுடியைப் பிய்த்துக் கொண்டு தெருவில் புரள நேர்ந்தது. அவளது புகாரை லோக்கல் போலீசில் எடுத்துக் கொள்ள மறுத்துவிட்டதால் குச்சி தேவி தில்லிக்கு வந்தாள். அன்றைய தினத்திலிருந்து யாரும் அம்மாவைத் தேடி வந்தால் நான் வீட்டைவிட்டு வெளியே வந்துவிடுவேன். மா ஆப் ஸங்கெத் கர் தே ஹே(ங்) தோ மே அப்னே சம்ரே கே ஜுத்தே பனாத்தா ஹும். வீடு என்பது மூன்றடி அகலமும் ஆறடி அகலமும் கொண்ட அறை என்பதால் அதைத் தவிர அவனுக்கு வேறு வழியில்லை. இந்தியாவில் 180 லட்சம் குழந்தைத் தொழிலாளர்கள் இருப்பதாக இந்திய அரசின் 1980ஆம் ஆண்டு சென்ஸஸ் கணிப்பு கூறுகிறது. குளியலும் மலஜலம் கழித்தலும் தெருவில்தான். இவர்கள் தொழிற்சாலைகளிலும் உணவு விடுதிகளிலும் சினிமா தியேட்டர்களிலும் சிறு கடைகளிலும் வேலை செய்கிறார்கள். சமையல் மட்டும் கிடையாது. பீடி சுற்றுகிறார்கள். வெளியேதான். கல் உடைக்கிறார்கள். ஓட்டலில். கண்ணாடித் தொழிற்சாலைகள் இரவில் மட்டுமே வேலை செய்கின்றன. இப்போது நினைத்துப் பார்த்தால் மிஸ்ராவுக்கு ஆச்சரியமாக இருக்கிறது. இத்தொழிற்சாலைகளில் அநேக கூலியாட்கள் குழந்தைகள்தான். பகல் நேரத்தில் கக்கூஸ் வந்தால் அம்மாவோ மற்ற பெண்களோ எங்கே போயிருப்பார்கள். தொழிற்சாலையின் உள்ளே உஷ்ணநிலை 40.5 சி. அம்மா மட்டுமல்லாமல் அந்தத் தெருப்பெண்கள் எல்லாரும்

விடியலுக்கு முன்னதாகவே எழுந்து எதிரேயிருக்கும் திறந்தவெளிக்கு செம்புத் தண்ணீருடன் போவதை சமயங்களில் பார்த்திருக்கிறேன். இந்தியாவில் தயாரிக்கப்படுகிற தீப்பெட்டிகளில் 72 சதவிகிதம் சிவகாசியில் தயாரிக்கப்படுகிறது. இந்தத் தீப்பெட்டித் தொழிற்சாலைகளில் தினமும் சூரியோதயத்திலி ருந்து அஸ்தமனம் வரை வேலை செய்யும் குழந்தைகள் எத்தனை பேர். அரே பச்சே தேரி மா கிதர் கயி என்றான் கஸ்டமர். இருநூற்று எழுபது நிமிடங்களுக்கு மேலாக குழந்தைகள் தொழிற்சாலைகளில் வேலை செய்யக்கூடாது என்கிறது இந்தியத் தொழிற்சாலை சட்டம். அப்போதுதான் நான் ஆங்கிலம் கற்றுக்கொள்ள ஆரம்பித்திருந்தேன். ஆனாலும் அவர்களுக்குத் தினமும் பகல் முழுவதும் வேலை கிடைத்துவிடுகிறது. My mother is funking என்று கஸ்டமரிடம் சொன்னான் மிஸ்ரா. இதைக் கேட்ட மற்ற சிறுவர்கள் அன்றிலிருந்து மிஸ்ராவைப் பிடித்துக்கொண்டார்கள். Funky Funky Funky.

ஃபக்ருன்னிஸாவுக்கு அந்த அரண்மனை போன்ற வீட்டில் எத்தனை அறைகள் இருக்கின்றன என்று கேட்டால் அது யாருக்குமே தெரியாது என்று சொல்லுவாள். அத்தனை அறைகளையும் யார் எண்ணிக்கொண்டிருப்பது வேறு வேலை இல்லையா என்று சலித்துக்கொள்வாள். அந்த சலிப்பில் கொஞ்சம் பெருமிதமும் கலந்திருக்கும். காரணம் இந்த வீட்டின் நிர்வாகி தலைவி எல்லாம் அவள்தான். எண்ண முடியாத அறைகள். பக்கவாட்டில் நீச்சலுக்கென்று பிரத்தியேகமான தடாகம். நாட்டிய அரங்குகள். வீட்டுக்குப் பின்னே வரிசை வரிசையாக பணியாளர் குடியிருப்பு. குதிரை வண்டி ஓட்டுபவர்கள் பல்லக்குத் தூக்கிகள் (ஃபக்ருன்னிஸாவுக்கு குதிரை வண்டிச் சவாரி பிடிக்காது. எங்கே போனாலும் பல்லக்கில்தான் போவாள்) சமையல்காரர்கள் பங்க்கா பிடிப்பவர்கள் வண்ணார் மற்றும் சிறு பணியாளர்கள் எல்லோருக்குமான வசிப்பறைகள் அவை. அதற்கும் பின்னே பல்லக்குகள் வைக்கப்பட்டிருக்கும். கடைசியில் குதிரை லாயம். இவ்வளவும் போதாதென்று யமுனையிலிருந்து கால்வாய் வெட்டி அதை வீட்டுக்குப் பின்பகுதி வரை கொண்டுவந்து விடலாம் என்கிறார் நவாப் மிர்ஸா அலிகான். எதற்குத் தெரியுமா. மீனவர்கள் சின்னஞ்சிறு படகுகளில் வந்து படகுகளில் இருந்தபடியே மீன்களைக்

கொடுத்துவிட்டு போவார்களாம். எப்படி இருக்கிறது. நவாபின் பெரிய மனசுக்கு அவர் இந்த உலகத்திற்கே சுல்தானாக இருந்திருக்க வேண்டியவர். ஆனால் அவருக்கு விதிக்கப்பட்டிருந்ததோ இந்தச் சிறிய பூமி மட்டும்தான். இருந்தால் என்ன நவாப் மிர்ஸாவின் பிரியத்துக்குரியவள் இந்த ஃபக்ருன்னிஸாதானே. அந்த இடத்தை மட்டும் வேறு யாராலும் பிடித்துவிட முடியாது என்று அவளுக்கு நன்றாகவே தெரியும். ஆரம்பத்தில் ஃபக்ருன்னிஸாவைப் பற்றி முழுமையாகத் தெரியாதபோது நீ என் அரண்மனைக்கே வந்துவிடு என்று அழைத்துக்கொண்டிருந்தார். ஆனால் அவள் அதற்கு ஒப்புக்கொள்ளவில்லை. அங்கே போனால் அவரது அந்தப்புர ஆசை நாயகிகள் கூட்டத்தில் கலந்துவிடுவாள். ஃபக்ருன்னிஸா அதற்காகப் பிறந்தவளா என்ன. நவாப் ஸாஹேப் நான் உங்கள் அடிமை. என்னைப் போலவே இங்கேயிருக்கும் அத்தனை பேரும் உங்கள் அடிமைகள். எங்களை எங்கே வரச்சொல்லி உத்தரவிடுகிறீர்களோ அங்கே நாங்கள் வருகிறோம். ஆனால் சுதந்திரத்தின் காற்றை இதோ தங்களின் இந்த இடத்தில் சுவாசித்துக்கொண்டிருக்கும் எங்களை அந்தப்புரத்தில் முடக்கிவிடாதீர்கள். காட்டுக் கிளிகளைப் போல் திரிந்துகொண்டிருக்கும் எங்களைக் கூட்டில் அடைத்துவிடாதீர்கள். நான் காலில் சதங்கை கட்டியவள். என்னால் சுவர்களுக்குள் அடைபட்டுக் கிடக்க முடியாது என்றெல்லாம் சொல்லி நவாப் மிர்ஸா அலிகானை தன் வாக்கு சாதுர்யத்தினால் ஒப்புக்கொள்ள வைத்துவிட்டாள் ஃபக்ருன்னிஸா. அன்றைய தினம் அவள் ஆடிய ஆட்டத்தையும் பாடிய பாட்டையும் கேட்டவர்கள் அது போன்ற கலை விருந்தை அவர்கள் வாழ்விலேயே கண்டதில்லை என்றார்கள். கவியுள்ளம் படைத்த நவாபுக்கும் அப்படித்தான் தோன்றியது. ஃபக்ருன்னிஸா அன்றைக்கு உருவாக்கிப் பாடிய கஸல்களில் தெரிந்த காதலிலும் காவிய உணர்விலும் உருகிப் போனார் நவாப். எப்பேர்ப்பட்ட கவி அவள் என்று வியந்துகொண்டே இருந்தார்.

இவ்வளவு அறிவும் உனக்கு எப்படி வந்தது பெண்ணே. இதெல்லாம் அரசகுல மகளிர் மிகப்பெரிய அறிஞர்களிடம் நீண்ட காலம் பயின்ற பிறகு கிடைக்கக் கூடியதாயிற்றே என்று அவளிடம் கேட்டார் நவாப்.

ஃபக்ருன்னிஸாவுக்கு அந்த வாழ்க்கை பிடித்துதான் இருந்திருக்

கிறது மிஸ்ரா என்றாள் நீனா.

எப்படிச் சொல்கிறீர்கள். அவளுடைய டயரிக் குறிப்புகளைப் படித்து விட்டுத்தானே நீங்கள் இந்த வாழ்க்கையை விட்டுவிட்டு அந்த சௌத்ரி இளைஞனை மணந்துகொண்டு அவனோடு சென்றதாகச் சொன்னீர்கள்.

மிஸ்ரா சொல்வது தவறு. ஃபக்ருன்னிஸா இந்தக் கோட்டாவின் வாழ்க்கையை அணுஅணுவாய் அனுபவித்திருக்கிறாள். தன் ஆசிரியரான மௌல்வி நிஸாமுத்தீன் பற்றி அவள் தன் டயரியில் பக்கம் பக்கமாகக் குறிப்பிடுகிறாள். அவர் தனக்குக் கற்பித்த நீச்சல் நாட்டியம் இசை தர்க்கம் தத்துவம் வான சாஸ்திரம் எல்லாவற்றையும் பற்றி அவள் நினைவு கூர்கிறாள்.

அராபிக் பெர்ஷியன் ஹீப்ரு கிரேக்கம் என்று பல மொழிகளும் அறிந்திருந்தார் மௌல்வி. உலகிலுள்ள எல்லா இதிகாசங்களும் புராணங்களும் அவருக்கு அத்துப்படி. இது தவிர இந்தப் புத்தக அறிவின் மூலம் அறிந்ததை விடவும் அனுபவங்கள் மூலமாக அறிந்தது இன்னும் அதிகம் என்று சொல்லலாம்.

மௌல்வி ஃபக்ருன்னிஸாவுக்கு சொன்ன சில கதைகளைப் படித்த பிறகுதான் எனக்கு தாம்பத்ய வாழ்க்கையின் மீதே ஆர்வம் ஏற்பட்டது.

புறாக்களைப் பற்றிச் சொல்லுவார் மௌல்வி. தன் ஜோடி இறந்து போனால் இணைப்புறா அலகினால் கல்லை எடுத்துக்கொண்டு எவ்வளவு உயரம் போக முடியுமா அவ்வளவு உயரம் பறந்து சென்று கல்லை விழுங்கிவிட்டு சிறகுகளை மூடிக்கொண்டு அங்கிருந்து கீழே விழுந்து தன் உயிரை மாய்த்துக்கொள்ளும் என்பார் மௌல்வி.

அண்ணா நீ ஆநிரைகளைக் கவர்ந்து வந்தாய் நான் சிலாகித்தேன் மண்டோதரியைக் கூட்டி வந்தாய் நான் உன்னை முத்தமிட்டேன் என் சந்தோஷத்தை உனது வீணை நரம்புகளில் வெளிப்படுத்தினாய் நானும் உன் இசை வெளியில் பயணித்தேன் ஆனால் அண்ணா இப்போது உனக்கு வயதாகிவிட்டது இந்த வயதில் நீ சீதையைக் கவர்ந்து வந்திருக்கிறாய் பருவமடைந்த பிள்ளைகள் இருக்கிறார்கள் உனக்கு இது முறையல்ல என்று சொன்ன தம்பியின் பேச்சுக்கு செவிசாய்க்கவில்லை மூத்தவன். அண்ணனைப் பிரிந்து இதிகாச

நாயகனிடம் சரணடைகிறான் தம்பி. அப்போது சரணடைந்தவர்களை ஏற்பதே தர்மமென்று விளக்கும் சரணாகதித் தத்துவத்தை புறாக்களின் கதைகொண்டு போதிக்கிறான் இதிகாச நாயகன் என்று சொல்லி அந்தப் புறாக்களின் கதையை தன் மெலிந்த குரலில் சொன்னார் மௌல்வி.

வேட்டை எதுவும் அகப்படாமல் பசியும் களைப்புமாக மரத்தடியில் வந்து அமர்கிறான் அந்த வேடன். பொழுது சாய்கிறது. குளிரைப் போக்க காய்ந்த சருகுகளைக் கூட்டி தீ வைத்து அதனருகே அலுப்புடன் சாய்கிறான். மரத்தில் மேலே ஜோடிப் புறாக்கள். ஆண் புறா பெண் புறாவிடம் சொன்னது கண்ணே இந்த வேடன் வேட்டை எதுவும் கிடைக்காமல் நம் மரத்தின் கீழே வீழ்ந்து கிடக்கிறான். சரணடைந்தவர்களை நம் உயிர் கொடுத்தாவது காப்பாற்றுவது தானே தர்மம். அதனால் நான் அவனுக்கு உணவாக அந்தத் தீயில் விழுந்துவிடுகிறேன். என்னை அவன் உண்பான். அதற்குப் பிறகும் அவன் பசி ஆறாதது போல் தெரிந்தால் நீயும் அந்தத் தீயில் விழுந்துவிடு என்று சொல்லிவிட்டு தீயில் விழுகிறது ஆண்புறா.

பசியில் மயங்கிக் கிடந்த வேடன் அந்தப் புறாவை உண்கிறான். அவன் உண்பதையே பார்த்துக்கொண்டிருக்கிறது பெண் புறா. வேடன் சாப்பிட்ட பிறகும் அவன் பசி ஆறாததைக்கண்டு அதுவும் அந்தத் தீயில் விழுந்து தன்னை மாய்த்துக்கொண்டு அவனுக்கு உணவாகிறது.

எங்கள் ஊர் புறாக்களால் நிரம்பியது. உலகத்திலேயே புறாக்கள் அதிகம் வசிக்கும் ஊர் அது. மற்ற ஊர்களில் காற்று நிரம்பியிருக் கிறது என்றால் எங்கள் ஊர் புறாக்களின் சுவாசக் காற்றினால் நிரம்பியிருக்கிறது என்று சொல்லுவேன். மனிதன் தன் துக்கங்களிலிருந்து விடுதலை பெறுவதற்காகவே கடவுள் புறாக்களை அனுப்பியிருக்கிறான் என்று எனக்குத் தோன்றும். புறாவாகப் பிறந்திருக்கக் கூடாதா என்று மனசு ஏங்கும்.

இவ்வளவு புறாக்களும் இந்த ஊரிலேயே சுற்றிச் சுற்றி வந்துகொண்டிருப்பதன் காரணம் என்ன தெரியுமா. ஹஜ்ரத் முஹையத்தீன் அப்துல் காத்ரி ஒளலியா அடக்கமாகியிருப்பது இந்த ஊரில்தான். இருநூற்று எழுபது ஆண்டுகளுக்கு முன்பு இந்தியாவுக்கு வந்து இந்த மண்ணில் வாழ்ந்து மறைந்த சூ ஃபி. அவரைப் பற்றிய

கதைகள் ஏராளம். அவர் ஆற்றிய கராமத்துகளும் அநேகம். இந்த வட்டாரத்து மக்கள் எல்லாருடைய சுகவீனத்தையம் வியாதியையும் அவர் சொஸ்தப்படுத்தியிருக்கிறார். பாம்பு தீண்டிச் செத்தவர்களைப் பிழைக்க வைத்திருக்கிறார். ஔலியாவும் அவர் சீடர்களும் நதியைக் கடந்த கதையை இவ்வளவு காலம் சென்றும் நேற்று நடந்ததைப்போல் இந்த ஊரின் சின்னப் பிள்ளைகள் முதல் பெரியவர்கள் வரை சொல்லிக்கொண்டிருப்பார்கள். நதியில் வெள்ளம் பெருக்கெடுத்து ஓடுகிறது. எப்படி அக்கரைக்குப் போவதென்று தெரியவில்லை. அப்போது ஔலியா கண்களை மூடி சூரா ஃபாத்திஹாவை ஓதுகிறார். ஓதி முடிக்கவும் ஔலியாவும் சீடர்களும் நதியின் அக்கரையில் நிற்கிறார்கள். அப்போது இந்தப் பிரதேசத்தின் ராஜாவாக இருந்த நவாப் அலி மன்ஸூரின் மகள் ஹமீதா பானுவை மீட்டதும் இப்படித்தான். மகள் மீது உயிரையே வைத்திருந்தார் நவாப். திடீரென்று மகளைக் காணவில்லை. எங்கு தேடியும் கிடைக்கவில்லை. மகளும் நவாபிடம் சொல்லாமல் எங்கேயும் போகக்கூடியவள் அல்ல. ஔலியாவிடம் கேட்கலாம் என்று வந்தார் நவாப். கிண்ணத்தில் தண்ணீரை ஊற்றி அதில் பார்க்கச் சொன்னார் ஹஜ்ரத். தண்ணீரில் தெரிந்தாள் அருமை மகள். அண்டைப் பிரதேசத்து நவாப் உமர் ஷேக்கின் மகன் முஸ்டாக் அஹமதுதான் அவள் கையையும் வாயையும் கட்டி குதிரையில் வைத்துத் தன்னோடு பிணைத்துக்கொண்டு சிட்டாய்ப் பறந்துகொண்டிருந்தான். மகள் கடத்தப்படுவதற்குத் துணை புரிந்தவர் நவாபின் பிரதம மந்திரி. அவரைச் சிறையில் அடைத்துவிட்டு தனது வீரர்களுடன் சென்று போரிட்டு மகளை மீட்டுக்கொண்டு வந்தார் நவாப். எல்லாம் ஔலியாவின் கராமத்.

ஔலியாவின் தர்ஹா இந்த ஊரில் இருப்பதால்தானோ என்னவோ பக்கத்து ஊர்களில் அடிக்கடி நடக்கும் இந்து முஸ்லீம் கலவரங்கள் இந்த ஊருக்குள் நுழைவதில்லை. கஸ்பாவில் கோயில் கட்ட முயற்சி செய்ததால் கலவரம். முஸ்லீம் ஜமீன்தாரர்களுக்கு வட்டிக்குப் பணம் கொடுக்கும் இந்து லாலாக்கள் அதிகமாகிக்கொண்டே வருவதால் அதைக் காரணமாக வைத்து கலவரம். பசுவைக் கொன்று அதன் தலையைக் கோயில் வாசலில் வைத்துவிட்டதால் கலவரம். பதிலுக்கு பன்றியைக் கொன்று மசூதியில் போட்டு விட்டதால் கலவரம். எல்லாக்

கலவரங்களும் வெள்ளைக்காரச் சிப்பாய்கள் வந்த சேர்ந்த பிறகுதான் ஓயும். ஓய்ந்து முடிந்த பிறகுதான் இந்த ஊருக்குச் செய்தி வரும். ஆனால் சிப்பாய்கள் வரும்வரை கொலைகள்தான். மனிதனை மனிதன் எப்படிக் கொல்ல முடியும் என்று இந்தக் கலவரக் கதைகளைக் கேட்கும்போதெல்லாம் ஃபக்ருன்னிஸாவுக்கு ஆச்சரியமாய் இருக்கும்.

மரணத்தைப் பற்றித் தெரிய வந்தபோது அவளுக்கு சுமார் ஒன்பது வயது இருக்கும். அந்த தினத்தை அவளால் மறக்கவே முடியாத எப்போதும் போலவே காலையில் எழுந்ததும் தர்ஹாவுக்குப் போய் புறாக்களுக்கு தானியம் போடுவதற்காகச் சென்றுகொண்டிருந்த போது அந்த வெண்புறாவைப் பார்த்தாள் அவள். சிறகில் அடிபட்டுப் பறக்க முடியாமல் தத்தித் தத்திச் சென்றுகொண்டிருந்தது அந்தப் புறா. தூரத்திலேயே அதைப் பார்த்துவிட்ட ஃபக்ருன்னிஸா அதை எடுப்பதற்காக ஓடி வருவதற்குள் அந்தச் சம்பவம் நடந்து விட்டது. அந்த வழியாக வேகமாக வந்த குதிரை வண்டியின் சக்கரத்தில் சிக்கிவிட்டது புறா. ஓடி வந்து எடுத்துப் பார்த்தாள். துடிதுடித்து அவள் கையில் இறந்து போனது புறா. மரணத்தை அவ்வளவு நெருக்கத்தில் தனது கை விரல்களிலேயே உணர்ந்த அன்றைய தினம் அவள் மௌல்வியிடம் கேட்டாள் உயிர்களுக்கு ஏன் மரணம் சம்பவிக்கிறது என்று. அதுதான் உயிர்களின் இயற்கை விதி என்றார் மௌல்வி. அந்தப் பதிலில் அவளுக்குத் திருப்தியில்லை. இப்போது மனிதனை மனிதனே கொலை செய்கிறான். அதுவும் மதத்தின் பெயரால். இதற்கு யாரிடம் போய் விளக்கம் கேட்பது. ஆனால் நல்லவேளையாக ஔலியாவின் சக்திதான் அப்படியெல்லாம் எதுவும் நடந்துவிடாமல் இந்த ஊரைக் காத்துக்கொண்டிருக்கிறது. அந்த சக்தி இருக்கும் வரை இந்த ஊரில் வெள்ளைக்காரச் சிப்பாய்களோ கோட்வாலோ தேவையில்லை.

இப்படியேதான் போய்க்கொண்டிருந்தது ஃபக்ருன்னிஸாவின் டயரி. இடையிடையே மின்னல் கீற்றாக நாட்டியத்தைப் பற்றியும் உருது கவிதைகளைப் பற்றியும் குறிப்பிடுகிறாள்.

நவாப் மிர்ஸா அலிகான் வெள்ளைக்காரர்களிடம் சரணடையும் வரை ஃபக்ருன்னிஸா நவாபின் கேளிக்கைகளைப் பூர்த்தி

செய்வதிலேயே கழித்திருக்கிறாள். அவளுடைய நாட்டியத் துக்கும் கஸலுக்கும் நவாப் அடிமையாகிக் கிடந்திருக்கிறார்.

பிறகு பக்கம் பக்கமாக அபீனை ஹுக்காவில் குடிப்பது பற்றி சிலாகித்து எழுதியிருக்கிறாள். மிகவும் உணர்ச்சி வசப்பட்டுப் பேசிய சந்தர்ப்பத்தில் நவாப் தன் பேச்சையே இழந்துவிட்டு ஊமையாகி தவித்துக்கொண்டிருந்தபோது அவர் உதட்டில் அபின் தடவி தேநீர் கொடுத்துப் பேச்சை வரவழைத்த சம்பவத்தைப் பற்றி எழுதுகிறாள்.

ஃபக்ருன்னிஸாவைப் பற்றி நினைத்தாலே அவளுடைய சில்லமும் அதன் கட கட கட சப்தமும் அதன் மணமும்தான் என்னைச் சூழ்ந்துகொள்கிறது என்றாள் நீனா.

ஆனால் போதையூட்டும் பக்ருன்னிஸாவின் குரலை ஞாபகப்படுத்தும் அந்த ஹுக்காவின் மணம் வெள்ளைக்காரர்களின் தந்திரத்தாலும் ராணுவ பலத்தினாலும் திடீரென்று முடிவுக்குக் கொண்டுவரப்பட்டது. மல்லிகையை முகர்ந்தபடி ஃபக்ருன்னிஸாவின் நாட்டியத்தை ரசித்துக்கொண்டிருந்த நவாபுக்கு வெள்ளைக்காரர்களிடம் பேசும் சாதுர்யம் தெரியவில்லை. குடியும் கூத்துமாக இருந்த தன் சிப்பாய்களைக்கொண்டு வெள்ளை ராணுவத்தை எதிர்த்து உயிரை விட்டார். நவாபின் அரண்மனை கொள்ளையிடப்பட்டது. ஃபக்ருன்னிஸாவின் மாளிகையும் வெள்ளை ராணுவத்தின் பார்வையில் விழுந்தது. மாளிகையின் சுவர்களும் கூரைகளும் தவிர மற்றதெல்லாம் கொள்ளை போயிற்று. காஷ்மீர் சால்வைகள் ரத்தினக் கம்பளங்கள் மாணிக்கக் கற்கள் பதித்த வெள்ளி மதுக்கிண்ணங்கள் கோமேதகக் கற்கள் பதித்த ஹுக்கா வைரக்கற்கள் பதித்த எச்சில் கிண்ணங்கள் என்று எதையுமே அவர்கள் விட்டுவைக்காமல் அள்ளிக் கொண்டுபோனார்கள்.

ஃபக்ருன்னிஸா வைரத்தைப் பொடி செய்து விழுங்கி தன்னுயிரை மாய்த்துக் கொண்டாள். அவளை நம்பியிருந்த பெண்கள் அத்தனை பேருக்கும் வீதிக்கு வந்து தங்கள் உடம்பை விற்பது தவிர வேறு வழியில்லாமல் போயிற்று. அவளுடைய வளர்ப்பு மகள் நீனாவுக்கும் உட்பட உடம்பில் மேகநோய் தீண்டியது. தொற்றிய நோயை தம்மை நாடி வந்த வெள்ளைக்காரச் சிப்பாய்களுக்கே கொடுத்தார்கள் அந்தப்

பெண்கள். இதனால் உஷாரான வெள்ளைக்காரர்கள் சட்டம் போட்டார்கள். அச்சட்டத்தின்படி அந்தப் பெண்களின் உடல்கள் கண்காணிப்புக்கு உள்ளாக்கப்பட்டன. தங்கள் உடல்களை அவர்கள் பதிவு செய்துகொள்ள வேண்டியிருந்தது. குறிப்பிட்ட கால இடைவெளியில் உடல்களைப் பரிசோதித்துக் கொள்ள வேண்டியிருந்தது. அவர்களின் வருவாய்க்கும் வரி விதிக்கப்பட்டது. இப்படியாக நவாபின் ஆதரவில் இருந்த பெண்கள் தெருவோரத்து விபச்சாரிகளாக மாற நேர்ந்தது.

நீனாவுக்கு இந்த வாழ்க்கை பிடிக்கவில்லை. அவள் காதலித்தாள். காதலித்தவன் திருமணம் செய்து கொள்வதாகச் சொன்னான். திருமணம் செய்துகொண்டு கணவனை வீட்டுக்குச் சென்றபோது தான் புரிந்தது தன்னை அவனுடைய வீட்டுக்கு அடிமையாகத் தான் அழைத்துச் சென்றிருக்கிறான் என்பது.

அவன் அவனுடைய அம்மா அப்பா அப்பாவின் அம்மா அப்பா சித்தப்பா அண்ணன் அண்ணி அத்தை என்று பெரிய பட்டாளமே எனக்காக அங்கே காத்திருந்தது. மற்றும் சில மாடுகள்.

விடிவதற்குள் எழுந்து பால் கறக்கவேண்டும். எல்லோரும் எழுந்ததும் தேநீர் கொடுக்கவேண்டும். பால் வேண்டியவர் களுக்கு பால். பிறகு சப்பாத்தி. அத்தனை பேரின் துணிகளையும் துவைக்க வேண்டும். சாணி மிதித்து வரட்டி தட்ட வேண்டும். இதில் மட்டும் தீதியும் உதவி செய்வாள். பிறகு வீட்டைச் சுத்தம் செய்ய வேண்டும். கிழவி அவனுடைய அப்பாவின் அம்மா படுக்கையிலேயே மூத்திரம் போய்விடுவாள். அந்த அறையைக் கழுவிவிட வேண்டும். படுக்கை விரிப்புகளை மாற்ற வேண்டும். அவளைப் பார்க்கும் போதெல்லாம் கடவுள் மரணத்தின் தூதனை அனுப்ப மறந்தே போய்விட்டானோ எனத் தோன்றும். பிறகு பாத்திரம் தேய்க்கவேண்டும். அந்தப் பித்தளை எச்சில் குண்டான்களைத் தேய்ப்பதற்குள் பாதி உயிர் போய்விடும். நாள் பூராவும் வெற்றிலையைப் போட்டு குதப்பிக் குதப்பி துப்பியிருப் பார்கள். இதற்குள் பொழுது சாய ஆரம்பித்துவிட்டால் மறுபடியும் பால் கறந்து தேநீர். இரவுச் சமையல். சாப்பிட்ட பிறகு பெண்களின் கால்களைப் பிடித்துவிட வேண்டும். பிறகு பாத்திரங்கள்

சமையலறையைச் சுத்தம் செய்தல். இப்படி. இப்படி. சமயங்களில் கிழவிக்குக் கடுகெண்ணெய் தேய்த்துக் குளிப்பாட்டிவிட வேண்டும். உன்னைப்போல் பெண் கிடைக்க எங்கள் ஜிலே சிங் கொடுத்து வைத்திருக்க வேண்டும் பேட்டியா என்று சொல்லி முகத்தைக் கையால் சுற்றி விரல்களை நெட்டி முறித்து திருஷ்டி கழிப்பாள் கிழவி. அவளுக்கு மட்டுமல்ல எல்லாருக்குமே பேட்டியாதான். மகளே மகளே மகளே. உடம்பு பிடித்துவிடு பேட்டியா குளிப்பாட்டிவிடு பேட்டியா பால் காய்ச்சி அதில் ஜிலேபி போட்டுக் கொடு பேட்டியா எங்களுக்கெல்லாம் சொர்க்கமா நரகமா எதுவென்று தெரியாது. ஆனால் உனக்கு நிச்சயமாக சொர்க்கம்தான் மகளே.

ஆண்களிடமிருந்து வேறு மாதிரி பிரச்னை. காலையில் சப்பாத்தி கொடுத்துவிட்டு வரட்டித் தட்டிக்கொண்டிருப்பேன். ஜிலே சிங்கின் அப்பா வந்து என்னைத் தூக்கிக்கொண்டுபோவான். எதிர்த்தபோது ஜிலே சிங் சொன்னான். இதோ பார் நீனா இங்கே பல தலைமுறைகளாக எங்கள் மூதாதையரின் பெயர்கள் தெரியும். உனக்கு உன்னைப் பெற்றவர்களின் பெயர் தெரியுமா. அங்கே நீ இருந்திருந்தால் தினம் குறைந்தது ஒன்பது பேர் என்று வைத்துக்கொள். மாதத்தில் 270 பேர். ஆண்டுக்கு 3240 பேர். குறைந்தபட்சம் பதினெட்டு வருடங்களுக்கு நீ தொழில் செய்தால் எவ்வளவு பேர் என்று கணக்கிட்டுக்கொள். இங்கே உனக்கு என்ன குறைச்சல். இந்த வீட்டுக்கே உன்னை ராணியாக அல்லவா வைத்திருக்கிறோம். நீ கொடுப்பதைத்தானே சாப்பிடுகிறோம். அதைவிட உனக்கு வேறு என்ன வேண்டும்.

மறுநாளும் கிழவன் வந்தான். மூர்க்கமாகத் தாக்கினேன். எல்லோரும் கூடிவிட்டார்கள். பேட்டியாவுக்குப் பேய் பிடித்து விட்டது என்று அழுதாள் கிழவி. நான் சொன்னதை யாரும் காதிலேயே போட்டுக்கொள்ளவில்லை. கை கால்களில் சங்கிலி மாட்டினார்கள். மந்திரவாதியை அழைத்து வந்தார்கள். மூர்க்க குணம் படைத்த பேய் பிடித்திருப்பதாகச் சொன்னான் அவன். புடவையை உருவிவிட்டு அம்மணமாகக் கொதிக்கும் மணலில் போட்டான். அரே பேட்டியா அரே பேட்டியா என்று கதறியழுதாள் கிழவி. மயக்கமுற்றேன். தண்ணீர் தண்ணீர் என முணுமுணுத்தன உதடுகள். என்னைத் தூக்கிக்கொண்டுபோய் அறையில் வைத்து மிருகத்தைப்போல்

புணர்ந்தான் அந்த மந்திரவாதி. மயக்கமும் பிரக்ஞையும் தப்பித் தப்பி வந்துகொண்டிருந்தது. பலம் கொண்டமட்டும் நினைவை இழுத்துக்கொண்டு வந்து பார்த்தால் மேலே இயங்குவது மந்திரவாதியல்ல வேறு ஆள் என்று புரியும். யார் என்று யோசிப்பதற்குள் நினைவு தப்பி விடும்.

மயக்கமெல்லாம் முழுமையாகத் தெளிந்து எழுந்தபோதுதான் தெரிந்தது. வீட்டிலிருந்த அத்தனை ஆண்களும் பேயை விரட்டியிருக்கிறார்கள் என்பது. அதிலிருந்து அவர்கள் கூப்பிட்ட போதெல்லாம் போக வேண்டியிருந்தது. அதிலும் அந்தக் கிழவனுக்குத்தான் எத்தனை திமிர். நான் தனியாக மாட்டி விட்டால் போதும். உறுப்பை எடுத்து வாய்க்குள் திணித்து விடுவான். மூச்சுக்கூட விட முடியாமல் நான் தவிக்கும் தவிப்பு. கடவுளே நீ எங்காவது இருந்தால் உனக்கு இப்படிப்பட்ட நிலை வர வேண்டும் என்று நினைத்துக்கொள்வேன்.

இங்கிருந்து தப்பிக்கும் வகை தெரியாமல் குழம்பினேன். தோல்வியை அவ்வளவு சுலபமாக ஒப்புக்கொள்ள முடியவில்லை. அவர்கள் சாப்பிடும் உணவில் எச்சிலைத் துப்பினேன். மூத்திரம் பெய்தேன். உருளைக்கிழங்கு வறுவலில் என் சாண்டையையும் வழித்துப் போட்டேன். பார்த்து விட்டார்கள்.

மறுபடியும் மந்திரவாதி வரவழைக்கப்பட்டான். இந்த முறை பேயோட்டம் கடுமையாக இருந்தது. தின்பதற்கு மலம். மர்ம உறுப்பில் மிளகாய்ப் பொடி. எங்கள் நீனாவையா பிடித்து ஆட்டுகிறாய் இரு உன் பருப்பை எடுக்கிறேன் என்று சொல்லி பேய் உறுப்பின் பருப்பை இழுத்து குறுங்கத்தியால் அறுத்துப் போட்டான் மந்திரவாதி. நீண்ட கழியைப் பேய் உறுப்பின் உள்ளே செலுத்தினான்.

பல தினங்கள் மயக்கமாகவே கிடந்தேன். என்னென்னவோ மருந்து கொடுத்தார்கள். பேட்டியா பேட்டியா என்ற அழுகைக் குரல்கள் கேட்டன. நிஸாவின் மாளிகையில் உட்கார்ந்திருக் கிறேன். இடது காலை மடித்து வலது காலை கோபுரம் போல் உயர்த்தி ஹுக்கா புகைத்துக்கொண்டிருக்கிறேன். அறையெங்கும் அபின் மணம் கமழ்கிறது. கட கட கட கட கட கட கட கட கட என்ற சப்தம்.

புகைத்து முடித்துவிட்டுப் பாடுகிறேன். இது நிஸாவின் குரல் அல்லவா. நிஸாவும் நானும் ஓடிப்பிடித்து விளையாடுகிறோம். தடாகத்தில் எனக்கு நீச்சல் கற்றுத் தருகிறாள் நிஸா. சலவைக்கல் தரை கன்னத்தில் பட தரையில் படுத்திருக்கிறேன். அதன் சில்லிப்பு சூடாய் மாறுகிறது. நிஸாவின் கன்னம்.

பிழைத்தது ஏதோ அதிர்ஷ்டம். அழுகி விழுந்த கருப்பையோடு போய்விட்டது பேய். இனி வரவே வராது என்றார்கள். கிழிந்த நாராய் எத்தனை தினங்கள் படுத்துக் கிடந்தேன் என்று தெரியாது. பிழைத்து எழுந்தபோது நான் வேறு ஆள் என்று மட்டும் தெரிந்தது.

மௌனமாகவே இருந்தேன். கோடை வந்தது. ஆந்தீயையும் கொண்டு வந்தது. கூடவே திடீரென்று காற்றில் இறுக்கம் ஏற்பட்டு அது வரும். காற்றைச் சுழற்றிக் கடையும். மணல் ராக்ஷஸ சர்ப்பமாய் உருவெடுத்து ஆகாயம் வரை சுழன்றுகொண்டே செல்லும். இடையில் மரமோ மாடோ ஆளோ எது மாட்டினாலும் சுவடே தெரியாமல் நார் நாராய்க் கிழித்துப் போட்டுவிடும். சென்ற வருட சூறைக்காற்றில் மாட்டிக்கொண்டுவிட்டது இந்த வீட்டு மாடு. சுழலின் உச்சியில் மேலெழும்பி எங்கோ வெகு தொலைவில் தூக்கியெறியப்பட்டு கால்வேறு தலைவேறாய்ப் பிய்ந்து போனது மாடு. ஆந்தீ வராத நேரங்களிலும் வருவதைப்போல் பயமுறுத்தும் காற்று. பாலைவனச் சுடுமணலை வாரி வாரி முகத்தில் அடிக்கும். எப்போதுமே பற்களின் இடையில் மணல்தான் நறநறக்கும். கிழவிகள் முகத்தை மூடிக்கொள்வார்கள். நான் மட்டும் மூடக் கூடாது என்பான் ஜிலே சிங். என் சந்திர பிம்ப முகத்தைப் பார்த்துக்கொண்டே இருக்க வேண்டுமாம் அவனுக்கு.

அந்தக் கோடையில்தான் நான் அங்கிருந்து தப்பினேன். அன்றைக்கும் வந்து போயிருந்தது ஆந்தீ. களைத்துப்போய் உறங்கிக்கொண்டிருந்தார்கள். இடுப்பில் கத்தியைச் செருகிக்கொண்டேன். பெண்களின் முகத்தில் தலையணையை அழுத்தி துளிக்கூட சப்தமின்றி வரிசையாகக் கொன்றேன்.

ஆண்கள் தனித்தனியாகப் படுத்திருந்ததால் சுலபமாகப் போயிற்று. ஜிலே சிங்கின் அண்ணன் அறைக்குள் படுத்திருந்தான். அம்மிக்

குழவியை எடுத்து வந்து அவன் தலையில் போட்டேன். திரும்பியே பார்க்காமல் வெளியே வந்தேன். அவன் சித்தப்பா நிலா முற்றத்தில் கிடந்தான். அவன் உறுப்பை லேசாக வெளியே எடுத்தேன். விழித்துக் கொண்டான். என்னைப் பார்த்தவுடன் பேயைப் பார்த்ததுபோல் நாக்குழற ஏதோ சொல்ல முயற்சி செய்தான். பயத்தில் அவனுக்குப் பேச்சு வரவில்லை. சிறிதும் காலம் கடத்தாமல் அவன் உறுப்பைக் கத்தியால் அறுத்தேன். அவன் அலறலைக் கேட்டு வீட்டுக்கு வெளியே படுத்திருந்த ஜிலே சிங் ஓடி வந்தான். நான் நிதானித்துத் திரும்புவதற்குள் என் கைகளை அழுத்திப் பிடித்து முறுக்கினான். கைப்பிடி தளர்ந்து கத்தி கீழே விழுந்தது. கத்தியை எடுக்கத் தாவினான். அதற்குள் என் வாயால் அவன் குறியைக் கவ்வி விட்டேன். என் மண்டையில் இடியைப்போல் விழுந்தது அவன் அடி. அடிகள் இறங்க இறங்க என் கடி இறுகியது. மேலும் மேலும் அடித்தான். நான் பிடியையே விடாமல் அவன் குறியைக் கடித்துத் துப்பினேன்.

வேரறுந்த மரமாய்ச் சாய்ந்தான். கிழவனையும் இதுபோல் கடித்துத் துப்ப வேண்டுமென வெளியே வந்தேன். பிரேதமென வாயைப் பிளந்தபடி கிடந்தான் அவன். அருகில் நெருங்கி அவன் குறியில் கையை வைத்தேன். சில்லிட்டிருந்ததன் காரணம் புரியாமல் உலுக்கினேன். சவமாகி வெகுநேரம் ஆகியிருக்க வேண்டும்.

தற்கொலை செய்துகொள்ளப் பிடிக்காமல் அங்குமிங்கும் அலைந்த போதுதான் நான் ஷிரீனைச் சந்தித்தது.

ஷிரீன் ஷிரீன் ஷிரீன். யார் தெரியுமா. என் கடவுள். அவள் கண்களில்தான் என்ன ஒளி. இரைச்சலற்ற உள்ளமைதி பரவும் ஒளி. எலும்புகளுக்குள்ளெல்லாம் ஊடுருவும் ஒளி. அவளின் நிலவொளிப் பார்வையில் அருவியில் நனைவதுபோல் சிலிர்க்கும் உடல்.

நிஸா வைத்திருந்தாளே அந்த கோமேதகக் கல்லில்தான் அப்படிப்பட்ட குளிர்ச்சியான ஒளி வீசுவதை நான் பார்த்திருக் கிறேன். அந்த ஒளி உன்னிடம் பேசும். உன் உள்ளத்தையெல் லாம் வருடும். கொஞ்சும். கண்ணிமைகளில் முத்தமிடும். மரக் கிளைகளின் நடுவே ஊஞ்சலில் வைத்து உன்னை வேகமாய் ஆட்டி மேகக் கூட்டங்களுக்கிடையே கொண்டு செல்லும். நட்சத்திரங்களைப் பறித்துக்

கொண்டுவந்து உன்னுடன் பல்லாங் குழி விளையாடும். வானத்தை உனக்குக் கம்பளமாக்கும். கடலின் ஆழத்தில் உன்னை இட்டுச் சென்று பாதாள உலகின் வினோத ஜாலங்களை உனக்குக் காட்டும். கடல் கன்னிகளின் ரகஸ்ய சாம்ராஜ்யங்களை அறிமுகம் செய்யும். நட்சத்திர மீன்களின் ஆட்ட விதிகளுக்கு உட்படாத விளையாட்டுக்களை ஆர்ப்பரித்துச் சொல்லும். ராக்ஷஸ மீன்களின் கொடூரங்களிலி ருந்து தப்பிக்கும். மாய வித்தைகளைக் கற்றுக் கொடுக்கும்.

அந்த ஒளியை நான் எனக்குள் ஒளித்து வைத்திருக்கிறேன். சூறைக் காற்றில் அணைந்து விடாமல் அவள் கொடுத்த ஆகாயக் கம்பளத்தால் போர்த்திப் பாதுகாத்து வைத்திருக்கிறேன்.

கண்ணே நீனா உனக்கு அந்த ஒளியைத் தருகிறேன் வா சாகும் தறுவாயில் ஷிரீன் சொன்ன வார்த்தைகள்.

என்னைப் பாதுகாத்து அரவணைத்த தவாயி ஃப் இறந்துவிட்டாள். எனக்கு நாட்டியமும் பாட்டும் சொல்லிக் கொடுத்தவள். நான் பாடும் டும்ரியில் அந்தக் கோட்டாவே உருகியது. எல்லாம் ஷிரீனுக்குச் சொந்தம். எல்லாமே அவள் கொடுத்தது.

ஆண்கள் எனக்கு அருவருப்பைத் தந்தார்கள். அப்போது எங்கள் கோட்டாவுக்கு வரும் அத்தனை ஆண்களிடமிருந்தும் அவள் பேரழகே என்னைக் காத்தது. அதையும் மீறி என் டும்ரியில் மயங்கி என்னிடம் வருபவர்களிடம் என் உடல் காயங்களைக் காட்டி வெருட்டினேன். அதையும் மீறி வந்தவர்களிடம் தன் சாகசத் திறமைகளையெல்லாம் காட்டி தன் பக்கம் ஈர்த்து விடுவாள் ஷிரீன்.

சிதைந்து உருக்குலைந்து போயிருந்த என் உடலை அவள் எச்சிலால் ஒத்தடம் கொடுத்தாள். என் உடலில் அவள் முத்தம் பதியாத இடமே இல்லை என்று சொல்லுவேன்.

அவள் உடலின் மணம் என்னுள் பரவசக் கிளர்ச்சியை ஏற்படுத் தியது. அவள் அதரச் சுவை எனக்குள் காமத்தீயை எழுப்பியது. அவள் உமிழ் நீரும் மதன நீரும் என் உயிரைத் துளிர்க்கச் செய்தன. கால் விரல் நுனியிலிருந்து நாக்கினால் தீண்டுவாள். பாதம் ஆடுசதை முழங்கால் தொடை இடுப்பு நாபிச்சுழி வயிறு முலை கழுத்து தோள்

புருவம் கன்னம் நுதல் இமை என்று தீண்டும். அவள் சர்ப்ப நாக்கு சடேரென்று சிதைவுற்ற என் அல்குலில் நுழைந்து துழாவும்.

சிலிர்த்துப் போவேன். ஷிரீன். ஷிரீன்.

என் கைகளைப் பற்றியபடி இறந்துபோனாள் ஷிரீன். ஆரவாரமற்ற அந்த ஆழ்ந்த தவம் முடிவுக்கு வந்தது.

சொன்னால் நம்ப மாட்டாய். அவள் உயிர் என் கைகளின் வழியேதான் பிரிந்தது. இறுதித் துடிப்புடன் அந்த உயிர் என் விரல்களின் வழியே எனக்குள் கலந்ததை என் உடலில் உணர்ந்தேன். ஷிரீன் சாகவில்லை. எனக்குள் கலந்து விட்டாள்.

ஷிரீன் இறந்த அன்றுதான் குப்பைத் தொட்டியிலிருந்து அந்த சிசுவைக் கண்டெடுத்து வந்து என்னிடம் கொடுத்தது புச்சி. எலி குதறிய வயிறுடன் இரவு முழுவதும் குளிரில் கிடந்திருந்த அந்த உடலில் உயிர் ஒட்டிக் கொண்டுதான் இருந்தது. உடம்பெல்லாம் சன்னமாக நடுங்கிக் கொண்டிருந்தது. இப்போது நினைத்தாலும் ஆச்சரியமாகத்தான் இருக்கிறது அந்த உயிரைக் காப்பாற்றியது.

9

கி.பி. ஒன்பதாம் நூற்றாண்டு செத்த மூளை முனியாண்டியின் நாவலுக்கு எழுதியிருக்கும் தனது விமர்சனத்தில் வெவ்வேறு இடங்களில் வெவ்வேறு காலகட்டங்களில் நடந்த சம்பவங்களை இணைத்துத் திரித்து தகிடுதத்தம் செய்திருக்கிறான். அந்தச் சம்பவங்களை நான் உனக்கு உள்ளது உள்ளபடிச் சொல்லப் போகிறேன் கேள்.

முதலில் ஜவுளிக்கடையில் வெடிகுண்டு வீசியது பற்றி. ஜவுளிக்கடை உரிமையாளர் பால்வண்ணம் பிள்ளை வெறும் ஜவுளிக்கடை உரிமையாளர் மட்டும் அல்ல. சீனூர் வாஞ்சூர் காரசமங்கலம் கிராமங்களிலுள்ள பெரும்பாலான பீடி மண்டிகளின் சொந்தக்காரரும் ஆவார். இந்தக் கிராமங்களை நீ நேரில் வந்து பார்க்க வேண்டும். இங்குள்ள மக்கள்தொகை 13500. இதில் 72 சதவிகிதம் பேர் பீடி சுற்றுகிறார்கள். முப்பத்தாறு மாதங்களாவதற்கு முன்பே இக்குழந்தைகள் பீடி மண்டிகளில் அடகு வைக்கப்படுகிறார்கள். கணவர் அகாலமாய் இறந்துவிட தனது குழந்தைகளுடன் அனாதையாகிவிட்ட விதவைப் பெண் கூறினாள். தன் குழந்தைகளை 1800 ரூபாய்க்கும் 900 ரூபாய்க்கும் அடகு வைத்திருப்பதாக. கடைசிக் குழந்தை கைக்குழந்தை. பீடி மண்டி என்பது காற்றோட்டமில்லாத இருட்டுப் பொந்து. வாசிப்பதைச் சற்றே இந்தத் தருணத்தில் நிறுத்திவிட்டு காற்றோட்டமில்லாத இருட்டுப் பொந்து என்றால் என்ன என்பது பற்றி நீ சற்று நேரம் யோசி. அறைக்கு ஒன்பது குழந்தைகள். விடியற்காலையிலிருந்து இரவு ஒன்பது வரை வேலை. மதிய உணவுக்குக் கொஞ்ச நேரம். தொள்ளாயிரம் பீடி சுற்றினால் பதினெட்டு ரூபாய் கூலி. அடகு வைக்கப்பட்ட குழந்தைகள் சுற்றினால் ஒன்பது ரூபாய். வேலையைத் துரிதமாக்கும் பொருட்டு குழந்தைகளைக் கம்பியாலும் ஒயரினாலும் அடிக்கிறார்கள். அடிகளைச் சிறுமிகள்

சகித்துக்கொள்கிறார்கள். சிறுவர்கள் ஓடிவிடுகிறார்கள். இப்படி ஓடிவிட்ட சிறுவர்கள் அகப்பட்டுக்கொண்டால் கையிலும் காலிலும் சங்கிலியால் கட்டப்பட்டு கட்டைகளுடன் பிணைக்கப்படுகிறார்கள். தங்கள் சொல்படி கேட்பார்கள் என்ற நம்பிக்கை ஏற்பட்ட பிறகே சங்கிலி அவிழ்த்து விடப்படுகிறது. வேலை செய்கிறபோது மட்டும். மற்றபடி சாப்பிடச் செல்லும் போதும் வீட்டுக்குச் செல்லும்போதும் கட்டைகளுடன் பிணைக்கப்பட்ட சங்கிலிகளுடனேயே இவர்கள் போக வேண்டும். வர வேண்டும். தேவைப்பட்டால் இவர்கள் பீடி மண்டிக்காரர்களின் வீட்டு வேலைகளையும் கட்டிட வேலைகளையும் செய்ய வேண்டும். அடகு வைக்கப்பட்ட சிறுமி கட்டிட வேலை செய்கிறாள். இவளது அண்ணன் கொடுமை தாங்காமல் ஓடிவிட்டான். ஆனால் பீடி மண்டிக்காரர்கள் குழந்தைகளைக் கொடுமைப் படுத்துவது கிடையாது என்கிறார் பால்வண்ணம் பிள்ளை. வேலை கற்றுக்கொள்ளத்தான் பிள்ளைகளை பீடி மண்டிக்கு பெரியவர்கள் அனுப்புவதாகவும் வேலைப்பளு தெரியாமல் இருக்க டேப் ரிக்கார்டர்கள் மூலம் பாட்டு போடுவதாகவும் இவர் கூறுகிறார். டீ குடித்துத்தான் பீடித் தொழிலாளர்கள் பலர் காலத்தைக் கழிக்கிறார்கள். திருமணக் கடனுக்காகவும் சபரிமலை செல்வதற்காகவும்தான் பெரும்பாலான குழந்தைகள் அடகு வைக்கப்படுகிறார்கள். இதற்கு மேல் இது குறித்து நான் ஏதும் எழுத விரும்பவில்லை. சலிப்பாக இருக்கிறது. வங்கிக் கொள்ளை இப்போது வரலாறாகிவிட்ட விஷயம். இதையெல்லாம் ஒன்பதாம் நூற்றாண்டு செத்த மூளையால் புரிந்துகொள்ளமுடியாது. செத்த மூளைக்கு ஆர்ய அல்குல் கிடைத்தால் அது இம்மாதிரி விமர்சனங்களை விட்டுவிட்டு ஒதுங்கிவிடும் என்று தோன்றுகிறது.

கி.பி. ஒன்பதாம் நூற்றாண்டு செத்த மூளையின் கதை

அஸ்வத்தாமனைப்போல் மரணமற்றவனாய்த்

திரிந்துகொண்டிருக்கிறான் கி.பி. ஒன்பதாம் நூற்றாண்டு செத்த மூளை. தோற்றம் கி.பி. ஒன்பதாம் நூற்றாண்டு. அப்போதிருந்து சீராக வளர்ந்துகொண்டே வருகிறது அவனுடைய ஆணுறுப்பு. சொர்ணமுத்துப் பிள்ளையும் நியூயார்க் கறுப்பனும் இவனுக்கு முன்னால் தூசு. சொர்ணமுத்துப் பிள்ளை கதை உனக்குத் தெரியும்தானே வாசுகி. தெரியாவிட்டால் சொல்கிறேன். சொர்ணமுத்துப் பிள்ளை என்பவருக்கு ஆண்குறியில் ஆபரேஷன். ஆபரேஷன் நடக்கும்போது அவரைக் கவனித்துக் கொண்ட நர்சுக்கு சந்தேகம். அது என்ன இந்த ஆளின் ஆணுறுப்பில் சொளை என்று பச்சைக் குத்தி இருக்கிறது என்று. அவரும் டிஸ்சார்ஜ் ஆகிற தினம் வருகிறது. நர்சுக்கு ஆர்வம் தாங்கமுடியவில்லை. பெரியவர்தானே கேட்டுவிடலாம் என்று மனசைத் தயார்ப்படுத்திக்கொண்டு இன்ன மாதிரி பார்த்தேன் என்ன அர்த்தம் தப்பாக நினைத்துக்கொள்ளக்கூடாது என்று தயங்கியபடி கேட்டாள். ப்பூ இதுதானே விஷயம். நீங்களும் தப்பாக நினைத்துக் கொள்ளக் கூடாது என்று சொன்ன அவர் கொஞ்சம் உங்கள் கையால் இதைத் தொடுங்கள் எனக் கேட்க அவளும் அவரது ஆணுறுப்பைத் தொட்டாள். அவள் கை பட்டதும் அது சர்ப்பத்தைப்போல் சீறியெழுந்து ஆட அதில் சொர்ணமுத்துப் பிள்ளை என்று பச்சை குத்தியிருந்தது. இதேபோல் நியூயார்க் கறுப்பனின் குறியில் WENDY என்று பச்சை குத்தியிருப்பதைப் பார்த்த பெண் அவனிடம் சிரித்துக்கொண்டே உன்னுடைய தோழியின் பெயர் WENDY தானே எனக் கேட்க அவன் அவளை இதைத் தொடு என்று சொல்ல அவளும் தொட WELCOME TO NEWYORK HAVE NICE DAY என்பதாக அதில் பச்சைக் குத்தி இருந்ததாம். ஆனால் கி.பி. ஒன்பதாம் நூற்றாண்டு செத்த மூளையின் ஆணுறுப்பில் 00 என்ற இந்த நாவலையே எழுதிவிடலாம். பல நூற்றாண்டுகளாக இடையறாது வளர்ந்துகொண்டே வரும் அந்த ஆணுறுப்பு பல்லாண்டுகளுக்கு முன்பு முளைத்து தன்னிச்சையாய் வளர்ந்து பரவிக் கிடக்கும் காட்டுக்கொடியாகத் தோற்றம் தந்தது. முண்டு முடிச்சுகளுடன் மேல்புறப் பட்டைகள் முதிர்த்து சிதறும் காட்டுக் கொடியைத் தோளில் போட்டுக்கொண்டு அலையும் சித்தன் போலும் இவன் என இவனைக் காண்போர் அதிசயித்துச் செல்வது வழக்கம். எவரும் இதை அவனது உறுப்பென சந்தேகித்தார் இல்லை. ஆனாலும்

இவனைப் பற்றிய செய்தி இளைஞர்களிடையே பரவித்தான் இருந்தது. இருந்தாலும் யாரும் இவனைக் கண்டதில்லை. அதனாலேயே இவனைப்பற்றி பல விதமான கட்டுக் கதைகள் எழுந்தன. அந்தக் கதைகளையெல்லாம் தொகுத்தால் புத்தகம் அளவு நீண்டுவிடும் என்பதால் மாதிரிக்கு இந்தக் கதையை மட்டும் உனக்குச் சொல்கிறேன்.

கி.பி. ஒன்பதாம் நூற்றாண்டு செத்த மூளை பற்றிக் கேள்விப்பட்டு பயம்கொண்ட பெண்ணின் கதை இது. அவளுக்கு ஆண்குறி என்றாலே பயம். திருமணமே வேண்டாம் என்று சொல்லி விட்டாள். அம்மைக்கோ மகளைப் பற்றிய கவலை. திருமணம் திருமணமென்று மகளை வற்புறுத்திக்கொண்டிருந்தாள். நச்சரிப்பு தாங்க முடியாத மகளும் நிபந்தனையோடு சம்மதம் சொன்னாள். மாப்பிள்ளைக்கு அது இருக்கக்கூடாது. எதுடீ? அதுதாம்மா அது. மேலக் கேக்காதம்மா வெக்கமா இரிக்கி. பல நூற்றாண்டுகளாக திருமணமாகாதவனும் சம்போகம் அறியாதவனும் சில நூற்றாண்டுகளாக ஆர்ய அல்குலைத் தேடி அலைந்து சலிப்புற்றுக் கொண்டிருப்பவனுமான கி.பி. ஒன்பதாம் நூற்றாண்டு செத்த மூளைக்கு இது விபரம் தெரிய வரவே அவன் நேராக வந்து அந்தத் தாயின் எதிரே நின்றான். நாம் தேடி வரும் ஆர்ய அல்குல் கிடைப்பதாகத் தெரியவில்லை. எப்படியோ இதுவாவது அமைந்தால் பரவாயில்லை என நினைத்துக்கொண்டே உங்கள் மகளை மணம் முடிக்க வந்தேன் என்றான். சொன்னவனை ஏறிட்டுப் பார்த்தாள் பெண்ணின் தாயார். ஆஜானுபாகுவான தோற்றம். தாடி மீசையுடன் தோளில் ஏதோ காட்டுக் கொடியைப் போட்டுக்கொண்டு சித்தனைப்போல் நின்றுகொண்டிருந்த அவனிடம் அவள் நிபந்தனையைச் சொன்னாள். தெரியும் அம்மணி என்னிடம் அது இல்லை எனக் கூசாமல் பொய் சொன்னான் கி.பி.ஒ.நூ.செ.மூளை. சொன்னால் ஆயிற்றா நான் செக்கப் பண்ணிப் பார்க்கவேணும் என்றாள் அவள். ஓ தாராளமாய் என்றான் அவன். அவள் தனது வலது கையை முன்னே நீட்டி அவன் இடுப்பின் கீழே தொடைகளின் நடுவே துழாவினாள். விதைகள் அகப்பட்டதே தவிர அதைக் காணோம்.

திருமணம் நடந்தது. முதலிரவும் வந்தது. என்னதான் தன் அம்மை மணாளனின் தொடையிடுக்கில் கை வைத்து சோதித்துப் பார்த்திருந்தாலும் பெண்ணுக்கு பயம். மம்மி மம்மி... நீயும் என்

பக்கத்தில் வந்து படுத்துக்கொள் என்றாள். மகளின் பயம் இன்னும் நீங்காததைக் கண்ட தாயும் அந்த முதலிரவில் தன் மகளின் அருகே படுத்துக்கொண்டாள். திருமண வேலைகளின் அசதி காரணமாக அம்மா தூங்கி விட்டாள். மகளுக்கோ பயம் இன்னும் முழுசாய் நீங்கிவிடாதபடியால் சரியாய்த் தூக்கம் வராமல் புரண்டுகொண்டிருந்தாள். கி.பி.ஒ.நூ.செ.மூளைக்கோ துளியும் உறக்கம் வரவில்லை. கடைசியில் நம் விதியைப் பார் என்று நொந்தபடியே படுத்துக் கிடந்தான். ஆனால் அவனது குறியோ இதை அவ்வளவு சாதாரணமாக எடுத்துக்கொள்ளாமல் பக்கலில் படுத்துக் கிடந்த பருவக் கிழத்தியின் சூடு தாங்காமல் சீறிக்கொண்டு கிளம்ப தன் மீது சர்ப்பம் வந்து கிடப்பதைக்கண்டு திடுக்கிட்ட பெண் குய்யோ குய்யோ எனக் கத்தினாள். தன் மகளின் அலறல் ஒலி கேட்டு கண் விழித்து எழுந்த தாயும் தன் தொடைகளின் அருகே விழுந்து கிடந்த சர்ப்பத்தைக்கண்டு அதிர்ந்து போனாள். கடைசியில்தான் தெரிந்தது சர்ப்பத்தின் உண்மை சொரூபம்.

தாயாலும் மகளாலும் துடைப்பக்கட்டை அடி வாங்கிக்கொண்டு இனிமேல் என்ன செய்வதென்று குழம்பி சிறிது காலத்தை இலக்கியத்தில் செலவழித்து மனம் விரக்தியுற்று கடைசியில் குள்ளச் சித்தனிடம் வந்து சேர்ந்தான் கி.பி. ஒன்பதாம் நூற்றாண்டு செத்த மூளை. குள்ளச் சித்தன் செத்த மூளையின் சமீபத்திய நண்பன். மந்திர தந்திரங்களில் வல்லவன். மூலிகை களைத் தேடி காட்டில் அலைந்துகொண்டிருக்கும் நேரம் போக எஞ்சிய நேரத்தை ஓலைச் சுவடிகளிலும் சுடுகாட்டு எலும்பு களோடும் கழித்துக் கொண்டிருப்பவன். பெண்களை வசியம் செய்யக் கூடிய ரகஸ்யம் அடங்கிய ஓலைச்சுவடிக் கட்டை எடுத்து செத்த மூளையிடம் கொடுத்தான். அதில் இப்படிக் கண்டிருந்தது.

சுடுகாடடு எலுமபை முசுமுசுககை சார விடடு அறைதது அதை கருநகோழி முடடையில துவாரம செயது வெளளக கருவை நீககிவிடடு அதனுள விடடு துணியில சுததி நாகபபுததில புதைதது 45 நாடகள கழிதது எடுதது ஓடடை உடைதது அதில ஆண நாய மாமிசம சோதது இதிலே இருககும யநதிரஙகளை தாமிரத தகடடில எழுதி ஒனபது தினம தியானம செஞசு வேபபலை புகையிடடு கழிநதபின

ஊருககு கிழககே போய வாயில போடு

எருமைக குளமபு மயிலதுததம லவஙகபபடடை சதாகுப்பி ஏலம ஓமம அதிமதுரம சிததரததை மறமஞசள வாழைபபடடையை அனலில வாடடி எடுதத ரசம காடடு மலலிததழையை எருமைக கோமியததில காயசசி எடுத்த ரசம துரிஞசிகா களளிபபடடை எறுககளபபடடை மறுஙகபபடடை எலலாம சரியிடை எடுதது பெண வெளளாடடு கோமியததில ஒமபது ஜாமம ஊறபபோடடு அரைதது அதில பாமபுத தோலை பொடி பணணி பொடடு வை சீரகம கசகசா கறுஞசீரகம மொடககொததான வோ கணடஙகததிரி வோ அககாரம கோஷடம சரியிடை எடுதது அரைதது அதில நாயகடுகு தேததானகொடடை கடடு மயிலிறகு சுடடு கரியாககி அரைதது பொடியுணடாககி கலககி வை உடுமபை பிடிதது சாமபிராணி தூபம கொடுதது நாககை அறுதது மேல பொடிகளுடன சேர்த்து 45 தினம ஓம பகவதே பவானி சாமுணடி எனச சொலலி சாபபிடு சாபபிடுமபோது நாககு உதடு கறுககும துமபைபபூ வாசம வரும கண குளிர்சசியாகும் கைகால சிலலிடடுப போகும அதறகுப பிறகு குமபளானபடடை மாதளனகாய படடை துரிஞசிப படடை தீநீலிபபடடை கலயாணமுறுககனபடடை பொடஙகநாரிபடடை செமபரணடை எலலாததையும் கோழி ரததம குரஙகு ரதததததில போடடு காயசசி வடிகடடி சஞசீவி குளவி கூணடு கடடி கணமூடும தருணததில அதையெடுதது கலவையில போடடு அரைதது சூரிய புடம போடடு மறுபடி அரைதது உருணடை செயது செமபடடை காககாய நாககை அறுதது உருணடையோடு சேரதது 45 நாள சாபபிடு

குள்ளச்சித்தன் கொடுத்த ஓலைச் சுவடியில் கண்டிருந்தபடி சாப்பிட்டான் செத்த மூளை. உடம்பு மாற்றம் கண்டது. கண் குளிர்ச்சியாகி உடம்பில் தும்பைப் பூ வாசம் வந்தது. பெண் வசியம் கை வந்துவிட்ட தைரியத்தில் எதிர்வரும் பெண்களைப் பார்த்து கண்ணடிக்க ஆரம்பித்தான். ஆனால் துரதிர்ஷ்டவசமாக பெண் போலீஸ் மஃப்டியில் வந்தபோது கண்ணடித்து வைக்க அவள் செத்த மூளையை லாக்கப்பில் தள்ளி பெண்டு நிமிர்த்திவிட்டாள்.

நீ	கா	ண	டு	க	ர	ஷத்	தி	உ
க	எ	ண	கொ	ன	பு	ய	ப	டு
வே	த	ளி	ய	ப	ன	கு	தி	வே
டு	கா	வ	ம	து	ன	ஏ	கா	வோ
ன	ம	வே	கி	போ	வ	ழி	ல	உ
ளி	த	ல	லை	இ	ய	ல	ளை	ம
ண	ரு	ன	உ	றே	செ	க	த	ண
ம	ப	த	நா	கி	து	க	க	கு
ன	வா	றி	ப	ரு	ண	எ	க	ச















இப்படியாக குள்ளச்சித்தனிடம் ஏமாந்த செத்த மூளை சோதிடரை வந்து பார்த்தான். நூற்றியெட்டு தடவை ஆர்ய அல்குல் எழுதினால் உனக்கு நிச்சயம் கிட்டும் வெற்றி என்றார் சோதிடர். எழுத ஆரம்பித்தான் கி.பி. ஒன்பதாம் நூற்றாண்டு செத்த மூளை.

ஆர்ய அல்குல் ஆர்ய அல்குல் ஆர்ய அல்குல் ஆர்ய அல்குல்

ஆர்ய அல்குல் ஆர்ய அல்குல் ஆர்ய அல்குல் ஆர்ய அல்குல்

ஆர்ய அல்குல் ஆர்ய அல்குல் ஆர்ய அல்குல் ஆர்ய அல்குல்

ஆர்ய அல்குல் ஆர்ய அல்குல் ஆர்ய அல்குல் ஆர்ய அல்குல்

ஆர்ய அல்குல் ஆர்ய அல்குல் ஆர்ய அல்குல் ஆர்ய அல்குல்

ஆர்ய அல்குல் ஆர்ய அல்குல் ஆர்ய அல்குல் ஆர்ய அல்குல்

ஆர்ய அல்குல் ஆர்ய அல்குல் ஆர்ய அல்குல் ஆர்ய அல்குல்

ஆர்ய அல்குல் ஆர்ய அல்குல் ஆர்ய அல்குல் ஆர்ய அல்குல்

ஆர்ய அல்குல் ஆர்ய அல்குல் ஆர்ய அல்குல் ஆர்ய அல்குல்

ஆர்ய அல்குல் ஆர்ய அல்குல் ஆர்ய அல்குல் ஆர்ய அல்குல்

ஆர்ய அல்குல் ஆர்ய அல்குல் ஆர்ய அல்குல் ஆர்ய அல்குல்

ஆர்ய அல்குல் ஆர்ய அல்குல் ஆர்ய அல்குல் ஆர்ய அல்குல்

ஆர்ய அல்குல் ஆர்ய அல்குல் ஆர்ய அல்குல் ஆர்ய அல்குல்

ஆர்ய அல்குல் ஆர்ய அல்குல் ஆர்ய அல்குல் ஆர்ய அல்குல்

ஆர்ய அல்குல் ஆர்ய அல்குல் ஆர்ய அல்குல் ஆர்ய அல்குல்

ஆர்ய அல்குல் ஆர்ய அல்குல் ஆர்ய அல்குல் ஆர்ய அல்குல்

ஆர்ய அல்குல் ஆர்ய அல்குல் ஆர்ய அல்குல் ஆர்ய அல்குல்

ஆர்ய அல்குல் ஆர்ய அல்குல் ஆர்ய அல்குல் ஆர்ய அல்குல்

ஆர்ய அல்குல் ஆர்ய அல்குல் ஆர்ய அல்குல் ஆர்ய அல்குல்

ஆர்ய அல்குல் ஆர்ய அல்குல் ஆர்ய அல்குல் ஆர்ய அல்குல்

ஆர்ய அல்குல் ஆர்ய அல்குல் ஆர்ய அல்குல் ஆர்ய அல்குல்

ஆர்ய அல்குல் ஆர்ய அல்குல் ஆர்ய அல்குல் ஆர்ய அல்குல்

ஆர்ய அல்குல் ஆர்ய அல்குல் ஆர்ய அல்குல் ஆர்ய அல்குல்
ஆர்ய அல்குல் ஆர்ய அல்குல் ஆர்ய அல்குல் ஆர்ய அல்குல்
ஆர்ய அல்குல் ஆர்ய அல்குல் ஆர்ய அல்குல் ஆர்ய அல்குல்
ஆர்ய அல்குல் ஆர்ய அல்குல் ஆர்ய அல்குல் ஆர்ய அல்குல்
ஆர்ய அல்குல் ஆர்ய அல்குல் ஆர்ய அல்குல் ஆறிய
அல்கூல்*

* சரியாக 108 முறை எழுதப்பட்டிருக்கிறதா என்று எண்ணிச் சரி பார்க்கிற வாசுகிகள் இந்த நாவலைத் தொடர்ந்து வாசிப்பதை நிறுத்திவிட்டு வேறு ஏதேனும் உருப்படியான காரியத்தை பார்க்கப் போகலாம்.

10

அவர்கள் தூணில் கட்டப்பட்டிருந்தார்கள். மெழுகுவர்த்திகள் தருவிக்கப்பட்டன. அவர்களின் தலைமயிரும் பிறப்புறுப்பைச் சூழ்ந்திருந்த ரோமமும் மெழுகுவர்த்திகளால் பொசுக்கப் பட்டன. அந்த முகாம் முழுவதும் ரோமம் பொசுங்கும் வாடை பரவியது.

ஜுவாலை பிறப்புறுப்பைத் தீண்டும்போது அவர்கள் வலியால் ஓசையெழுப்பினார்கள். ஓசையெழுப்பினவர்களின் பிறப்புறுப்புகளில் மெழுகுவர்த்தி தொடர்ந்து காண்பிக்கப்பட்டது. கதறினார்கள். அந்தப் பிராந்தியமே அதிர்கிறாற்போல ஓலமிட் டார்கள். உறுப்பு தீய்ந்து தசை உருகி வழிந்தது. உடல் கருகும் நாற்றம் காற்றில் கலந்தது. வார்த்தைகளே விளங்காமல் உயிரெழுத்துக்களெல்லாம் சேர்ந்து மொத்தமாய் ஒலித்தது அவர்கள் வாயிலிருந்து. பிறகு அவர்களின் நெஞ்சு கன்னம் கழுத்து அக்குள் தொடை வயிறு உள்ளங்கால் முகவாய் புட்டம் எங்கும் மெழுகுவர்த்தியால் சுட்டார்கள். மெழுகுவர்த்தி விளை யாட்டுக்குப் பிறகு மிளகாய்ப் பொடிகொண்டு வரப்பட்டது. தீப்புண்களின்மேல் மிளகாய்ப் பொடி தூவப்பட்டது. ஒன்பது துளைகள்கொண்ட பிளாஸ்டிக் டப்பாவின் மூலம் மிளகாய்ப் பொடி பூக்குவளையால் தண்ணீர் ஊற்றுவதுபோல் தூவப்பட்டது. பிறகு பெஞ்சுகளில் குப்புறப் படுக்க வைக்கப் பட்டு கட்டப்பட்டார்கள். ஸ்பூன்கள் தருவிக்கப்பட்டன. சதை வெந்து விட்டதா என்று ஸ்பூனால் புட்டத்தைக் குத்திப் பார்த்தார்கள். சதை சரியாக வேகாமல் இருக்கவே திரும்பவும் மெழுகுவர்த்தி தரச் சொன்னான் தாயுமானவன். சதை வெந்ததும் ஸ்பூன்களால் எடுத்து மற்ற கைதிகளுக்கு உணவாகக் கொடுத்தார்கள். உண்ண மறுத்தவர்கள் குப்புறக் குனிய வைக்கப்பட்டு அவர்களின் குதப்பிளவில் சூட்டுக்கோல் செருகப்பட்டது.

உடலின் பல இடங்களிலும் சதை உருகி எலும்புகள் தெரிய தரையில் விழுந்த அவனுக்கு இன்னமும் உயிர் இருந்தது. தண்ணீர்

தண்ணீர் என்றான். தண்ணீர் வேண்டுமாம் அவனுக்கு போய்க் கவனி என்றான் தாயுமானவன். அவனை மறுபடியும் நிற்கவைத்துக் கட்டினார்கள். கொதிக்கும் எண்ணெயை அவன் முகத்தருகேகொண்டு சென்றான் சிப்பாய். தண்ணீர் கேட்டவன் அலற ஆரம்பித்தான். வாயை இறுகக் கடித்தான். நாக்கு துண்டாகிக் கீழே விழுந்தது. சூட்டுக் கோலால் அவன் கன்னத்தைத் தீய்த்தார்கள். வலி தாளாமல் வாயைப் பிளந்தபடி அலறினான். அப்போது அவன் வாயில் காய்ச்சிய எண்ணெயை ஊற்றினார்கள்.

தண்ணீர்தானே கேட்டான் ஏன் எண்ணெயைக் கொட்டுகிறாய் மடையா என்று கேட்டான் தாயுமானவன். நாட்டில் ஒரே தண்ணீர்ப் பஞ்சம் ஐயா என்றான் சிப்பாய். சரி கவனித்துச் செய் அவனுக்கு கொலஸ்ட்ரால் அளவு அதிகமாகிவிடப் போகிறது என்றான் தாயுமானவன்.

சிப்பாய்கள் அனைவரும் விழுந்து விழுந்து சிரித்தார்கள். சிலருக்கு கண்களில் கண்ணீரே வந்துவிட்டது.

கைதிகளைப் பார்த்துக் கேட்டான் தாயுமானவன். தோழர்களே உங்களுக்கு என்ன நகைச்சுவை உணர்வே இல்லையே. நீங்கள் என்ன எந்திரங்களா? ம் (சற்றே குள்ளமாகவும் பருமனாகவும் இருந்தவனை நோக்கி) நீ எழுத்தாளன்தானே கிண்டல் இல்லாமல் போஸ்ட் மாடர்னிசம் சாத்தியமா. நீங்களெல்லாம் இன்னமும் கிரேக்கத் துன்பியல் காலத்திலேயே இருக்கிறீர்கள் என்றான்.

சரி இவர்களுக்கு நகைச்சுவை உணர்வை ஊட்டுங்கள் பார்ப்போம் என்றான்.

அனைவரும் பெஞ்சில் படுக்க வைக்கப்பட்டு கட்டப்பட்டார் கள். நண்டுகளையும் கரப்பான் பூச்சிகளையும் கொண்டுவந்து அவர்களின் உடலெங்கும் மேயவிட்டார்கள் சிப்பாய்கள்.

சிறிது நேரத்தில் அவர்களின் கைகால் கட்டுகள் தளர்த்தப் பட்டன. பின்னர் அவர்களுக்கு தகரத் தட்டுகளில் மலம் பரிமாறப்பட்டது. கைகளால் எடுத்துச் சாப்பிடுங்கள் என்று அலறினான் தாயுமானவன். பன்றிகள் மலம் சாப்பிடுவதைப் பார்த்திருக்கிறாயா அதைப்போல் சளக்

பளக்கென்று சப்தம் எழுப்பிக்கொண்டே ருசித்துச் சாப்பிட வேண்டும் என்றான். சாப்பிட்டு விட்டு சிலர் வாந்தியெடுத்தார்கள். சாப்பிட முடியாதவர்களும் சாப்பிட மறுத்தவர்களும் தனியாகப் பிரிக்கப்பட்டார்கள். பெஞ்சுகளில் கிடத்தப்பட்டு கைகால்கள் கட்டப்பட்டன. தாயுமானவனின் உத்தரவுப்படி சிலரது முன்பற்கள் கிடுக்கியால் பிடுங்கப்பட்டன. பிறகு அவர்களது கட்டுகள் அவிழ்க்கப் பட்டன. முகமெங்கும் ரத்தக்களறியாக இருந்தது. சிலர் மயக்கமுற்று விழுந்தார்கள். அலறிக்கொண்டிருந்தவர்களிடம் புலனடக்கம் வேண்டும் மடையர்களே என்று கத்தினான் தாயுமானவன். தரையில் கைகளை மடித்து வைத்து கவிழ்ந்து உட்காருங்கள் என்றான். அவர்கள் முன்னே அடை அடையாக கம்பளிப் பூச்சிகளைக் கொட்டினார்கள். தின்னுங்கள் என்றான் தாயுமானவன். தின்னாதவர்களின் கைகால் விரல் நகங்கள் கூர்மையான கிடுக்கிகளால் பிடுங்கப்பட்டன.

சிலர் கரும் பன்றிகளை இட்டு வந்தார்கள். பன்றிகளின் முன்னங்கால்களும் பின்னங்கால்களும் கட்டப்பட்டன. சில கைதிகளின் கைகால் கட்டுகள் அவிழ்த்து விடப்பட்டன. பன்றிகளைப் புணருங்கள் என்றான் தாயுமானவன். புணர்ந்து முடித்தும் அவைகளைக் கட்டிப் பிடித்து

கன்னத்தில் முத்தமிட்டால் உள்ளந்தான்

கள்வெறி கொள்ளுதடீ

உன்னைத் தழுவிடிலோ கண்ணம்மா

உன்மத்த மாகுதடீ

என்ற பாடல் வரிகளை உருக்கமாகப் பாட வைக்கப்பட்டார்கள். உருக்கமாகப் பாடாதவர்களைத் தனியே பிரித்தான் தாயுமானவன். உங்களுக்கென்று பிரத்தியேகமான விளையாட்டுகளை உருவாக்கி வைத்திருக்கிறேன் வாருங்கள் என்றான்.

11

நீ மனநோய் மருத்துவரைப் போய்ப் பார்ப்பதே நல்லது என்றாள் வாசுகி.

வாசுகி நான் மனநோய் மருத்துவரைத்தான் அணுக வேண்டு மெனில் பஞ்சம் பசி போர் வேலையில்லாத் திண்டாட்டம் ஊழல் சுரண்டல் பதவி ஆசை பொறாமை போன்ற பிரச்னைகளை யும்கூட மனநோய் மருத்துவரே தீர்த்து வைத்துவிடலாமே என்று கடுப்புடன் சொன்னான் அவன்.

கோபப்படாதே உன்மீதுகொண்ட அக்கறையினால்தான் சொல்கிறேன் என்றாள் வாசுகி.

ஆச்சரியமில்லை. இப்படி நடக்குமென்று சில தினங்களாகவே எதிர்பார்த்ததுதான் என்றாள் அடுத்த வாசுகி.

நடந்தது இதுதான். உத்தமத் தமிழ் எழுத்தாளன் முனியாண்டி யைப் பார்த்தால் ஹலோ சொல்வதை நிறுத்திவிட்டான்.

நான் தமிழில் எழுத விரும்பவில்லை. ஃப்ரெஞ்ச் ஸ்பானிஷ் ஸ்வாஹிலி அராபிக் ஹீப்ரூ இட்டிஷ் மஸாய் ஸுலூ ஸோத்தோ லுகாந்தா கிம்பிந்து லுபா கிகோங்கா ங்கூதா லிங்காதா யோம்போ என்று நான் இஷ்டப்படும் மொழியில்தான் எழுத விரும்புகிறேன்.

நீ இந்தத் தமிழ் மண்ணில் நிற்பதற்கே அருகதையற்றவன். உன்னை நாடு கடத்த வேண்டும்.

சொல் கொல்லும் சொல் வெல்லும்

முனியாண்டீ உன் சொல் கொல்கிறது

சொல் கொல் வெல் செல் கொல் சொல் சல்

பல் தள் கள் கல் புல் புள் முள் வாள் வீல்

வுள் வள் வள் வள் வள் வள் வள் வள் வள் வள்

வள் வள் வள் வள் வள் வள் வள் வள் வள் வள்

மகுடம்போல இருந்த பகுதியில் ஒன்பது கத்திகள் செருகப்பட்டிருந்தன. கம்பினால் அதைத் தாங்கிப் பிடித்து பிறகு அதை நாடியில் வைத்து கத்திகள் கீழே விழாமல் உயர்த்திப் பிடிக்கிறான் பத்ரிலால். கம்பியை அகற்றும் நேரத்தில் அவன் சட்டென்று கீழே படுத்துக்கொண்டுவிடுவான். கத்திகளும் அவன் சொன்ன படி கேட்டு அவன் உடலின் அருகே தரையில் குத்தி நிற்கும். முனியாண்டிக்கு மிகப் பிடித்த கழைக்கூத்து இது. ஆனால் அன்றைய சம்பவத்தின்போது எதிர்பாராதவிதமாக பத்ரிலாலின் மார்புப் பகுதியில் இறங்கியது கத்தி. அன்றிலிருந்து முனியாண்டி கழைக் கூத்தின் பக்கம் திரும்புவதில்லை.

சொல் கொன்றதா வாள் கொன்றதா விதி கொன்றதா முனியாண்டியைக் கொன்றது எது சொற்கள்தான் கொன்றதாக அவனே தனது பக்கங்களில் வாக்குமூலம் கொடுத்திருக்கிறான்.

என்றாலும் முனியாண்டியின் மறைவு பற்றி பலவிதமான ஹேஷ்யங்கள் உண்டு.

உத்தமத் தமிழ் எழுத்தாளனிடம் முறைத்துக்கொண்டபிறகு இனித் தமிழ் மண்ணை மிதிப்பதில்லை என சங்கல்பம்கொண்டு முனியாண்டி ஆப்ரிக்காவுக்கு ஓடிவிட்டதாக வாசுகி சொல்கிறாள். ஆப்ரிக்காவில் ருவாந்தாவின் நாடகக் குழுவுடன் இணைந்து செயல்பட்டிருக்கிறான். பதினெட்டு மாதங்கள் தொடர்ந்து அங்கிருந்து அவன் தனக்குக் கடிதங்கள் எழுதிக்கொண்டிருந்ததாக அவள் சொல்கிறாள். பிறகு என்னவாயிற்று. கொஞ்ச நாள் அவனிடமிருந்து எந்தத் தகவலும் இல்லாதிருந்தது. பிறகு ஒன்பது மாதங்கள் கழித்து புருந்தியிலிருந்து அவன் தோழி எழுதியிருந்தாள். அந்தக் கடிதத்தை நீயே படித்துப் பார் என்று சொல்லி என்னிடம் கொடுத்தாள்.

அவள் பெயரைப் போலவே கடிதமும் கொஞ்சம் வினோதமாக வும் ஆச்சரியமாகவும் இருந்தது. ஆங்கிலத்தில் இருந்த அந்தக் கடிதத்தின் தமிழ் வடிவம் இது.

எங்கள் நாடகக் குழுவில் 1989ம் ஆண்டு வந்து சேர்ந்தான்

முனியாண்டி. அவனையும் சேர்த்து நாங்கள் ஒன்பது பேர். முனியாண்டி எங்கள் மொழியை மிகச் சுலபத்தில் கற்றுக்கொண்டு விட்டான். இனப்பகைக்குத் துப்பாக்கியைத் தீர்வாகக்கொண்டிருந்த தூத்ஸி ஹுத்தூ இன மக்களிடையேபோய் அவர்களுடன் சேர்ந்து வீதி நாடகங்கள் நிகழ்த்திக்கொண்டிருந்தோம். இப்போது எல்லாம் முடிந்து விட்டதுபோல் தோன்றுகிறது தோழி. செய்வதற்கு இனி என்ன இருக்கிறதென்று சில கணங்களில் மனம் பலஹீனப்பட்டுப் போகிறது. சிதறிக் கிடக்கும் பிரேதங்களினூடாக நாள் கணக்கில் ஒளிந்தும் மறைந்தும் தப்பியோடினோம். அழுகிக் கிடக்கும் சடலங்கள் கண்கள் தோண்டப்பட்டு நாக்குகள் துண்டிக்கப்பட்டு கைகால்கள் வெட்டப்பட்டு தோட்டாக்களால் துளைக்கப்பட்ட எண்ணற்ற மனித உடல்கள். இனிமேல் எதற்காக வாழ வேண்டுமென்று தெரியவில்லை சகோதரி. நம்பிக்கையே அற்றுப் போய்விட்டது. எங்கள் குழுவில் முனியாண்டியையும் சேர்த்து ஐந்து பேர் கொல்லப்பட்டு இப்போது மிஞ்சியிருப்பது நான்கு பேர். பதினெட்டு லட்சம் பேர் அகதிகளாக தான்ஸானியா ஸெய்ர் புருந்தி என்று அண்டை நாடுகளில் தஞ்சம் புகுந்திருக்கின்றோம்.

முனியாண்டியிடம் நாங்கள் எவ்வளவோ கற்றுக்கொண்டோம். எங்கோ தொலைதூர தேசத்திலிருந்து வந்த அவன் வேறெங்கோ தொலைதூர தேசத்தில் பரீட்சித்துப் பார்க்கப்பட்டு விவாதிக்கப் பட்ட forum theatre invisible theatre போன்ற நாடக வடிவங்களை எங்களுக்கு அறிமுகப்படுத்தினான்.

வேடிக்கையான ஆள். எங்கள் குழுவின் கோமாளியாகவே இருந்தான் அவன். அவனிடம் நாங்கள் கற்றுக்கொண்டவற்றுள் மிக முக்கியமானதாக நான் கருதுவது சத்தியாகிரக ரீதியிலான போராட்ட வழிமுறைகள். இதில் அவனுக்குச் சிறிதும் உடன்பாடு இல்லைதான். அவனுடைய கருத்து அவனளவில் நியாயமாகக்கூட இருக்கலாம். எனக்கு உங்கள் தேசத்தைப் பற்றி அதிகம் தெரியாது. ஏற்கெனவே போராட்ட உணர்வற்ற மந்தமான உங்கள் மக்களுக்கு சத்தியாக்கிரக வழிமுறை அவ்வளவு பயனற்றதாகக்கூடத் தோன்றலாம். ஆனால் எங்களுக்கு அதுதான் தேவை என்று தோன்றுகிறது.

உங்கள் தேசத்தைப் பற்றி முனி நிறையவே சொல்லியிருக் கிறான். நீங்கள் ஒருவரையொருவர் சந்தித்துக்கொள்ளாமலேயே முகம் தெரியாமலேயே திருமணம் செய்துகொள்வீர்களாமே. ஆனால் இப்படி எவ்வளவு தகவல்களைத் தெரிந்துகொண்டாலும் உங்கள் தேசம் என்னைப் பொறுத்தவரையில் பூகோள வரைபடத்தில் காணப்படும் பெயராக மட்டும்தான் மனதில் பதிந்திருக்கிறது. (உங்கள் தேசம் வடிவத்தில் எங்கள் கண்டத்தை ஒத்திருப்பதைக் கவனித்திருக்கிறாயா?) தேசத்தை அறிந்துகொள்ள அதனுள்ளே போக வேண்டும். அதனுள்ளே மூழ்க வேண்டும். முனி மூழ்கியதைப்போல. ஆனால் பாவம் அவன் மூழ்கின இடம் உயிர் குடிக்கும் எரிமலைப் பிழம்புகளின் தீப்புனல். இந்த எரிமலைக் கொந்தளிப்பும் வெடிப்பும் அடங்கிய பிறகு எங்கள் பூமியெங்கும் காணக் கிடைக்கும் எரிமலைச் சாம்பல் குவியல்களின் ஊடாக முனியாண்டியின் எலும்பும் நிணமும் சதையும் எரிந்து உருகி வழிந்து ஆறிய சாம்பல் துகள்களை நான் தேடிக் கண்டடைய முடியுமா. இதை எழுதும் போது என் கண்கள் கலங்கி ஆறாய் ஊற்றெடுத்து வழிந்தோடுகிறது கண்ணீர். என்ன இது அபத்தம் தோழி. எங்கோ இருந்தவன் எங்கோ வந்து எப்படியோ சாம்பலாகிவிட்டான். சாம்பலின் துகள்கூட கிடைக்காமல்... எதையோ சொல்ல வந்து உன்னிடம் அவனது இழப்பைப் பற்றிப் புலம்பிக்கொண்டிருக்கிறேன். ஆம். அவனிடம் நாங்கள் கற்றுக்கொண்ட சத்தியாகிரகப் போராட்ட வழிமுறை. ஆனால் அவன் என்னவோ சத்தியாகிரகம் என்றால் அவ்வளவு வெறுப்புடன் பேசுவான். உங்கள் தேசத்திற்கு அது ஒவ்வாதோ என்னவோ... எப்போதோ அவனிடம் Muni... you are so doclie என்றேன். Yes we have been trained to be docile by the Britons. We have been trained as clerks for the last one hundred and eighty years என்று சொன்னான். ஏதோ கொஞ்சமாக உங்களைப் பற்றி என்னால் யூகிக்க முடிகிறது. ஆனாலும் தொள்ளாயிரம் பேர் துப்பாக்கி ஏந்தி சண்டையில் மடிந்தால் அந்தச் செய்தி தரும் தாக்கத்தைவிட தனியான பெண் தான் சாகும்வரை உண்ணாவிரதம் இருந்து செத்தாள் என்றால் அதன் தாக்கம் அதிகம்தான் என்று தோன்றுகிறது. தெரியவில்லை. நான் சொல்வது தவறாகவும் இருக்கலாம். சமூகவியல் அரசியல் எல்லாவற்றிலும் நான் சைஃபர். நான் நடிகை. நாடகக்காரி. பொம்மைத்

துப்பாக்கிகளை வைத்துக் கொண்டு ஒடுக்கப்பட்ட மக்களைப் பார்த்து துப்பாக்கி ஏந்திப் போராடுங்கள் என்று கோஷமிட்டுக்கொண்டிருக்கும் நாடகக்காரி. முனியாண்டிதான் கேட்டான் உனக்கு நிஜத் துப்பாக்கி எடுத்து சுடத் தெரியுமா என்று. நிஜத் துப்பாக்கிகளை இவ்வளவு கொடூரமாக நாங்கள் சந்திக்க நேரும் என்று எதிர்பார்த்ததில்லை. கண்களுக்கு முன்னே தோட்டாக்கள் பறந்தன. ஐந்து லட்சத்து நாற்பதாயிரம் பேரை அந்தத் தோட்டாக்கள் பலி வாங்கின.

எல்லாம் நடந்து முடிந்து ஒன்பது மாதங்கள் ஓடிவிட்டன. உன்னுடைய முகவரி முனியாண்டியின் டயரியிலிருந்து எனக்குக் கிடைத்தது சகோதரி. இந்தக் கடிதம் உன்னைச் சேருமா என்பது பற்றிய எவ்வித நிச்சயமும் இல்லை. இருந்தாலும் இதை எழுது கிறேன். சேர்ந்தாலும் சேராவிட்டாலும் வித்தியாசம் ஏதுமில்லை என்று மனம் சலிப்புறுகிறது. முனியாண்டிக் கோமாளியைப் பற்றி நினைத்தால் இப்போதும் சிரிப்பு வருகிறது. அவன் இங்கே நாய்க்கறி சமைப்பான். எங்களுக்கெல்லாம் பயமாகவும் ஆச்சரிய மாகவும் இருக்கும். நாய்க்கறி விஷம் இல்லையா. நாய்க்கறி சாப்பிட்டால் நாயைப்போலவே குரைத்துக் குரைத்துச் சாக மாட்டோமா. இங்கே நிறைய பேர் நாய் கடித்து நாயைப்போல் குரைத்துக் குரைத்துச் செத்திருக்கிறார்கள். ஆனால் நாய் நம்மைச் சாப்பிட்டால்தான் அப்படியாகும். நாயை நாம் சாப்பிட்டால் அப்படியாகாது என்று ஜோக் பண்ணினான் முனி. (ஆமாம் உங்கள் பக்கத்துத் தேசத்தில் நாய்க்கறிதான் பிரபலமான உணவாமே. அப்படியா. நாயை வெட்டித் தோலுரித்து எல்லாம் அவனே செய்துவிடுவான். சமயங்களில் தோலுரிக்கப்பட்ட நாய்த் தலையைக் கையில் தூக்கி வைத்துக்கொண்டு எங்களை யெல்லாம் எப்படிப் பயமுறுத்தி விடுவான் தெரியுமா. தோலுரிக் கப்பட்ட நாய்த் தலை. பிறகு அதோடு யொரூபா நடனம் வேறு. அவன் அப்படி நடனமாடிக் கொண்டிருக்கும்போதே அவனை நான் புகைப்படம் எடுத்தேன். இப்போதும் என்னிடம் அது பத்திரமாக இருக்கிறது.

முதல் நாள் நாய்க்கறி சமைத்தபோது அவன் மட்டுமே சாப்பிட்டான். நாங்கள் யாருமே சாப்பிடவில்லை. பிறகு கொஞ்ச நாள் பொறுத்துப் பார்த்தோம். அவன் குரைக்கவில்லை என்று

உறுதிப்படுத்திக்கொண்டபிறகே தைரியம் வந்து நாங்களும் சாப்பிட ஆரம்பித்தோம். ம்... நன்றாகத்தான் இருந்தது. ஆனால் நான் கழுதையைச் சமைத்தால்கூட அது நன்றாகத்தான் இருக்கும் என்று தற்பெருமை அடித்துக்கொண்டான் முனி. அவனுடைய சமையலைப் பற்றி அவனுக்கு அவ்வளவு பெருமை. சரி வேடிக்கையைக் கேள். அவன் முதன்முதலில் நாய்க்கறியை எங்கள் முகாமில் சாப்பிட்ட அன்று இரவு அப்போது நாங்கள் கிபூயே என்ற ஊரில் முகாமிட்டிருந்தோம். அந்த ஊரை என் ஆயுள் உள்ளவரை மறக்க முடியாது. அந்த ஊரில் மட்டும் 180 பேரைக் கொன்றுவிட்டது ராணுவம் எல்லோரும் தூங்கிக்கொண்டிருந்தபோது. திடீரென்று நாங்கள் படுத்திருந்த ஹாலிலிருந்து நாய் குரைக்கும் சப்தம் பலமாகக் கேட்டது. விளக்கைப் போட்டுப் பார்த்தால் முனியாண்டி வாயில் எச்சில் ஒழுக கண்கள் சிவந்து கிடக்க குரைத்துக் கொண்டிருந்தான். நாங்கள் அனைவருமே பயந்து கிலிபிடித்து நடுங்க ஆரம்பித்து விட்டோம். எங்கள் குழுவைச் சேர்ந்த மிரியம் பயத்தில் அழவே ஆரம்பித்துவிட்டாள். கடைசியில் பார்த்தால் ராஸ்கல் எங்களையெல்லாம் வேண்டுமென்றே பயமுறுத்தி இருக்கிறான். பிறகு பல தினங்கள் எங்களையெல்லாம் கிண்டல் செய்துகொண்டேயிருந்தான். நாய்க்கறி என்றதும் எனக்குப் பல விஷயங்கள் ஞாபகம் வருகிறது. ஆமாம் உங்கள் நாட்டில் யானைகள் இருந்தும்கூட யானைக்கறி சாப்பிட மாட்டீர்களாமே. ஏன். நாங்கள் சாப்பிடுவோம்.

முனியாண்டியும் விரும்பிச் சாப்பிடுவான். அது மட்டுமல்ல. அந்தத் தடியன் எங்களைச் சந்தித்த தினத்தன்று முதலில் கேட்ட கேள்வியே யானைக்கறி எங்கே கிடைக்கும் என்றுதான்.

ஆமாம் உங்கள் நாட்டில் மக்களைப் பார்த்து மந்திரி ரொட்டி இல்லையென்றால் எலிக்கறி சாப்பிடுங்கள் என்று சொன்னாராமே. உலகம் பூராவும் அரசியல்வாதிகள் மட்டும் வித்தியாசமே இல்லாமல் இருக்கிறார்கள். ஆனால் எங்கள் நாட்டில் கொஞ்சம் வித்தியாசம் உண்டு. இங்கு அரசியல்வாதிகளே மக்களைச் சுட்டுப் பொசுக்கி வறுத்துச் சாப்பிட்டு விடுவார்கள்.

சரி முடிக்கிறேன். முனியாண்டி மற்றும் எனது தோழர்களின் நினைவு மேகமூட்டமாய் மனதில் கவிழும் இந்த மாலை நேரத்தில்...

அன்புடன்,

நமிஸிஷிரு

12

இந்த நாடு கிட்டத்தட்ட ஆப்ரிக்காவின் மத்தியில் இருக்கிறது. சிறிய புள்ளியாக. பூஜ்ய வடிவத்தில். மேற்கில் ஸெய்ர். வடக்கில் உகாந்தா. கிழக்கில் தான்ஸானியா. தெற்கில் புருந்தி. ஜனத்தொகை 81 லட்சம். கடல் இல்லை. ரயில் இல்லை. தொழிற்சாலைகள் இல்லை. மலேரியா உண்டு. மேக நோய் உண்டு. பொதுவாக ஸ்வாஹிலியும் கின்யார்வந்தாவும் பேசுகிறார்கள். மற்றபடி ஊருக்கு ஊர் தனித்தனி மொழி. உயரமான பூமி. கரடுமுரடான நிலம். மூங்கில் காடுகள். யானை சிங்கம் கொரில்லா. வடக்கே விருகா மலைகள். எரிமலை சிகரங்கள். கரிசிம்பியில் 14787 அடிக்கு நீளும் மிக உயர்ந்த சிகரம். மேற்கெல்லையில் கிவூ ஏரி. ஜனத்தொகையில் 81 சதவிகிதம் ஹுத்தூ. இவர்கள் தொழில் விவசாயம். இவர்கள்தான் இங்கே முன்னால் வந்து குடியேறியவர்கள். எப்போது வந்தார்கள் என்று தெரியவில்லை. தூத்ஸி இவர்களுக்குப் பின்னால் வந்தவர்கள். அநேகமாக 1350இல் வந்திருக்கலாம். கால்நடை மேய்ப்பவர் கள். ஆறு அடி ஒன்பது அங்குலம் அல்லது அதற்கு மேல் உயரமும் அசாதாரணமான உடல் வலுவும்கொண்டவர்கள். உடல் வலிமையில் இவர்களை மிஞ்ச உலகில் வேறு எந்த இனக்குழுவும் இருக்காது என்று தோன்றுகிறது. போர்க்குணம் மிக்கவர்கள். போர் வீரர்களாக மாறியவர்கள். எத்தியோப்பியாவிலிருந்து வந்திருக்கலாம். வந்த பிறகு மற்ற இனக்குழுக்களை தங்கள் ஆதிக்கத்திற்குள் கொண்டுவந்து விட்டார்கள். எண்ணிக்கையில் சிறுபான்மையாக இருந்தாலும் அவர்கள் தங்களை எஜமானர்களாக ஆக்கிக்கொண்டார்கள். நிலப்பிரபுக்களாக ஆக்கிக் கொண்டார்கள். அத்தனை நிலத்தையும் சொந்தமாக்கிக் கொண்டார்கள்.

இந்த நாட்டில் ஆதியிலிருந்து இருப்பவர்கள் த்வா இனத்தைச் சேர்ந்தவர்கள். குள்ளர்கள். வேட்டைக்காரர்கள். மண்பாண்டம் செய்பவர்கள். மொத்த ஜனத்தொகையே 90000தான்.

ஜெர்மானிய ஆட்சி. பிறகு பெல்ஜிய ஆட்சி என்றாலும் எல்லாம் பெயரளவில்தான். உண்மையான அதிகாரம் தூத்ஸியிடமே இருந்தது. 360 ஆண்டுகளாக ம்வா அதிகாரம் தூத்ஸி நிலப்பிரபுக்கள் மூலமே நடந்து வந்தது. 1962இல் ஹுத்தூ கிளர்ச்சி. தூத்ஸியிடமிருந்து ம்வா பறிக்கப்பட்டது. ஒன்பதாயிரம் தூத்ஸிக்கள் கொல்லப்பட்டார்கள். அகதிகளாக அந்நிய நாடுகளில் தஞ்சம் புகுந்தார்கள். அந்த ஆண்டில்தான் புதாரே நகரத்தில் பல்கலைக்கழகம் துவக்கப்பட்டது.

ஆனால் சில ஆண்டுகளிலேயே ஹுத்தூ இனத்திலிருந்து முதன்முதலாக அதிபரான ந்தாதாயே தூத்ஸி சிப்பாய்களால் கொல்லப்பட்டார் என்ற விபரங்களையெல்லாம் நீ பழைய செய்தித்தாள்களிலிருந்து சேகரித்து விடலாம். நான் தேவையில்லை. ஆனால் நேநோ அந்த ஒன்பதாயிரம் தூத்ஸிக்கள் எப்படிக் கொல்லப்பட்டார்கள் என்பது நம் தகவல் களஞ்சியங்களில் இருக்காது. அது இவர்களின் ஞாபக அடுக்குகளில் படிந்திருக்கிறது.

அந்தத் தகவல்கள் எனக்கு எதேச்சையாகக் கிடைத்தன. தானும் தன் சக ஹுத்தூக்களும் தூத்ஸிக்களைக் கொன்றதை கின்யார்வந்தா மொழியில் அந்த ஹுத்தூக் கிழவன் சொன்னதை எனக்கு மொழிபெயர்த்துச் சொன்னாள் என் அல்ஜீரியத் தோழி அஸியா.

எங்கள் போர் ஆரம்பமாகி விட்டது. எப்போதோ ஆரம்பமாகி விட்டது. ருகான்ஸுப்விம்பாவை ஒழித்துக் கட்டினோம். ருகான்ஸுந்தோரியை ஒழித்துக் கட்டினோம். கிகேரிர்வாபு கிரியை ஒழித்துக் கட்டினோம். எல்லா தூத்ஸி ம்வாமிகளையும் ஒழித்துக் கட்டினோம்.

தூத்ஸி குழந்தையின் கால்களைப் பிடித்துத் தூக்கி தலையைச் சுற்றி தரையிலும் சுவரிலும் மரங்களிலும் பாறைகளிலும் அடித்து மண்டையை உடைத்தோம். தூத்ஸியின் பிறப்புறுப்பை அறுத்தோம். நாக்கைத் துண்டித்தோம். முள்ளால் கண்களைக் குத்திப் பிடுங்கினோம். காளவாயில் உயிரோடு தூக்கிப் போட்டோம். சிறுவர்களையும் குழந்தைகளையும் துணியைக் கிழிப்பதுபோல் இந்தப் பக்கமும் அந்தப் பக்கமும் கால்களைப் பிடித்தபடி எதிரெதிர் திசையில் சென்று உடம்பைக் கிழித்தோம். ஒன்பதடி உயரத்தில் மரத்தை வெட்டி

முனையைக் கூராக்கி அதில் தூத்ஸியை அமரவைத்து கால்களைப் பிடித்துக் கீழே இழுப்போம். தூத்ஸியைக் கிழிப்பது அத்தனை சுலபமல்ல. கழுத்துவரை உடல் பிளந்து அதோடு நின்றுவிடும். அதற்கு மேல் அந்த தூத்ஸி உடலை வெட்டிவிடுவோம். நெருப்புத் துண்டங்களை வாயில் போட்டு விழுங்கச் சொல்வோம். தப்பி ஓடிய தூத்ஸியை அவன் சற்றும் எதிர்பாராமல் அரிவாளால் தலையைச் சீவியெறிய தூத்ஸியின் தலையற்ற முண்டம் வெகுதூரம் விகாரமாக ஓடியதை எங்கள் குழந்தைகள் கதைகதையாய்ச் சொல்லும். எல்லாவற்றையும் தூத்ஸியின் பார்வையிலேயே செய்தோம். தூத்ஸி இதைப் பார்க்க வேண்டும். தூத்ஸிக்கும் எங்கள்மீது பயம் வரவேண்டும். எங்களுக்கு தூத்ஸி என்றால் அவ்வளவு பயம். பயத்தால்தான் இதைச் செய்தோம். மரண பயம். மரணத்தின் மறுபெயர் என்ன தெரியுமா. தூத்ஸி. ஆனால் நாங்கள் மரணத்துக்கே மரணத்தைக் கற்பித்தோம்.

ஹுத்தூக் கிழவன் சொல்வதைக் கேட்டாயா நேநோ. இப்போது ஹுத்தூவை தூத்ஸியும் தூத்ஸியை ஹுத்தூவும் மாறி மாறி வெட்டிக்கொண்டிருக்கிறார்கள். இப்போது மரத்தில் செருகுவதில்லை. டயர்களைத்தான் அதிகம் உபயோகிக்கிறார்கள். எரியும் டயரில் உடல் பற்றியெரிய அந்த மனிதன் தெருவெங்கும் ஓடுவதை நீ பார்க்க வேண்டும். ஆனால் என்ன. அந்த ஹுத்தூக் கிழவன் சொன்னது எதுவும் நமக்குப் புதிதல்ல. சந்தேகமிருந்தால் தாயுமானவனிடம் கேட்டுப் பார். இப்போது எத்தியோப்பியாவிலும் இதெல்லாம் நடந்துகொண்டிருக்கிறது. வடக்கில் தீக்ரே. இப்போது தீ.ம.வி.மு.வுக்கும் (தீக்ரே மக்கள் விடுதலை முன்னணி) எ.ம.வி.மு.வுக்கும் (எரித்ரிய மக்கள் விடுதலை முன்னணி) பெரும் சண்டை நடந்துகொண்டிக்கிறது. எரித்ரியா தனி நாடாக விரும்பி அவர்களும் களத்தில் இறங்கி விட்டார்கள். ஆனால் சமீபத்தில் ஏற்பட்ட பஞ்சத்தில் 180000 பேர் அகதிகளாக சூடானுக்கு இடம் பெயர்ந்திருக்கிறார்கள்.

இப்படியே தொடர்ந்து மாறி மாறி நடந்து வருகிறது. இங்கே மட்டுமல்ல எங்கும்.

13

நூலகத்திற்குச் சென்று பல்லாண்டுகளுக்கு முன்னால் வந்த தினசரியை ஆராய்ச்சி பண்ணிக்கொண்டிருக்கையில் அந்தச் செய்தி என்னைக் கவர்ந்தது. பெண்ணைக் கற்பழித்த குரங்கு. குரங்கு என்ற வார்த்தைக்கு அரசு அகராதியில் அர்த்தம் கண்டு பிடித்துக்கொண்டேன். அது ஏதோ விலங்கென்று தெரிந்தது. கற்பழித்த என்ற வார்த்தைக்கு அர்த்தம் புரியவில்லை. அரசு அகராதியில் அவ்வார்த்தை இல்லை. பதுக்கப்பட்ட அகராதியில் பார்த்தபோது பலாத்காரம் செய்தல் என்று கண்டிருந்தது. புரிய வில்லை. பலாத்காரம் செய்தல் எப்படிச் சாத்தியம் என்று புரியவில்லை. பலாத்காரம் செய்பவனின் ரத்தத்தை உறிஞ்சிவிட வேண்டியதுதானே.

கதை இத்துடன் முடிந்துவிட்டது. தலைப்பிட வேண்டும். இது சயன்ஸ் ஃபிக்ஷன் வகையைச் சேர்ந்த கதை என்பதால் இதே தலைப்பையே வைத்து விடலாம். ஆனால் புதுமையாக இல்லை. கீழ்க்கண்டவாறு மாற்றிப் போடலாம்.

குரங்கைக் கற்பழித்த பெண்

பிய்யோ ஏதோ நூலகத்தில் பழைய தஸ்தாவேஜுகளைப் புரட்டிக் கொண்டிருந்தபொழுது அந்த தினத்தில்தான் தொண்ணூறு வருடங்களுக்கு முன்பு மக்களின் ரத்தமாக இருந்த மரக்கட்சித் தலைவரின் அக்காலத்திய வரலாற்றின் அதி முக்கியத்துவம் வாய்ந்த ஒன்பது மணி நேர உண்ணாவிரதப் போராட்டம் நிகழ்ந்ததென்று தெரிந்தது. மரக்கட்சியிலிருந்தே பிறந்தோம் என்று பீற்றிக்கொள்ளும் இன்றைய மண்கட்சி நாளையே தொண்ணூற்றாண்டு விழா கொண்டாடுவதற்கு முடிவெடுத்துவிட்டால் என்ன செய்வதென்று கருதியே தான் வராமல் இருந்துவிட்டதாக எழுதினான் ரிய்யோ. இதை ஏன் நேற்று தொலைபேசியில் பேசும்போதே சொல்லித் தொலைக்க வில்லை என்று கேட்டபோது கீழ்க்காணும் விதத்தில் ஒருவிதச் சப்தம்

மட்டுமே பதிலாக வந்தது.

பே... கீ... கௌ... ஙொய்ங்ங்ங்ங்ங்

பே... பே... கர்ர்ர்ர்... பே... கிர்...

எரிவான் கொல்லையிலே போவான் பேதியில போவான் ஒன்னை முழுக்காட்டுறதக்கா அங்க வச்சிருக்கு ஒனக்கு எப்ப எளவு கூட்டுதாஹ அடியான் கொடி மாடன் அடுத்த வீட்டு அழுக்குப்பய இல்லா மூதேவி மூதேவி முகம் கழுவா மூதேவி ஆடி அகத்திவச்சு பாடி பயிரவிச்சு கூடி கும்மியடிச்சு இல்லாத மாயக் குடிலம் அவன் வந்தா ஆடுவான் அதுவும் சும்மாவா ஆடுவான் அவளெத் தூக்கித் தலையிலே வச்சுக்கிட்டு ஆடுவான் காத்திய மாசத்து கருப்பட்டியா கசிஞ்சாங்க என்ன இது எதற்காக இந்த வரிகள் இந்தச் சிறுகதையின் இடையே புகுந்து குழப்பம் உண்டாக்குகின்றன விட்டுத்தள்ளு சேலையை வரைய கை துடிக்கிறது என்றாலும் கர்ட் வனேகட்டைக் காப்பி அடிக்கிறேன் என்று கி.பி. ஒன்பதாம் நூற்றாண்டு செத்த மூளை சொல்லி விடுவான் என்று பயந்தே அதை வரைவதற்கு மனம் தயங்குகிறது. வனேகட் தனது நாவலில் பெண்கள் அந்தக் காலத்தில் அணிந்திருந்த ஜட்டி என்கிற வஸ்திரத்தை வரைந்திருக்கிறான். இதோ சேலை:

உள்ளேயிருக்கும் டிசைன் வேறு. பலவிதமாகவும் இருக்கும். இந்தச் சேலையைக் கட்டிக்கொண்டாயானால் ரிய்யோ உன்னை இடுப்பில் இடுப்பில் பார்க்கமாட்டான் என்று சொன்னேன். தொண்ணூறு வருடங்களுக்கு முன்பு பத்திரிகையில் கண்டெடுத்த வாசுகி கடிதம் இது.

அன்புள்ள ஆசிரியருக்கு

சேலை கட்டுவதுதான் தமிழ்ப் பண்பாடு என்று கூறுகிறார்கள். என்ன தமிழ்ப் பண்பாடோ தெரியவில்லை. சேலை கட்டிக்கொண்டால் ஆண்கள் எல்லாரும் இடுப்புச் சதையையே வெறித்து வெறித்துப் பார்க்கிறார்கள். இதைத் தவிர்ப்பதற்காக முந்தானையைச் சுற்றிக் கொண்டுவந்து இடுப்பில் செருகிக்கொண்டாலும் இடுப்பில் பெரும் பகுதியும் மடிப்புகளும் ஆண்களின் கண்களுக்கு விருந்தாகத்தான்

இருந்து தொலைக்கின்றன. தொலைக்காட்சி செய்தி வாசிப்பாளர் மாதிரி இழுத்துப் போர்த்திக் கொண்டால் தப்பிக்கலாம். ஆனால் அப்படிப் போர்த்திக் கொண்டு பஸ்ஸில் ஏறினால் முந்தானை எப்படியோ நம் வசத்திலிருந்து தப்பி விடுகிறது. பிறகு அதை அந்த ஜனநெரிசலிலிருந்து மீட்டெடுப்பதே பெரும் பிரச்னையாகப் போய்விடுகிறது. இதுதவிர சேலை கட்டினால் அதற்கென்று உள் பாவாடையும் அணிய வேண்டியிருக்கிறது. ஸல்வார் கமீஸ் என்றால் இம்மாதிரி பிரச்னைகளே இல்லை. வெறும் பேண்டீஸோடு போய் விடும். முந்தானை பறக்கிற பிரச்னையோ இடுப்புச் சதை தெரிகிற தர்மசங்கடமோ எதுவுமே இல்லை. எனவே தமிழ்ப் பெண்கள் சேலை கட்டும் தமிழ் மரபைத் துறந்துவிட்டு ஸல்வார் கமீஸ் அணிவது பற்றி அங்கலாய்த்து எழுதப்பட்டிருக்கும் கடிதத்தைப் பிரசுரித்ததுபோல் இனிமேலும் பிரசுரிக்க வேண்டாம். ஜட்டிகூடப் போடாமல் பேண்ட் போட்டுக் கொண்டுவந்து பஸ்ஸில் பெண்களின் பின்னால் நின்று குத்திக் கொண்டிருக்கும் இந்த ஆண்களால் எங்கள் பிரச்னைகளைப் புரிந்துகொள்வது கடினம்தான்.

ரிய்யோ: You have upset me in calling me to riyyos place to night. I gave you company the whole day today. Phir bi... you called me... i cant sleep tonight...

கிய்யோ ஆதிமனிதனைப் பற்றிய ஆராய்ச்சியில் ஈடுபட்டிருப் பவன். ரிய்யோவும் ஆதிமனிதனைப் பற்றிய ஆராய்ச்சியில் ஈடுபட்டிருப்பவன். இதனாலேயே இவர்கள் ஸயன்ஸ் ஃபிக்ஷன் எழுத்தாளர்கள் என்று அழைக்கப்படுகிறார்கள். இவர்களைத் தாக்கும் எதிர்க்குழு ஆதிமனிதனைப் பற்றி எழுதும் இவர்கள் ஆதிமனிதனைப் போலவா வாழ்கிறார்கள் என்றும் ஆதிமனிதனைப் போன்று வாழ்ந்து காட்ட முடியாதவர்கள் ஏன் ஆதிமனிதனைப் பற்றிப் பேச வேண்டும் என்றும் கேட்டு அதனால் இவர்களின் ரத்தம் உறிஞ்சப்பட வேண்டும் என்ற தண்டனையையும் முன்வைத்தார்கள். விசாரணைக்கு வந்தது வழக்கு. கிய்யோவும் ரிய்யோவும் கைது செய்யப்பட்டார்கள். ஆனால் கிய்யோ செய்த அதிசாமர்த்தியமான செயலால் இருவரும் தப்பினார்கள். கிய்யோ சொன்னான்: ஆதிமனிதன் குறி வருகை ஸ்டைல் ஸ்ட்ரக்கரலிஸம் ஸ்டைல் குறி குறியில் அடக்கம் மொழியில் இல்லை மொழி மொழியில் அடக்கம் குறியில் இல்லை

குறியில் இல்லை மொழி வேறு குறி வேறு. எல்லாரும் வந்து குறியென்றால் எதுவெனக் கேட்டார்கள். நான் குறியைக் குறிக்குள் தேடென்றேன். இன்னும் தேடிக்கொண்டிருக்கிறார்கள். நானும் ரிய்யோவும் வெளியே வந்து விட்டோம்.

14

பெருவின் நவீன வரலாறு என்ற புத்தகத்தை வாசித்துக்கொண்டிருக்கிறாள். 1935ஆம் ஆண்டு செப்டம்பர் மாதம் 27ஆம் தேதி சாவ் சாவ் நாகரிகத்தின் அழிவுகளுக்கிடையே 9000 பேர் சுட்டுக் கொல்லப்பட்ட சம்பவம் அவள் எலும்புகளுக்குள் ஊடுருவுகிறது.

என் அடுத்த நாவல் இதைப் பற்றியதாகத்தான் இருக்கும். அந்த நாவலின் பிரதான பாத்திரத்திற்கு சிந்திக்கத் தெரியாது. அவள் பெயர் எக்கோ. அவள் ஒலிக் கண்ணாடி. நீ பேசுவதை மட்டுமே அவள் பேசுவாள். உன் பேச்சு அவள் பேச்சு. உன் எழுத்து அவள் எழுத்து. உன் மௌனம் அவள் மௌனம். யாருடைய பெயரையும் அடையாளத்தையும் ஞாபகம் வைத்துக் கொள்ள இயலாதவள்.

என்று யோசித்துக்கொண்டே வானொலியைத் திருப்புகிறாள்.

சரயேவா மருத்துவமனையின் சவக்கிடங்கில் 270 எலும்புக் கூடுகள் கிடத்தப்பட்டுள்ளதாகவும் 90 எலும்புக் கூடுகள் மட்டுமே அடையாளம் காணப்பட்டுள்ளதாகவும் சரயேவாவுக்கு அருகிலுள்ள ஸ்ரெபிரேனிகாவில் புதைக்கப்பட்ட 9000 உடல்களைத் தேடும் பணி தொடர்ந்து நடைபெற்று வருவதாகவும் பல இடங்களில் தோண்டத் தோண்ட எலும்புக் கூடுகளாகவே வெளிவந்துகொண்டிருப்பதாகவும் தெரிவித்தது வானொலிச் செய்தி. வானொலியை நிறுத்தினாள்.

மொஸார்ட்டின் Requiem massஐக் கேட்க ஆரம்பித்தாள்.

15

முனியாண்டியைத் துரத்திக்கொண்டிருந்தது அந்த நாய் பொருள் இயக்கம் சிங்கத்தின் கம்பீரமான குரலில் குலைநடுங்க வைக்கும் குரைப்பு பொருள் தானாக இருக்க முயல்கிறது அந்தப் பிராந்தியமே அதிர்ந்து குலுங்குகிறது பொருள் பொருள்களால் சூழப்பட்டிருக்கிறது பாரகம்பா சாலையில் ஜனவரி மாதத்துக் குளிரில் மனித நடமாட்டமேயில்லாத அந்த ராத்திரி வேளையில் தலைதெறிக்க மயிர்க்கூச்செரிய ஓடிக் கொண்டிருக்கிறான் பொருள் தானாக இருக்க முயல்வதன் உச்சக்கட்ட முயற்சியை செயல்படுத்தும் பொருள் பிரபஞ்சமாக விரியும் செயல்பாடு அண்டம் அதிரும் பாய்ச்சலில் இதோ நெருங்கிவிட்டது மனிதன் தன்னை மனிதனாக உணர்வதால் பிரபஞ்சத்தை ஆராய முயல்கிறாள் மரணத்துக்கும் தனக்குமான இடைவெளி இதோ குறைந்துகொண்டே வருகிறது பொருள் தனக்குள் தொடர்ந்து செயல்பாட்டைக் கொண்டிருக்கிறது காலவெளியையும் மட்டுமே பொறுத்ததாகிவிட்டது மரணம் நியூட்ரான் தன்னை நியூட்ரானாக உணர்ந்தால் பெரு வெடிப்பு நிகழும் நாய் என்பது இதோ இந்தக் காகிதத்தில் நிகழும் வார்த்தை பொருளை அறிந்து கொள்ள முயற்சிக்கும்போது எத்தனையோ இழக்கப்படுகின்றன அல்லது இதோ இந்தக் கணத்தில் பிரமை பௌதிகச் செயல்பாடு நிஜமாக இருந்தாலும் பிரமையாக இருந்தாலும் இனி எந்த வித்தியாசமும் கிடையாது பொருளின் இந்தப் பௌதிக இயக்கம் போர்ஹேஸிடம் இருக்கிறதா மரணம் சம்பவிக்கப் போவது நிச்சயம் language is set of games மரண பயத்தில் இன்னும் வேகமாக ஓடினான் மொழி என்பது பொருள் என்ற அறிவியல் மறக்கப்படுகிறது இதோ நாயின் உஷ்ணமான மூச்சுக்காற்றை கால்களில் உணர்கிறேன் ரோப் கிரியே பொருளை பொருளாகப் பார்த்து எழுதினான் பயமும் பீதியும் அதிகரிக்க அதிகரிக்க அவனது வேகமும் அதிகரித்தது ஆனால் இது கொஞ்சம் பதினெட்டாம் நூற்றாண்டு நேச்சுரலிஸத்தை ஞாபகப்படுத்தவில்லையா உடம்பு

நெருப்பாய் தகித்தது தனது electro accoustic இசையின் வழியாக சூரியன் எரிவதை உணர வைத்து விடுகிறான் Iannis xenakis சுவாசம் தீப்புயலாய் மாறியது ஒலியின் கசிவு இப்படித்தான் இருக்குமா வானளாவி ஆர்ப்பரிக்கும் கடலலைகள் density and sonority of sound is one eighty thousandth of second galaxy explodes travelling in mind and cosmos using group theory and mathematical logic into the concept of mathematical probability stochastic music theory is created வெளி என்பதோ காலம் என்பதோ இல்லாமல் சூன்யமாகிவிட முடியுமா மரணத்துக்கும் எனக்குமான இடைவெளி சில நொடிகள் தொண்ணூறு மீட்டர் வெளியை 9.81 நொடிகளில் ஓடிக் கடந்திருக்கிறான் ஓட்டக்காரன் நான் பாறை விளிம்புகளுக் கிடையே புவி ஈர்ப்பு விசையை மீறி மிதந்து கொண்டிருக்கிறேன் the density of nuclear matter is trillion times heavier than uranium the heaviest element occuring in nature this has parallel with Berolis law of large numbers which says that if the repetitions of particular chance trial increase

விளிம்பிலிருந்து தாண்டி விளிம்பின் முனையைப் பற்றி விட்டேன் நாணயத்தைத் தொள்ளாயிரம் முறை சுண்டிப் போட்டால் பூவும் தலையும் சமமாகத்தான் விழும் நாயும் தொடர்கிறது இயற்கையின் எண்ணிக்கை முறையாகவும் துல்லியமாகவும் இருக்கிறது வேகம் தாங்காமல் நெஞ்சு வெடித்துவிடும்போல் இருக்கிறது மீன் முள் வள் வள் வள் வள் வள் வள் வள் வள் வள் வள் கடல் அலை அண்டம் கிடுகிடக்கும் பேய்க்கூச்சல் குறிப்பிட்ட எண்ணிக்கையில் துல்லியம் தவறாமல் கடல் அலை பாறையில் மோதுவதைக் கணக்கிட்டு ஹென்றி ஷாரியர் முகட்டிலிருந்து கடலில் குதித்துத் தப்பியிருக்கிறான் என்னால் தப்ப முடியுமா ஸெனாகிஸ் பௌதிக வல்லுனன் ஆனால் உத்தமத் தமிழ் எழுத்தாளன் கூறுகிறான் தெய்வத்தை வேண்டி வரவழைப்பதைப்போல் தொழுது தொழுது கனிந்துருகி கனிந்துருகி வரவழைக்கப்படுவதே ராகம் வழிபாடு உச்சமாக உச்சமாக உறங்கும் அந்தத் தெய்வம் எழுந்து வந்து நாத உருவம் பெறும் நம் கண் முன்னே நிற்கும் இடம் காலம் தன்னிலை முன்னிலை எல்லாம் மறந்து ஓடிக்கொண்டிருக்கிறான் யோருபாக்களின் நடனம் உச்சக் கட்டத்தை அடைகிறது காற்றோடு காற்றாக மாறுவதைப் போன்ற உணர்வு okantomi okantomi okantomi okantomi

okantomi okantomi okantomi okantomi okantomi வள் வள் வள் வள் வள் வள் வள் வள் வள் சுழன்று சுழன்று ஆடும் அந்த யோருபாக்களின் இடையே சே கெபாராவின் முகம் தெரிகிறது சப்தம் குறைந்து மௌனம் படருகிறது poses in different forms லிங்கம்யோனி புருஷா ப்ரக்ருதி line sqares circles space music விளம்பி structures symmetry time swastica dimensions அங்க மண்டலம் வெறும் ஒளியும் அதற்கொத்த அசைவுகளும் தவளை முதலை புலி பாம்பு ம்ருக வடிவுகள் such as replacement of old and dilapidated wiring replacement of electric fittings and fixtures and installing additional electric points are badly required frequent breakdown of electricity the working hours have been increased and there is almost darkness no toilet for the lady staff members and male staff members whereas about four hundred and fifty officials are working in this office psycho fever in the minds of the staff members because of the appearance of live snakes requested that availabllity of funds to the tune of rupees nine lakh and two thousand three hundred and four (rupees two lakh fifty thousand six hundred and fifty nine for the minor civil works plus six lakh fifty one thousand six hundred and forty five for electric repairs) அறுபத்து மூன்றில் பம்ப்செட் அறிமுகமாகி கிராமத்து இளைஞர்களின் பாலுணர்வு தணிய உதவியது அருவியில் நிற்க தணியும் காமம் விழும் நீர் காமத்தை தணிக்கிறது மர்ம ஸ்தானம் பல நூற்றாண்டுகளாக சூரிய ஒளியின்றி இருட்குகைக்குள் சிறைப்பட்டிருக்கிறது மனிதர்கள் மட்டுமே முகத்துக்கு முகம் நோக்கிப் புணர்கிறார்கள் தன்னைக் கொலை செய்துவிடுவார்கள் என்பதை முன்கூட்டியே அறிந்து மாத்ரித் இலிருந்து தப்பி க்ரனாடா வந்தபோது க்ரனாடாவின் தெருக்களில் இழுத்துச் செல்லப்பட்டு கொலை செய்யப்பட்ட கார்ஸியா லோர்க்காhouse of bernarda alba வின் பெண்கள் ஞாபகம் வருகிறார்கள் embarrassing problem of premature ejaculation ஓடுவதற்கும் முஷ்டியால் குத்துவதற்கும் இருக்கும் ஒற்றுமை ஞாபகம் வர யமாகுச்சியைக் குறித்து யோசித்தான் மலைக்குச் சென்று கொட்டும் பனியருவியில் பல மணி நேரங்கள் நின்று ஸாஞ்ச்சின் பயிற்சியில் ஈடுபடுகிறார் கராத்தே ஆசான் kiai energy develops with kiai you do impossible things நூற்று எண்பது கிலோ எடையுள்ள ஐஸ்கட்டியை வெறும் முஷ்டியால் உடைக்கிறான் seikenzuki from forward push multiple

stroboscopic photographs at 1/180th second intervals show the forefist moving at the speed of nine meters per second she breaks wooden planks measuring 27x18x1.8 centimeters and concrete slabs 45x18x9 centimeters thick the physicist analyses and evaluate the factors the elasticity of the materials the acoustic properties of the materials and the

16

தானாகவே போகிற போக்கில் முனியாண்டியைப் பற்றிய கட்டுக் கதைகள் உருவாகிக்கொண்டு போவதை நான் தடுத்தாக வேண்டும். முதலில் முனியாண்டி சொல்லியிருக்கும் சில பொய்கள். தமிழ் மொழியைப் பற்றி அவன் அவதூறாகப் பேசியதால் மட்டும் உத்தமத் தமிழ் எழுத்தாளன் அவனைப் புறக்கணித்துவிடவில்லை. உத்தமத் தமிழ் எழுத்தாளனை முனியாண்டியே குத்துச் சண்டைக்குக் கூப்பிட்டிருக்கிறான்.

மேலும் அவன் மரணம் ருவாந்தாவில் நிகழவில்லை. ருவாந்தாவில் நடந்த கலாட்டாக்களுக்குப் பிறகு அவன் கஷ்மீர் வந்துவிட்டான் என்று தெரிகிறது. கஷ்மீரிலிருந்து அவனே சூர்யாவுக்கு கடிதம் எழுதியிருக்கிறான். கடிதத்தை நானே வாசித்துப் பார்த்தேன். சில கஷ்மீர் உணவுப் பண்டங்களைச் சமைப்பது எப்படி என்கிற விபரம் மட்டுமே அதில் கண்டிருந்தது. நீ நம்பாவிட்டால் நான் அதை அப்படியே தருகிறேன். வஸாவான் இது மத்திய ஆசியாவிலிருந்து இங்கு வந்திருக்கலாம் என்று ஆய்வாளர்கள் கருதுகிறார்கள். இதைத் தயாரிக்க ஒன்பது மணி நேரத்திற்கும் மேல் ஆகிறது. இதைச் சமைக்க ஒன்பது பேர் வேண்டும். பெரும் தேக்கச்சிகளை அவர்கள் வாடகைக்கு எடுத்து குதிரை வண்டிகளில் வைத்துக் கொண்டு வருகிறார்கள். திறந்த வெளியில் சமையல் நடக்கிறது. இதில் பகிரப்படும் பண்டங்களாவன: (இந்தப் பகுதி கரையான்களால் அரிக்கப்பட்டு விட்டது)

என்னதான் திரும்பின பக்கமெல்லாம் டாபாக்கள் இருந்தாலும் ஸ்பெஷல் அயிட்டங்கள் கிடைக்கும் இடங்களை நான் குறித்து வைத்திருக்கிறேன். இன்டர்நேஷனல் விடுதியில் வெள்ளிக் கிழமை இரவு பிரமாதமான விருந்து ஸ்ரீராம் காலேஜ் ஆஃப் காமர்ஸில் புதன்கிழமைகளில் சிக்கன் கறி பல்கலைக்கழக வளாகத்திலேயே செயின்ட் ஸ்டீஃபன் கல்லூரியில்தான் காலை உணவு அற்புதமாக

இருக்கும் ஞாயிறுகளில் இந்துக் கல்லூரியில் மதிய உணவு திருமண விருந்துக்கு ஒப் (இதன் தொடர்ச்சியான பக்கங்கள் முனியாண்டியின் காகிதக் கத்தைகளிடையே தேட முடியாதபடி கலந்து போய் விட்டன).

லால் சலாம்

தலைமைக் காவலாளி போல் தோற்றமளித்த அவன் முனியாண்டியையும் தமிழ்ச் செல்வனையும் அழைத்துப் பேச ஆரம்பித்தான்.

- சொல்லேன் தோழர். சொல்லு.
- ......
- பாத்தீங்களா சார். இவுருக்கு நான் எவ்வளவு தூரம் மரியாதெ குடுத்து தோழர்னு கூப்புட்டுப் பேசுறேன். இவுரு பேசவே மாட்டேங்கிறாரு. கோவாப்பரேட் பண்ணலேனா நான் எப்படி இந்த விஜாரணையை முடிக்கிறது. ம். நீங்களாவது சொல்லுங்க சார்.
- நீங்க சொல்றது சரிதான். நீங்க கேளுங்க. உங்களுக்கு எந்த விபரம் வேணும்னாலும் நான் சொல்றேன்.
- ம்... பாத்தீங்களா. எழுத்தாளர்னா எழுத்தாளர்தான். ஆக்டிவிஸ்டுன்னா ஆக்டிவிஸ்டுதான். என்னா ஆக்டிவிஸ்டு. மயிரு புடுங்குனெ ஆக்டிவிஸ்டு. ஏம்ப்பா தோழர் மயிர் கியிருங்கிறதுக்காக நீ வேற கோச்சுக்காதே. இந்த எடத்துலெ நீயே வந்து ஒக்காந்தாலும் இப்படித்தான் பேசுவெ. எனக்கும் இந்த கிரிமினல்சோட பழகிப் பழகி சலிச்சுப் போய்டிச்சி. சமயத்துலெ இந்த எழவு வேலைய வுட்டுட்டு எங்கயாவது காலெஜ்ல லெக்சரராப் போயில்லாமான்னுகூட தோணும். ஸ்கூல் டேஸ்லயும் காலேஜ் டேஸ்லயும் ஃபிலாஸபி சோசியாலஜி லிட்ரேச்சர்னு படிச்சு திரிஞ்சி என்னா புரோஜனம். நமக்கு இங்கதான்னு எளுதி வச்சிருக்கு. தோழர் ஒத்துக்க மாட்டாரு. அவருக்கு இதுலேல்லாம் நம்பிக்கை இருக்காது. ஒங்களுக்கு சார்.

- நம்பிக்கை இருக்கா இல்லியான்னே சொல்லத் தெரியலே.

- டேய் ஃபை நாட் ஃபோரு. நாங்க இங்க பேசிக்கிட்டுத்தான் இருக்கம். போயி டீ வாங்கீட்டு வாடா. மயிரு. பிக்பாக்கெட் கேசுன்னு நெனச்சிட்டான் போலருக்கு. இடியட். இங்க எவனுக்கும் மூளையே கெடயாது சார். என்னையும் சேத்துதான் சொல்றேன். மின்னே இருந்திச்சி. இப்ப அவ்வளவுதான். நாய் வேசம் போட்டுட்டு கொலைக்க மாட்டேன்னு சொன்னா எப்புடி. சார் சொல்றனேன்னு தப்பா நெனச்சுக்காதீங்க இவன் யாரு நமக்கு அட்வைஸ் பண்றதுன்னு. நீங்க எழுதுங்க. வேணாங்கலெ. ஒங்க எழுத்து எனக்கே புடிக்கும். ஒங்க நாவலையும் நான் படிச்சிருக்கேன். ஒங்க கோவத்துலெ நியாயம் இருக்கு. ஆனா எனக்கு உங்க கோவத்தைவிட உங்க கிண்டல்தான் புடிச்சிருக்கு. என்ன எளுதிருந்தீங்க. ஒலகத்திலே தகரம் கண்டுபுடிக்கிறதுக்கு மின்னாடியே கம்யூனிஸ்டுகாரனுங்க உண்டியலெ கண்டுபுடிச்சிட்டானுங்கன்னு... என்ன கிண்டல் சார்.

- அது நான் எழுதினேன்னு சொல்ல முடியாது. என் நாவல்லெ வர்ற அந்த கேரக்டர் அப்படி கிண்டல் பேசுது. அது ஆண்ட்டி கம்யூனிஸ்டு கேரக்டர்.

- ஓ... ஆமாமாம். நீங்க ப்ரோ லெஃப்டுல்ல. தோழர் என்ன நான் சொல்றது நீ சாரோட ரைட்டிங்ஸெல்லாம் படிச்சிருக்கேல்ல.

- படித்திருக்கிறேன். அமெரிக்க சீரழிவுக் கலாச்சாரத்தின் எச்சம் இவருடைய தமிழ் எழுத்து. எனது மண்ணையும் மக்களையும் மொழியையும் அவமதிப்பது இவருடைய எழுத்து. தனது மூளையை அமெரிக்க அய்ரோப்பிய நாய்களிடம் அடகு வைத்து விட்டவர் இவர். தன்பால் புணர்ச்சி போன்ற சீரழிவுகளுக்கு ஆதரவாக எழுதும் வக்கிர மனம் கொண்டவர். இவருக்கு நிச்சயமாக எங்கள் மக்கள் மன்றத்தில் தண்டனை உண்டு.

- அட நீங்க அந்த மாதிரி விசயங்களுக்கும் சப்போர்ட்டு தானா. நீங்க கம்யூனிஸ்டுங்களுக்கு மட்டும்தான் சப்போர்ட்டுன்னு நெனைச்சேன். பருவால்ல. நானும் சப்போர்ட்டுதான். ஆனா ஒன்லி மாரல் சப்போர்ட்டு. ஏன் சாக்ரடீஸ்கூட ஹோமோன்னு நான்

படிச்சிருக்கேன். எப்படியோ சார். நான் என்ன சொல்ல வந்தேன்னா நீங்க எதெ சப்போர்ட்டு பண்ணி வேண்ணாலும் எழுதுங்க. ஆனா இங்கலீஷ்லெ எழுதுங்க. ஆயுதப் புரட்சி கலாச்சாரப் புரட்சி ஹோமோ எவ்வளவோ இருக்கு. ஏன் இப்படி தமிழ்லெ எழுதிட்டு இந்த மாதிரி எடத்துக்கெல்லாம் வந்து அவஸ்தைப்படுறீங்க. எனக்கே தர்மசங்கடமா இருக்கு. உங்க நாவலெ நான் படிச்சேன். அதுக்கு செத்த மூளை எழுதுன விமர்சனத்தையும் படிச்சேன். சரி அதுக்கு எதுக்கு நீங்க பதில் எளுதுறீங்க. எங்கப்பன் குதுருக்குள்ள இல்லேன்னு அங்கதான் வம்பு வருது. உங்க நாவல எவனாவது பீயின்னு சொன்னாக்கூட கண்டுக்காம போற பக்குவம் வரணும். எழுத்தாளன்னா அந்த கெத்து இருக்கணும். மடையனுங்க அப்படித்தான் சொல்லுவானுங்க. அவுனுங்க அப்பிடி சொல்லாட்டிதான் சார் நீங்க ஆச்சரியப்படணும். அதுக்கு பதிலெ எளுதுனீங்களா. எங்க டிபார்ட்டுமெண்ட்டுக்காரனுங்க முளுச்சிக்கிட்டாங்க. அது நாவலா இருந்த வரைக்கும் புரியாத புதிர் மாதிரி இருந்திச்சு. நீங்க விண்டு வெவரமா ஒடைச்சு வச்சுட்டீங்க. இப்ப அது லிட்ரேச்சரா பாலிடிக்ஸான்னு பாருன்னிட்டான். ஏன் சார் எவன் சண்டைக்குக் கூப்புட்டாலும் போவீங்களா. தோழரெப் பாருங்க. இவ்ளோ பேசுறோம். வாயத் தொறக்குறாரா பாருங்க. அவுருக்கும் எனக்கும் பிரச்னை இல்லெ. நேரடி ஃபைட். அவுரு இந்த ஸ்டேட் வேணாங்கிறாரு. எங்க மேல குண்டு போட்றாரு. நாங்க அவுரெ என்கௌன்டர்ல முடிச்சிர்றோம். இதுலெ நீங்க ஏன் சார் வந்து பூந்துக்கிட்டு. அட இது தெரியுமா ஒங்களுக்கு. நீங்க எழுதியிருக்கீங்களே பேங்க் ராபரிபத்தி. அந்த உங்க ஹீரோ மாய்த்தாவவோட லெஃப்டினென்டுதான் நம்ம தோழர் தமிழ்ச்செல்வன். என்ன தோழர் சொல்றே நீ.

- ......

- சும்மா இரு சொல் அறன்னு தாயுமானவர் பாடியிருக்காரே அதெ அப்படியே ஃபாலோ பண்றவன் நீதான் தோழர். நீதான் நெஜ தாயுமானவன். நான்லாம் பொய் தாயுமானவன். இந்தப் பேரு எனக்கு எப்படி வந்துச்சு தெரியுமா சார். எங்க அப்பா கிறிஸ்தவரு. அம்மா முஸ்லீமு. அந்தக் காலத்லயே லவ் மேரேஜூ. அவுங்க

வச்ச பேருதான் இது. மத ஒருமைப்பாடு பாருங்க. எங்க அப்பா அம்மாங்கிறதுக்காக நான் சொல்லலெ. இந்த மாதிரியே எல்லாரும் இருந்தா ஏன் இங்க மதக் கலவரம்லாம் வரப்போவுது. ம்... சரி விசாரணெ முடிஞ்சிது. இப்பொ தேசீய கீதம். ஏன்னா எதெ முடிச்சாலும் மொறயா முடிக்கணும். என்னா தோழர் நான் சொல்றது. தேசிய கீதம் பத்தி நீ என்னா நெனக்கிறே.

- அது இந்தியாவின் தேசிய கீதம். அதற்கும் எங்களுக்கும் சம்பந்தமில்லை. நாங்கள் எங்களுக்கான தேசிய கீதத்தை உருவாக்கிக்கொண்டிருக்கிறோம்.

- அப்புடிப் போடு. டேய் ஃபை நாட் ஃபோரு இங்க பார்ரா தோழர் சொல்றதெ. நீங்களும் இருக்கீங்களடா மடையனுங்களாட்டம். எவுனுக்காச்சும் இந்த மாதிரி அறிவு இருக்காடா. இருந்தா மனுசன் இப்படி இருக்கணும்டா. பொறாமையா இருக்கு தோழர் ஒன்னைப் பாத்து. என்ன சார் சொல்றீங்க. தேசிய கீதத்தைப் பத்தி நீங்க என்னா நெனைக்கிறீங்க.

நான் அதைப் பிரதியாகப் பார்க்கிறேன். இலக்கியப் பிரதியாக.

- இந்தப் பதிலுக்காகவே ஒங்களுக்கு நோபல் பரிசு குடுக்கணும் சார். என்ன பதிலு சார். எப்படித்தான் ஒங்க மூளையிலெ இப்பிடிலாம் உதிக்கிதோ. ம்... நானும் அந்தக் காலத்துலெ இப்பிடிலாம் இருந்தவந்தான். ம்... சரி. நாம விசாரணையெ முடிச்சுக்கலாம். எனக்கும் அலுப்பா இருக்குது. எல்லாரும் எழுந்து நின்னு தேசிய கீதம் பாடி இத்தோட இதெ முடிச்சுக்கலாம். எல்லாரும் எழுந்து நில்லுங்க.

தமிழ்ச்செல்வன் அமைதியாக அமர்ந்திருந்தான். முனியாண்டியும் தாயுமானவனும் எழுந்து நின்று பாட ஆரம்பித்தார்கள்.

ஜன கண மன அதிநாயக ஜய ஹே

பாரத பாக்ய விதாதா

உட்கார்ந்திருந்த தமிழ்ச்செல்வனை நெருங்கிய கான்ஸ்டபிள் அவன் சட்டைக் காலரைப் பிடித்து அவனை எழுந்து நிற்கச் செய்ய முயற்சித்தான். முடியவில்லை.

முனியாண்டி தாயுமானவனைப் பார்த்தான். தாயுமானவனோ நாட்டுப் பற்று உடல் முழுதும் கொழுந்து விட்டெரிய சத்தியாவேசம் வந்தவனாய்ப் பெருங்குரலெடுத்துப் பாட ஆரம்பித்தான்.

பஞ்சாப சிந்து குஜராத மராத்தா

திராவிட உத்கல வங்கா

கான்ஸ்டபிள் தமிழ்ச்செல்வனை எழுந்து நிற்கச் சொல்லி சைகை காண்பித்துக்கொண்டேயிருந்தான்.

தாயுமானவன் இப்போது உச்ச ஸ்தாயியில் பாடினான்.

விந்த்ய ஹிமாசல யமுனா கங்கா

உச்சல ஜலதி தரங்கா

தமிழ்ச்செல்வனை எழுந்து நிற்கச் செய்யும் முயற்சியில் தோற்றுப் போன கான்ஸ்டபிள் அவன் முகத்தில் பலமாகக் குத்தினான்.

முனியாண்டி பயந்துகொண்டே தாயுமானவனின் குரலுக்கேற்ற படி தன் குரலையும் ஏற்றினான்.

தவ சுப நாமே ஜாகே தவ சுப ஆஷிஷ மாகே

காஹே தவ ஜய காதா

தமிழ்ச்செல்வன் அப்போதும் உட்கார்ந்துகொண்டேயிருந்தான். கான்ஸ்டபிள் கைகளைப் பிசைந்தபடி அவனை முறைத்துக்கொண்டிருந்தான்.

ஜன கண மங்கல நாயக ஜெய ஹே

பாரத பாக்ய விதாதா

ஜெய ஹே ஜெய ஹே ஜெய ஹே

ஜெய ஜெய ஜெய ஜெய ஹே

தேசிய கீதம் முடிந்ததும் சாமி மலையேறியதும் மயங்கி விழும் சாமியாடியைப் போலானான் தாயுமானவன். பிறகு சுதாரித்துக்கொண்டு கான்ஸ்டபிளிடம் கேட்டான்.

- டேய் முட்டாள், தேசிய கீதம் பாடுறப்ப ஏன்டா லொள்ளு பண்ணே.

ம். மூவ்மெண்டு இல்லாம நிய்க்கணும்னு கூடவாடா தெரியாது.

- இல்லீங்க ஐயா. அவன்தான் எழுந்து நிக்காம அவமரியாதியா ஒக்காந்துகிட்டே இருந்தான். அதான் குடுத்தேன் மூஞ்சில.
- ஒனக்கு வயசாய்டிச்சே தவிர மூளையே வளரலெ. ஒனக்குத் தான்யா அது தேசிய கீதம். தமிழ்ச்செல்வன் ஒன்னை மாதிரி போலீஸ்காரன்னா நெனைச்சே. அவன் புரட்சிக்காரன்டா. சரி தோழர் நீ மன்னிச்சுக்கே. ஒன்னை அடிச்ச இந்த மடையனுக்கு பனிஷ்மென்ட் குடுத்திருவம். என்ன பனிஷ்மென்ட் தெரியுமா. டேய் நீ தமிழை தன்பால் புணர்ச்சி செய்யணும். என்ன ஹாரிபிள் பனிஷ்மென்ட். எனக்கே திடீர்னுதான் மனசுலெ ஃப்ளாஷ் அடிச்சிச்சு. ம்... ரெடி ஸ்டார்ட் க்ளாப்ஸ் எல்லாரும் ஜோரா கை தட்டுங்க.

OBEY THE ORDER என்று கத்தியபடி தமிழ்ச்செல்வனின் அடிவயிற்றில் உதைத்தான் அந்த கான்ஸ்டபிள்.

ஐயோ என முனகியபடி குனிந்த தமிழ்ச் செல்வனின் கால்சராய் உடனே கிழிக்கப்பட்டது. திமிறிய அவனை சிலர் பிடித்துக்கொண்டார்கள்.

தன்னை நிர்வாணமாக்கிக்கொண்ட கான்ஸ்டபிள் தமிழ்ச் செல்வனின் குதப்பிளவில் தனது உறுப்பைச் செலுத்தினான்.

முனியாண்டிக்கு பயத்தில் வேர்த்து விறுவிறுக்க ஆரம்பித்தது.

பாதிகள்

ஜெனீ...

ஹோமோசெக்ஷுவல் என்ற வார்த்தைப் பிரயோகமே பதினெட்டாம் நூற்றாண்டு வரை இருந்ததில்லை. பெண்களும் சிறுவர்களும் பாலுறவைப் பொறுத்தவரை சமமாகவே கருதப்பட்டார்கள். உடல் மற்ற உடலுக்குள் நுழைவதே அப்போது

பாலுறவு என்று பாவிக்கப்பட்டது. முற்காலத்தில் மனிதர்கள் இப்போது இருப்பதைவிட அளவில் மிகப் பெரியதாக இருந்தார்கள். இரண்டு தலை நான்கு கைகள் நான்கு கால்கள் இரண்டு பாலுறுப்புகள் நான்கு புட்டங்கள் இரண்டு மூக்குகள் இருந்தன. இதனால் இவர்கள் அதிக பலம்கொண்டிருந்ததால் சீயஸிடம் தங்கள் திமிரைக் காட்டவே அவன் இவர்களைப் பாதியாக ஆக்கி தோலைப் பிடித்து இறுக்கி முடிச்சையும் போட்டான். மேலும் பழையபடியே அவர்கள் வளர்ந்துவிடாமல் இருக்க அவன் போட்ட அந்த முடிச்சைத்தான் நீ தொப்பூழ் என்று சொல்கிறாய். இப்படிப் பாதியாக்கப்பட்ட பாதிகள் தங்கள் மறுபாதிகளைத் தேடி அலைகின்றன. அந்தப் பாதி கிடைக்கும் போதுதான் இவைகள் முழுமையடைகின்றன. நான் என் மறுபாதியோடு உறவு கொள்ளும்போதுதான் என் சிருஷ்டி முழுமையடைகிறது. என்னை முழுமையாக்கியவன் நேநோ. Achilles ஐ முழுமையாக்கியவன் Patroclus. தாவீதை முழுமையாக்கியவன் ஜோனதன். துரியோதனனை முழுமையாக்கியவன் பீமன்.

17

தினசரியை சுவாரசியமின்றி புரட்டினான். நகரில் பதினெட்டு நிமிடங்களில் பதினெட்டு இடங்களில் குண்டு வெடித்திருக் கிறது பதினெட்டு பேர் சாவு என்று அரசுத் தரப்பிலும் நூற்றி யெட்டு பேர் சாவு என்று எதிர்க்கட்சிகள் சார்பிலும் தெரிவிக்கப் பட்டிருக்கிறது நெரிசல் மிகுந்த டவுன் பஸ் மருத்துவமனை பள்ளிக்கூடம் வழிபாட்டுத்தலம் பஸ் நிலையம் ரயில்வே ஸ்டேஷன் காய்கறி அங்காடி போலீஸ் கமிஷனர் அலுவலகம் பொதுக்கூட்ட மேடை என்று பல இடங்களில் குண்டு வெடித்திருக்கிறது வெளிநாட்டுச் சதி என்று குற்றம் சாட்டும் முதலமைச்சர் ஆளும் கட்சியின் திறமையின்மை என்று சொல்லும் எதிர்க்கட்சித் தலைவர் எதிர்க்கட்சி ஆளுங்கட்சியாக இருந்தபோது முந்நூற்று முப்பத்தி மூன்று இடங்களில் குண்டு வெடித்து அறுநூற்று அறுபத்தாறு பேர் செத்தது பற்றி காரசாரமாய் வெளியிடப்பட்டிருக்கும் உள்துறை அமைச்சரின் அறிக்கை வெடிகுண்டு வைப்பது தவறு யார் வைத்தாலும் தவறு ஆண்டவனே வைத்தாலும் தவறு என்று தொண்ணூறு நாட்கள் சான்ஃபிரான்ஸிஸ்கோவில் ஓய்வெடுத்துவிட்டு நேற்று மாலை தாயகம் வந்து சேர்ந்து மிகக் களைப்பான தோற்றத்துடன் காணப்பட்ட நடிகரின் பேட்டி. ஏன் உங்கள் படங்களில் கவர்ச்சிக் காட்சிகளில் கவர்ச்சி தூக்கலாகவே இருக்கிறது என்ற கேள்விக்கு நாம் என்ன பிறக்கும் போதே ஆடையுடனா பிறந்தோம் என்று பதில் கேள்வி கேட்டு நிருபரைத் திணற அடிக்கும் RAW நடிகையின் பேட்டி

பிராந்திய மொழித் தினசரியை மூடி வைத்துவிட்டு ஆங்கிலத் தினசரியை எடுத்தான்.

அமெரிக்க அதிபர் யாரை எந்தெந்த வருடங்களில் தன் ஆணுறுப்பை சுவைக்கச் சொல்லியிருந்தாலும் அவரை இப்போது இப்படி பகிரங்கப்படுத்துவது தவறு என்றும் அமெரிக்க அதிபர் ஒன்றும்

துறவியல்ல என்றும் வலியுறுத்தும் தலையங்கம் குழந்தை காப்பகங்களின் நம்பகமற்ற தன்மை பற்றிய துணைத் தலையங்கம் ஈராக்மீது அமெரிக்கப் படையெடுப்புக்கான தார்மீக ஆதரவு அல்லது எதிர்ப்பு குறித்த செய்திகள் அல்ஜீரியப் படுகொலை 999 செருப்பு ஜோடிகளும் 9999 புடவைகளும் வைத்திருக்கும் பெண்ணுக்கா உங்கள் ஓட்டு என்று கேட்கும் வாசகங்கள் அடங்கிய ஓட்டு வேட்டை விளம்பரம் தமிழர்களின் ப்ரேக்ஃபாஸ்ட் இட்லி தோசை வடை உப்புமா பொங்கல்தானே தவிர வெடிகுண்டு அல்ல என்று வலியுறுத்தும் கவியரசரின் உருக்கமான அறிக்கை இணையாக ஓடிக்கொண்டிருக்கும் மோட்டார் சைக்கிள்களில் என் கால்களை வைத்தபடி நின்றுகொண்டே நான் பாடுவதைப்போன்ற காட்சி இதுவரை தமிழ் சினிமாவில் வந்ததே இல்லை எனக் கூறும் நடிகையின் பேட்டி முப்பத்தாறு ஆண்டுகளாக மாநில முதல்வராக இருக்கும் தொண்ணூறு வயது கம்யூனிஸ்ட் தலைவர் தனக்குப் பிரதமர் பதவி தரப்பட்டால் ஏற்கத் தயார் என்று அறிவிக்கும் பெட்டிச் செய்தி பிரிட்டிஷ்காரர்களை விரட்டி விட்டு நாற்பத்தைந்து ஆண்டுகள் ஆண்டும் வறுமையை விரட்ட முடியாத ஆளும் கட்சியைச் சாடும் எதிர்க்கட்சித் தலைவரின் நீண்ட அறிக்கை

தினசரியை மடித்து வைத்துவிட்டு வெளியே வருகிறான்.

18

வீட்டில் தனியாக இருக்கிறாள்.

ஈவ்ஸ் வீக்லியைப் புரட்டுகிறாள்.

எழுந்து சோம்பல் முறிக்கிறாள்.

சன்னல் வழியே வேடிக்கை பார்க்கிறாள்.

மாமரத்துக் கிளையில் புதிதாய் துளிர் விட்டிருக்கிறது.

சாலையோரத்தில் நிற்கும் அவன் அவளையே பார்க்கிறான்.

அவள் அவனைப் பார்க்கிறாள்.

என்ன வேண்டுமென சைகையில் கேட்கிறாள்.

நீதான் வேண்டுமென்கிறான்.

சமத்காரமாக அவளைப் பார்த்து புன்னகை செய்கிறான்.

மேலேறி வா என சைகை செய்கிறாள்.

ஆடைகளைக் களைகிறாள்.

அவனையும் நிர்வாணமாக்குகிறாள்.

சாட்டையை எடுத்து அவன் கைகளில் தருகிறாள்.

கட்டிலில் குப்புறப் படுத்துக்கொள்கிறாள்.

அடி என்று சைகை செய்கிறாள்.

அவன் தயங்குகிறான்.

எழுந்து வந்து அவன் உறுப்பைச் சுவைக்கிறாள்.

சற்றே கடிக்கிறாள்.

சுகத்திலும் வலியிலும் கத்துகிறான்.

விட்டுவிட்டுத் திரும்பவும் கட்டிலில் படுத்துக்கொள்கிறாள்.

அடி என்று சைகை செய்கிறாள்.

அடிக்கத் துவங்குகிறான்.

ஓங்கி அடி என்பதாக சைகை செய்கிறாள்.

புட்டத்தைத் தூக்கியபடி படுக்கிறாள்.

அடி விழ விழ காம இச்சையுடன் புணர்ச்சியின் சப்தங்களை எழுப்புகிறாள்.

மல்லாந்து படுக்கிறாள்.

முலைகளில் கைகளை வைத்துக் குவித்து அடிகளை வாங்கிக்கொள்கிறாள்.

கால்களை விரித்துக் கதறுகிறாள்.

குருதியும் மதனநீரும் கலந்து படுக்கையை நனைக்கிறது.

குருதியை நாக்கால் நக்குகிறாள்.

எழுந்து வந்து அவனையும் படுக்கையில் கிடத்துகிறாள்.

அவன் குறியைச் சுவைக்கிறாள்.

ஜீவ நீரை முகத்தில் பாய்ச்சிக் கொள்கிறாள்.

- அந்த ஊரிலேயே மிகச் சிறந்த அழகி அவள்தான். அத்தனை இளைஞர்களின் காதல் கடிதங்களையும் கவிதைகளையும் விரல் நுனியால் ஒதுக்கிவிட்டவள். அப்பேர்ப்பட்டவளையே தன் காதலை ஏற்றுக்கொள்ள வைத்தவன் அவன். என்ன செய்தான் ஏது செய்தான் என யாருக்கும் தெரியவில்லை. ஆனால் அவளைத் தன் பின்னால் ஓடிவர வைத்து விட்டான். ஏதோ சந்தர்ப்பத்தில் அவள் அவன் காதலின் நேர்மையைச் சந்தேகித்து ஏதோ பேசிவிட்டாள்.

- மறுநாள் பழுக்கக் காய்ச்சி சட்டுவத்தால் தன் தொடையை சுட்டுக்கொண்டான். வேஷ்டியை விலக்கி காயத்தைப் பார்த்து அதிர்ந்து போனாள் அவள். இப்படியெல்லாம் காதலித்து விட்டுக் கடைசியில் அவளிடம் சொல்லிக் கொள்ளாமலேயே ஊரை விட்டு ஓடிப் போனான்.

- இந்திரப்ரஸ்தா கல்லூரியின் எதிரே குளிர்காலத்து மதிய வேளையில் கல்லூரி விட்டு பெண்கள் கும்பலாக வந்துகொண்டிருக்கிறார்கள். அந்தப் பெண்களைத் தவிர சாலையில் வேறு நடமாட்டமில்லை. சற்றுத் தூரத்திலேயே அவர்களைப் பார்த்துவிட்ட அவன் தன் கால் சராயின் ஜிப்பைக் கழற்றி வஸ்துவை வெளியே எடுத்துவிட எதிர்பாராத விதமாக திடீரென்று ஏகப்பட்ட இளம் பெண்களைப் பார்க்க நேர்ந்த வஸ்துவானது விஸ்வரூபம் எடுத்துக் காட்ட அதைக் கண்டு மருண்டு போன அந்த அழகிய இளம் பெண்கள் ஓ மலம் ஓ மலம் என்று ஆங்கிலத்தில் கதறியபடி அங்குமிங்கும் ஓடினர். சில பெண்கள் மட்டும் கடவுளை ஆங்கிலத்தில் அழைத்து வீறிட்டார்கள்.
- எப்போதும் நிக்கர் பாக்கெட்டில் புழுக்கைப் பென்சிலோடே அலையும் அவன் கக்கூஸ் சுவர்களில் தன் கைவரிசையைக் காட்டாத நாளே இல்லை எனலாம். மதத் தலைவர்களையும் தீர்க்கதரிசிகளையும் காபரே டான்ஸர்களோடு இணைத்து எழுதுவது அவனுக்குப் பிடித்தமான விளையாட்டு.
- அவனுக்கு வாயில் வெனீரியல் டிசீஸ் வந்திருந்தபோது அவன் தன்னை ஜேகே ஜேகே என அழைத்துக்கொண்டு தன்னோடு பழகிய பெண்களுக்கெல்லாம் மவுத்டுமவுத் கிஸ் கொடுத்து சகல தோழிகளுக்கும் அந்த வியாதியை அளித்திருக்கிறான்.
- சரியான பெயர் மற்றும் முகவரியைத் தேடி எடுத்து மரணத் தந்திகள் கொடுப்பது அவனுக்குப் பிடித்தமான பொழுது போக்கு.
- தெருவிலோ பஸ்ஸிலோ யாராவது தர்ம அடி வாங்கிக்கொண்டிருந்தால் அந்த இடத்திற்கு ஓடிச் சென்று தர்ம அடி வாங்குகிறவன் சாகிற அளவு அடிப்பான். சமயங்களில் வர்மப் பிடி போட்டுத் தாக்குவதும் உண்டு. (அவன் வர்மக் கலையில் கைதேர்ந்தவன்)
- பஸ்ஸில் பயணிக்கும்போது தன் மர்ம வஸ்துவை எடுத்து வெளியே விட்டு உரசி உரசி தன் ஆன்ம நீரால் எதிரே நிற்பவளின் ஆடைகளை ஈரமாக்குவான். ஏதோ சந்தர்ப்பத்தில் துறவிப்

பெண்களின் வெண்ணிற ஆடைகளை இப்படி ஈரமாக்கி விட்டான். அவர்களும் இந்தப் பௌதிக உலகை மறந்து ஆன்மீக உலகில் சஞ்சரித்தபடி இருந்ததால் எந்தவித எதிர்ப்பையும் காண்பிக்கவில்லை. ஆனால் கடவுளும் மதமும் இவ்வாறு தங்களின் கண் முன்னே அவமதிக்கப்படுவதைக் காணச் சகியாத மற்ற பெண்களில் சிலர் இந்தக் காரியத்தைச் செய்த சைத்தான் யார் என தர்மாவேசத்துடன் கூக்குரல் எழுப்பியபோது இவன் பக்கத்தில் நின்ற முதியவரைக் காட்டிவிட்டு அந்த இடத்தை விட்டு நழுவிவிட்டான்.

- பரத நாட்டியம் நிர்வாணமாக ஆடப்பட வேண்டும் என்று கருதுகிறான்.

- பெண்களும் யக்ஞோபவீதம் அணிய வேண்டும் என்ற நம்பிக்கை கொண்டவன்.

- தெற்கத்தி பூமியில் டூரிஸ்டாக அலைந்துகொண்டிருந்தபோது நடந்தது இது. நிலவொளி வீசிய பின்னிரவு நேரம். சாலையில் தனியாக நடந்து கொண்டிருக்கிறான். அப்போது அவன் கண்களில் தட்டுப்பட்டது பிரபலமான ஜாதித் தலைவர் சிலை. அதைப் பார்த்ததும் அவனுக்குத்தான் செய்ய வேண்டியது என்ன என்பது தெரிந்து போனது. ஊரில் பஸ் நிலையத்துக்கு அருகே செருப்புத் தைப்பவன் தன் பிளாஸ்டிக் காலையே தலையணையாக வைத்து உறங்கிக் கொண்டிருந்தான். குறட்டைச் சத்தத்தை வைத்து தைர்யங்கொண்டு அவன் கால் இருக்க வேண்டிய இடத்துக்குப் பக்கத்தில் கிடந்த மூட்டையை ஓசையேதும் எழாமல் பிரித்தான். செருப்புத் தைப்பவன் எழுந்துவிட்டால் என்ன செய்வது என்று தீவிரமாகக் கணக்குப் போட்டுக் கொண்டிருந்தது மனம். ஆனால் தான் செய்யப் போகும் காரியத்தின் அதி தீர சாகசத் தன்மையால் வசப்பட் டிருந்த அவன் புத்தியோ அவனது பயங்களையும் யோசனைகளையும் அப்புறப்படுத்திக் கொண்டிருந்தது. மூட்டையிலிருந்து கைக்கு அகப்பட்ட செருப்புகளை எடுத்துக் கொண்டு விடுவிடு என்று நடையைக் கட்டினான். திரும்பவும் சிலை இருந்த இடத்துக்கு வந்தான். வரும் வழியிலேயே கீழே

கிடந்து எடுத்த நைந்த துணியைக் கிழித்து முடிச்சுப் போட்டு கயிறாக ஆக்கி அதில் செருப்புகளைக் கோர்த்து மாலையாகச் செய்து கொண்டான். சுற்றுமுற்றும் பார்வையை ஓட்டினான். யாரும் இல்லை. மாலையை சிலைக்கு அணிவித்தான். பொழுது விடிவதற்குள்ளாகவே பஸ் பிடித்து அந்தப் பிராந்தியத்தை விட்டே அகன்றான். மாலையில் செய்தித் தாள்களைப் பார்த்தபோது தெரிந்தது. ஜாதிக் கலவரத்தில் பதினெட்டு தலைகள் விழுந்திருந்தன. கலவரம் அண்டை மாவட்டங்களிலும் பரவிக் கொண்டிருந்தது. ஒன்பது நாள் கலவரத்துக்குப் பிறகு போலீஸ் வந்து துப்பாக்கிச் சூடு நடத்தியதில் இருபத்தேழு பேர் செத்தார்கள். நீண்ட நாள் தங்களின் மனைவிமார்களைப் பிரிந்து முகாம்களில் கோழியும் ஆடும் சாப்பிட்டுச் சாப்பிட்டு தேகப் பயிற்சி செய்து செய்து உடம்பு முறுக்கேறி எப்போதாவது சில நேரங்களில் மட்டுமே ஹோமோசெக்ஸில் ஈடுபடும் விசேஷ போலீஸ்காரர்கள் கலவரக்காரர்களைப் பிடிக்க யத்தனித்தபோது ஆண்களெல்லாம் போலீசுக்குப் பயந்து மலைகளில் ஒளிந்து கொள்ள குடிசைகளில் கிடைத்த பெண்களோடு வன்புணர்ச்சியில் ஈடுபட்டார்கள். இது எல்லாவற்றையும் தமிழ் தினசரியில் கண்டறிந்து கொண்டான். ஆங்கில தினசரிகளில் ஆப்ரிக்க கண்டத்தின் இனக்கலவரங்களைப் பற்றித்தான் நியூஸ் போடுவார்களாதலால் இதற்கென அவன் தமிழ் தினசரிகளை நாட வேண்டியதாகி விட்டது. கற்பழிக்கப்பட்ட பெண்களின் எண்ணிக்கை முப்பத்தாறு என்றது பத்திரிக்கை செய்தி. கற்பழிப்பில் ஈடுபட்ட போலீஸ்காரர்களை ஸ்தலத்திலேயே சஸ்பெண்ட் செய்திருப்பதாக போலீஸ் கமிஷனர் அறிவித்திருந்தார். ஆனால் வன்புணர்ச்சியில் ஈடுபடுவதற்கு அத்யாவசியமான உறுப்பாகிய ஆண்குறியே சே என்ன பெயர் இது ஆண் குறியாம் ஆண்குறி புல்ஷிட் எங்களுக்கு இல்லாதிருக்கும்போது நாங்கள் எங்ஙனம் வன்புணர்ச்சியில் ஈடுபட்டிருக்க முடியும் என்று பதினெட்டு போலீசார் சுப்ரீம் கோர்ட்டுக்கு மனு தாக்கல் செய்திருந்தார்கள்.

கல்லூரி நாட்களிலும் அதற்கும் முந்தி பள்ளிக்கூட நாட்களிலும் தனக்குப் பிடித்தமான அழகான பெண்களைத் தேர்ந்தெடுத்து

அவர்களின் வீட்டு முகவரிகளைத் தேடிப் பிடித்து அம்முகவரிக்கு ஆண் பெண் பெண் பெண் ஆண் ஆண் ஆண் பெண் ஆண் பெண் ஆண் பெண் ஆண் ஆண் பெண் பெண் ஓ லாலா இதற்கு முடிவே இல்லை. அதனால் வேறு வார்த்தைகளில் சொல்லிப் பார்ப்போம் தனித்த நிலையிலோ அல்லது பலரோடு கூடியோ அல்லது மிருகங்களுடனோ அல்லது உபகரணங்களோடு கூடிய நோ நோ நோ நோ இதுவும் சரியாக வரவில்லை. ரத்தினச் சுருக்கமாக வேற்று மொழியைப் பயன்படுத்திச் சொல்லிவிடலாம் செக்ஸ் படங்களையும் செக்ஸ் நூல்களையும் தபாலில் அனுப்பி வைப்பான். தபாலில் தன் முகவரியைக் குறிப்பிடாமல் இருப்பதும் பெண்களின் முகவரியை இடது கையால் எழுதுவதும் இதில் விசேட அம்சங்கள். சில தினங்களில் அழுதழுது வீங்கிய முகத்துடன் வரும் குறிப்பிட்ட பெண்களைப் பார்த்து உள்ளுக்குள் சிரித்துக் கொள்வான். அதி உற்சாகமாய் இருந்தால் பெண்களுக்கு லவ் லெட்டர் எழுதி (இடது கையால் தான்) வேறு பையனின் பெயரைப் போட்டு அனுப்புவதும் உண்டு. அப்படிச் சில பெண்களின் படிப்பே நின்று போயிருக்கிறது. எவ்விதத்திலும் அகப்பட்டுக் கொள்ளாமல் தன் பள்ளிப் பருவத்தில் அழகிய பெண்களின் தகப்பன்மார்களுக்கு கண்ணுக்குப் புலப்படாத எதிரியாகவும் சிம்ம சொப்பனமாகவும் இருந்திருக்கிறான். கல்லூரிப் பருவத்தில் இப்படி விளையாடியபோது சாந்தி என்ற பெண் இவனுக்குப் பதில் எழுதி விட்டாள்.

அன்புள்ள சூர்யா

உன் கடிதம் கண்டேன். ம்ஹூம். கடிதம் அல்ல கவிதை. கவிதை. தேன் ஒழுகும் கவிதை. ஆமாம் உனக்கு என்ன அவ்வளவு தைரியம். நீ பாட்டுக்கு வீட்டுக்கு எழுதிவிட்டாய். என் அப்பாவோ அம்மாவோ பார்த்திருந்தால் என்ன ஆகியிருக்கும். நினைத்தாலே பயமாக இருக்கிறது. இருந்தாலும் உனக்கு இத்தனை துணிச்சல் ஆகாது. ம்ஹூம் தப்பு தப்பு. நீ துணிச்சலான ஆள் இல்லை. நீயும் நானும் வகுப்பில் பக்கத்து பக்கத்து டெஸ்கில்தானே உட்கார்ந்திருந்தோம். நீ அங்கேயே என்னிடம் நேரில் கொடுத்திருக்கலாமே. நான் என்ன உன்னைக் கடித்தா தின்றிருக்கப் போகிறேன். ம்... உன்னைக் கடித்துத்தான் தின்ன வேண்டும் போலிருக்கிறது. உன் கன்னக்

கதுப்புகளை. ஆமாம்... அது என்ன அப்படிப் பெண்கள் மாதிரி கன்னம். ம்... அந்தக் கன்னத்தைக் கடித்து என் பற்களை அதில் பதிய வைக்க வேண்டும் போலிருக்கிறது சூர்யா. ஆமாம் என் பல் பதிந்த தடத்துடன் நீ கல்லூரிக்கு வந்தால் எப்படியிருக்கும். இதை எழுதும்போது எனக்குச் சிரித்துச் சிரித்துச் சிரிப்பை அடக்கப் பார்த்து புரையேறிவிட்டது. ஐயோ அப்புறம் எழுதுகிறேன். அம்மா வருகிறார்கள்.

சூர்யா நான் எழுதிக்கொண்டிருக்கும்போது புரையேறிவிட்ட தைப் பார்த்து அம்மா தண்ணீர் கொண்டு வந்து கொடுத்தார்கள். எழுதும்போது எழுத்தைக் கவனிக்காமல் அப்படி என்னடி சிரிப்பு என்று அதட்டல் வேறு. எப்படி இருக்கு கதை. சரி என்ன சொல்ல வந்தேன். உன் கன்னம். உன் கன்னத்தைக் கடிக்க வேண்டும். உன் அழகிய விரல்களைக் கடிக்க வேண்டும். உன் காது மடல்களை... ம் அப்புறம்... அப்புறம்... ச்சீ... சொல்ல மாட்டேன். நீ என்னைத் தவறாக நினைத்துவிடுவாய். இரு உன்னை நேரில் கவனித்துக்கொள்கிறேன்.

உன் இதயம் கவர்ந்த

சாந்தி

பி.கு. ஆமாம் என்ன இப்படி கடிதம் பூரா என் அழகைப் பற்றி வர்ணித்திருக்கிறாயே... வகுப்பில் லெக்சரர் சொல்லுவதை யெல்லாம் கேட்காமல் என்னைத்தான் இத்தனை தினங்களாக சைட் அடித்துக்கொண்டிருந்தாயா?

பி.கு. என் பின்னழகையும் முன்னழகையும் பாலைவனத்தின் மணல் மேடுகளோடு ஒப்பிட்டிருக்கிறாய். எனக்கு உன்னைப் போலெல்லாம் எழுத வராது. நீ கவிஞன்.

பி.கு. இதற்கு நீ எழுதும் பதிலை நேரிலேயே கொடுத்துவிடு.

அவன் அவளுக்குப் பதில் கடிதம் கொடுத்தான். அவளோடு சினிமாவுக்குப் போனான். திரையரங்கத்தின் இருளில் அவள் விரல்களோடு தன் விரல்களைக் கோர்த்துக் கொண்டான். அவள் கைகளை எடுத்து முத்தமிட்டான். இப்படியே பல்வேறு முயற்சிகளுக்குப் பிறகு ஏதோ சந்தர்ப்பத்தில் அவளுடன் சம்போகம் கொள்ளும்படியான சூழலும் கனிந்தது. அவளும் ஒப்புக்கொண்டாள்.

ஆனால் உறை பயன்படுத்துமாறு நிபந்தனை விதித்தாள். அவனும் சம்மதித்தான். அதே சமயம் உறையின் தொப்பிப் பகுதியில் ஊசியால் துளையும் போட்டுக் கொண்டான். ஆனால் காரியத்துக்குப் பிறகு உறையைத் தூக்கி எறியும்போது அவளுக்குத் தெரியாமல் பரிசோதித்ததில் ஜீவ நீரானது துளையின் வழியே வெளியேறாமல் தொப்பியிலேயே தங்கியிருக்கக் கண்டான். ஜீவ நீரின் அடர்த்திக்கு இந்தத் துளை போதாதென அறிந்து அடுத்தடுத்த சந்தர்ப்பங்களில் உறையின் தொப்பிப் பகுதியில் கத்திரிக்கோலால் லேசாக வெட்டி விட்டான். உறையைப் பிரிக்காமல் கண்ணில் வைத்து தொப்பித் துளையின் மூலம் பார்த்தான். சூரியன் மரம் செடி கொடி ஆடு மாடு மண்மலை ஆண் பெண் பஸ் வீடு திசை காற்று நெருப்பு சுவை என்று பிரபஞ்சத்தின் சகல விஷயங்களும் தெரிந்தன. இப்படி வெட்டப்பட்ட உறைகளையே அடுத்தடுத்த சம்போகங்களில் பயன்படுத்தினான். தொடர்ந்து விலக்கு ஆகாமலேயே இருந்தது கண்டு அவளுக்கு ஒன்றும் புரியவில்லை. அம்மாவிடம் சொல்ல வும் பயமாக இருந்தது. ஒன்பதாம் வாரமும் வந்து விட்டது. ஆனாலும் விலக்கு ஆகவில்லை. பயந்தே போனாள். அவனிடம் வந்து சொன்னாள். சாத்தியமே இல்லை கண்ணே. உனக்கேதான் தெரியுமே. எப்போதாவது நான் உறை போடாமல் உன்னை நெருங்கியிருக்கிறேனா. இது வேறு ஏதோ பிரச்னை. கடைசியில் மகளின் மாற்றத்தைக் கண்டு அம்மாவே கேட்டுவிட்டாள். சாந்தியின் பதிலில் திருப்தியுறாமல் அவளை மருத்துவரிடம் அழைத்துப் போனாள். அதற்குள் மேலும் சில காலம் ஆகிவிட்டிருந்தது. அபார்ஷன் செய்வது இந்த நிலையில் கஷ்டம். சின்னப் பெண். இத்தனை மாதம் என்ன செய்துகொண்டிருந்தீர்கள். எல்லாவற்றையும் அவனிடம் சொல்லி அழுதவளிடம் அவன் கதை சொன்னான்.

ஊர் குளம். பெண்கள் துறை ஆண்கள் துறை அருகருகே. குளத்திற்குள்ளாகவே இருந்து சுயமைதுனம் செய்த ஆணின் ஜீவ தாதுவானது நீருக்குள்ளேயே பயணித்து பெண்கள் துறைக்குப் போய் அவ்விடத்திலே குளித்துக் கொண்டிருந்த பத்தினிப் பெண்ணின் கருவறைக்குள் நுழைய அவளும் கருவுற்று விடுகிறாள். தன் கற்பையும் கன்னித்தன்மையையும் இழந்து போன அவள் அதற்குக்

காரணமான ஆடவன் யாரென அறியாது மயங்கி தற்கொலை செய்துகொண்டுவிட அப்பத்தினிப் பெண்ணுக்கு அந்த ஊரிலே கோயில் எழுப்பப்பட்டது. அக்கோயில் எழுப்புவதற்காக அந்நாட்டு மன்னன் எகிப்து தேசத்திலிருந்து பாலைவன மணலை மூடைகளில் நிரப்பி அந்தத் தேசத்து மன்னனின் தலையிலும் கற்களை ஆப்கானிஸ்தான் தேசத்திலிருந்து சேகரித்து அவற்றை அத்தேசத்து மன்னனின் தலையிலும் முறையே ஏற்றிக்கொண்டு வந்தான் என்றும் அதனாலேயே அவனுக்கு எகிப்தாலங்கானத்து மண்கொண்ட லெமூரியன் எனவும் ஆப்கானத்துக் கல்வென்ற வெஞ்சினன் எனவும் பட்டங்கள் கொடுக்கப்பட்டன என்றும் கல்வெட்டுக் குறிப்புகள் கூறுகின்றன. இக்கோயில் லெமூரியாக் கண்டத்தைக் கடல் கொள்வதற்கு முன்பு எழுப்பப்பட்டதெனவும் கடல் அகழ்வாராய்ச்சியாளர்கள் தேடினால் இக்கோயிலின் சிதிலங்கள் இந்து மகா சமுத்திர ஆழத்தில் கிடைக்கலாம் எனவும் ஆய்வாளர்கள் கருதுகிறார்கள். அதனால் காண்டத்தைப் பயன்படுத்தியே நான் உன்னிடம் இன்பந் துய்த்திருக்கிறேன் என்பதால் குளத்திலே கருவுற்ற பத்தினியைப்போல் நீயும் வேறு எந்த ரூபத்திலேனும் கருவுற்றிருக்கலாம் என்று சொல்லிவிட்டுப் போய்விட்டான்.

விபச்சாரியிடம் சென்ற அவன் கீழே தரையில் மல்லாந்து படுத்துக்கொண்டு என் முகத்தில் சிறுநீர் கழி என்று சொல்ல மிரண்டுபோன விபச்சாரி அலறிப் புடைத்துக் கொண்டு கதறியபடி ஓடியிருக்கிறாள். என் காசைத் திருப்பிக் கொடு என்று ரகளை செய்து காசுக்குப் பதிலாக அடியை வாங்கிக் கொண்டு வந்து சேர்ந்தான்.

கற்பனைக்கும் பிரக்ஞைக்கும் எதிராகப் பிரதியை முன்னிறுத்தும் தனது நாவலுக்கான குறிப்புகளை சக எழுத்தாளனான யாக்ஞ வல்கியனிடம் கொடுத்தான் முனியாண்டி. அதைப் பார்த்த யாக்ஞவல்கியன் Man is born free என்று துவங்கி அன்றிரவே வேறு கதையை எழுதினான். பிறகு யாக்ஞவல்கியனிடமிருந்த நாவல் குறிப்புகளை வாங்கி சிறு பத்திரிகை ஆசிரியரிடம் பிரசுரத் திற்குக் கொடுத்தான். இக்குறிப்புகளை பிரசுரிக்க வேண்டியது தான் என்றும் ஆனால் பெண்கள் இல்லாத அச்சகத்தில்தான் அச்சடிக்க முடியுமென்றும் தெரிவித்தார் சிறு பத்திரிகை ஆசிரியர். பெண்கள்

இல்லாத அச்சகத்தை முனியாண்டி தேடிக் கொண்டிருக்கையில் யாக்ஞவல்கியன் முனியாண்டியைச் சந்தித்து இந்த வேலையெல்லாம் உனக்கு வேண்டாம் உன் குறிப்புகளை ஜார்ஜ் பத்தாயின் பின்னுரையோடு நானே வெளியிட்டு விடுகிறேன் கொடு கதையை என்று வாங்கிப் போனான். இதற்கிடையில் பெண்கள் இல்லாத அச்சகத்தைத் தானே தேடிக் கண்டுபிடித்து விட்டதாகவும் இதை உடனே வெளியிட வேண்டுமென்றும் முனியாண்டியைத் தேடிவந்து சொன்னார் சிறு பத்திரிகை ஆசிரியர். தன் கதைகளை எப்போதுமே பதினெட்டு பிரதிகள் எடுக்கும் வழக்கமுள்ள முனியாண்டி தன் கையிலிருந்த பிரதியை உடனே எடுத்துக் கொடுத்தான். இதைக் காற்றுவாக்கில் கேள்வியுற்ற முள்ளுச்சாமி என்ற யாக்ஞவல்கியன் (இதற்கு மேல் முனியாண்டியின் குறிப்புகள் கரையான்களால் அரிக்கப்பட்டு தொடர்பு அறுபட்டுப் போயிருக்கின்றன).

சாலிக்கிராமத்தில் வேசி வீட்டுக்குப் போயிருந்தபோது நடந்த அசம்பாவிதத்திலிருந்துதான் முனியாண்டி தனது கதைகளைப் பதினெட்டு பிரதிகள் எடுக்க ஆரம்பித்தான். வேசியுடன் தனியறையில் விடப்பட்ட முனியாண்டி உன் பெயரென்ன என்ற வழக்கமான கேள்விக்குப் பிறகு நீ பிச்சமூர்த்தி படித்திருக்கிறாயா என்று கேட்க ஏன் இப்படி வந்த காரியத்தைப் பார்க்காமல் ஏதேதோ கேள்விகள் கேட்டுக்கொண்டிருக்கிறாய் என்று அவள் திருப்பிக் கேட்க நீ பிச்சமூர்த்தி படித்திருந்தாயானால் வந்த நேரத்திற்குக் கொஞ்சம் இலக்கிய விசாரம் செய்துவிட்டுப் போய்விடலாம் என்று நினைக்கிறேன் என்றான். இலக்கிய விசாரம் என்று கேட்டவுடனேயே உஷாராகி விட்ட வேசி நீ இலக்கியச் சிறு பத்திரிகைக்காரனா என்று கேட்க முனியாண்டி புன்சிரிப்புடன் ஆமென்றான். உடனே கண்ணிமைக்கும் நேரத்தில் கட்டிலின் மீது ஏறிக் குந்திய வேசி தனது பாவாடையை உயர்த்தி முனியாண்டி அந்தக் கட்டிலின் மீது வைத்திருந்த அவனது ஜோல்னாப் பையின் மீது மூத்திரம் அடித்தாள். என்ன செய்வதென்று புரியாமல் ஸ்தம்பித்துப்போன முனியாண்டி அவள் எழுந்தவுடன் அடீ பாதகீ என்ன காரியம் செய்தாய் நீ அதற்குள்ளேதானே என் கதையின் கையெழுத்துப் பிரதியை வைத்திருக்கிறேன் அதைப் பாழடித்துவிட்டாயே ஃப்ரான்ஸ் தேசத்தின்

பெரும் அறிவுஜீவிகளால் மொழிபெயர்க்கப்பட்டு பாராட்டப்படப் போகிற உலகின் ஆன்ம விசாரங்களையெல்லாம் உள்ளடக்கிய உன்னதப் படைப்பில் மூத்திரம் போய்விட்டாயே ஒன்பதாவது பாதையைக் கண்டுபிடித்ததைத் தடுப்பதற்காக வறட்டு மார்க்கீயவாதிகளால் அனுப்பப்பட்ட கைக்கூலியா நீ. அதற்கு மேல் முனியாண்டி தன் வசனத்தை மறந்து போனான். டேய் சிறு பத்திரிகைக்காரா உன் ஜோல்னாப்பையை எடுத்துக்கொண்டு ஓடிவிடு இல்லாவிட்டால் உன்மீதும் போய் விடுவேன் என்று அவள் சீற அடித்துப் பிடித்துக் கொண்டு ஓடிவந்த முனியாண்டி அன்றிலிருந்து தனது கதைகளைப் பதினெட்டு பிரதிகள் எடுப்பது என்று வேசியின் மூத்திரத்தால் நனைந்துபோன தனது ஜோல்னாப் பையின்மீது அடித்து பிரதிக்ஞை செய்து கொண்டான்.

முனியாண்டி அப்போது சிறு பத்திரிகை எழுத்தாளனாக இருந்த காலம். மெக்சிகோவிலிருந்து சென்னைக்கு வந்த நாடகக் குழு முனியாண்டியைப் பார்க்க முடியுமா எனவும் இப்போது அவன் எந்தத் தேசத்தில் இருக்கிறான் எனவும் வினவியபோது தேசமா நீங்கள் சொல்வது யாதெனக் குழம்பியபடிக் கேட்டான் சூர்யா. எங்கள் தேசங்களில் எழுத்தாளன் எனில் அவன் நாடு கடத்தப்பட்டிருப்பான் அல்லது தூதராக இருப்பான் என்றது மெக்சிகோ குழு.

இருபத்தேழு ஆண்டுகளுக்கு முன்னால் மெக்சிகோ பல்லைக் கழகத்தில் நடந்த மாணவர் படுகொலையைக் கண்டித்து ஓக்தா வியோ பாஸ் தில்லியில் தனது தூதர் பதவியை ராஜினாமா செய்தார். அந்தப் படுகொலைச் சம்பவத்தை La noche de Tatelolca என்ற புத்தகமாக எழுதினார் Elena Poniatowska. சர்வாதிகார ஆட்சியே கவிழ நேர்ந்தது.

எங்கள் எழுத்தாளர்களுக்கெல்லாம் எழுத்தாளர் என்ற அடையாளமே கிடையாது. குமாஸ்தாக்களாகவும் பெட்டிக்கடை வியாபாரிகளாகவும் வாழ்ந்துகொண்டு ஓய்ந்த நேரத்தில் எழுதுபவர்களே எங்கள் எழுத்தாளர்கள். நூற்று எண்பது பேர்கொண்ட வாசகர் வட்டத்தில் இவர்களின் மனைவிமார்கள்கூட இருப்பதில்லை. எங்களுடைய இந்த வழக்கப்படி முனியாண்டியும் அண்ணாசாலை அஞ்சலகத்தில் குமாஸ்தாவாகத்தான் இருக்கிறான் என்று மெக்ஸிகோ

குழுவிடம் சொன்னாள் நேநோ.

அதைக் கேள்வியுற்றதிலிருந்துதான் முனியாண்டி தன் குமாஸ்தா வேலையை உதறிவிட்டுத் தன்னை யாத்ரீகனாக மாற்றிக்கொண்டான்.

பெயர் தீப்தி. நண்பனின் மனைவி. பிரசித்தி பெற்ற நிறுவனத்தில் வேலை. அடிக்கடி அவளுடன் தொலைபேசியில் உரையாடுகிறான் முனியாண்டி.

- நீ அன்றைக்கு அணிந்திருந்த சுடிதார் அற்புதமாக இருந்தது தீப்தி. அதுவும் நீ அணிந்திருந்தபோது உனக்கென்றே பிரத்யேகமாக தேர்ந்தெடுத்த கலைஞனால் வெகு நேர்த்தியாக உருவாக்கப்பட்டது போல் இருந்தது.
- இல்லை நான் பொய் சொல்லவில்லை. உண்மையைத்தான் சொல்கிறேன்.
- இதை நான் மட்டுமா சொல்கிறேன். இதுவரை வேறு யாரும் உன்னிடம் இதைப் பற்றிச் சொல்லவில்லையா என்ன.
- நீ என் கனவில் வந்தாய் தீப்தி.
- என்ன கனவென்று நான் சொல்ல மாட்டேன்.
- சொல்லித்தான் ஆக வேண்டுமா.
- மனிதர்களே இல்லாத தீவு. நானும் நீயும் கானகத்தில் ஆடையின்றித் திரிகிறோம். காய்கனிகளைப் பறித்து உண்கிறோம். நிலவொளியில் நீந்தி விளையாடுகிறோம்.
- நான் என்ன செய்வது தீப்தி. கனவு. நீதானே சொல்லச் சொன்னாய்.
- நீலப்படம் பார்த்திருக்கிறாயா தீப்தி.
- நீ அணியும் மார்புக் கச்சை பழைய மோஸ்தரா. நவீன மோஸ்தரா.
- ஹிட்லரின் நாஜிக் கட்சியின் ஸ்வஸ்திக் குறி உடலுறவைத்தான் குறிக்கிறதென்று உனக்குத் தெரியுமா தீப்தி.
- லெஸ்பியன்கள் பற்றி என்ன நினைக்கிறாய் தீப்தி.
- புணர்ச்சியில் உனக்கு எத்தனை நிலைகளில் அனுபவம் உண்டு தீப்தி.

- உனக்குப் பிடித்த நிலை எது.
- நீ பெண் என்பதால் நாம் இதைப் பற்றியெல்லாம் விவாதிக்கக் கூடாதா.
- Hey why do you feel shy yaar.
- விந்தைச் சுவைத்திருக்கிறாயா.
- என்ன எல்லையை மீறுகிறேனா. எல்லையை நிர்ணயித்தது யார் தீப்தி.
- ஒன்பது நாட்களாக நீதான் பேசவில்லை. நான் எல்லையை மீறிவிட்டதால் நீ கோபமாக இருப்பாயென்று நினைத்திருந்தேன்.
- என்ன எனக்கா கோபம். தேவதைகளின்மேல் யாராவது கோபம் கொள்ள முடியுமா.
- சரி. சந்திப்போம். வீட்டுக்கு வருகிறேன்.
- சரி. வீடு வேண்டாம். இடத்தைச் சொல்.
- நான் எந்த இடத்தைச் சொல்வது. உன்னுடன் இருந்தால் அது எந்த இடமாக இருந்தாலும் எனக்கு சொர்க்கம்தான் தீப்தி.
- ஓ.கே. பெஸண்ட் நகர் பீச்.

பெஸண்ட் நகர் பீச்சில் நடுச்சாமம் வரை காதலித்தார்கள். காதலின் முடிவில் அவள் கழுத்தை இறுக்கிக் கொன்றான் அவன்.

ஜார்ஜ் பத்தாயைப் பழிவாங்கிவிட்டேன் என முனகியபடி அவள் உடலை இழுத்து அலைகளில் போட்டுவிட்டு சாவகாசமாக நடந்தான் அவன்.

19

முனியாண்டி தனது அடுத்த நாவலை உலகின் மிகப் பெரிய பாலியல் நாவலாக உருவாக்கிக்கொண்டிருக்கிறான். அதன் பொருட்டு உலகின் பல்வேறு நகரங்களின் டெலிபோன் டைரக்டரிகளை சேகரித்துக் கொண்டிருக்கிறான். அமெரிக்கா பிரிட்டன் ஸ்பெயின் ஸ்காண்டிநேவியா அல்ஜீரியா அஸர்பெய் ஜான் ஸெர்பியா இஸ்ரேல் நியூசிலாந்து ஆஸ்திரேலியா கம்பூச்சியா இந்தோனேஷியா சீனா துருக்கி எகிப்து கானா நைஜீரியா ஸெய்ர் உகாண்டா கோஸ்த்தா ரிக்கா என்று பல தேசங் களின் டெலிபோன் டைரக்டரிகளைச் சேகரித்திருக்கிறான். அவன் இருப்பிடமே கிடங்கைப்போல் மாறி மலைமலையாய் குவிந்து கிடக்கின்றன டெலிபோன் டைரக்டரிகள். இதுவரை 1800 பெண்களிடம் பேசியிருக்கிறான். தொடர்ந்து பேசிக்கொண்டிருக்கிறான். செலவு எக்கச்சக்கமாக ஏறிக்கொண்டே போகிறது. நிச்சயமாக அந்த நாவல்தான் உலகிலேயே அதிக செலவில் உருவாக்கப்பட்ட நாவலாக இருக்கும். உலகெங்கிலும் பல்வேறு இடங்களில் வசிக்கும் அவன் நண்பர்கள் இந்த நாவலுக்காக டெலிபோன் டைரக்டரிகளைச் சேகரித்து அனுப்பிக்கொண்டிருக்கிறார்கள். பெண்களிடம் அவன் நிகழ்த்தும் உரையாடல்களை உடனுக்குடன் பதிவு செய்து கொண்டிருந்தான்.

Telephone directory is the most erotic book of the world என்று நம்புகிறான்.

பெயர்களை உன் விருப்பத்துக்குத் தேர்ந்தெடுக்கலாம். உன் ஃபாண்டஸிகளைச் சொல்லலாம். தடை செய்யப்பட்ட அத்தனை வார்த்தைகளையும் பேசலாம். எக்ஸ் என்று துவங்கும் எழுத்தில் சில அபூர்வமான பெயர்கள் உள்ளன. ஆப்ரிக்கப் பெயர்களெல்லாம் கவிதைகள். சிஹாலே ங்கூஞ்சி வாரிங்கா கிஹாஹூ கிதூத்தூ கவிதை கவிதை இந்தக் கவிதைகளில் பெண்களைக் கண்டுபிடிக்கவேண்டும். ரியோ தி ஹனைரோ டைரக்டரியில் அம்பாரா.

லூயிஸா. தெல் அவிவ் டைரக்டரியில் துரய்யா மக்பூல்.

இந்தியாவிலிருந்து பேசுகிறேன் மக்பூல். நான் உன்னைப் புணர விரும்புகிறேன் என்று சொன்னான். அவள் அதற்கு என்ன பதில் சொன்னாள் தெரியுமா.

அதை விடு. க்ளிண்டனின் அந்தரங்கக் காரியதரிசியைக் கூப்பிட்டு உனக்கு கொக்கோகக் கலையின் அத்தனை ரகஸ்யங்களையும் கற்றுத் தருகிறேன் வருகிறாயா என்று கேட்டிருக்கிறான். இரவில் மருத்துவமனைகளை அழைத்து சலிப்புற்று அமர்ந்திருக்கும் நர்ஸ்களுடன் மணிக்கணக்கில் பேசியிருக்கிறான். சர்வதேச மணிகாட்டியை வைத்துக் கொண்டு புவனோஸ் அய்ரஸில் செலஸ்டவினா என்ற பெண்ணை அதிகாலையில் அழைத்து buenos dias சொல்லி எழுப்பி அவள் மார்பகங்களைப் பற்றி வர்ணித்திருக்கிறான். கண்ணகி என்ற பெண்ணை அழைத்து நீ உன் முலையால் மதுரையை எரித்தாய் இப்போது வெடிகுண்டுகளால் ஊரை எரிக்கிறார்கள் என்பான். நீ யார் பேசுவது உன்னையே உருவாக்கியவனை ஒருமையில் அழைக்கலாமா கண்ணகி நான்தான் இளங்கோ பேசுகிறேன். குழம்பி விடுவாள். விடவே மாட்டான். தொடர்ந்து பேசுவான்.

சமயங்களில் கடுமையான வசைமொழிகளை பதிலாகப் பெற்றிருக்கிறான். முதியவர்களிடம் மாட்டிக்கொண்டு அவனே பேச்சைத் துண்டித்திருக்கிறான். சிலர் அவனுடைய தொலைபேசி எண்ணை எப்படியோ தெரிந்துகொண்டு தாக்கியிருக்கிறார்கள். சில பெண்கள் பதிலே பேசாமல் ஆனால் இணைப்பையும் துண்டிக்காமல் அவன் பேசுவதைக் கேட்டுக் கொண்டே இருப்பதைக் கவனித்திருக்கிறான்.

சுவாரசியமான அனுபவங்கள் நிறையவே உண்டு. சில பெண்கள் அவன் மீது தீவிரமாய் காதல் கொண்டு அவனைப் பார்க்கத் துடித்துக் கொண்டிருக்கிறார்கள். சில கணவன்மார்கள் அவனைக் கொலை செய்யும் நோக்கத்துடன் தேடிக் கொண்டிருக்கிறார்கள். அதனால் அவன் தனது அடையாளத்தை ரகசியமாகவே வைத்திருக்கிறான். நாவலையும் ரகசியமாகவே உருவாக்கிக்கொண்டிருக்கிறான். நாவல் வெளிவந்ததும் தலைமறைவாவதைத் தவிர வேறு வழியில்லை என்றும் குறிப்பாக

கணவன்மார்களின் கொலைபாதகக் கரங்களிலிருந்து தப்பியாக வேண்டும் என்றும் அவன் சமீபத்தில் நேநோவுக்கு எழுதிய கடிதத்தில் குறிப்பிடுகிறான். இதெல்லாம் தவிர கி.பி. ஒன்பதாம் நூற்றாண்டு செத்த மூளை இவனுடைய இலக்கிய பார்ட்னரான யாக்ஞவல்கியன் என்ற புனைப் பெயரில் எழுதும் முள்ளுச்சாமி உத்தமத் தமிழ் எழுத்தாளன் மற்றும் விமர்சகர் ஆனந்தசாமி முதலியோர் சேர்ந்து தனக்குக் கொடுக்கப் போகும் ஃபத்வா வேறு தனியே தன் தலைக்கு மேல் தொங்கிக் கொண்டிருப்பதாக அவன் அதில் எழுதுகிறான். தன்னுடைய ஒழுக்க விதிகளை வைத்து முனியாண்டியின் மீது விமர்சகர் ஆனந்தசாமி எடுக்கப் போகும் ஒழுங்கு நடவடிக்கை என்னவாக இருக்குமென்று தமிழ் இலக்கிய உலகமே சஸ்பென்ஸில் காத்துக்கொண்டிருப்பதாக முனியாண்டியின் நண்பன் திருமலை அவனிடம் சொல்லியிருந்தான்.

ஆனால் இவ்வளவு பிரச்னைகள் இருந்தும் முனியாண்டி தன்னுடைய இந்த நாவலுக்காகப் பலருக்கும் நன்றிக்கடன் பட்டிருப்பதையும் அந்தக் கடிதத்தில் குறிப்பிடத் தவறவில்லை. தொலைபேசி இலாகாவிலுள்ள நண்பர்கள் அவனுடைய தொலைபேசிச் செலவை ஏற்றுக் கொண்டிருக்கும் சில பணக்கார நண்பர்கள் டைரக்டரிகளை சேகரித்து தொடர்ந்து அனுப்பிக்கொண்டிருக்கும் வெளிதேசத்து நண்பர்கள் என்று மிகப் பெரிய குழுவே இந்த நாவலுக்காக உழைத்துக்கொண்டிருந்தது.

இதை எழுதிக் கொண்டிருக்கும் இந்தத் தருணத்தில் செல்போனையும் கையில் பைனாகுலரையும் வைத்துக் கொண்டு அவன் வசிக்கும் பகுதியிலுள்ள பெண்களைக் கலக்கிக் கொண்டிருந்தான் முனியாண்டி.

அப்பெண்களின் நடவடிக்கைகளை பைனாகுலர் மூலம் பார்த்து உடனுக்குடன் அவர்களைத் தொடர்பு கொண்டு தான் கவனித்துக்கொண்டிருப்பதை அவர்களுக்குத் தெரிவித்துக் கொண்டிருக்கிறான்.

- அது சரி நீங்கள் எங்கிருந்து பேசுகிறீர்கள்.

- உன் வீட்டுக்கு எதிரே இருக்கும் சிமெண்ட் பெஞ்சின் பின்னே

ஒளிந்து கொண்டு உன்னைக் கவனித்துக்கொண்டிருக்கிறேன். கையில் செல்போன் இருக்கிறது.

சொல்லி முடிப்பதற்குள் இணைப்பைத் துண்டித்துவிட்டு பால்கனிக்கு வந்து பெஞ்சையே உற்றுக் கவனிப்பாள். பெஞ்சில் யாரும் இருக்க மாட்டார்கள். உடனே மீண்டும் தொடர்புகொள்வான்.

- நான்தான் டார்லிங்.

- நீங்களா.

- ஆமாம். நானேதான்.

- எங்கிருந்து பேசுகிறீர்கள்.

- நிச்சயமாக சிமெண்ட் பெஞ்சுக்குப் பின்னே ஒளிந்துகொண்டு அல்ல.

- எனக்குத் தெரியும். அங்கே யாரும் இல்லை.

- நீ இணைப்பைத் துண்டித்ததுமே சிமெண்ட் பெஞ்ச்சைப் பார்க்க பால்கனிக்குத்தான் வரப் போகிறாய் என்று யூகித்து விட்டேன். அதனால் இப்போது இடத்தை மாற்றிவிட்டேன்.

சொல்லிவிட்டு இந்த முறை அவனே இணைப்பைத் துண்டித்து விடுகிறான்.

மறுநாள் அதே நேரம் தொடர்பு கொள்கிறான். அந்த அழைப்புக்காகவே காத்திருந்ததுபோல் போனை எடுக்கிறாள் அவள்.

- என் போனுக்காக ஆர்வத்துடன் காத்திருந்தாய் போலிருக்கிறதே.

- நீங்கள் யார். உங்களுக்கு என்ன வேண்டும்.

- நீ வேண்டும். உன் யோனி வேண்டும்.

- கொஞ்சம் நாகரிகமாகப் பேசுங்கள்.

- சரி. எனக்கு நீ வேண்டும். உன் உடல் முழுக்க என் நாவால் தீண்டி உன்னைச் சுவைக்க வேண்டும். உன்னை அள்ளி அள்ளிப் பருக வேண்டும்.

- நேற்று இரவு உன்னைப் பற்றி நினைத்தேன்.

- நான் உன்னைப் பற்றி நினைக்கவே இல்லை.

- ம்.

- கோபித்துக்கொண்டாயா.

- ம்ஹூம்.

- என் மீது கோபித்துக் கொள்ள மட்டுமல்ல. மோனிகா என்னை என்ன செய்யவும் உரிமை உண்டு.

- ம்.

- என்ன இது என்ன ஆயிற்று இன்றைக்கு உனக்கு. நீ இப்படி ம் ம் ம்ஹூம் என்று சொல்வது ஜார்ஜ் ஆர்வெல்லின் கதாபாத்திரத்தை எனக்கு ஞாபகப்படுத்துகிறது.

- நான் படித்ததில்லை சொல்.

- அந்த அரசாங்கத்தில் மொழித்துறை இயக்குனரின் வேலை மக்களின் புழக்கத்தில் இருக்கும் வார்த்தைகளை மட்டுப்படுத்துவது. நிறைய வார்த்தைகள் மக்களை நிறைய யோசிக்க வைக்கும். நிறைய யோசிப்பது அரசுக்கு ஆபத்து. கடைசியில் மொழித்துறை தலைவர் மக்களின் புழக்கத்தில் இருக்கும் வார்த்தைகளை மட்டுப்படுத்தி இறுதியில் மொழியை ஒன்பதே வார்த்தைகளில் கொண்டுவந்து விடுவார். அந்த மொழித்துறைத் தலைவர் பதவியை உனக்குக் கொடுத்து விடலாம் போலிருக்கிறது மோனிகா.

- நீ நன்றாகப் பேசுகிறாய். நீ பேசுவதைக் கேட்பதற்காகத்தான் நான் பேசாமல் இருந்தேன்.

- அது இருக்கட்டும். இப்போது நான் உன்னிடம் சொன்ன பொய் பற்றி. நாளில் எவ்வளவு மணி. மணிக்கு எவ்வளவு வினாடி. எல்லாவற்றையம் பெருக்கிக் கொள். அவ்வளவு நேரம் உன்னைப் பற்றி நான் நினைக்கிறேன்.

- அது தப்பு.

- ஏன்.

- எவ்வளவு பெரிய எழுத்தாளன் நீ. போயும் போயும் என்னைப் பற்றி சதா காலமும் நினைக்கும்படி வைத்து விட்டோமே என்ற குற்ற உணர்வு என்னை வதைக்கிறது.

- எழுத்தாளனுக்கு என்று உறவு பந்தம் பாசம் எதுவும் இருக்கக் கூடாதா என்ன.

- உன்னைப் பற்றி என் தோழியிடம் சொல்லிக் கொண்டிருந்தேன்.

- என்ன சொன்னாய்.

- நீ என்னுடன் இதுவரை பேசியதையெல்லாம் சொன்னேன்.

- என்ன சொன்னாள் அவள்.

- நீதான் பொய் சொல்லுகிறாய். அவன் சொல்வது உண்மை என்றாள்.

- என்ன பொய் என்ன உண்மை.

- நீ என்னை எப்போதும் நினைத்துக் கொண்டிருப்பதாகச் சொன்னது உண்மை. நான் உன்னை எப்போதாவது நினைக்கிறேன் என்பது பொய்.

- நான் உன்னைப் பற்றியே எப்போதும் நினைத்துக்கொண்டிருக்கிறேன் என்று சொல்வது கூடத் தவறு. நீயே எனது சுவாசமாகி விட்டாய். என் ரத்த ஓட்டத்திலும் இதயத் துடிப்பிலும் கண் இமைப்பிலும் எல்லாவற்றிலும் நீயே ஆகிவிட்டாய்.

- இவ்வளவு பேசுகிறாய். உன் பெயர் என்ன என்று சொல்ல மாட்டேன் என்கிறாயே.

- பிறகு சொல்கிறேன்.

- நேற்று நான் புத்தக சாலைக்குப் போய் அங்கிருந்து கவிதை நூல்களையெல்லாம் வாசித்துப் பார்த்தேன். நீ என்னுடன் பேசும் வார்த்தைகளைக்கொண்டு உன்னை யாரென்று அந்தப் புத்தகங்களில் தேடினேன். கண்டுபிடிக்க முடியவில்லை.

- நான் இன்னமும் என் கவிதைகளைப் பிரசுரிக்கவில்லை மோனிகா. அது இருக்கட்டும். நேற்று இரவு I was born to love you பாடலைக்

கேட்டு உன்னை நினைத்து நினைத்து உருகிக் கொண்டிருந்தேன்.

- அசடு. முட்டாள்.

- மோனிகா. உன் பெயரைப்போலவே உன் குரலும் போதையூட்டுகிறது. முடிவுறாமல் தொடர்ந்து கேட்டுக்கொண்டே இருக்கவேண்டும் போலிருக்கிறது. உறக்கத்திலும்கூட உன் குரல் என் செவிகளில் வயலினைப்போல் இழைந்து கொண்டிருக்கிறது. இவ்வளவு இனிமையான குரலுக்குரியவள் எவ்வளவு அழகாக இருக்க வேண்டுமென்று கற்பனை செய்து பார்க்கிறேன்.

- ம்ஹூம். அவ்வளவு அழகாக இருக்க மாட்டேன்.

- அதையும்தான் பார்த்து விடலாமே.

- சரி. எப்போது பார்க்கலாம். எங்கே பார்க்கலாம்.

- நான் இப்போது என் டெலிபோன் நாவலை எழுதிக்கொண்டிருக்கிறேன். விரைவில் முடித்து விடுவேன். முடிந்த பிறகு பார்க்கலாமா.

- ஓ யெஸ். பார்க்கலாம். சரி. நான் எங்கே எப்போது என்று உடனே கேட்டு விட்டதை வைத்து நீ என்னைத் தவறாக நினைத்து விட்டாயா.

- இல்லவே இல்லை. உன்னைப் பற்றி எனக்குத் தெரியாதா கண்ணே.

- என்ன இன்றைக்கு ரொம்பவும் ரொமாண்டிக் மூடில் இருக்கிறாற்போல் தெரிகிறது.

- உன்னோடு பேசும்போதெல்லாம் அப்படித்தான் ஆகிறது மோனிகா.

- இந்த அஜால்குஜால்தானே வேண்டாம் என்கிறது.

- கொஞ்ச நேரத்துக்கு முன்னே நடந்த வேடிக்கை தெரியுமா உனக்கு.

- என்ன.

- போனை எடுத்ததும் என் குரலைக் கேட்டவுடன் சொல்லுவாய் அல்லவா. இன்றும் அதைப் போல் ம் என்று கேட்டதும் நீதான் என்று நினைத்துக் கொண்டு மளமளவென்று பேச ஆரம்பித்துவிட்டேன். கடைசியில் பார்த்தால் அது உன் அறைத்

தோழியாம்.

- ஐயோ. அவளிடம் என்ன சொன்னாய்.

- நேற்று போனில் உன் சிரிப்பைக் கேட்டதும் வைரக் கற்களைக் கொட்டி இறைத்ததுபோல் தோன்றியது. அதை நேற்றே உன்னிடம் சொல்ல நினைத்து மறந்து போனேன். அதைச் சொன்னேன். நீயும் நானும் மனித வாடையற்ற மலைப் பள்ளத்தாக்கின் ஏரிக்கரையோரம் சூர்ய ஒளியில் நிர்வாணமாய் உலகை மறந்து கிடந்ததைப்போல் கண்ட கனவைப் பற்றிச் சொன்னேன்.

- ஐயோ. நான் தொலைந்தேன். அவள் குறும்புக்காரி. என்னைத் துளைத்து எடுத்துவிடுவாள். ஏன் இப்படியெல்லாம் பேசினாய்.

- நேற்று முழுதும் நான் தூங்கவில்லை.

- ஏன் எழுதிக் கொண்டிருந்தாயா.

- ம். தியானம் செய்து கொண்டிருந்தேன். ராஸ்கல். உன்னுடன் நேற்று பேசிக் கொண்டிருந்தபோது தொடர்பு அறுந்துவிட்டது. மீண்டும் மீண்டும் பேச முயன்று தோற்றுப் போனேன். உன்னோடு பேசாவிட்டால் அன்றைய இரவு என்னால் தூங்க முடியாமல் போய்விடுகிறது.

- அட அசடே. நான்தான் தொடர்பைத் துண்டித்தேன் என்பது கூடத் தெரியாதா உனக்கு.

- மை காட். நீயா துண்டித்தாய். இப்படிக்கூட உலகத்தில் யாராவது செய்வார்களா. இது மிகவும் கொடூரமாகத் தெரியவில்லையா உனக்கு.

- இனிமேல் இதுமாதிரி கொடூரங்களை நீ அடிக்கடி சந்திக்க வேண்டியிருக்கும்.

- அடப்பாவி. இப்படிப்பட்ட பெண்ணா நீ.

- நீ மட்டும் என்ன. என் தோழியிடம் போய் என்னைப் பற்றி என்னென்னவோ உளறியிருக்கிறாயே. நல்ல காலம். இன்னும் அவள் என்னிடம் அதுபற்றி எதுவும் கேட்கவில்லை.

- கேட்க மாட்டாள்.

- ஏன்
- நான் அவளிடம் எப்படி எதுவும் சொல்லவில்லையே.
- என்ன பேசவில்லையா. அப்படியானால் நீ நேற்று சொன்னதெல்லாம்...
- கப்ஸா. அவள் போனை எடுத்தது உண்மை. ஆனால் அந்த ம் உன்னுடைய ம் அல்ல. உன்னுடைய ம் யாருக்கு வரும்.
- நீ மட்டும் இப்போது என் எதிரில் இருந்தால் என்ன செய்வேன் தெரியுமா.
- என்ன செய்வாய்.
- அடித்துக் கிள்ளி தலையில் குட்டி...
- அடடா இதெல்லாம் தண்டனை அல்லவே. இதெல்லாம் என் செல்லக்குட்டி எனக்குத் தரும் பரிசாயிற்றே.
- பரிசா. இருக்கும் இருக்கும். நீ எப்போதாவது நேரில் வராமலா இருக்கப் போகிறாய். அப்போது உன்னைக் கவனித்துக் கொள்கிறேன். சரி. வேறென்ன எழுதினாய். என்ன படித்தாய்.
- சில தினங்களாகப் படிக்கவே முடியவில்லை.
- ஏன்.
- உடல் வேட்கை.
- ஓ... கமான் யார். அந்தக் கொஞ்ச நேர சந்தோஷம்தானா வாழ்க்கை. அதைத் தவிர வாழ்க்கையில் எவ்வளவோ விஷயங்கள் இல்லையா என்ன...
- என்ன கொஞ்ச நேரமா எனக்கெல்லாம் குறைந்தபட்சம் தொண்ணூறு நிமிடங்கள்.
- என்ன foreplayயெல்லாம் சேர்த்தா.
- ம்... after playயெல்லாம் சேர்த்து. மூஞ்சியைப் பாரேன். எதையும் சேர்க்காமல் வெறும் இயக்கம் மட்டுமே தொண்ணூறு நிமிடங்கள் குறைந்தபட்சம். நூற்று எண்பது நிமிடங்கள் அதிகபட்சம்.

- கடவுளே... நீ என்ன மனிதனா...

- மிருகம். இந்த விஷயத்தில் மட்டும்.

- ஏய். சீரியஸாகப் பேசு. நிஜமாகவா சொல்கிறாய். சலித்துப் போய்விடாது. என்ன எந்திரமா. இது என்ன பிஸ்டனா.

- இல்லை. இந்திய மத்திய தர வர்க்கத்தைப் போலவே நீயும் இந்த விஷயத்தைத் தவறாகவே புரிந்து வைத்திருக்கிறாய். அதனால்தான் நான் சமீப காலமாக எழுத்தை விட்டுவிட்டு செக்ஸாலஜிஸ்டாக மாறிவிடலாமா என்று யோசித்துக்கொண்டிருக்கிறேன். யாருக்குமே தெரியவில்லை. எத்தனையோ நிலைகள் இருக்கின்றன. முதலில் அவள் கீழே இருக்கிறாள். அவன் மேலே இருக்கிறான். அவள் கால்கள் அவன் தோள்களில். இப்படியாகச் சில நிமிடங்கள் இயக்கம். அவள் தனது உச்சத்தை அடையும்போது அவன் தனது உச்சத்தை நிறுத்திக் கொண்டு நிலையை மாற்றுகிறான். அவளை மேலே எழுப்பி தன்மீது அமரச் செய்கிறான். இப்போது அவன் இயங்குகிறான். அப்போதும் அவள் உச்சத்தை அடைகிறாள். அவன் விந்துவை அடக்கி நிலையை மாற்றுகிறான். இப்போது அவனும் அவளும் எதிரும் புதிருமாக அமர்ந்த நிலையில். அவள் அவன் கால்களின் மீது. உள் சுவரைக் கிழித்து வெளியே வருவதுபோல் டங் டங் டங்கென்று இடிகள். களைப்புறுகிறாள் அவள். அவனும் அவளும் சற்று நேரம் இளைப்பாறிவிட்டு சுத்தம் செய்து கொள்கிறார்கள். நீரின் குளிர்மையில் உறுப்பு சிறுத்து ஏதோ விளையாட்டுப் பொருளைப் போல் ஆகிவிடுகிறது. அவள் அதை சுவைக்கிறாள். வாயின் வலப்புறமும் இடப்புறமும் மாற்றி மாற்றிப் போட்டு சுவைக்கிறாள். கடிக்காதே கடிக்காதே என்று மன்றாடுகிறான். உறுப்பு நாகமாகச் சீறி எழுகிறது. முழுவதுமாய் அதை வாய்க்குள் இட்டுக் கொள்ள முயல்கிறாள். முனை அடித்தொண்டை வரை போக கணப்பொழுது மூச்சுவிடத் திணறி வாயை வெளியே எடுத்து உறுப்பை நாக்கினால் தாக்குகிறாள். பிறகு முனைப் பகுதியை மட்டும் உதடுகளால் மூடிச் சுவைக்கிறாள். திடீரென்று அவள் எதிர்பாராத விதமாய் அவளது தொடைகளுக்கு இடையே

முகத்தைப் புதைத்து அவள் உறுப்புக்குள் நாக்கை நுழைத்துத் துழாவுகிறான் அவன். கிளி மூக்காய் நீண்டிருக்கும் க்ளிடோரிஸை நாக்கால் வருடுகிறான். அவளை யானைக்கால் போடச் செய்து பின்பக்கமாய் உறுப்புக்குள் இயங்குகிறான். இப்படியே நிலைகளை மாற்றி மாற்றி இயங்குகிறான். இறுதியில் அவள் மீது படர்ந்து சீராக இயங்கி தன் ஜீவ நீரை அவளுக்குள் கலக்கச் செய்கிறான்.

- சீ. நீ ரொம்ப ரொம்ப மோசம். இவ்வளவுக்கும் அவளுக்கு சலிப்பாக இருக்காதா. எனக்கெல்லாம் துவக்கத்திலிருந்தே சீராக இயங்கி அவளும் அவனும் அதே கணத்தில் உச்சநிலை அடைந்து ஆசுவாசப்படுவதுதான் பிடிக்கும். அழகான கவிதையைப்போல மலரை ரசிப்பதுபோல் what can i do to make you love me what can i do to make you feel me பாடலைக் கேட்பதுபோல். சாக்ஸஃபோன் இழைவதுபோல். முதல் ஸ்பர்ஸத்தைப்போல். இன்னும் என்ன சொல்ல.
- ஓ.கே. நீ சொல்வதும் சரியாக இருக்கலாம் மோனிகா.
- ஏதாவது பேசு.
- என்ன பேச.
- ஏதாவது பேசு.
- இப்போது பேசுகிற மனநிலையில் இல்லையே நான்.
- அப்படியானால் எதற்கு என்னை அழைத்தாய்.
- உன்னுடன் பேச வேண்டும் போலிருந்தது.
- சரி பேசு.
- உன் குரலைக் கேட்டதும் நான் பேச நினைத்திருந்ததெல்லாம் மறந்துபோய் விட்டது.
- ஏதாவது செக்ஸ் ஜோக் சொல்லேன்.
- இப்போது எதுவும் தோன்றவில்லையே.
- யோசித்துப் பார். நீ ஏதாவது செக்ஸ் ஜோக் சொல்லி எனக்குக் கேட்க வேண்டும்போல் இருக்கிறது.

- சரி. பேசும்போது அதுவாக ஞாபகம் வரும். இப்போது உன்னைப் பற்றிச் சொல். நீ என்ன படிக்கிறாய்.

- எம்.காம்.

- உன் தோழிகளோடு செக்ஸ் விஷயம் பேசுவதுண்டா.

- ம்ஹூம்.

- ரியல்லி.

- ரியல்லி.

- ......

- எனக்குத் தெரிந்து பெண்கள் செக்ஸ் ஜோக் அடிப்பார்கள் என்று தோன்றவில்லை.

- எனக்குத் தெரிந்து பெண்கள் கடுமையான செக்ஸ் ஜோக்ஸ் அடித்துக் கேட்டிருக்கிறேன்.

- அப்படியா.

- அப்படித்தான். சரி. இப்போது ஞாபகத்திற்கு வரும் ஜோக்கை சொல்லவா.

- ம்.

- ஏழை விவசாயி தன் மாட்டையும் கன்றுக்குட்டியையும் சந்தையில் விற்பதற்காகக் கிளம்புகிறான். போகும் வழியில் கொள்ளையர் சிலர் அவன் ஆடைகளைக் களையச் செய்து நிர்வாணமாக மரத்தில் கட்டிப்போட்டுவிட்டு மாட்டை மட்டும் ஓட்டிக்கொண்டு கன்றுக்குட்டியை அவனிடமே விட்டுவிட்டுப் போய் விடுகிறார்கள். அந்தக் காட்டு வழியில் அன்று முழுவதும் யாரும் வரவில்லை. மறுநாள் அந்த வழியே வந்த அவனுடைய ஊர்வாசிகள் சிலர் அவன் கட்டுகளை அவிழ்த்து விடுகிறார்கள். கட்டை அவிழ்த்ததும் அவன் தன் அருகில் சாதுவாக நின்றுகொண்டிருந்த கன்றுக்குட்டியை அடி அடியென்று அடிக்க ஆரம்பிக்கிறான். ஏன் அடிக்கிறாய் பாவம் என்று கேட்ட ஊர்வாசிகளிடம் அவன் சொல்கிறான். நானும் சொல்லிக்கொண்டே இருக்கிறேன். நான் உன் அம்மா இல்லை நான் உன் அம்மா இல்லை என்று.

கேட்கவே மாட்டேன் என்றுவிட்டது.

- ......
- ஜோக் எப்படி.
- அப்படியெல்லாம் உண்டா.
- எப்படியெல்லாம்.
- அந்த ஜோக்கில் வருவது மாதிரி.
- நிச்சயம் உண்டு.
- ஆச்சரியமாக இருக்கிறது. நீ என் பக்கத்தில் இருந்து என் காதருகில் இந்த ஜோக்கை சொல்ல வேண்டும்போல் இருக்கிறது.
- பக்கத்தில் இல்லாவிட்டாலும் என்னால் இந்த போனிலேயே நீ உச்சக்கட்டத்தை அடையச் செய்துவிட முடியும்.
- எப்படி.
- இப்போது என்ன டிரெஸ் போட்டிருக்கிறாய்.
- மிடி. டீ ஷர்ட்.
- சுய மைதுனம் செய்திருக்கிறாயா.
- சீ என்ன பேசுகிறாய் நீ. நீ சொல்வதே என்னவென்று எனக்குப் புரியவில்லை.
- அதாவது நமக்கு இன்பம் வேண்டுமானால் அந்த இன்பத்தை நாமே சுயமாக அடைந்து கொள்வது.
- அதுதான் எப்படி என்று கேட்கிறேன்.
- நான் படிப்படியாக உனக்குச் சொல்கிறேன். இப்போது வீட்டில் யார் இருக்கிறார்கள்.
- யாரும் இல்லை. வருவதற்கு இன்னும் நீண்ட நேரமாகும்.
- வீட்டில் நீ எந்த இடத்தில் இருக்கிறாய்.
- ஹாலில்.
- ஜன்னல் திறந்திருக்கிறதா. எதிர் வீட்டிலிருந்து யாரும் பார்க்க

வாய்ப்பிருந்தால் மூடிவிடு.

- ம். மூடிவிட்டேன்.
- உன் டீ ஷர்ட்டைக் கழற்றி விடு.
- ஐயோ. இதெல்லாம் தப்பில்லையா.
- தப்பே இல்லை. கழற்றி விட்டாயா.
- ம்.
- ப்ராவையும் கழற்று.
- ம்.
- இப்போது கண்ணாடி முன்னே சென்று பார்.
- ம்.
- எப்படி இருக்கிறது.
- சொல்லத் தெரியவில்லை. ஆனால் ரொம்ப அழகு.
- இப்போது உன் மிடியைக் கழற்று.
- ஐயோ. எனக்குத் தயக்கமாக இருக்கிறது. இதெல்லாம் தப்பு என்று தோன்றுகிறது. நீ தப்பு இல்லை என்று சொல்வதுகூட ஏதோ என்னை ஏமாற்றுவதற்காகச் சொல்வது போல் இருக்கிறது.
- இதோ பார் ப்ரியா. உன்னை ஏமாற்றி எனக்கு ஆக வேண்டியது எதுவுமில்லை. உனக்கு இஷ்டம் இல்லாவிட்டால் விட்டு விடு.
- சே. நீ சட்டென்று கோபித்துக்கொண்டு விடுகிறாய். எனக்கு இஷ்டமில்லாமல் இல்லை. ஆனால் தப்போ என்று பயம். அதுதான்.
- திரும்பத் திரும்பச் சொல்கிறேன். தப்பில்லை.
- சரி சொல்.
- இப்போது உன் மிடியைக் கழற்று.
- ம்.
- இப்போது பேண்டீஸ்.

- ம்.

- போய் கண்ணாடியில் பார்.

- ம்.

- எப்படி இருக்கிறது.

- நான் இவ்வளவு அழகா என்று இன்றைக்குத்தான் தெரிந்தது.

- சரி. இப்போது உன் இடது கை நடுவிரலை உன் உறுப்புக்குள் விடு. இடது கை வசதியாக இல்லாவிட்டால் வலது கை நடுவிரல்.

- ம்.

- அதை நன்றாக உள்ளே விட்டு இயக்கு. மேலும் கீழும் அசை. துழாவு. வேகமாக இயக்கு.

- ம்.

- ஹலோ.

- ஹலோ.

- எங்கே போனை வைத்து விட்டாயோ என்று நினைத்தேன்.

- பக்கத்தில்தான் வைத்திருந்தேன். கையில் அதையும் வைத்துக் கொண்டு முடியவில்லை.

- தெரிகிறது. உன் சுவாசம் பாம்பு சீறுவதைப்போல் இருக்கிறது. எப்படி இருந்தது.

- வார்த்தையால் விவரிக்க முடியவில்லை. ஆறாக ஓடுகிறது. This is the greatest pleasure I have ever had yaar. ஆனால் நான் பெரிய பாவம் செய்துவிட்டது போலவும் தோன்றுகிறது.

- பாவமே இல்லை. உனக்கு மிகப்பெரிய சந்தோஷத்தைக் கொடுக்கக் கூடிய செயல் அதிலும் மற்றவர்களுக்கு எந்த இடையூறும் இல்லாமல் - அதிலென்ன பாவம் இருக்க முடியும். சரி. இப்போது ஆடைகளை அணிந்துகொள்.

- ம்... எனக்கு உன்னிடம் கேட்க வேண்டியது இருக்கிறது.

- கேள்.

- இதுபோல் மற்றவர்களும் செய்வார்களா.
- இதைச் செய்யாதவர்களே கிடையாது ப்ரியா.
- எனக்கு என்னவோ இதையெல்லாம் நீ என் பக்கத்தில் இருந்து செய்ய வேண்டும் போலிருக்கிறது.
- ஹலோ மை டியர் கவிதா.
- ஹாய் dad..
- என்ன திடீரென்று dad. என்கிறாய்.
- உன் குரல் என் அப்பாவின் குரலை அப்படியே ஒத்திருக் கிறது. நீ என் அப்பாவை அடிக்கடி ஞாபகப்படுத்துகிறாய்.
- அப்படியா. உன் அப்பா எங்கே இருக்கிறார். என்ன செய்கிறார்.
- அவரைப் பார்த்தே கிட்டத்தட்ட பதினெட்டு வருடங்கள் இருக்கும். பத்திரிகைகளில் அவர் புகைப்படங்களைப் பார்ப்பதோடு சரி.
- அப்படி என்ன ஆயிற்று.
- அப்போது நான் சிறு குழந்தை. அப்பா சினிமாத் துறையில் இருந்தார். திடீரென்று வீட்டுக்கு வருவதையே நிறுத்திவிட்டு துணை நடிகையோடு வாழ ஆரம்பித்துவிட்டார். அப்புறம் எங்கள் வீட்டுப் பக்கமே திரும்பவில்லை. இப்போது பெரிய தயாரிப்பாளர். அவர் வீட்டுக்குப்போய் என் திருமண அழைப்பிதழைக் கொடுத்துவிட்டு வந்தேன். அப்படியும் அவர் என் திருமணத்திற்குக்கூட வரவில்லை.
- உனக்குள் இவ்வளவு பெரிய சோகம் புதைந்திருப்பதைத் தெரிந்துகொள்ள வருத்தமாக இருக்கிறது. ஆச்சரியமாகவும் இருக்கிறது.
- ஏன் ஆச்சரியம்.
- எப்போதும் குதூகலம் ததும்பி வழியும் உன் பேச்சும் சிரிப்பும்.
- இன்னமும் நீ உயிரோடுதான் இருக்கிறாயா.
- ஏன் இன்னும் நான் இறைவன் திருவடி சேரவில்லை.

- மூஞ்சியைப் பார். உனக்கு கிண்டல் வேறா. இத்தனை நாள் எங்கே போய்த் தொலைந்தாய்.

- நாவலில் மூழ்கிவிட்டேன். மன்னித்து விடு கவிதா.

- உண்மையில் எனக்கு உன்னோடு பேசாமல் என்னவோ போல் ஆகிவிட்டது.

- ஏன் என்ன பிரச்னை.

- வாழ்வே சலிப்பாக இருக்கிறது. தினமும் எழுந்து குளித்து கணவன் முகத்தைப் பார்த்து அதே அலுவலகத்திற்குப்போய் அதே வேலைகளைச் செய்து அதே உணவை உண்டு அதே இடத்தில் தூங்கி இதையே எத்தனை நாட்கள் எத்தனை வருடங்கள் தொடர்ந்து செய்துகொண்டிருப்பது. சலிப்பாக இருக்கிறது. மாறுதலாக செத்துவிடலாம்போல் இருக்கிறது. இடையில் நீ வந்தாய். ஆறுதலாக உன் குரல். ஆறுதலாக உன் பேச்சு. சலிப்பூட்டும் தினசரி வாழ்விலிருந்து மாறுதலாக நீ. கனவாகவும் கற்பனையாகவும் புதிராகவும் மர்மமாகவும் நீ.

- எனக்கு என்ன சொல்வதென்றே தெரியவில்லை கவிதா.

- நீ ஒன்றும் சொல்ல வேண்டாம். பேசுவதைக் கேள். நேற்று என் தோழியிடம்கூட உன்னைப் பற்றித்தான் புலம்பிக்கொண்டிருந்தேன். அவள் இது எதன் ஆரம்பம் என்று கேட்கிறாள். நான் சொன்னேன். நீ என் அப்பாவை ஞாபகப்படுத்திக்கொண்டிருப்பதாக. ஆனால் என் கணவன் என் மீது இயங்கும்போது என் தந்தையின் நிழலுருவமும் உன் குரலும் ஞாபகம் வருவதை நான் அவளிடம் இன்னமும் சொல்லவில்லை.

- ......

- என்ன பேச்சு மூச்சையே காணோம்.

- எனக்கு என்னவோ சட்டென்று பதில் சொல்லவே தோன்றவில்லை. ஆனால் பேசியதெல்லாம் காதுகளில் ரீங்கரித்துக்கொண்டே இருக்கும்.

- எனக்கு உன்னைப் பார்க்க வேண்டும். உன் முகம்

எப்படியிருக்கிறது. உன் கைகள் தோள்கள் கண்கள் விரல்கள் முடிக்கற்றை உன் உயரம் உன் நடை பேசும்போது உன் பாவனை எல்லாவற்றையும் எனக்குப் பார்க்க வேண்டும்.

- நான் வெறும் குரல்தான் கவிதா.

20

- தமிழில் நாவல்கள் ஏன் உலகத் தரத்தில் எழுதப்படவில்லை.
- பட்டாக்கத்தி வாளுறையில் பென்சில் சீவும் பேனாக் கத்தியைப் போட்டுக்கொண்டிருப்பவர்களால் எப்படி வாள் சண்டை போட முடியும்.
- உங்கள் கதைகள் ஆபாசமாக இருப்பதாகச் சொல்லப்படும் குற்றச்சாட்டுக்கு உங்கள் பதில்.
- மைக்கேல் ஏஞ்சலோவின் ஓவியத்தைப் பார்த்த ஒருவன் சொன்னானாம்... ஏன்யா இவ்வளவு வரையத் தெரிந்த அந்த ஆளுக்கு கோமணமோ ஜட்டியோ வரையத் தெரியாமப் போச்சு. புடுக்கெல்லாம் தெரியுதே.
- நான் எழுத்தாளன் அல்ல கவிஞன் அல்ல என்று பல சமயங்களில் சொல்லியிருக்கிறீர்கள். காரணம் என்ன.
- ஆரம்பத்தில் இசையைத்தான் தேர்ந்தெடுத்தேன். பியானோ கலைஞனாக ஆக வேண்டும் என்பதே என் விருப்பமாக இருந்தது. ஆனால் பலமுறை நீனாவிடம் வற்புறுத்தியும் இசைக் கலைஞனை உருவாக்கும் வரலாற்றுக் கடமை தனக்கு இருப்பதை உணராத மண்டுவாகவும் இது குறித்து அவளைக் கேட்கும் போதெல்லாம் பதில்கூடச் சொல்லாமல் என்னை முறைத்துவிட்டுப் போகும் மூர்க்க குணம் படைத்தவளாகவும் இருந்ததால் என் ஆசை கை கூடாததாயிற்று. பிறகு என் பதினெட்டாவது வயதில் நீனாவின் பழைய வாடிக்கையாளன் கொடுத்த வயலின் எனது கனவுகளை வெளிப்படுத்தும் சாதனமாக இருந்தது. ஆனால் அப்போது நீனாவுக்கு வயதாகி தொழிலுக்கு லாயக்கற்றவளாகிக் கொண்டு இருந்ததால் வீட்டை விட்டு எரிச்சலுடன் கிளம்பும் வாடிக்கையாளர்கள் காறித் துப்பும் எச்சில்

வீட்டிற்கு வெளியே அமர்ந்து வயலின் இழைகளில் எனது சூன்யவெளிக் கனவுகளுக்கு வடிவம் கொடுத்துக்கொண்டிருக்கும் என்மீது பட்டுத் தெறித்ததால் வயலின் பத்திரிகைத் துணுக்குகளாக மாறிப் போனது.

- பிறகு நான் வண்ணத்துப்பூச்சி சேகரிப்பாளனாக மாற விரும்பினேன். ஆனால் ஏற்கெனவே நபகோவ் வேறு அந்தத் துறையில் இருந்ததால் நான் வேறு துறையைத் தேர்ந்தெடுக்க வேண்டியதாயிற்று. அப்படித்தான் நான் ஆர்னிதாலஜிஸ்டாக மாறினேன்.

- சிறு பிராயத்திலிருந்தே எனக்குப் பறவைகள்மீது தணியாத ஆர்வமிருந்தது. அதனால் ஆர்னிதாலஜி எனக்குப் புதிதாக இல்லை.

- ஆர்னிதாலஜிஸ்டாக இருந்தும் ஏன் பறவைகளை அழிப்பதில் ஈடுபட்டீர்கள்.

- அழிப்பது உருவாக்குவதெல்லாம் என் வேலை இல்லை. அந்தச் சம்பவம் நடந்தபோது நான் ஹரிகேவில் இருந்தேன். பறவைகள் பற்றிய ஆய்வுக்காக. அப்போது நான் இந்தியா முழுவதும் சுற்றிக்கொண்டிருந்தேன். அடிப்படையில் நான் மலையேறியாகவும் யாத்ரிகனாகவும் இருந்ததால் இது எனக்கு லகுவாக இருந்தது. ஹரிகேவில் சைபீரியாவிலிருந்து வந்த sandpiper linnet bunting பறவைகளின் சங்கீதத்தை ஒலிப்பதிவு நாடாக்களில் பதிவு செய்து வைத்திருக்கிறேன். அப்போதுதான் நான் கைது செய்யப்பட்டேன். ஆர்னிதால ஜிஸ்ட் என்றால் தயிர் வடையாகத்தான் இருக்க வேண்டுமா என்ன. பறவைகளைத் தின்பது என் இயல்பு. சிறு பிராயத்திலிருந்தே நான் பறவைகளைத் தின்று வந்திருக்கிறேன். linnetஐப் பார்க்கும்போது என் நாக்கில் எச்சில் ஊறுகிறது. அதை அடித்து சுட்டு உப்பும் காரமும் கலந்து சாப்பிடும் ஆர்வத்தை என்னால் அடக்கவே முடிந்ததில்லை. சுங்குத்தானால் linnetஐ அடித்து சுட்டுச் சாப்பிட்டேன். warbles european roller என்று எந்த வகையையும் விடமாட்டேன். அவற்றின் வாழ்க்கையை எந்த அளவுக்கு நுண்மையாகக் கவனித்தேனோ அதே அளவுக்கு

அவைகளைச் சாப்பிடுவதிலும் ஆர்வம்கொண்டிருந்தேன். தவறா.

- எந்த அரிதான பறவைகளைப் பார்த்தாலும் அதைச் சுவைத்துப் பார்த்துவிட வேண்டும் என்று எனக்குத் தோன்றுகிறது. ஆர்னிதாலஜிஸ்டுகளுக்கு அப்படித் தோன்றக் கூடாதாம். கைது செய்து விட்டார்கள்.

பிரபஞ்ச சூனியம் என்பதை விளக்க முடியுமா.

- அதற்கான காலம் முக்கியமானது. பிறர் குறுக்கீடு எதுவும் இருக்கக் கூடாது. ஆடைகளைக் களைந்துவிட்டு நிர்வாணமாகு. கையில் பாலியல் தொடர்பான புத்தகங்களோ புகைப்படங்களோ எதுவும் இருக்கக் கூடாது. ஆரம்பத்தில் 54 நிமிடங்களுக்கு அசைவுகளில் வேகம் இருக்கக் கூடாது. திரவம் வெளிவந்து விடும் போலிருந்தால் அசைவுகளை நிறுத்திவிட வேண்டும். மனதை அதன் போக்கில் விட வேண்டும். வெறிபிடித்த நாயின் வேகமாய் மாறும் மனம். தெரிந்த பெண்களையெல்லாம் கண் முன்னே கொண்டுவர வேண்டும். அண்ணி. சித்தி. உயிருக்கு உயிரான சிநேகிதியின் மகள். கோயில் சிலை. செய்தி வாசிக்கும் பெண். நடிகை. அரிச்சுவடி கற்பித்த ஆசிரியையின் நிழலுரு. வீட்டுக் கதவைத் தட்டி சோப்புப் பவுடர் விளம்பரத்தை ஒப்பித்த பெண். வேலைக்காரி. அண்ணன்மாரே சகோதரிகளே என் தந்தை ரயில் விபத்தில் கால்களை இழந்தவர். எங்கள் சிறு வயதிலேயே இறந்து விட்டார் அம்மாவும் நானும் என் தம்பி தங்கைகளும் பட்டினி கிடக்கிறோம் எங்களுக்கு ஏதாகிலும் உங்களால் இயன்ற அளவு உதவி செய்யுங்கள் சகோதரிகளே அண்ணன்மாரே என்று கெஞ்சும் பதினெட்டு வயதுப் பெண். உன் சக பெண் எழுத்தாளர். இறுதியில் நீ உணர்வது பிரபஞ்ச சூன்யம்.

- வலி உடல் வாதை சிலிர்ப்பு நிணம் குருதி சீழ் சர்ப்பம் யோனி என்ற வார்த்தைகளையும் அதன் கிளை வார்த்தைகளையும் மட்டுமே பயன்படுத்தி நீங்கள் எழுதிய தலைப்பற்ற முந்தைய நாவலைப் பற்றி விமர்சித்தபோது உங்களுக்குத் தேவை சரியான வலி நிவாரணிதான் என்று விமர்சகர் தேவசர்மா குறிப்பிட்டிருக்கிறார்.

- வான் இயற்பியலுக்கும் மானுட வாழ்க்கைக்கும் உள்ள உறவு பற்றிய எனது ஆய்வு முடிவடையும் தருணத்தில் உனக்கு இதற்கான பதில் கிடைக்கும். லடாக்கின் தென் கிழக்கே 100 கிலோமீட்டர் தொலைவில் இருக்கும் ஆன்லே மலை உச்சியிலிருந்து நான் எனது ஆய்வைத் துவங்க இருக்கிறேன்.

- முக்கியமாக வால் நட்சத்திரங்கள். எனக்குப் பிரியமான வால் நட்சத்திரம் ஹாலி பாப். சமீபத்தில் அது பூமிக்கு வெகு அருகில் வந்தபோது நான் சாப்பிடவும் மறந்து போனேன்.

- உங்கள் நேநோ கற்பனையானவளா.

- nano mi vida. nano mi nina.. நட்சத்திரங்களின் எண்ணிக்கையை எழுதிப் பார்த்தால் அதில் நீ எத்தனை பூஜ்யங்களைச் சேர்க்க வேண்டியிருக்கும். அவ்வளவு வால் நட்சத்திரங்கள் வியாழன் மற்றும் சனி கிரகங்களின் ஈர்ப்பு விசையால் ஈர்க்கப்படுகின்றன. சில நட்சத்திரக் கருக்கள் கலைந்து விழுந்து கொண்டிருக்கின்றன. சில வால் நட்சத்திரங்கள் கிரகங்களின் மீதே மோதி விடுகின்றன. கிரகங்களின் சுற்றுப்பாதைக்கு அப்பாலிருந்து சில வால் நட்சத்திரங்கள் வழி தவறி வந்து வெளியை நிறைக்கின்றன. நட்சத்திரத்திலிருந்து வெளிப்படும் மூலக் கூறுகளையும் அணுக்களையும் அயனிகளையும் வாலாக மாற்றுகிறதல்லவா. அதுவே என் தாய் பூமி. தாய் மொழி.

- பெண் குறியின்மீது உங்களுக்கு என்ன அவ்வளவு கோபம். உங்கள் எழுத்துக்களில் பெண் குறியை அடி அடியென்று அடித்துத் துவைத்து விடுகிறீர்களே ஏன்.

- என் வாழ்வைப் புரிந்துகொள்ள வேண்டுமானால் என் எழுத்தைப் பார்க்காதே. என் எழுத்தைப் புரிந்துகொள்ள வேண்டுமானால் என் வாழ்க்கையைப் பார்க்காதே. என் எழுத்து வேறு. என் வாழ்க்கை வேறு.

- பெண் குறியின் மீது எனக்குக் கோபமா. I think the most beautiful delightful and wonderful thing in the world is CUNT it is egg it is aleph it is eye it is divine it is abyss = bottomless chasm deep gorge immeasurable depth

abyss of despair primal chaos hiatus it is the abyss of my soul it is my magic land. அந்த மந்திர ஜால உலகின் சித்திரக் குள்ளர்களுக்கும் எனக்கும் கடும் சண்டை நடந்திருக்கிறது. தாந்த்ரீக சக்திகொண்ட என் பூஜ்ய வளையங்களால் அவர்களை நான் வீழ்த்தியிருக்கிறேன்.

- பூனைக் குட்டிகளை யாராவது வெறுக்க முடியுமா என்ன. கறுப்புப் பூனைக்குட்டி வெள்ளைப் பூனைக்குட்டி. பழுப்புப் பூனைக்குட்டி. பூனைக்குட்டிகளை நான் ஆராதிக்கிறேன். அவைகளை முத்தமிடுகிறேன். Pussies are delicious

21

இதுவரையிலான இந்தப் பக்கங்களை வாசித்துப் பார்த்துவிட்டு கதை எங்கே என்று கேட்டாள் வாசுகி. கதை சொல்ல வேண்டு மானால் கதாபாத்திரங்கள் வேண்டும். கதாபாத்திரங்கள் உருவாக்கப்பட வேண்டும். யார் உருவாக்குவது. நான் கடவுளற்ற உலகத்தில் வாழ்ந்துகொண்டிருக்கிறேன். நியாயமற்ற உலகத்தில் வாழ்ந்து கொண்டிருக்கிறேன். என் சந்தோஷமென்ன என்று எனக்குத் தெரியாது. என் துக்கமென்ன என்று எனக்குத் தெரியாது. நான் யார் என்றுகூட எனக்குத் தெரியாது. சூர்யா சொல்வான் பருந்துகளால் தூக்கிச் செல்லப்பட்ட தன் கோழிக் குஞ்சுகளைப் பற்றி. 27 தினங்கள் முட்டைகளை அடைகாத்து முட்டை ஓட்டை தன் அலகினால் லேசாக உடைத்து குஞ்சு முட்டையிலிருந்து வெளியேற வழி செய்து குஞ்சுகளைத் தன் வெதுவெதுப்பான சிறகுகளுக்குள் வைத்துப் பாதுகாத்து தானியங்களைத் தின்பதற்குக் கற்றுக் கொடுத்து எல்லாம் ஒழுங்கான லயத்துடன் நடந்து கொண்டிருக்கும்போதே ஆகாயத்திலிருந்து சரேலெனப் பாய்ந்து குஞ்சுகளைத் தன் காலிடுக்கில் எடுத்துச் செல்லும் பருந்துகளுக்கு மிஞ்சிப் பிழைக்கும் குஞ்சுகள் ஒன்பதுகூட இல்லை என்றால் இந்த உலகில் ஒழுங்கு எங்கே இருக்கிறது.

கடல் ஆமை தொண்ணூறு முட்டையிடுகிறது. முட்டைகளிலிருந்து ஆமைக் குஞ்சுகள் வெளியேறி கடலுக்குள் செல்வதற்குள் பெரும்பாலான குஞ்சுகளைப் பறவைகள் கொத்திக்கொண்டு போய் விடுகின்றன. மீதிக் குஞ்சுகள் மணல் சூட்டில் செத்து விடுகின்றன. அந்தத் தொண்ணூறு குஞ்சுகளில் கடலில் சேர்பவை வெறும் பதினெட்டுதான்.

பெண் சுவர்க்கோழி ச்சிட்டிக் ச்சிட்டிக் என்று சப்தமிட்டவுடன் எங்கேயோ உட்கார்ந்திருக்கும் ஆண் சுவர்க்கோழி பறந்தோடி வந்து

பெண் துணையுடன் புணர்ச்சியில் ஈடுபடுகிறது. புணர்ச்சி முடிந்ததும் செத்து விடுகிறது.

அந்த ஆண் சுவர்க்கோழி பற்றி கொஞ்சம் யோசித்துப் பார். அதற்குத் தெரியுமா கொஞ்ச நேரத்தில் பெண் சுவர்க்கோழியின் ச்சிட்டிக் ச்சிட்டிக் வரப் போகிறதென்று. அந்தச் சப்தம் வந்தால் ஆண் சுவர்க்கோழியால் சப்தம் வந்த திக்கை நோக்கிப் பறந்து செல்லாமல் இருக்க முடியுமா. சப்தம் வந்ததும் பறந்து போவதுதான் அதன் இயல்பு. பிறகு புணர்ச்சி. புணர்ச்சிக்குப் பின் மரணம்.

இந்த உலகில் நியாயம் எங்கே இருக்கிறது. ஒழுங்கு எங்கே இருக்கிறது. இந்தச் சூழலில் நான் எப்படி என் கதாபாத்திரத்தை உருவாக்க முடியும். கதாபாத்திரத்தையே உருவாக்க முடியாத போது கதையை எப்படிச் சொல்ல முடியும்.

முடியும் என்று சொன்னாள் வாசுகி.

எப்படி என்றாள் நேநோ.

சொல்லமாட்டேன் நீயாகக் கண்டுபிடி ஹெஹ்ஹே என்று வலிப்பு காண்பித்துவிட்டு இடத்தைவிட்டு நகர்ந்தாள் வாசுகி.

22

பூஜ்யத்தின் கதையைப் படித்துக்கொண்டிருந்தான் அவன்.

சூன்யத்தின் குறியீடு.

அது மட்டுமா.

ஆண் பெண்ணைப் பார்த்து தனது ஆள்காட்டி விரலையும் கட்டை விரலையும் வட்டமாக இணைத்துக் காண்பித்தால் என்ன அர்த்தம்.

யோனி.

அதே பொருள் சூன்யமாகவும் சிருஷ்டியின் குறியீடாகவும் இருப்பது எப்படி.

சிருஷ்டியும் சூன்யமும் வேறு வேறு இல்லையா.

23

டியர் சூர்யா

கோபம் வெறுப்பு கிண்டல் வெறி போன்றவற்றை வெளிப் படுத்த எந்தவிதக் கூச்சமும் எழாதபோது அன்பை வெளிப்படுத்த நினைக்கும்போது மட்டும் வெட்கம் பிடுங்கித் தின்கிறது. ஒருவேளை அன்புதான் மிகப்பெரிய மௌனம் போலும். என் கதை பற்றிய உன் எதிர்வினை சூன்யத்தில் முட்டி மோதி மனிதனுக்கு வர எழுத்தை அடைவதுதான் என் கதைக்களம். நீ அதை உன் வாழ்வுடன் இணைத்து வாசித்து விட்டாய். என் கதையில் உன் விமர்சனத்தில் உள்ள தீவிரம் இல்லையோ எனத் தோன்றியது. திரும்பவும் வாசித்துப் பார்க்க என்னிடம் பிரதி இல்லை. உன் விமர்சனக் கடிதத்தின் ஒன்பது வார்த்தைகள் என் முழுக் கதையையும்விட நன்றாக இருக்கும்போது என் கதை எதற்கு என்றும் யோசித்தேன். கடைசியில் I am woman of understatements என்பதும் நம் காலகட்டத்தில் நம்முடைய உணர்ச்சி மயமான கதறலையோ கேவலையோ கேட்க ஆளில்லை என்பதும் புலப்பட்டபோதுதான் சுய விமர்சனமும் சுய கிண்டலும் கொண்ட undertone போதும் என்று தோன்றியது. அதுவே கதையின் இருப்பையும் அர்த்தபூர்வமாக்கியது. உண்மையில் என் நாவலுக்கான இந்தக் குறிப்புகள் அர்த்தமிழக்கும்போதுதான் நம் வாழ்வு மேன்மை கொள்ளும்.

அன்புடன்

நேநோ

24

நதி தன் போக்கில் ஓடிக்கொண்டிருந்தது. நதிக்கரைச் சுடுகாட்டில் முந்தின இரவில் வெந்து தணிந்த மனித உடலின் நீறு பூத்த சாம்பல். தலையைத் தலையை ஆட்டி கரைந்து கொண்டிருந்தது தனித்த காகம். கருவேல மரங்களுக்கிடையே கிடக்கும் பாதை. ஜால வித்தைக்காரனாய் சட்டையை உரித்துப் போட்டுவிட்டு புற்றுக்குள் நுழையும் சர்ப்பம். தனிமை தந்த துணிவில் ஆடைகளை முற்றாகக் களைந்துவிட்டு காமம் பொங்கும் உடலை லாகவமாய் நீட்டி நீரைப் பிளந்தபடி சரேலெனப் பாய்கிறாள் அவள். சற்று தூரம் சென்று விலுக்கென்று தலையை நீட்டிப் பார்க்கிறாள். வாலைச் சுழற்றியபடி திரும்பவும் கடல்கன்னியாய் பிரயத்தனம் ஏதுமின்றித் திரும்புகிறாள். நீரின் போக்குக்கு எதிரே நீஞ்சும் பரவசம் மீதூற கைகளைச் சுழற்றிப் போடுகிறாள். கரை சேர்ந்த அவளைச் சிதையிலிருந்து எழுந்த சடலம் காமம் கொண்டு தீண்டுகிறது. புத்தக அடுக்குகளின் எழுத்துக்களிடையே புகுந்து புகுந்து நிழலுருவாய் மறைகிறாள் நேநோ.

Star more massive than sun would be compressed to volume with radius of 27 miles it is possible to think of still greater mass and still greater compression so that gravity would squeeze the matter out of existence to form black holes...

ஒமேகா ஆஃல்பாவாக மாறுகிறது அல்லது பீட்டாவாக அல்லது காமாவாக அல்லது முடிவு என்பது யாது எழுதுவது எது algunos aspectos del cuento முனியாண்டியின் ஒமேகாவை நேநோ தொடர்கிறாள் நேநோவின் ஒமேகாவை ஆதி ஆதியின் ஒமேகாவை க்ரோமா தொடர்கிறாள்

27

ஹென்றி மில்லரைப்போல் நாடோடிக் கலைஞனாக மாற விரும்பி பிச்சைக்காரனைப்போல் நின்றுகொண்டிருந்த தன் நண்பனிடம் சூர்யா சொன்னான் உன்னையும் இந்த நாட்டின் கோடிக்கணக்கான மகாஜனங்களையும் ஹென்றி மில்லராக ஆக்கும் பொறுப்பை அரசாங்கமே ஏற்றுக் கொண்டிருக்கிறது என்பதால் அது குறித்து நீ அதிகம் கவலை கொள்ள வேண்டியதில்லை. இந்த நாட்டின் ஹென்றி மில்லராக நீ ஆக வேண்டுமானால் ஹெலிகாப்டரோ அல்லது குதிரையோதான் வாங்க வேண்டும். பியானோ வாசிக்கத் தெரிந்திருப்பதும் நன்று என்று சொல்லிய சூர்யா பிச்சைக்காரர்களைத் தீவிர பிரயாசையுடன் தவிர்த்துக் கொண்டிருந்தான். என்னதான் தவிர்க்க நினைத்து ஏதோ சந்தர்ப்பத்தில் புறநகர்ப் பகுதியில் தங்க நேரிட்டபோது அவனுக்கு அது சாத்தியமற்றுப் போனது. மத்திய தர வர்க்கத்தின் அவலக் குறியீடாக மாறிப் போயிருந்த மின்சார ரயிலைக்கண்டு மிரண்டு போனான் சூர்யா. தண்டவாளங்கள் அவனைப் பயமுறுத்தின. தூறல் விழுந்து கொண்டிருந்த அந்திப் பொழுதில் அந்த நடுத்தர வயதுக்காரர் தண்டவாளத்தைக் கடந்துகொண்டிருந்தபோது அருகிலிருந்த புதரிலிருந்து நல்ல பாம்பு அவரை நோக்கி சீறிக் கொண்டு வர உயிரைக் கையில் பிடித்துக்கொண்டு ஓடிய அவரைப் பக்கத்துத் தண்டவாளத்தில் வந்துகொண்டிருந்த ரயில் துண்டமாக்கியது.

நெருக்கமான சிநேகிதரின் திருமண வைபவத்துக்காக திருநெல் வேலி வந்த யமன் அங்கே அத்திருமண வீட்டு வாசலில் நின்றுகொண்டிருந்த எலியைப் பார்த்து மூக்கின் மேல் விரலை வைத்தபடி யோசித்தான். இந்த எலி இந்த நேரத்தில் இங்கே எப்படி என முணுமுணுத்தபடி உள்ளே நுழைந்தான். யமன் தன்னைப் பார்த்துவிட்டு ஏதோ முணுமுணுத்தபடி செல்வதைக் கண்ட எலி

பயந்துபோய் யமன் வெளியே வருவதற்குள் நாம் இந்த இடத்தை விட்டு அகன்றுவிட வேண்டும் என்று நினைக்க அவ்வமயம் பார்த்து அந்தப் பக்கமாய் பறந்து வந்துகொண்டிருந்த பருந்திடம் விஷயத்தை எடுத்துச் சொல்லி என்னை எங்கேயாவது எடுத்துக்கொண்டுபோய் விட்டாயானால் பெரிதும் உபகாரமாக இருக்கும் என்றது. நான் இப்போது ஜவ்வாது மலைக்குப் பக்கத்திலே இருக்கும் தொங்கு மலைக்குப் போகிறேன் அங்கே உன்னை விட்டுவிடவா எனக் கேட்க இந்த இடத்தை விட்டு ஓடினால் போதும் என நினைத்த எலியும் அப்படியே செய் என்றது. தான் சொன்னபடி எலியைத் தொங்குமலையில் போட்டுவிட்டுச் சென்றது பருந்து. இங்கே திருநெல்வேலியில் திருமண வீட்டிலிருந்து அவசர அவசரமாக வெளியே வந்த யமன் எலி அங்கே இல்லாததைக் கண்டு ஆசுவாசமடைந்து அவனும் தொங்குமலை வந்து சேர்ந்தான். அங்கே அந்த எலி சாவகாசமாக எதையோ கொறித்துக்கொண்டிருப்பதைப் பார்த்துவிட்டு நல்லதாயிற்று உன்னுடைய உயிர் இதோ இந்தத் தொங்குமலையில் இந்த நிமிடம் போகவேண்டும் என்பதாய் கணிக்கப்பட்டிருக்கும்போது நீ எப்படி அங்கே திருநெல்வேலியில் மேய்ந்து கொண்டிருக்கிறாய் என்று நினைத்துத்தான் ஆச்சர்யப்பட்டேன் நல்ல காலம் நீ குறிப்பிட்ட நேரத்தில் இங்கே ஆஜராகிவிட்டதால் என் பிரச்னை தீர்ந்தது என்று சொல்லிக்கொண்டே தன் பாசக்கயிறை அவ்வெலி மீது வீசினான். இந்தக் கதையின் மூலம் நீ அறிந்து கொள்ளும் நீதியாவது:

Fuck Yama Fuck You. Fuck Universe. Fuck Big Bang explosion. Fuck all

சகலவித பிச்சைக்காரர்களையும் மின்சார ரயிலில் அவனுக்குக் காண நேரிட்டது. தீர்க்கதரிசியின் பெயரைச் சொல்லி ஸ்தோத்திரப் பாடலைப் பாடிச் செல்லும் கண்பார்வையற்ற பிச்சைக்காரன். உடல் ஊனமுற்ற பிச்சைக்காரன். ஆர்மோனியத்தைக் கழுத்தில் மாட்டியபடி பழைய சினிமாப் பாடல்களை அடித் தொண்டையில் பாடிக் கொண்டு வரும் பிச்சைக்காரன். பச்சிளம் சிசுவை தோளில் போட்டுக் கொண்டு வரும் பிச்சைக்காரி. இவர்களைத் தவிர ஓட்டுப் போடாதே புரட்சி செய் என்று பிரசங்கம் செய்யும் இளைஞன். தீர்க்கதரிசியின் மறுவருகையை உருக்கமான குரலில் அறிவிக்கும் பிரசங்கி. ஒம்போது பளம் ஒம்போது

ரூவா என்பதை எண்ணற்ற தடவைகள் திருப்பித் திருப்பிக் கூவியபடி பெரிய சாத்துக்குடிப் பழக்கூடையைச் சுமந்து செல்லும் பெண். எலுமிச்சம் பழ சைசில் இருக்கும் ஆப்பிள் பழங்களை காஷ்மீர் ஆப்பிள் காஷ்மீர் ஆப்பிள் என்று கத்தியபடி விற்கும் கறுத்த சிறுவன். முள்வாங்கி நகவெட்டி காது குரும்பை ரேஷன் கார்டு கவர் ஐடென்டி கார்டு கவர் எலெக்ட்ரிசிடி கார்டு கவர் பால்கார்டு கவர் சீசன் டிக்கெட் கவர் என்று ராகத்துடன் கூவிக்கொண்டு வரும் கண் பார்வையற்றவன். ஸ்வெட்டர் பின்னும் ஊசி அளவுக்குத் தடிமனான நீண்ட ஊசியை நாக்கில் குத்தியிருந்த கறுத்த உடம்புக்காரன் தன் உடம்பு முழுதும் மஞ்சளையும் சாம்பலையும் பூசியிருந்தான். இடுப்பில் மஞ்சள் துண்டு. துண்டின் ஓரம் முழுதும் ஓம் முருகா எழுதியிருந்தது. நாக்கு நுனியிலிருந்து எச்சில் வழிந்து ஒழுகிக்கொண்டிருந்தது. அருகே வந்து உண்டியலைக் குலுக்கிய அவனைத் தவிர்த்துவிட்டு முன்னால் நகர்ந்தான் சூர்யா. ரயில் நிலைய வாசலில் நான்கைந்து கண் பார்வையற்றவர்கள் சிறிய ஒலிபெருக்கி டோலக் ஆர்மோனியம் அகார்டியன் என்று வைத்துக்கொண்டு சோகமான குரலில் முப்பத்தாறு ஆண்டுகளுக்கு முன்பு வெளிவந்த சினிமாப் பாடல்களைப் பாடிக் கொண்டிருந்தார்கள். அப்போதைய இசையமைப்பாளர்கள் இந்தக் கண்பார்வையற்ற பாடகர்களுக்காகவே இசையமைத்திருப்பார்களோ என்று அவனுக்குத் தோன்றியது. ரயில் நிலையத்திற்கு வெளியே இருக்கும் இவர்களைத் தவிர்க்க முடியாதென்றாலும் குறைந்தபட்சம் ரயிலுக்குள் வரும் பிச்சைக்காரர்களையும் விற்பனையாளர்களையும் பிரசங்கிகளையுமாவது தவிர்த்து விடலாம் என எண்ணிய சூர்யா முதல் வகுப்பில் பயணம் செய்ய ஆரம்பித்தான்.

28

முனியாண்டி ருவாந்தாவில் இருந்தபோது உலகத்தின் வரலாறு என்ற பெயரில் நாவல் எழுதும் பொருட்டு அவன் எழுதி வைத்திருந்த குறிப்புகளையும் சேகரித்து வைத்திருந்த கத்தரிக்கப்பட்ட செய்திகளையும் அவனது தோழி நமிஸிஷிரு எனக்குத் தபாலில் அனுப்பி வைத்திருந்தாள். பெரிய சாக்கு மூட்டை அளவுக்கு வரக்கூடிய அக்குறிப்புகளை வைத்துக் கொண்டு என்ன செய்வதென்று புரியாமல் குழம்பிய நான் அதிலிருந்து முக்கிய மானதாக எனக்குத் தோன்றியவற்றை மட்டும் திரட்டி எடுத்தேன். எல்லாவற்றையம் வாசித்துப் பார்த்ததில் கலாச்சாரம் எதிர்க் கலாச்சாரம் என்கிற துருவங்களுக்கிடையே அவன் ஊடாடிக்கொண்டிருந்ததை என்னால் அனுமானிக்க முடிந்தது. கமேர் ரூஜ் இயக்கத்தினால் முப்பத்தாறு மாதங்களில் பதினெட்டு லட்சம் கம்போடியர்கள் கொல்லப்பட்டதையும் நியாயப்படுத்துகிறான். அதே சமயத்தில் பதினெட்டு லட்சம் ஆண்டுகளுக்கு முந்திய மனிதனின் மூதாதையான homo habilis இன் படிமப் பதிவுகள் தான்ஸானியாவில் பாறைகளுக்குள்ளேயிருந்து கிடைத்திருப்பது பற்றியும் எழுதுகிறான். இப்படியே மலைமலையாய் குவிந்து கிடக்கும் அவனது குறிப்புகளிலிருந்து சிலவற்றை மட்டும் இங்கே தொகுத்திருக்கிறேன்.

கி.பி. ஒன்பதாம் நூற்றாண்டு செத்த மூளையும் உத்தமத் தமிழ் எழுத்தாளனும் தமது மூதாதையரின் வாழ்வை எழுத்தில் பிடிக்க முயல்வதாகவும் வேர்களைத் தேடிச் செல்வதாகவும் மண்ணைப் பற்றி எழுதுவதாகவும் பினாத்துகிறார்கள். நமது மூதாதையரைத் தேட ஆரம்பித்தால் அந்தப் பயணம் நம்மை பதினெட்டு லட்சம் ஆண்டுகளுக்குப் பின்னே கொண்டுபோய் நிறுத்தும் என்பதை அவர்கள் அறிவார்களா. நமது உடலின் ஆதி வடிவம் நேர்க்குத்தாக இல்லாமல் படுக்கையாகக் கிடந்தபோது வாழ்ந்த zinjanthropusஇன் தாடைப்

பற்களிடம் கொண்டுபோய்விடும் என்பது இவர்களுக்குத் தெரியுமா. இந்த மனித வடிவத்தின் மூலப்படிவங்கள் தான்ஸானியாவில்தான் காணக் கிடைக்கின்றன என்பதால் ஆதிமனித உருவே தான்ஸானியாவில்தான் தோன்றியது என்றுகூட என்னால் சொல்ல முடியும். இந்த அர்த்தத்தில் நான் ஆப்பிரிக்காவுக்கு வந்ததுகூட எனது மூதாதையரைத் தேடித்தான் என்று நீ புரிந்து கொள்ளலாம். நமது கால எந்திரத்தை இன்னும் கொஞ்சம் முடுக்கி விட்டால் இன்னும் பல லட்சம் ஆண்டுகளுக்குப் பின்னேபோய் ஆதி நுண்ணுயிரியையும் நீ கண்டு கொண்டு விடலாம். மண்ணைப் பற்றி எழுதுவதாகச் சொல்லிக் கொள்ளும் கி.பி. ஒன்பதாம் நூற்றாண்டு செத்த மூளையும் உத்தமத் தமிழ் எழுத்தாளனும் மண்ணைப் பற்றி எழுத வேண்டுமானால் முதலில் அவர்கள் மண்ணின் ஆதிமூலத்தைத் தேடிப் போகட்டும். செவ்வாய்க் கிரகத்திலிருந்து அண்டார்க்டிகா பனிப்பாலையில் வந்து விழுந்த கல் சொல்லும் கதையை அவர்கள் கேட்கட்டும்.

29

- Big Bang வெடிப்பின் மூலம் உருவான இந்தப் பிரபஞ்சத்தின் தோற்றத்திற்கு முன் இந்த வெளி எதுவாக இருந்தது.
- இந்த வெளியின் ஆரம்பமோ முடிவோ எது.
- எல்லையற்ற தன்மை என்றால் என்ன.
- காலம் என்பது என்ன.
- அகாலம் என்பது எப்போது சாத்தியம்.
- இப்படித்தான் இது தோன்றியது எனில் இத்தோற்றங்களின் தோற்றம் எப்படி இருந்தது.
- மூல நுண்ணுயிரியை அனுமானிப்பது நமது கற்பனையின் காலவெளி எல்லைக்கு உட்பட்டதுதானா.
- அந்த மூல நுண்ணுயிரியின் மூலம் மூலம் மூலம் மூலம் மூலம் மூலம் மூலம் மூலம் மூலம்
- முடிவு என்ன.
- முடிவுக்குப் பிறகு என்ன.
- வார்த்தைகளின் போதாமையா.
- அறிதல் திறனின் போதாமையா.
- நான் ஏன் தமிழில் எழுத வேண்டும்.
- தமிழ் எங்கிருந்து வந்தது.
- 5454 ஆண்டுகளுக்கு முந்திய சிந்து சரஸ்வதி சமவெளி நாகரீக காலத்தில் புழக்கத்தில் இருந்த எழுத்து வடிவத்திலிருந்துதான் பிராமி கிரேக்க தேவநாகரி தமிழ் எழுத்துக்கள் பிறந்திருக்கின்றன என்கிறபோது அந்தப் பெயர் தெரியாத மொழியை நான் ஏன் எனது தாய்மொழி எனக் கொள்ளக் கூடாது.

- தமிழ் மொழி என்பது எத்தனை இனக்குழுக்களின் மொழிகளை ஒழித்துக்கட்டிவிட்டு உருவானதென்பது உத்தமத் தமிழ் எழுத்தாளனுக்குத் தெரியுமா.

30

கிளி ஜோஸ்யம் பார்த்தான் முனியாண்டி. முனியாண்டி என்ற பெயருக்கு அட்டை எடுத்துக் கொடு அன்பர் முனியாண்டி அவர்களுக்கு நல்ல காலமா கெட்ட காலமா என்று பார்க்க அட்டை எடுத்துக் கொடு என்று ஜோஸ்யக்காரர் சொல்லிக்கொண்டேயிருக்க கிளி கூண்டை விட்டு மெதுவாக வெளியே வந்து அட்டைகளைத் தன் அலகால் கொத்திக் கொத்தி எடுத்துக் கீழே போட்டது. ஒன்பதாவது அட்டையை மட்டும் எடுத்துத் தனியே போட்டு விட்டு கூண்டுக்குள் புகுந்துகொண்டது. அட்டையை எடுத்துப் பிரித்தார் ஜோஸ்யக்காரர். அரசனுக்கு சாமரம் வீசிக்கொண்டிருந்த சேடியின் படம் வந்திருந்தது. அரசனின் உருவம் முழுசாக இல்லாமல் சேடியின் உருவமே பிரதானப்படுத்தப்பட்டிருந்த அந்தப் படத்தை உற்றுக் கவனித்தபோதுதான் முனியாண்டிக்குத் தெரிந்தது அந்த சேடிப் பெண் பெண்ணல்ல அலி. ப்ருஹண்ணளை ப்ருஹண்ணளை என்று கத்தியது கிளி. தனக்கு இந்த ஆயுளில் விடுதலையே கிடையாதா என அரற்றியபடி அங்கிருந்து ஓட ஆரம்பித்தான் முனியாண்டி.

ஓடி வந்து நின்ற இடம் அண்ணாசாலை அஞ்சல் நிலையம். அதற்கு எதிரே பிரம்மாண்டமான கட் அவுட். கிட்டத்தட்ட நிர்வாணமாகக் காட்சி தந்த நடிகைக்கு கை அகல ஸ்கர்ட் மாட்டிவிடப்பட்டிருந்தது. நடிகையின் படத்துக்குக் கீழே நடிகனின் படம் வரையப்பட்டிருந்தது. நடிகன் அண்ணாந்து பார்த்துக் கொண்டிருந்தான். அந்தப் படத்தின் ஸ்கர்ட் துணி காற்றில் படபடப்பதை கீழே நின்று ஆர்வத்துடன் பார்த்துக் கொண்டிருந்தார்கள் தமிழ்ச் சமூகத்தின் சில பிரதிநிதிகள். 1980 ஆம் ஆண்டிலிருந்துதான் கிராமப்புறங்களிலும் மற்றும் புறநகர்ப் பகுதிகளிலும் சினிமா தியேட்டர்களில் வெளிப்படையாக நீலப்படங்கள் திரையிடப்பட ஆரம்பித்தன. மனைவியை நிர்வாணமாகக் காண முடியாமல் பத்திரிகைகளில்

வெளிவரும் நிர்வாண டிராயிங்குகளையே பார்த்துப் பார்த்து அலுத்துப் போயிருந்த தமிழ்க் கணவன்மார்களுக்கு இந்த நீலப்படங்கள் வரப்பிரசாதமாகவே அமைந்துவிட்டன என்று சொல்லலாம். ஆனால் முனியாண்டியோ இது எதையும் அறியாதவன். நீலப் படங்களுக்கு முந்திய ரெக்கார்ட் டான்ஸ்களை மட்டுமே பார்த்து அறிந்தவன். மற்றும் உரையாடல் ரெக்கார்டுகள். முனியாண்டி நினைத்துப் பார்த்தான். சிறுமிகள் வயதுக்கு வந்தாலோ அல்லது வளைகாப்பு நிகழ்ச்சியிலோ இம்மாதிரி ரெக்கார்டுகளை நாள் பூராவும் போட்டு அந்தந்த ஏரியாக்களையே சந்தோஷப்படுத்தி விடுவார்கள்.

வடை சுட்டு விற்கும் பெண் பாத்திரங்களுக்கு ஓட்டை அடைத்துக் கொடுக்கும் ஆண் வடை விற்கும் பாத்திரம் ஓட்டையாகிவிட அவள் அவனிடம் பாத்திரத்தைக் கொடுக்கிறாள். இனி வருவது டயலாக்.

அவன்: என்ன இது... ஒன்னோட சாமான்ல இவ்ளோ பெரிய பொத்தல்.

அவள்: ஏன் இவ்ளோ பெரிய பொத்தலை அடைக்கிற மாதிரி சாமான் ஒன்ட்ட இல்லியா.

அவன்: ஏன் இல்லாம. என் சாமான் இந்தப் பொத்தலையும் அடைக்கும். இதைவிட பெரிய பொத்தலையும் அடைக்கும். காமி அடச்சிக் காமிக்கிறேன்.

அந்தப் படத்தைப் பார்த்துவிட எண்ணி தியேட்டருக்குள் நுழைந்தான் முனியாண்டி. செய்திப் படம் ஓடிக்கொண்டிருந்தது. ஊனமுற்றோர் நல வாழ்வு மையத்தைத் திறந்து வைத்தார் முதல்வர். அதேபோல் பிச்சைக்காரரர் மறுவாழ்வு இல்லம் தொழுநோயாளிகள் இல்லம் முதியோர் இல்லம் அனாதைக் குழந்தைகள் இல்லம் காவல் நிலையங்களில் கற்பழிக்கப்பட்டோருக்கான உதவித் தொகையை ரூபாய் ஆயிரத்து எட்டிலிருந்து ஆயிரத்து நூற்று எண்பத்தெட்டாக அறிவித்ததைக் கொண்டாடும் விழா என்று ஒன்பது நிமிடங்களுக்கு பல்வேறு இல்லங்களைத் திறந்து வைத்தபடி இருந்தார் முதல்வர்.

ஆர்த்தியின் கதை

- எக்ஸிஸ்டென்ஷியலிசமும் ஃபேன்சி பனியனும் நாவலில் வரும் அந்தப் பெண் ஆர்த்தி இப்போது எங்கே இருக்கிறாள். அந்த நாவலை வாசித்ததிலிருந்து எனக்கு அவளைப் பற்றிய ஞாபகமாகவே இருக்கிறது சூர்யா.
- ஆர்த்தி எங்கே இருக்கிறாள் என்று எனக்கும் தெரியாது வாசுகி. அவளைப் பார்த்துப் பல ஆண்டுகள் ஆகிவிட்டன. எத்தனை ஆண்டுகள் என்றுகூட ஞாபகமில்லை. அம்மாவையும் பார்க்கவில்லை. எல்லோரையும் பிரிந்துவிட்டேன்.
- ஏன் பார்க்கவில்லை.
- அவர்கள் போக்கு பிடிக்கவில்லை.
- அதைப் பற்றி உனக்கென்ன. அவர்களின் இயல்பு அது வெனில் அப்படியே இருந்துவிட்டுப் போகட்டுமே. நீ ஏன் உனது இயல்பை மாற்றிக் கொள்கிறாய். தேளும் துறவியும் கதை உனக்குத் தெரியும்தானே. தேளின் இயல்பு கொட்டுவது எனில் எனது இயல்பு பிற உயிர்களின் பால் அன்பு பாராட்டுவது என்று சொல்லி தேள் தன்னைக் கொட்டக் கொட்ட ஆற்றிலிருந்து கரையில் எடுத்துவிட்டுக் காப்பாற்றிய துறவியின் கதை.
- அது அனைவரும் அறிந்த கதை வாசுகி. அறியாத கதையை நான் சொல்கிறேன் கேள்.
- ஆற்றின் கரையிலிருந்து அக்கரை சேர்வதற்காக அசுவம் ஆற்றில் இறங்க அப்போது கரையில் நின்றுகொண்டு அக்கரைக்குப் போகும் வகை தெரியாது கைகளைப் பிசைந்துகொண்டிருந்த விருச்சிகம் ஆற்றில் இறங்கப்போகும் அசுவத்தைப் பார்த்து அசுவமே அசுவமே நானும் அக்கரைக்குத்தான் போக வேண்டும் என்னை உனது முதுகில் ஏற்றிச் செல்வாயா என வினவ அசுவமும் அந்த ஏழை விருச்சிகத்தைப் பார்த்து மனம் இரங்கி சரியெனச் சொல்ல விருச்சிகமும் அசுவத்தின் முதுகின் மேலேறிக்கொள்ள அசுவம் அனாயாசமாய் நீச்சலடிப்பதைக்கண்டு வியப்புற்று அசுவமே அசுவமே நீ எப்படி நீச்சல் அடிக்கிறாய் என வினயமாய் வினவ நீச்சலடிப்பது எனது இயல்பு எனச் சொன்ன அசுவத்தின் முதுகில்

விருச்சிகமானது தன் கொடுக்கால் பலமாய் போடு போட விஷம் தலைக்கேறிய அசுவம் நீரில் மூழ்கும் தறுவாயில் விருச்சிகத்தைப் பார்த்து ஏனிப்படி என்னைக் கொட்டித் தொலைத்தாய் முட்டாள் விருச்சிகமே இப்போது பார் நீயும் காலி நானும் காலி எனப் புலம்ப கொட்டுவது எனது இயல்பு என சாவகாசமாய்ச் சொல்லிக்கொண்டே அசுவத்தோடு சேர்ந்து தானும் மூழ்கிப்போனது விருச்சிகம்.

- அடேய் முட்டாள். இயல்பு மட்டுமல்ல. விவேகமும் வேண்டுமடா விவேகம்.

- ஆர்த்தியைச் சந்திக்க வேண்டுமானால் அம்மாவைச் சந்தித்தாக வேண்டுமே. அவர்களையும் பார்த்து ஆண்டுகள் பல ஆகிவிட்டன.

வாசுகியின் தூண்டுதலால் அன்றிலிருந்து தன் அம்மாவைத் தேடியலைந்தான் சூர்யா. கடைசியில்தான் தெரிந்தது அவன் வீட்டுக்குப் பக்கத்து வீதியிலிருந்த அம்மாவின் முகவரி. அம்மாவைப் போய்ப் பார்த்தான். அம்மாவுக்குக்கூட ஆர்த்தியின் தற்போதைய இருப்பிடம் தெரிந்திருக்கவில்லை. ஆனால் அம்மாவிடமிருந்து அவனால் ஆர்த்தியின் கதையைத் தெரிந்துகொள்ள முடிந்தது.

காமாட்சியும் அவள் மகன் கமலநாதனும் ஆர்த்தியும் மதுரைக் குப் பக்கத்திலுள்ள கிராமத்தில் இருந்திருக்கிறார்கள். கமலநாத னுக்கு சினிமா சான்ஸ் தேடி சென்னைக்குப் போன தன் தகப்பன் ராஜாங்கத்திடமிருந்தோ சித்தப்பன் ராமமூர்த்தியிடமிருந்தோ எந்த உதவியும் கிடைக்கவில்லை. சினிமா பார்ப்பதற்காக சின்னச் சின்னத் திருட்டுகளில் ஈடுபட்டு வந்த கமலநாதன் கொஞ்சம் கொஞ்சமாக முழுமையான ஜேப்படித் திருடனாக மாறினான்.

ஆர்த்தியின்மீது அளவற்ற பிரியம் வைத்திருந்தான். ஆனாலும் அவளுக்கு அது புரியவில்லை. அவள் கமலநாதனையும் அதற்கும் மேலாக காமாட்சியையும் வெறுத்தாள். அதிலும் காமாட்சியின்மீது அவளுக்கிருந்த வெறுப்பை வார்த்தைகளால் சொல்ல முடியாது. அவர்களின் வாய்ச்சண்டை கைகலப்பில் முடிந்து முடியைப் பிடித்துக்கொண்டு ரோட்டில் புரளும்போது கமலநாதன் வந்து சேருவான்.

அதிலும் எப்படி. இப்போதெல்லாம் போலீஸ்காரன் என்று தனியாகவே தேவையில்லைபோல. ஜனங்களே போலீஸ்காரர் களாக மாறிவிட்டார்கள். ஜேப்படித் திருடன் மாட்டினால் ஜனங்களே அவர்களைப் போட்டுப் புரட்டி எடுத்து விடுகிறார்கள்.

அந்த மாதிரி தர்மஅடி வாங்கிக்கொண்டு வரும்போது ஆர்த்தியும் அம்மாவும் இப்படி ரோட்டில் கட்டிப் புரண்டு உருண்டுகொண்டிருந்தால் எப்படி. விறகுக் கட்டையை எடுத்து வந்த ஆர்த்தியைப் போடு போடு என்று போட்டான்.

போடா பிக்பாக்கெட் என்று சொல்லி அவனையே அடிக்க வந்தாள் ஆர்த்தி.

என்னது போடாவா. யார் யாரை அடா போட்டுக் கூப்பிடுவது. கமலநாதனிடமிருந்த விறகுக் கட்டையை வாங்கி ஆர்த்தியை அடித்தாள் அம்மா.

மண்டை உடைந்து ரத்தம் வந்ததும் திடீரென்று அவள் ஆர்த்திக்குப் பரிந்துகொண்டு பேச ஆரம்பித்துவிட்டாள்.

என்ன இருந்தாலும் நீ என் தங்கச்சி பொண்ணாச்சே ஏன்டி இப்பிடி இந்த பிக்பாக்கெட் பயலெ கட்டிக்கிட்டு அடிபட்டு சாகறே என்று ஆர்த்தியைக் கட்டிக் கொண்டு ஒப்பாரி வைத்தாள். மஞ்சள் பற்று போட்டு கட்டுக் கட்டினாள்.

ஜேப்படி செய்து அவனவன் எப்படியெப்படியோ இருக்கிறான். ஆனால் கமலநாதனுக்கு அந்தத் தொழில் அவ்வளவாகக் கை கொடுக்கவில்லை. அடிக்கடி போலீசிடமோ அல்லது பயணிகளிடமோ மாட்டிக் கொண்டான். போலீசிடம் மாட்டினால் அவ்வளவாக பிரச்னையில்லை. ஆனால் பயணிகளிடம் மாட்டினால் மாற்றி மாற்றி அடித்துப் பின்னி எடுத்து விடுகிறார்கள்.

வீட்டில் வேறு வருமானம் எதுவுமில்லை. ஆர்த்தியும் கர்ப்பமாகி விட்டாள். இவ்வளவு அருமையான குரல் இருந்து என்ன பயன். சினிமா சான்ஸ் கிடைக்கவில்லை. எப்படிக் கிடைக்கும். மெட்ராசுக்குப்போய் ஸ்டூடியோ ஸ்டூடியோவாக அலைந்து பார்த்திருக்கிறானா என்ன. இங்கே குண்டு சட்டிக்குள்ளேயே குதிரை

ஓட்டிக் கொண்டிருந்தால் சினிமா சான்ஸ் எங்கிருந்துவரும்.

- போயேண்டா நாயே. அந்த ராஜாங்கம் பயலும் மத்த நாய்களும் போன மாதிரி நீயும் போயேன்.

அதுவும் சரிதான். மூட்டை மூட்டையாக சினிமா கதை வசனங்களை எழுதிக்கொண்டு சென்னைக்குக் கிளம்பிய ராஜாங்கத்திடமிருந்தும் ராமமூர்த்தியிடமிருந்தும் எந்தத் தகவலும் இல்லை. இப்படியே இந்த ஜேப்படித் திருட்டை நம்பி எத்தனை நாளைக்கு ஓடும் வண்டி.

பாப்பம்மாள் இருந்தவரை அவள் ஜெயிலில் இல்லாமல் வெளியில் இருந்த காலத்திலாவது சாப்பாட்டுக்குப் பிரச்னை இல்லாமல் இருந்தது. ஆனால் இந்தப் பட்டினி அவள் இருந்தபோதே ஆரம்பமாகிவிட்டது என்றுதான் சொல்ல வேண்டும். மதுவிலக்கை எடுத்து விட்டதால் பாட்டில்களைக் கடத்த வேண்டிய தேவையில்லாமல் போனது. பாப்பம்மாளும் படுத்த படுக்கையாகி விட்டாள். தொழில் முடங்கி விட்டதால் படுத்து விட்டாளா அல்லது வயோதிகமா என்று தெரியவில்லை. எப்படியோ ஆண்களைப்போல வெளியே சம்பாதித்து அதிலும் எப்பேர்ப்பட்ட சம்பாத்தியம் பாட்டில் கடத்தல் ஜெயில் என்று இருந்தவள் கரையில் ஒதுங்கிய திமிங்கிலமாய் ஆகிவிட்டாள். படுத்தவள் பிறகு எழுந்து கொள்ளவே இல்லை. அப்போதுகூட சிரித்துக் கொண்டே சொன்னாள்: நான் ரிஷப ராசி. ரிஷபம் படுக்கவே படுக்காது. படுத்தால் எழுந்து கொள்ளாது என்று. அவள் சொன்னபடியே எழுந்து கொள்ளாமலேயே இறந்து போனாள்.

அதற்குப் பிறகு காமாட்சிக்கு உடம்பு முடியவில்லை.

வீடுகளுக்குப்போய் வீட்டு வேலை செய்து பிழைக்கவும் வழியில்லை. அதற்கு நகரத்துக்குப் போக வேண்டும். இந்தக் கிராமத்தில் அதற்கெல்லாம் வழியில்லை.

கமலநாதனுக்கு வருமானம் இருந்தால் அன்றைய தினம் ஆர்த்தியிடம் பிரியமாக இருப்பான். பூ வாங்கி வருவான். சினிமாவுக்கு அழைத்துப் போவான். ஆனாலும் கடைசியில் அடி உதையில்தான் முடியும்.

அவள் மாதமாக இருந்தபோது நடந்த சண்டையில் அதுதான் அவன் அவளுடன் போட்ட கடைசி சண்டை அவன் அவளை தேவடியாள் என்று திட்ட பதிலுக்கு அவள் சொன்னதைக் கேட்டு அவன் உறைந்து போனான்.

- ஆமாண்டா. நான் தேவடியாதான்டா. என் வயித்துலெ வளர்ற புள்ளெகூட உன் மூலமா தரிச்சது இல்லடா. இது சாமி சத்தியன்டா.

அன்றைக்குக் கமலநாதன் ஆர்த்தியை அடிக்கவில்லை. ஆனால் இந்தப் பிரச்னைகளுக்கெல்லாம் காரணம் பணம்தான் என்பது அவனுக்குப் புரிந்தது. மறுநாள் பெரிய திருட்டாக திட்டமிட்டான். பேங்கிலிருந்து பணப்பையுடன் வெளியே வந்த ஆளிடமிருந்து பையைப் பிடுங்கிக் கொண்டு ஓடினான். ஆனாலும் எப்போதும் அவனைத் தொடர்ந்து வரும் துரதிர்ஷ்டம் அன்றைக்கும் அவனை விடவில்லை. அகப்பட்டுக் கொண்டான். வாங்கிய அடியில் உயிர் பிழைத்ததே அபூர்வம். அன்றைக்கு அவன் உயிரைக் காப்பாற்றியதே போலீஸ்காரர்கள்தான். எதேச்சையாக அந்தப் பக்கம் வந்த போலீஸ் ஜீப்தான் அவன் இன்னமும் உயிரோடு இருப்பதற்குக் காரணம். பணக்காரனாவதென்பது மிகவும் சுலபமான விஷயமாகத்தான் இப்போதும் அவனுக்குத் தோன்றியது. ஆனால் கொஞ்சம் அதிர்ஷ்டம் வேண்டும். அவ்வளவுதான். அன்றைய தினம் அவன் மாட்டிக் கொள்வான் என்று யார்தான் எதிர்பார்த்திருக்க முடியும்?

பொதுவாகவே அந்தத் தெருவில் ஆள் நடமாட்டம் இருக்காது. அதுவும் அன்றைய தினம் மதிய நேரம். உச்சி வெயிலில் மரக்கிளைகள்கூட அசைவற்றுக் கிடந்தன. அந்த நேரம் பார்த்துத்தானா அந்தச் சவ ஊர்வலம் வந்து தொலைக்க வேண்டும். தாரை தப்பட்டை சத்தம் கூட தனக்கு எப்படித் தெரியாமல் போய்விட்டது என்று இப்போதும் கூட அவனுக்குத் தீராத சந்தேகம்தான். அந்த ஆளின் கையிலிருந்த பணப்பையைப் பிடுங்கிக் கொண்டு ஓடவும் குறுக்குச் சாலையிலிருந்து திரும்பி அந்தச் சவ ஊர்வலம் அவன் கண்ணெதிரே வரவும் சரியாக இருந்தது. தப்பு அடித்தவர்களும் டான்ஸ் ஆடியவர்களும் மற்றவர்களும் சேர்ந்து அவனைப் புரட்டி எடுத்து

விட்டார்கள். அவனை லட்சாதிபதியாக்க வேண்டிய விதி மயிரிழையில் மாற்றம் கொண்டு அவனை இந்தச் சிறைக் கம்பிகளுக்கிடையே கொண்டு வந்து போட்டிருக்கிறது.

சிசுவின் தலை அங்குமிங்குமாய் புரள்கிறது. உட்கார முடிய வில்லை. நின்றுகொண்டே இருக்க வேண்டும்போல் இருக்கிறது. நின்றால் படுக்க வேண்டும்போல் இருக்கிறது. இடது பக்கம் ஒருக்களித்தால் வலது பக்கம் புரள்கிறது. வலது பக்கம் சாய்ந்தால் இடது பக்கம் நழுவுகிறது. மேலும் கீழுமாய் நீந்துகிறது. வெளியே செல்லும் வழி தேடி அல்லாடுகிறது. பொறுக்க முடியாமல் எழுந்து கொள்கிறாள். உட்காரலாம் என்று பார்த்தால் உட்காரவும் முடியவில்லை. எப்போது ஆரம்பித்தது இந்த வலி. ஞாபகமில்லை. முதுகின் கீழ் புறத்தில். கொஞ்சம் கொஞ்சமாய் அதிகரித்து இப்போது அந்த வலியே முழு உடம்பாய் மாறிவிட்டது. பக்கத்துக் குடிசை ஆயா மட்டும் இருந்திருக்காவிட்டால் இந்நேரம் வயிற்றில் வளரும் சிசுவும் அவளும் இறந்துபோய் எத்தனையோ நாட்களாகியிருக்கும். நம்பி வந்தவன் ஜெயிலுக்குப் போய்விட்டான். கிழவி எங்கே தொலைந்தாள் என்றே தெரியவில்லை. அவளும் சினிமா சான்ஸ் தேடி மெட்ராசுக்குப் போய் ராஜாங்கத்தோடு சேர்ந்து விட்டாளோ என்னவோ. இப்போதெல்லாம் அம்மா வேஷத்துக்குத்தான் கிராக்கி அதிகம் போலிருக்கிறதே. எப்படியோ வயிற்றில் குழந்தையோடு அவள் தனியாகிவிட்டாள். கடைசிவரை காப்பாற்றுவேன் என்று சொன்னவனை நம்பி அம்மாவையும் நைனாவையும் அண்ணன் தம்பி அக்கா எல்லோரையும் உதறிவிட்டு இவனோடு ஓடிவந்து பதினெட்டு மாதம் ஆகிறது. இப்போது இந்தக் கிழவியும் ஓடிவிட்ட பிறகு இத்தனை நாட்களாகக் கஞ்சி ஊற்றுவது இந்த ஆயாதான்.

தொடைகளுக்கு நடுவே பிசுபிசுப்பை உணர்ந்தாள். மூத்திரமா பனிக்குடம் உடைந்து விட்டதா. நகர்ந்து நகர்ந்து வாசலுக்கு வந்தாள். ஆயாவுக்கு குரல் கொடுக்க எத்தனித்தாள். குரல் எழும்பவில்லை. வாயைத் திறக்கவே முடியவில்லை. பற்களைக் கடித்து விரல்களை பலங்கொண்ட மட்டும் இறுக்கி வலியிலிருந்து மீள முயன்றாள். ஆயா என்று மனசுக்குள் கேட்ட குரல் வாயிலிருந்து வரமாட்டேன் என்கிறது.

இதோ வந்துட்டேம்மா என்று குரல் கொடுத்தபடி பதறியடித்துக்கொண்டு வந்தாள் ஆயா. கடவுள்தான் அவளை அந்த நேரத்தில் இங்கே அனுப்பியிருக்க வேண்டும்.

இதோ பாரும்மா வாழ்க்கையில் எப்பவாச்சும்தான் இந்த மாதிரி அதிசயம்லாம் நடக்கும் அடுத்த வாட்டியும் நீ இப்படியே உண்டாயி தனியா கெடந்தீன்னா ஒன்னெப் படைச்சவனே வந்தாக்கூட காப்பாத்த முடியாது சொல்லிட்டேன் என்றாள் ஆயா.

கண்களில் வழிந்த நீருடன் ஆயாவையே பார்த்தாள் ஆர்த்தி. பிறகு குழந்தையைத் திரும்பிப் பார்த்தாள். ஆண் குழந்தை. அச்சில் வார்த்ததுபோல் கமலநாதன்.

சூர்யாவின் ஞாபகம் வந்தது. என்னை எவ்வளவு தூரம் நேசித்தவன் அவன்.

- எப்ப ஒன்னால எழுந்து நடமாட முடியுதோ அப்பவே கௌம்பி ஒன் அம்மாகிட்ட போயிடு அதான் நல்லது.
- தன் வயிறைப் பட்டினிபோட்டு என் உயிரை வளர்த்த அம்மாவிடம் சொல்லிக்கொள்ளாமல் ஓடி வந்துவிட்ட என்னை அவள் திரும்ப ஏற்றுக்கொள்வாளா ஆயா.
- சத்தியமா ஏத்துக்குவா நாஞ் சொல்றேன் இங்கயே இன்னமும் நீ இருந்தீன்னா ஒன் உயிருக்கு உத்தரவாதமில்லெ.
- என் அம்மாவின் நெஞ்சை மிதித்துவிட்டல்லவா இந்த நாயின் பின்னால் ஓடிவந்தேன் திரும்பவும் எந்த முகத்தை வைத்துக் கொண்டு அந்த வாசலை மிதிப்பேன்.
- அப்படி இல்லம்மா கெழவியோ ஒம் புருசனோ திரும்பி வந்தா ஒன்னைக் கொன்னு போட்டுட்டு ஒம் பையனை எடுத்துக்குவாங்க ஒம் மவனும் ஒம் புருசன் மாதிரி பிக்பாக்கெட் ஆவுணுமா.

குழந்தை பிறந்ததிலிருந்தே ஆயா குடிசையை விட்டு வெளியே போகவில்லை. வெந்நீர் போட்டுக் கொடுத்தாள். கஞ்சி போட்டுக் கொடுத்தாள். குழந்தையைக் குளிப்பாட்டிவிட்டாள். ஆனால் இப்படியே எத்தனைநாள் போகும். ஆயா தன் தொழிலுக்கே போகவில்லை. மதுரைக்குப் போய் பஸ் ஸ்டாண்டில் நின்று நாள்

பூராவும் பிச்சையெடுப்பதுதான் பிழைப்பு.

பிச்சையெடுத்து வயிற்றைக் கழுவும் இந்த ஆயா யார். நான் யார். கடவுளே இவள் ஏன் இவ்வளவு பாடுபட்டு என்னையும் இந்தக் குழந்தையையும் காப்பாற்ற வேண்டும்.

- நீ கௌம்பும்மா டிக்கட்டுக்கு நான் பணம் தர்றேன் உங்கம்மா நிச்சயம் ஒன்னெ ஏத்துக்குவா.
- உன்னை விட்டுப் போக மாட்டேன் ஆயா உடம்பு தேறியதும் இந்த உடம்பை வைத்தாவது உன்னையும் இந்தக் குழந்தையையும் காப்பாற்றுவேன் என்னைப் போகச் சொல்லாதே.
- இங்கயே இருந்தா நீ அழிஞ்சிடுவே தைரியமா கௌம்பு.

இந்த ஆயாவை நான் இனிமேல் சாவதற்குள் மீண்டும் பார்க்கக் கூடுமா. கடவுளே எனக்கு மட்டும் ஏன் இப்படிப்பட்ட கதி வரவேண்டும். ஆயாவைக் கட்டிக் கொண்டு அழுது புலம்பினாள் அவள்.

ஊரில் வந்து இறங்கினாள். இந்த ஊரைப் பார்த்துத்தான் எவ்வளவு காலம் ஆகிறது. பதினெட்டு மாதங்கள். பதினெட்டு வருடங்களாகத் தோன்றின. இறங்கியதும் கண்ணில் பட்டது தென்னவன் டீ ஸ்டால். தென்னவன் சூர்யாவின் க்ளாஸ்மேட். வீட்டுக்கெல்லாம்கூட வரும். சூர்யா இப்போது எங்கே இருக்கிறதோ. வேறு எங்கே. டில்லியில்தான். அண்ணியை இதுவரை பார்த்ததே இல்லை. அண்ணி ஏற்கெனவே திருமணமாகி விவாகரத்து பெற்று சூர்யாவை மறுமணம் செய்துகொண்டார்களாம் கையில் குழந்தையோடு. ஆமாம். சூர்யாவுக்கு இப்போது குழந்தை இருக்குமா. அம்மாவைப் பார்த்ததும் முதலில் இதைத்தான் கேட்க வேண்டும். வீட்டுக்குள் நுழைய அனுமதித்தால். இது என்ன எதைப் பார்த்தாலும் சூர்யாவின் ஞாபகம்.

டீ குடித்து கொஞ்சம் தொண்டையை நனைத்துக் கொள்ள வேண்டும்போல் இருந்தது. சேலை முடிச்சை அவிழ்த்துப் பார்த்தாள். சில்லரை கொஞ்சம்தான் இருந்தது. தைரியம் வரவில்லை. விடுவிடு என்று நடக்க ஆரம்பித்தாள். ஊர்க்கோடியில் வீடு. பெருமாள் கோயிலைத் தாண்டி வந்தபோது சின்னாச்சிக் கிழவி அவளை அடையாளம் கண்டுகொண்டாள். ஐயோ இப்புடி ஆயிட்டியடீ கண்ணு

என்று சொல்லி வாயில் கை வைத்து பதைபதைத்தாள். ஆர்த்தி ஊரை விட்டு ஓடிய பிறகு அம்மாவும் நைனாவும் திருமலைராயன் பட்டினம் போய்விட்டார்கள் என்று சொன்னாள் சின்னாச்சி.

வயிற்றைக் கலக்கியது. எப்படியோ சமாளித்துக் கொண்டு திரும்பவும் பஸ் ஸ்டாண்ட் வந்து சேர்ந்தாள். பாலுக்கு அழுதது குழந்தை. மூலையில் அமர்ந்து பால் கொடுத்தாள். கொலைப் பட்டினி கிடந்த இந்த உடம்பிலிருந்து எப்படித்தான் இவ்வளவு பால் சுரக்கிறதோ.

கையிலிருந்த சில்லரையை வைத்து திருமலைராயன் பட்டினம் போய்விடலாம். டீ குடிக்காமல் இருந்தது நல்லதாகப் போயிற்று. திருமலைராயன் பட்டினம்போய் இறங்கி விசாரித்து விசாரித்து வீட்டை நெருங்கியபோது காதுகள் பஞ்சடைந்து கண்கள் இருண்டன.

பிறந்து சில தினங்களே ஆன சிசுவுடன் தன் வீட்டு வாசலில் வந்து மயங்கி விழுந்த அந்தப் பெண்ணின் முகத்தில் தண்ணீர் தெளித்து முகத்தை நிமிர்த்தினாள் பார்வதி.

அந்தக் கணத்தில் நெஞ்சே நின்றுவிடும்போல் இருந்தது. அருமையாய் வளர்த்த மகள் இப்படித் தன் வீட்டு வாசலில் வந்து மயங்கி விழவும் வேண்டுமா. கடவுளே உனக்கு கண்ணில்லையா. நான் என்ன பாவம் பண்ணினேன் இதைப் பார்க்க.

பழசையெல்லாம் மறந்து ஆர்த்தியையும் குழந்தையையும் தன் கண்ணேபோல் பாராட்டினாள் பார்வதி. பத்தியச் சமையல் செய்து போட்டாள். பச்சை ஒடம்புக்காரி கொழந்தைக்கும் சேர்த்து சாப்பிடணும் நீ என்று சொல்லி ஊட்டி ஊட்டிக் கொடுத்தாள்.

இடையில் கமலநாதனும் காமாட்சியும் வந்து தெருவில் நின்று ரகளை செய்துவிட்டுப் போனார்கள். பேரப் பிள்ளையை அவர்களிடம் கொடுத்துவிட வேண்டுமாம்.

காமாட்சிக்கும் பார்வதிக்கும் நீயா நானா என்று ஆகிவிட்டது. பார்வதியைத் தள்ளிவிட்டு வெறிகொண்டவளாய் காமாட்சியோடு சண்டையிட்ட ஆர்த்தியை முடியைப் பிடித்து இழுத்துப் போட்டு காலால் ஓங்கி உதைத்தான் கமலநாதன்.

விருட்டென்று உள்ளே ஓடிய பார்வதி அரிவாள்மனையை எடுத்து வந்து கமலநாதனை நோக்கி ஓங்கினாள். கமலநாதன் தன் கழுத்துக்கு வந்த ஆபத்தை உணராமல் ஆர்த்தியை உதைத்துக்கொண்டிருந்தான். அதற்குள் ரோட்டில் விழுந்து கிடந்த காமாட்சி சுதாரித்துக்கொண்டு எழுந்தோடி வந்து கமலநாதனின் கையைப் பிடித்து இழுத்தாள். கழுத்துக்கு வைத்த குறி தப்பி அரிவாள்மனையோடு எகிறி விழுந்தாள் பார்வதி.

ரோட்டில் போய் நின்றுகொண்ட காமாட்சி பார்வதியின் வீட்டை நோக்கி மண்ணை வாரித் தூற்றினாள்.

நீ நாசமாப் போக. ஒங்குடும்பம் விடியாமப் போக. ஒம் பொண்ணு அவுசாரியாப் போக. ஒன் வயித்திலெயும் ஒம் புள்ளைங்க வயித்துலெயும் புத்து வைக்க. ஒம் புள்ளைங்களெ மகமாயி வாரிக்கிட்டு போக. ஒங்குடும்பம் புல் பூண்டு இல்லாம அத்துப் போவ.

சரமாரியாகத் தூற்றிவிட்டு மகனை அழைத்துக்கொண்டு கிளம்பி னாள் காமாட்சி. ஆனால் பிரச்னை அதோடு விடவில்லை. ஆர்த்தியையும் அவள் பெற்றோரையும் இன்ஸ்பெக்டர் ஸ்டேஷனுக்குக் கூப்பிடுவதாக போலீஸ்காரர் வந்து சொன்னார்.

ஸ்டேஷனில் வைத்து மீண்டும் தகராறு. ஆனால் முடிவு பார்வதிக்கு சாதகமாகவே இருந்தது. காரணம் என்னவென்று தெரியவில்லை. கமலநாதனுக்கு வேலை எதுவும் இல்லை என்பதால் இருக்கலாம் அல்லது கிருஷ்ணசாமி ரிடையர்டு டீச்சர் என்பதாலும் இருக்கலாம். குழந்தை அம்மாவிடம்தான் இருக்க வேண்டும் என்று கண்டிப்பாகச் சொல்லிவிட்டார் இன்ஸ்பெக்டர்.

காமாட்சி மறுபடியும் சில சாபங்களைச் சொல்லி போலீஸ் ஸ்டேஷன் எதிரிலேயே மண்ணை வாரித் தூற்றிவிட்டு கமலநாதனை அழைத்துக்கொண்டு கிளம்பினாள்.

ஆனது ஆயிடுச்சி இன்னிமெயாவது புத்தியோட பொழச்சிக்க கட்டுன பொடவையகூட உருவிக்கிட்டு வுடுற ஒலகம் இது என்று ஆர்த்தியிடம் கடைசியாக எச்சரிக்கை பண்ணினாள் பார்வதி.

ஆனால் விதி வேறு விதமாய் நினைத்தது போலும். பக்கத்து வீட்டு

சாந்தகுமாரின் லவ் லெட்டர் மூலம் அது ஆர்த்தியின் வாழ்க்கையை வேறு விதமாய் திருப்பிச் சென்றது.

என் வாழ்வின் வசந்தமே ஆர்த்தி ஆர்த்தி உன்னை நான் காதலிக்கிறேன் என்றது கடிதம்.

இனிமேல் என் வாழ்வில் காதலே இல்லை என்றது ஆர்த்தியின் பதில் கடிதம்.

என் உயிரே உன்னை என் உயிரினும் மேலாய்க் காதலிக்கிறேன். நீ என் காதலை நிராகரித்தால் என் உயிரை மாய்த்துக்கொள்வேன்.

என் உடம்பிலிருந்த கண்ணீரெல்லாம் வற்றிவிட்டது. இனிமேல் உனக்காகக் கொடுக்க என்னிடம் கண்ணீரும் இல்லை காதலும் இல்லை.

உன் காதல் வேண்டும் கண்ணே.

நான் உன்னை வெறுக்கிறேன். எல்லா ஆண்களையும் வெறுக்கிறேன்.

நாளடைவில் இந்த வெறுப்பு காதலாக மலர்ந்தது. காதல் என்றால் இப்படியல்லவா இருக்க வேண்டும் என்பதும் அவளுக்குப் புரிந்தது.

எப்பேர்ப்பட்ட காதலன் இவன். உயிரையே விடுகிறானே. குழந்தை இருந்தால் என்ன அதுவும் என் குழந்தைதானே என்கிறான். உன் அண்ணன் சூர்யாவைப்போல நானும் உன்னை உன் குழந்தையோடு ஏற்றுக்கொள்கிறேன் என்கிறான். சூர்யாவைப் போலவே என்ன சாந்தமான பேச்சு. பெயருக்கேற்ற இயல்பு. சாந்தகுமார். அவள் அவனை சாந்தன் என்றுதான் கூப்பிடுகிறாள். ஆண் என்றால் கரடுமுரடாகத்தான் இருக்க வேண்டுமா. ம்ஹூம். ஆணிடம் கொஞ்சம் பெண் தன்மையும் இருக்க வேண்டும். அப்போதுதான் ஆண் தன்மையே முழுமை அடைவதாகத் தோன்றியது அவளுக்கு.

இப்படியாக ஆர்த்தி முழுமையான ஆணைக் கண்டுபிடித்தபோது அது அக்கம்பக்கத்தவர்களுக்கும் தெரிந்து போயிற்று. முக்கியமாக சாந்தன் வீட்டுக்கு.

சாந்தனின் பெற்றோர் சாந்தனைப்போல் சாந்தமாக இல்லை.

கொதித்து எழுந்தார்கள். பணபலமும் உயர் சாதி பலமும் வேறு சேர்ந்து கொண்டன.

ஆர்த்தியின் வீட்டை பெரிய பூட்டால் பூட்டினார்கள். இப்போதே நீங்கள் அத்தனை பேரும் இந்த ஊரை விட்டு ஓடிப்போக வேண்டும். இல்லாவிட்டால் வீட்டைத் திறக்க விடமாட்டோம் என்றார்கள்.

ஆண்கள் தடிக்கம்புகளுடனும் பெண்கள் பச்சை பச்சையான வார்த்தைகளோடும் கூடி நின்று கொண்டார்கள்.

கட்டிய வேட்டியும் முதுகு பூராவும் கிழிந்த பனியனுமாய் நின்று கொண்டிருந்தார் கிருஷ்ணசாமி.

காரைக்கால் போய் தங்கை லீலாவின் கணவரை அழைத்து வர வேண்டும் அவருக்கு.

உள்ள போயி கொஞ்சம் சட்டய மட்டும் போட்டுக்கிட்டு வந்திடுறேய்யா என்று கெஞ்சினார் அவர்.

என்னாது சட்டையா. அண்ணனும் தங்கச்சியும் ஓக்கிறதுக்கு வெளக்கு புடிச்ச பய நீ. ஒனக்கு சட்ட வேறயா கேக்குது. ஒன்னை மாதிரி ஆளையெல்லாம் வேட்டி அன்டிராயரை அவுத்திட்டு அம்மணக்குண்டியா விரட்டணும்டா. நீதான்டா இதுக்கெல்லாம் காரணம். பொண்ணாடா வளக்கிற நீ. ஊரு மேய வுட்டுக்கிட்டு நீயெல்லாம் அப்பனா நீ.

சொல்லிக்கொண்டே கிருஷ்ணசாமியைப் பிடறியில் அடித்துத் தள்ளினார் சாந்தனின் அப்பா.

கிருஷ்ணசாமியின் பூஞ்சை உடம்பு அந்த திடீர்த் தாக்குதலை எதிர்பார்க்கவில்லை. நிலை தடுமாறி ரோட்டில் விழுந்தது. பார்வதி வாயிலும் வயிற்றிலும் அடித்துக்கொண்டாள்.

இப்ப அடிச்சிக்கிட்டு என்னாடி புரோஜனம். ஒம் பொண்ணுக்கு அரிப்பெடுத்து ஊரு மேல போனப்பயே தொடைல சூடு போட்டிருந்தீன்னா இப்பிடி அணணனோடயே படுத்து புள்ளயும் பெத்துருக்க மாட்டா. இப்பிடி தெருத்தெருவா எந்தப் பையனெ லவுட்டலாம்னு வேக்காடு புடிச்ச நாயாட்டம் அலைஞ்சிருக்க மாட்டா.

சமயம் பார்த்து பார்வதியைப் பிடித்தாள் சாந்தனின் அம்மா.

இதற்கு மேலும் நின்றால் ஆபத்து என்று உணர்ந்த கிருஷ்ணசாமி தன் மனைவியையும் ஆர்த்தியையும் அவள் குழந்தையையும் அழைத்துக் கொண்டு அப்படியே கிழிந்த பனியனுடன் காரைக்கால் கிளம்பினார்.

இவ்வளவு ரகளைக்கும் சாந்தகுமார் இருந்த இடம் தெரிய வில்லை. அவனை வீட்டில் வைத்துப் பூட்டிவிட்டதாகப் பேசிக்கொண்டார்கள்.

கிருஷ்ணசாமியின் தங்கை லீலாவின் கணவர் மீனவ சாதியைச் சேர்ந்தவர். அதோடு அரசாங்க உத்தியோகத்திலும் இருப்பவர் என்பதால் அவருக்கு அவர் மனிதர்களிடம் செல்வாக்கு அதிகம்.

தன் மைத்துனர் குடும்பம் வந்து சேர்ந்த கோலத்தைப் பார்த்து அதிர்ந்துபோன அவர் உடனடியாக, தன் ஆட்களுக்குச் சொல்லி அனுப்பினார். மீனவக் குப்பமே திரண்டு வந்தது.

குப்பத்து ஜனக் கூட்டத்தைப் பார்த்து மிரண்டு போனார்கள் சாந்தகுமாரின் குடும்பத்தார். அதனால் மத்தியஸ்தம் செய்து வைக்கப்பட்டது. அதன்படி கிருஷ்ணசாமியின் குடும்பம் அங்கிருந்து உடனடியாக கிளம்புவது என்று முடிவு செய்யப்பட்டது.

இப்படியாக பெரிய சாதி மோதலாக உருவாகியிருக்க வேண்டிய சம்பவம் வரலாற்றில் இடம் பெறாமல் போனது.

தாங்கள் இருந்த தெருவிலேயே மைத்துனர் குடும்பத்துக்கும் வீடு பார்த்து வைத்தார் லீலாவின் கணவர்.

அவமானம் தாங்காமல் தூக்குப் போட்டுக்கொள்ள முயன்று அந்த முயற்சியில் தோற்றுப் போனார் கிருஷ்ணசாமி.

அழுது அழுது புலம்பிக் கொண்டிருந்தாள் பார்வதி.

எல்லாவற்றையும் பார்த்துக் கொண்டிருந்தாள் ஆர்த்தி. திடீரென்று யாரிடமும் சொல்லிக் கொள்ளாமல் வீட்டை விட்டு ஓடிப் போனாள் குழந்தையையும் விட்டுவிட்டு.

எப்படித்தான் மவராசிக்கு மனசு வந்ததோ... ம்... என்று பெருமூச்சு

விட்டார்கள் அம்மா.

- சரி. அவள் பையன் எங்கே. இப்ப அவனுக்கு ஒம்பது வயது இருக்குமா.

- அனாதை ஸ்கூல்ல படிக்கிறான் திருச்சிலே. அதுகூட ஒங்க சின்ன நைனா சிபார்சிலதான் எடம் கெடச்சிது. இப்ப இங்க லீவுலெ வந்திருக்கான்.

அனாதைக் குழந்தைகள் காப்பகத்தில் வளரும் குழந்தைகளுக்கே உரிய சோகம் மண்டிய கண்கள். ஒல்லியான திரேகம்.

- உன் பெயரென்ன.

- சூர்யா.

- ஒன் ஞாபகமாகத்தான் ஒம் பேரையே வச்சிருக்கா ஒந்தங்கச்சி. அவ நம்மளையெல்லாம் மறக்கலடா. பாசம் ஜாஸ்திடா அவளுக்கு.

- என்னைத் தெரியுதா.

- ம்.

- போன ஏப்ரல் மாசம் பரிச்செ சமயத்துலெ அவனுக்கு டைபாய்டு வந்திடுச்சாம். அதோடயே பரிச்செ எளுதியிருக் கான். ஆஸ்டல்ல இருந்த ஆயாங்கதான் கவுனிச்சிக்கிட்டாங்களாம். ம்... கூலிக்கு வேலை செய்றவுங்க என்னத்தெ கவுனிச்சுக்கிட்டாங்களோ. பரிச்செ முடிஞ்சு எலும்பும் தோலுமா வாரான் இங்கெ. பாஸ் பண்ணுவேனான்னு தெரியலெ அவ்வான்னு சொல்லி அளுவுறான். இங்கயே நம்ம வூட்லயே வச்சுக்கலான்னா ஒங்க நைனாவுக்கு வர்ற பிஞ்சின் பணத்திலெ எங்க வயிறு களுவுறதே பெரும்பாடா இருக்கு. இவனெ வேற வச்சு வளக்கணும்னா முடியுமா.

வெளிப்பக்கத்தில் கிழிந்து தொங்கிய செவ்வக வடிவ பிளாஸ்டிக் பையில் சட்டைத் துணிகளைத் திணித்துக்கொண்டு ஊருக்குக் கிளம்பிக் கொண்டிருந்தான் சிறுவன்.

- தனியாவே போய்டுவியா.

- ம்.

பாக்கெட்டில் இருந்த ரூபாய் நோட்டை எடுத்து சிறுவனிடம் கொடுத்து அவன் தோளில் கை வைத்து அழுத்தி நன்றாகப் படி சூர்யா என்றான். இந்த நேரம் பார்த்து கையில் அதிகப் பணம் இல்லாமல் போய்விட்டதே என வருந்தினான்.

இப்போது ஆர்த்தி எங்கே இருக்கிறாள் என்று தெரியவில்லை என்றும் ஆனால் அவ்வப்போது கடிதங்கள் வருவதாகவும் சொன்னார்கள் அம்மா. அதற்கு மேல் அம்மாவிடமிருந்து ஆர்த்தியைப் பற்றி எந்தத் தகவலும் கிடைக்கவில்லை. ஆனாலும் யூகமாய் ஏதோ யோசித்துத் திருச்சிக்குப் போய் தன் உறவுக்காரர்களைப் பார்த்தான். விஷயம் தெரிந்தது.

காரைக்காலிலிருந்து ஆர்த்தி நேராக திருச்சிக்குத்தான் வந்திருக் கிறாள். உடம்பை வைத்துப் பிழைத்திருக்கிறாள். வரும் போகும் வாடிக்கையாளர்களிடம் இதுதான் என் நைனா இதுதான் என் அம்மா இதுதான் என் அண்ணன் சூர்யா இதுதான் என் சின்ன நைனா (ஊரில் பிரபலமான புள்ளி) என்று சொல்லி நிழற்படங் களைக் காண்பித்திருக்கிறாள். அந்தச் செய்தி சின்ன நைனாவை எட்ட அவர் சில ரவுடிகளை அனுப்பி அவளை அந்த ஊரிலிருந்து துரத்தி விட்டிருக்கிறார்.

அதற்கு மேல் ஆர்த்தியைப் பற்றி எதையும் கண்டுபிடிக்க முடியவில்லை வாசுகி. இப்போது அவள் எங்கே இருக்கிறாள் என்றே யாருக்கும் தெரியவில்லை. ஆர்த்தி ஆர்த்தி ஆர்த்தி ஆர்த்தி ஆர்த்தி ஆர்த்தி ஆர்த்தி ஆர்த்தி ஆர்த்தி என்று புலம்புகிறேன். என்னால் அவளுக்கு எதுவுமே தர முடியாமல் போய்விட்டது. முன்பின் தெரியாத எவனுக்காகவோ தன் உடம்பை விற்கும்போது அவள் உடலும் மனமும் என்ன பாடுபடும். அவள்மீது படரும் அத்தனை உடல்களையும் அவள் எப்படி சகித்துக்கொண்டிருக்கிறாள் என்று எழுதும்போது கண்ணீர் விடுகிறான் சூர்யா என்கிற முனியாண்டி என்கிற நேநோ என்கிற மிஸ்ரா என்கிற சாரு நிவேதிதா என்கிற வாசுகி என்கிற

வலியும் அவமானமும் பட்டினியும் துரோகமும் அன்பும் தனிமையும் நிரம்பிய அந்தப் பெண்ணின் வாழ்க்கை இப்படியாக

வார்த்தைகளில் முடிந்து போனதில் சூன்யமானது மனம்.

மதியத்திலிருந்து பனிக்குட நீர் வெளியில் வர ஆரம்பித்தது. உடனே மருத்துவமனைக்குக் கிளம்பிச் சென்றாள். எனிமா கொடுக்கப்பட்டது. வலி எடுப்பதற்காக ஊசி போட்டு ட்ரிப்ஸ் ஏற்றப்பட்டது. ஸ்கேன் எடுக்கப்பட்டது. குழந்தையின் பொஸிஷன் பார்த்தார்கள். குழந்தை பக்கவாட்டில் இறங்கி வந்ததை அவளே உணர்ந்தாள். பிறகு குழந்தையை வெளித்தள்ள முயற்சி செய்தாள். அவளுக்கு சுய நினைவு இருந்தது. அவள் தலைக்குமேல் இருந்த கடிகாரத்தில் நேரம் 9.00 ஆனபோது குழந்தை பிறந்தது. ஆனால் அவள் உயிர் போய்விடும் போலிருந்தது. எக்கச்சக்கமான ரத்த இழப்பு. ரத்த அழுத்தம் இறங்கிவிட்டது. சுற்றி நின்றவர்கள் பேசியதெல்லாம் அவளுக்குத் தெளிவாகக் கேட்டது. அவர்கள் முகம் கலவரம்கொண்டிருந்தது. தலைமை மருத்துவர் கையைப் பிசைந்தார். அவுளுக்குக் கை காலெல்லாம் நடுங்கியது. எப்படியோ ரத்தத்தை ஏற்றி அவள் உயிரைக் காப்பாற்றிவிட்டார்கள். நிறைய தையல்கள். வலி பொறுக்காமல் மருத்துவரின் கையைக் கடிக்காத குறைதான். எந்த மயக்க மருந்தும் வேலை செய்யவில்லை. நடு இரவு வரை தையல் போட்டுக்கொண்டே இருந்தார். அந்த மருத்துவமனையே கிடுகிடுத்துப் போக கத்திக் கொண்டே இருந்தாள் அவள்.

31

உன்னை நான் முனியாண்டியின் எழுத்துக்களில் வாசித்திருக் கிறேன். இப்போதுதான் உன்னுடன் பேசும் வாய்ப்பு கிடைத் திருக்கிறது. ஆமாம். முனியாண்டியின் எழுத்துக்கள் எதையும் விடாமல் வாசித்திருக்கிறேன். சேகரித்தும் வைத்திருக்கிறேன். அவனைப் பற்றிய செய்திகள் தகவல்கள் எல்லா வற்றையும்கூட தொகுத்து வைத்திருக்கிறேன். அவனே அறிந்திராத அவனுடைய எழுத்தின் அர்த்தங்களை அவன் எழுத்துக்களின் ரகசிய வாசுகியான என்னை விடப் புரிந்து கொண்டவர்கள் யாரும் இருக்கமுடியாது. இப்போது அவன் ரகசியமாக எழுதிக் கொண்டிருக்கிறானே டெலிஃபோன் நாவல் அந்த நாவலுக்காக அவன் உரையாடிய பெண்களில் நானும் உண்டு என்பதை அவன் அறிய மாட்டான். நான் யாரென அறியாமலேயே பல சமயங்களில் அவன் என்னுடன் தன் சம்பாஷணைகளை நிகழ்த்தியிருக்கிறான். அவன் தன்னுடைய எழுத்தில் வாசுகி வாசுகியென்று அழைக்கிறானே ஏன் தெரியுமா. அப்படி அழைக்காமல் அவனால் எழுதவே முடியாது. His whole obsession is me. ஆமாம். அந்த வாசுகி நான்தான். உண்மையில் என் பெயர் வாசகி. எழுத்துக்காகவே வாசுகி என மாற்றியும் ஆர்த்தி என புதுப் பெயரிட்டும் அழைக்கிறான். நான்தான் அவனுடைய தங்கை. என்னைப் பற்றிய குற்ற உணர்வினாலேயே அவன் கிரேக்க புராணங்கள் உலக அரசியல் இலக்கியம் பீடி சுற்றும் சிறுவன்கள் அணு பௌதிகம் வரலாறு ருவாந்தா கல் உடைக்கும் பெண்கள் ஆர்னிதாலஜி கார்மீனியப் படுகொலை விபசாரிகள் என்று புலம்பிக்கொண்டிருக்கிறான். இது எல்லாவற்றிலும் படிந்து கிடக்கும் வன்முறையைப் பார்த்துவிட்டு இவ்வளவு பெரிய வன்முறையில் தன் தங்கையின் வாழ்வும் உள்ளடங்கிப் போய்விட்டதான பாவனையில் ஆறுதலடைய முயல்கிறான். பாவம். வன்முறை என்பது அவனுக்கு வெறும் வார்த்தையாகிப் போய்விட்டது.

முனியாண்டியின் எழுத்துக்கள் வேறு அவனுடைய வாழ்க்கை வேறு என்பதைப் பல வருடங்கள் அவனுடன் உடனிருந்தவள் என்ற முறையில் நான் அறிந்து கொண்டிருக்கிறேன். அவன் பயந்தாங்கொள்ளி. அவன் சொல்வதுபோல் அவன் எழுத்துக்கள் எதுவும் தடை செய்யப்படப் போவதில்லை. எல்லாம் அவனுடைய பிஸாது. உண்மையில் அவன் பஸ் கண்டக்டர்களுக்கும் போலீஸ் காரர்களுக்கும் பெண் எழுத்தாளர்களுக்கும் சிறு பத்திரிகைகாரர் களுக்கும் நாய் பூனை எலி கரப்பான் தவளை கம்பளிப்பூச்சி போன்ற உயிரினங்களுக்கும் பிச்சைக்காரர்களுக்கும் ரயில் தண்ட வாளங்களுக்கும் வாகனங்களுக்கும் பயப்படுபவன். சில்லரை கொடுக்காமல் ரூபாய் நோட்டாகக் கொடுத்ததால் கண்டக்டர் அவனை கிரிமினல் குற்றவாளியை நடத்துவதுபோல் நடத்திய தையும் திட்டியதையும் கண்டக்டருக்கு பயந்துகொண்டே பல தினங்கள் கால்நடையாகவே போனதையும் அவன் என்னிடம் டெலிஃபோன் சம்பாஷணைகளின்போது சொல்லி அழுதிருக் கிறான். அதேபோல் ஆட்டோ டிரைவர்கள். அன்றைய தினம் அவனுக்கு சின்மயா நகரிலிருந்து கே.கே. நகர் போக வேண்டி யிருந்ததாம். நாற்பத்தைந்து ரூபாய் என்று சொல்லியிருக்கிறார் ஆட்டோக்காரர். பதினெட்டு ரூபாய்தானே ஆகும் என்று விவாதித்திருக்கிறான் இவன். கடைசியில் வேண்டா வெறுப்பாக இருபத்தேழு ரூபாய்க்கு பேரம் முடிந்து கிளம்பினால் அந்த ஆட்டோ டிரைவர் கடும் கோபத்தில் வளைவுகளிலும் திருப்பங்களிலும் படுவேகத்தில் திரும்பி லாரிகளில் மோதி விடுகிறாற் போல் சென்று கடைசி நிமிடத்தில் ஒடித்து வேகத்தடை இருக்கும் இடங்களிலும் அதே வேகத்தில் போய் தூக்கித் தூக்கிப் போட்டு கடைசியில் அவனுக்கு முதுகுத் தண்டே முறிந்து போனதுபோல் ஆகியிருக்கிறது. ஆட்டோவிலிருந்து இறங்கியதும் லேசான நெஞ்சுவலி வரவே டாக்டரிடம் போயிருக்கிறான். ரத்த அழுத்தம் மிகவும் அதிகமாக இருக்கிறது என்றும் இனிமேல் இரவு ஒன்பது மணிக்கு மேல் கண் விழிக்கக் கூடாது அதிகம் கோபப்படக் கூடாது அதிகம் படிக்கக் கூடாது அதிகம் எழுதக் கூடாது என்றும் பல கூடாதுகளைச் சொல்லியிருக்கிறார் டாக்டர். அன்றிலிருந்து அவன் ஆட்டோ டிரைவர்களிடமும் பயப்படத் தொடங்கியிருக்கிறான்.

போலீஸ்காரர்களைவிட கண்டக்டர்களும் ஆட்டோ டிரைவர் களும் என்னை மிகவும் அச்சுறுத்துகிறார்கள் என்று சொல்வான். சில சமயங்களில் சக மனித இருப்பே என்னை அச்சுறுத்துகிறது துருவப் பிரதேசங்களில் போய் வாழலாமா என்று தோன்றுகிறது என்று புலம்புவான். என் எழுத்து அரசுக்கு எதிரானதா என்னைக் கைது செய்துவிடுவார்களா ஜெயிலில் எழுத முடியுமா நீ எனக்கு எழுதுவதற்கான காகிதங்களும் பேனாவும் கொடுப்பாயா என்று பலவிதமாகக் கேட்டுக் கொண்டேயிருப்பான். அவனைக் கைது செய்ய வேண்டுமென சில இலக்கியப் போலீஸ் அதிகாரிகள் பேசியிருப்பதாக தினசரிகளில் வந்திருக்கிறதென்று சொல்லிப் பதற்றம் கொள்வான். ஜெயிலில் போட்டு தனிமையில் பைத்தியம் பிடித்துவிட்டால் என்ன செய்வதென்று தியான வகுப்புகளுக் கெல்லாம் போய்க் கொண்டிருந்தான். தியானம் செய்தால் எந்த மோசமான நிலையிலும் மனம் தன் வசத்தை இழக்காதல்லவா என்று என்னிடம் பயந்து கொண்டே கேட்டிருக்கிறான். இப்படிப் பட்ட பயங்கொள்ளியின் எழுத்தா அரசுக்கு எதிரானதாக இருக்கும். சமூக மதிப்பீடுகளுக்கு எதிரானதாக இருக்கும். உண்மையில் பார்த்தால் எந்தச் சமூக மதிப்பீடுகளை அவன் மறுக்கிறானோ அதே சமூக மதிப்பீடுகளைத்தான் அவன் ஏற்று வாழ்ந்து கொண்டிருக்கிறான். சமூக மதிப்பீடுகளை மறுப்பதாகக் காண்பித்துக் கொள்வதன் மூலம் அவன் தனது இருப்பை ஸ்தாபிக்க முயல்கிறான். ஆனால் சமூக மதிப்பீடுகளை ஏற்பதோ மறுப்பதோ எல்லாமே அவற்றைப் பிரதானப்படுத்தத்தானே செய்கிறது. அவன் பேசும் எதிர்க் கலாச்சாரத்தையும் கலாச்சாரமானது உப கலாச்சாரமாக உள்வாங்கிக்கொண்டுவிட வில்லையா. இது ஏன் அவனுக்குத் தெரியவில்லை. தயவுசெய்து இவனைப் போன்ற கவுண்டர் கல்ச்சர் ஆட்கள் விபச்சாரிகளைப் பற்றி எழுதாமல் இருப்பதே அவர்கள் எங்களுக்குச் செய்யும் பெரிய தொண்டாக இருக்கும் என்று நினைக்கிறேன் நான்

நளினி சூர்யா தம்பதியினர் தாம்பத்ய வாழ்க்கை

பெட்ஷீட்

- ஏன் ஊறவச்ச இந்த பெட்ஷீட்டெல்லாம் தொவைக்கல்லே.
- யாரைக் கேட்டு நீ ஊற வச்சே.
- ஏன் தொவைக்கலேன்னா என்ன திமிர்ப்பேச்சு வேண்டிக் கிடக்கு. யாரைக் கேட்டு நான் ஊற வைக்கணும்.
- என்னால இப்ப தொவைக்க முடியாது. நான் இப்போ அவசரமா வெளிய கௌம்பணும்.
- பெட்ஷீட்டெல்லாம் அவ்வளவு நேரம் ஊறினா என்னத்துக்கு ஆறது. நீங்க காசு குடுத்து வாங்கியிருந்தால்ல தெரியும்.
- நான் வாங்காம ங்கொப்பனா வாங்கினான்.
- உங்க கையாலாகாத்தனத்துக்கு எதுக்கு இப்ப எங்கப்பாவை யெல்லாம் இழுக்கறேள்.
- நான் கையாலாகாதவன்னா உங்காத்து மனுஷாள்ளாம் அயோக்கியக் கும்பல். ஊர் சொத்தையெல்லாம் ஏமாத்திக் கொள்ளையடிச்சு பணம் சேர்க்கற கும்பல். மனசாட்சியெக் கழட்டி வச்சிட்டில்லடீ நீ உங்கப்பன் அம்மா எல்லாரும் நடமாடறேள்.
- உங்காத்துல என்ன யோக்கியமா. தங்கை ஒண்ணு விட்ட அண்ணாவையே இழுத்துண்டு ஓடிட்டா. தம்பி என்னடான்னா பொண்டாட்டிக்குத் தோப்புக்கரணம் போட்டு நமஸ்காரம் பண்ணிண்டு கெடக்கான். எங்காத்து யோக்கியதை பத்திப் பேச வந்துட்டேள்.
- ஆமாண்டீ. நீ இவ்வளவு தூரம் பேசும்போது நான் ஏன்டி பேசக் கூடாது. நீயே ஒரு பவிஷு கெட்டவதானேடீ உங்கம்மாவப் போல. என்னோட பேருக்கு குடித்தனம் பண்ணிண்டு ஊரையெல்லாம் மேயறவளாச்சேடீ நீ.
- நான் பவிஷு கெட்டவொன்னு தெரிஞ்சிடுத்தோன்னோ ரைட். இனிமே இந்த ஆத்திலே உங்களுக்கு இடம் இல்லை. நீங்க ரோஷமான ஆம்பிளையா இருந்தா இனிமே இங்கே நிமிஷம்கூட நிக்காம எம் மூஞ்சிலேயே முழிக்காம போயிடுங்கோ. இதுக்கு

மேலயும் இருந்தேள்னா மரியாதெ கெட்டுப் போய்டும்.

To bury our fathers

- அந்தப் புதினத்தை எங்கே ஒளித்து வைத்திருக்கிறீர்கள்.
- எந்தப் புதினத்தை ஒளித்து வைத்திருக்கிறேன்.
- To bury our fathers..
- என்ன ஒளித்து வைப்பதா. அந்தப் புதினமே என்னுடையது. அதை நான் ஏன் ஒளித்து வைக்கவேண்டும்.
- நீர்தான் ஒளித்து வைத்திருக்கிறீர் என்னைப் பழி தீர்க்க வேண்டுமென்று.
- உன்னைப் பழிவாங்க எனக்கு வேறு உபாயமா இல்லை. இந்தப் புத்தகத்தை ஒளித்து வைக்கும் ஈனச் செயலையா செய்வேன்.
- நான் சகல இடங்களிலும் தேடிவிட்டேன். கிடைக்க வில்லை. நீர்தான் ஒளித்து வைத்திருக்கிறீர்.
- அந்தப் புதினத்தை உன்னை மொழிபெயர்க்கச் சொன்னதே நான்தான். அப்படியிருக்கையில் நான் எப்படி அதை ஒளித்து வைக்க முடியும்.
- அதெல்லாம் எனக்குத் தெரியாது. இங்கே வைத்த புதினத்தைக் காணவில்லை. உம்மைத் தவிர இங்கே வேறு யாரும் இல்லை.
- நீ என்னைப் பற்றி என்ன வேண்டுமானாலும் பேசு. ஆனால் என் இலக்கிய வாழ்க்கையைக் கேவலப்படுத்தாதே. இந்தப் புதினத்தை நான் வெளிதேசத்திலிருந்து வரவழைத்து மொழிபெயர்க்கச் சொல்லி உன்னிடம் கொடுத்தேன். அதை எப்படி நான் ஒளித்து வைக்க முடியும்.
- நீர் ஒளித்து வைக்கவில்லை. திருடிவிட்டீர். மரியாதையாகக் கொடுத்துவிடும்.
- என்னிடம் இல்லாததை நான் எப்படிக் கொடுக்க முடியும். என்னை வதை செய்வதற்குப் புதுப் புது உபாயங்களைக் கண்டுபிடித்துக்கொண்டிருக்கிறாய் நீ.

- சரி. பேச்சு வேண்டாம். திருடும் அளவுக்கு வந்த பிறகு நீர் இந்த வீட்டில இருக்கக் கூடாது. வெளியே போய்விடும். அதுவும் இந்தக் கணமே.

- முடியாது. எனக்கு எப்போது வீடு கிடைக்கிறதோ அப்போதுதான் செல்வேன்.

- இந்தக் கதையெல்லாம் என்னிடம் வேண்டாம். இப்போதே நீர் வெளியேற வேண்டும். இல்லாவிட்டால் நடக்கிற கதையே வேறு.

எலெக்ட்ரிக் க்ரிமடோரியம்

- எதுக்கும் என்கிட்ட நாலாயிரத்து ஐநூறு ரூபா குடுத்து வை.

- ஏன்.

- திடீர்னு நீ செத்து கித்து வச்சிட்டீன்னா ஒன்னோட பொணத்தெ யாரு டிஸ்போஸ் பண்றது. அதுக்கு ஆவுற செலவுக்கெல்லாம் நான் எங்கே போறது.

- என்னது நான் செத்து கித்துப் போன பிறகா. நான் செத்ததுக் கப்புறம் என் பாடியப் பத்தி எனக்கென்னாடி கவலை. ங்கோத்தா.

- டேய் இங்க பாரு. இந்த ங்கோத்தா கீத்தால்லாம் வேற எவள்ட்டயாவது வச்சுக்க. என்னாலெல்லாம் ஒன் சாவுக்கு செலவு பண்ணிக்கிட்டு இருக்க முடியாது.

- அடப்போடீ மயிரு. ஒன்னால செலவு பண்ண முடியலேன்னா முனிசிபால்ட்டிகாரன்ட்ட சொல்டீ. அவன் வந்து லாரிலெ தூக்கிப் போட்டுக்கிட்டு போய்டுவான்.

- அந்த வேலையெல்லாம் என்னால பண்ண முடியாது. இல்லேன்னா எலெக்ட்ரிக் க்ரிமடோரியத்லெ எவ்வளவு செலவாகும்னு விசாரிச்சுக்கிட்டு வா. அந்தத் தொகையெ என் கிட்ட குடு.

- அட வல்லார ஓளி. நான் எதுக்குடீ விசாரிக்கணும். நானே செத்த பிறகு என் பாடியப் பத்தி எனக்கென்னாடீ கவலை... நாயோ நரியோ தின்னுட்டு போவட்டுண்டீ. ங்கொப்பன ஓளி.

- யாரெடா சொன்ன ங்கொப்பன ஓளின்னு. தேவிடியாப் பையா. செருப்பு பிஞ்சிடுண்டா பாஞ்சத்.

- என்ன அந்த விஷயம் விசாரிச்சியா.
- எந்த விஷயம்.
- அதான் அந்த எலெக்ட்ரிக் க்ரிமடோரியம்.
- நான்தான் சொன்னேனடீ. ங்கோத்தா தேவுடியா செறுக்கி. ங்கொம்மாலெ. நான் எதுக்குடி விசாரிக்கணும்.
- யாரெப் பார்த்து தேவிடியான்னு சொன்னே பொட்டப் பயலே. ஒங்கொம்மாதான்டா தேவிடியா. தேவிடியாப் பயலெ. வீட்ட விட்டு வெளியே போடா நாயே. தெருப் பொறுக்கி நாயே. இந்த நிமிஷமே நீ இந்த வீட்டை விட்டு போயிடணும் இல்லெ ரசாபாசமாயிடும்..

32

நளினியைப் பிரிந்த சூர்யா ரிவால்வர் ரீட்டா என்ற தலைப்பில் நளினியைக் கன்னாபின்னாவென்று திட்டிக் கதையெழுதினான். அந்தக் கதையைப் படித்துவிட்டு சில பெண்ணிய அமைப்புகள் அவனை நாடு கடத்த வேண்டுமென்று தீர்மானம் நிறைவேற்றின. அந்தச் சமயத்தில்தான் அவன் அவந்திகாவைச் சந்தித்தது.

அவந்திகாவின் கதை

அவந்திகா சூர்யாவுக்கு எழுதிய 324 பக்கங்கள் கொண்ட கடிதத்தின் சுருக்கம்.

அன்புள்ள சூர்யா

இந்தக் கடிதத்தை உனக்கு ஏன் எழுதுகிறேன் இதை எழுத உன்னை ஏன் தேர்ந்தெடுத்தேன் என்று எனக்குத் தெரியவில்லை. உன்னைப் பார்த்தவுடன் நீ எனக்கு நல்ல தோழனாக இருப்பாய் என்று தோன்றியது.

என்னைப் பார்க்கும்போது எந்தப் பிரச்னையும் இல்லாதவளைப் போலவும் சிட்டுக்குருவியைப்போல் ஜாலியாக சுற்றித் திரிபவளைப் போலவும் உனக்குத் தோன்றலாம். ஆனால் நான் எப்போதோ என் வாழ்க்கையை முடித்துக் கொண்டிருக்க வேண்டியவள். என் மகள் நித்யாவுக்காகத்தான் இன்னமும் உயிருடன் இருக்கிறேன்.

நாங்கள் மொத்தம் ஒன்பது குழந்தைகள். அதில் நான் ஐந்தாவது. ஏழு பெண்கள் இரண்டு ஆண்கள். இதில் மூன்று போக ஆறுதான் தங்கினது. எனக்கு மேல் இரண்டு அக்கா. அண்ணா. இரண்டு தங்கைகள்.

அப்பாவுக்கு டி.வி.எஸ்ஸில் வேலை. அக்கா பிறந்ததுமே அம்மாவுக்கு மனநிலை பாதிக்கப்பட்டு விட்டது. அம்மா ஒரு பள்ளியில் தலைமை ஆசிரியையாகப் பணிபுரிந்தவள். எனக்கும் அக்காவுக்கும் மூணு வருட வித்தியாசம். நான் பிறக்கும்போது அம்மாவின் மனநிலை மோசமாகவே இருந்திருக்கிறது.

என்னை ஒரு நாய்தான் வளர்த்தது என்று எல்லோரும் சொல்வார் கள். வீட்டில் வளர்ந்த நாய் அது. நான் சின்னக் குழந்தையாக இருந்தபோது படுக்கையில் அசிங்கம் பண்ணிவிட்டால் அந்த நாயே குரைத்துக் குரைத்து அக்காவைக் கூப்பிடுமாம். யாரும் வராவிட்டால் படுக்கையோடு என்னை இழுத்துக்கொண்டுபோய் காண்பிக்குமாம். ஒரு சர்க்கஸ் நாய் என்னவெல்லாம் செய்யுமோ அத்தனையும் செய்து என்னை வளர்த்ததாம். அதோடு சேர்ந்து அக்கம்பக்கத்தில் உள்ளவர்களும் என்னை வளர்த்தார்கள்.

நான் அந்தச் சூழ்நிலையிலும் அழகாகக் கொழுகொழுவென்று இருப்பேனாம். அதனால்தான் என்னைப் போட்டி போட்டுக்கொண்டு வளர்த்தார்கள். இப்போதுகூட அவர்களில் யாராவது என்னைப் பார்த்தால் அழகி என்றுதான் கூப்பிடுகிறார்கள். ஆனால் இந்த அழகே எனக்குச் சத்ருவாக அமைந்துவிட்டதை நான் பின்னால் சொல்கிறேன்.

தாயின் அரவணைப்பை நான் என்றுமே உணர்ந்தது கிடையாது. தாயின் உடல் சூடும் அந்தக் கதகதப்பும் என்னவென்று தெரியாமலேயே நாங்கள் வளர்ந்தோம். என் பெரிய அக்கா மைதிலி என்னைவிட மிகவும் பெரியவள். எனக்கும் அவளுக்கும் கிட்டத்தட்ட பதினைந்து வயது வித்தியாசம். அவள்தான் என்னை ஒரு தாய்போல் பார்த்துக் கொண்டாள். அப்பாவுக்கு எப்போதுமே என் சிறிய அக்கா கீதாவையும் என் முதல் தங்கை வத்சலாவையும் மட்டுமே பிடிக்கும்.

என்னவென்றே தெரியவில்லை. கீதா என்னை எப்போதும் அடித்துக் கொண்டே இருப்பாள். எனக்கு நன்றாக ஞாபகம் இருக்கிறது. நான் அப்போது ஃபர்ஸ்ட் ஸ்டாண்டர்ட் படித்துக்கொண்டிருந்தேன். ஸ்கூலில் எங்கள் எல்லோரையும் எக்ஸ்கர்ஷனுக்கு மகாபலிபுரம் கூட்டிச் சென்றார்கள். ஆனால் கீதா மட்டும் நான் வரக்கூடாது என்றாள். என் கிளாஸ் டீச்சருக்கு நான் என்றால் உயிர். அதனால் டீச்சரே மிகவும்

வற்புறுத்தி என்னையும் கூட்டிச் சென்றார்கள். வழியெல்லாம் கீதா என்னை அடித்துக்கொண்டே வந்தாள்.

மகாபலிபுரம் கடற்கரையில் நின்று கொண்டிருந்தோம். அப்போது எங்கிருந்து வந்தாளோ தெரியாது. திடீரென்று வந்து தரதரவென்று என்னை இழுத்துக் கொண்டுபோய் கடல் அலையில் தள்ளி விட்டாள் கீதா. யாருக்கும் என்ன செய்வதென்றே தெரியவில்லை. அலை என்னை அடித்துக் கொண்டு செல்ல ஆரம்பித்தது. அதிர்ஷ்டவசமாக நான் ஒரு பாறையின் நடுவில் சிக்கி விட்டேன். அப்போது அந்தப் பக்கமாக வந்த மீனவர்கள்தான் என்னைக் காப்பாற்றினார்கள். அதற்குள் நான் எக்கச்சக்கமாக கடல் நீரைக் குடித்திருந்தேன். என் கால்களைப் பிடித்துக் கொண்டு தட்டாமாலையாய் சுற்றித்தான் தண்ணீரையெல்லாம் வெளியே எடுத்துப் பிழைக்க வைத்ததாகப் பிறகு சொன்னார்கள். வீட்டுக்கு வந்ததும் அக்காவிடம் இதைச் சொன்னேன். அவள் அப்பாவிடம் சொன்னாள். அவள் செத்தாலும் பரவாயில்லை நீ ஏன் கீதாவை அடித்தாய் என்று கீதாவுக்குத்தான் பரிந்து பேசினார் அப்பா.

அப்பாவின் போக்கை என்னால் புரிந்துகொள்ளவே முடிய வில்லை. புரிந்து கொள்ளும் நிலையிலும் நான் இல்லை. அம்மாவின் நிலைமை மோசமாகிக் கொண்டே வந்தது. எனக்கும் என் தங்கை வத்சலாவுக்கும் மூன்று வருட இடைவெளி. அவள் மிகவும் நோஞ்சானாகவும் மூன்று வயது வரை பேசாமலும் நடக்காமலும் இருந்தாள். அதனால் அக்காதான் அவளை வளர்க்க வேண்டியிருந்தது. அதனால் நான் அக்காவின் கவனிப்பையும் அன்பையும் இழக்க நேர்ந்தது.

அப்போது ஐந்தாம் வகுப்பு படித்துக் கொண்டிருந்தேன். திடீரென்று ஒரு நாள் விடியற்காலையில் வீட்டில் ஒரே ரகளை. எனக்கு ஒன்றும் புரியவில்லை. நான் எப்போதும் அக்காவுடன்தான் படுத்துக்கொள்வேன். எழுந்து பார்த்தால் அக்காவைக் காணவில்லை. நான் அழ ஆரம்பித்தேன். அதற்காக கீதாவிடமிருந்தும் அப்பாவிடமிருந்தும் எனக்கு அடிதான் கிடைத்தது.

ஆனால் ஒன்றுமட்டும் புரிந்தது. அக்கா காணாமல் போய்விட்டாள். இனி திரும்ப மாட்டாள் என்று. அவள் போன பிறகு கீதாவின்

அட்டகாசமும் அப்பாவின் கொடுமையும் இன்னும் அதிகமாகியது.

ஏற்கெனவே நாங்கள் மற்றவர்கள் வீட்டில்தான் சாப்பிட்டு வளர்ந்தோம். எப்படிச் சாப்பிட்டோம் எப்படி பள்ளிக்குச் சென்றோம் என்று நினைத்தால் இன்றுகூட என் கண்கள் கலங்குகிறது.

அக்கா போன பிறகு எனக்கென்று யாருமே இல்லை. அம்மாவின் நிலைமையைச் சொல்லவே முடியவில்லை. எங்களைக் கண்டாலே அடிப்பதற்கு விரட்டிக் கொண்டு வருவாள். கையில் எது கிடைத்தாலும் அதை எடுத்து அடித்து விடுவாள். நாளாக நாளாக அக்கம் பக்கத்தினர் எங்களைப் பிச்சைக்காரர்களைப் போல் நடத்தினார்கள். நாங்கள் அவர்கள் சாப்பிடும்போது போய் நின்றால் ஈவு இரக்கமின்றி விரட்டி விடுவார்கள். ஒருநாள் நானும் என் தங்கையும் பசி தாங்காமல் அம்மாவிடம் சென்று அழுதோம். உடனே அவள் இருங்கள் இதோ ஏதாவது கொண்டு வருகிறேன் என்று சொல்லிவிட்டு அடுக்களைக்குள் போனாள். திரும்பி வந்தபோது அவள் கையில் அரிவாள்மனை இருந்தது. எங்கள் இருவரையும் வெட்ட வந்தாள். வத்சலா ஓடிவிட்டாள். நான் மாட்டிக் கொண்டேன். தப்பித்து ஓட முயன்றபோது என் நீண்ட ஜடை அவள் கையில் சிக்கிக் கொண்டது. ஜடையை இழுத்துப் பிடித்து என் கழுத்தின்மீது அரிவாள்மனையை ஓங்கினாள். அரிவாள்மனை கழுத்தை நோக்கி இறங்கியபோது ஒரு கணம் என் பலத்தையெல்லாம் சேர்த்து தலையைப் பின்னுக்கு இழுத்தேன். கூந்தலில் வெட்டு விழுந்து என் ஜடை அவள் கையோடு போனது. ஓடி வந்து விட்டேன்.

என் அக்கா போனதிலிருந்து நான் தனியாகத்தான் படுத்துக்கொண்டேன். இரவில் அக்காவைத் தேடி அழுவேன். கனவில் அடிக்கடி அம்மா என் தலையை வெட்டுவதாகவும் தலை துண்டாகி தனியே போய் விழுவதாகவும் வந்து திடுக்கிட்டு எழுவேன். சில சமயங்களில் கடல் அலைகளுக்கிடையே மாட்டி கடலுக்குள் மூழ்கி விடுவேன். மூச்சு முட்டி கை கால்களை உதைத்துத் திமிறிக்கொண்டு எழுவேன். அப்பா என்னை அடித்து அடித்து அடி தாங்க முடியாமல் மயக்கமடைந்து விழுவேன். கனவில் மட்டுமல்ல. நிஜத்திலும் அப்படித்தான். தூங்கி எழுந்தது முதல் தூங்கப் போகும்வரை அடியும்

திட்டும்தான். திட்டு என்றால் சாதாரண திட்டு இல்லை. அந்த மாதிரி வார்த்தைகளை சேரிகளில்கூடக் கேட்க முடியாது. நீ எவனுடனோ ஓடிவிடத்தான் போகிறாய். நீ ஒரு அவுசாரி. நீ ஒரு தேவிடியா. இன்னும் எவ்வளவு எவ்வளவோ. இதெல்லாம் ஒரு சிறுமியிடம் ஒரு அப்பா பேசக்கூடிய வார்த்தைகளா? நான் இன்றும் ஒரு குழந்தையாக இருப்பதால்தான் என்னால் இப்போதும் இந்த பயங்கரமான சூழ்நிலையிலும் சந்தோஷமாக வாழ முடிகிறது. நான் இன்னும் என் அக்கா விட்டுச் சென்ற ஒரு ஐந்தாம் வகுப்பு மாணவியாகவே மனதளவில் இருக்கிறேன்.

இதற்கிடையில் என் அப்பா யாரிடமோ என் ஜாதகத்தைக் காண்பிக்கப்போக இந்தக் குடும்பத்தின் மோசமான நிலைமைக்கு நான்தான் காரணம் என்று சொல்லிவிட்டார் அந்த ஜோதிடர். அப்போது நடந்ததை என்னால் எப்போது மறக்க முடியுமோ தெரியவில்லை.

பொதுவாக நான் என் அப்பாவுக்கு எதிரில் வருவதற்கே பயப்படுவேன். அவர் என்னை ஒரு வேலைக்காரியைவிடக் கேவலமாக நடத்தினார். கீதாவின் அதிகாரமும் அதிகமாகி விட்டது. அண்ணாதான் எங்கே போனாலும் என்னை அழைத்துக் கொண்டு போவான். அவன் ஒருநாள் வெளியே போயிருந்தபோது கீதாவிடம் என்னைப் பார்த்துக் கொள்ளச் சொல்லிவிட்டுப் போனான். கீதா என்னை விளையாட சேர்த்துக் கொள்ளவில்லை. அவள் தோழி பாவம் உன் தங்கை அவளையும் சேர்த்துக்கொள்ளலாம் என்றாள். கீதா என்ன செய்தாள் தெரியுமா? நேராக என்னை இழுத்துக் கொண்டு போய் பக்கத்தில் இருந்த குப்பைத் தொட்டியின்மேல் மோதித் தள்ளினாள். அங்கே கிடந்த கண்ணாடித் துண்டுகள் என் புருவத்தில் பட்டு ரத்தம் கொட்டியது. அதைக்கூடக் கண்டு கொள்ளாமல் விளையாடினாள் அவள். அப்போது அந்தப் பக்கமாக வந்த எங்கள் குடும்ப டாக்டர் என்னைக் கூட்டிச் சென்று கண்ணாடித் துண்டை எடுத்து விட்டு மருந்து போட்டு என் அண்ணா வரும்வரை அவர் வீட்டிலேயே வைத்திருந்து அண்ணா வந்ததும் அவரிடம் ஒப்படைத்தார்.

நான் நன்றாகக் கவிதை எழுதுவேன். படம் வரைவேன். பாடுவேன். வானொலியில்கூட பாடும் வாய்ப்பு கிடைத்தது. நானும் போய்ப்

பாடினேன். அதனாலேயே அன்றைக்கு கீதா விடமிருந்து அதிகமான அடி கிடைத்தது. நான் வத்சலா கீதா மூன்று பேரும் ஒரே ஸ்கூலில்தான் படித்தோம். கீதாவும் வத்சலாவும் அடிக்கடி பள்ளிக்கு வரமாட்டார்கள். அதனால் நான்தான் பள்ளியில் திட்டும் அடியும் உதையும் வாங்க நேர்ந்தது. நான் மிகவும் பயந்த சுபாவம் கொண்டவள். அதனால் நான் இதையெல்லாம் அப்பாவிடம் சொன்னதில்லை.

நான் எட்டாம் வகுப்பு படிக்கும்போதுதான் எனக்குத் தெரிந்தது. என் அக்கா அவளுக்குத் தெரிந்த ஒருவரைத் திருமணம் செய்துகொண்டு போய்விட்டாள் என்பது. இன்று அவள் உயிரோடு இல்லை. நான் அவளைப் போலவே இருக்கிறேன் என்பதும் அப்பாவுக்கு என் மீதான வெறுப்பை அதிகப்படுத்தியிருக்கலாம். ஆனால் வீட்டுச் சூழ்நிலை எப்படியிருந்தாலும் வகுப்பில் நான் தான் முதலாவது மாணவி. படிப்பிலும் சரி விளையாட்டிலும் சரி.

விளையாட்டு என்றதும் சில விஷயங்கள் ஞாபகம் வருகின்றன. முக்கியமாக என் தோழி வசுமதி. அவள் என் பக்கத்து வீட்டுப் பெண். நாங்கள் இருவரும் பார்ப்பதற்கு ஒரே மாதிரியாகத்தான் இருப்போம். அவளுடன் நான் விளையாடிய நாட்களை என்னால் மறக்கவே முடியாது.

பறவைகள்போல் கட்டுப்பாடற்று சுற்றித் திரிந்த நாட்கள் அவை. அப்போது நாங்கள் கிருஷ்ணா நகரில் இருந்தோம். பல்லாவரத் துக்கும் பம்மலுக்கும் இடையில் மெயின் ரோட்டிலிருந்து இறங்கி மூன்று கிலோமீட்டர் மண் ரோட்டில் நடந்தால் கிருஷ்ணா நகர்.

அப்போது அங்கே நிறைய வீடுகள் இல்லை. எங்கு பார்த்தாலும் வயலும் தோப்பும்தான். சாயங்காலம் ஆறு மணி ஆனவுடனே நரிகள் ஊளையிட ஆரம்பித்துவிடும்.

ஒரு நாள் நாங்கள் விளையாடிக் கொண்டிருந்தபோது இருட்டி விட்டது. வீட்டிற்குப் போகும் வழியில் இரண்டு நரிகள் எங்களைத் துரத்த நான் வசுமதி கீதா அண்ணா நான்கு பேரும் என்ன செய்வது என்று தெரியாமல் அங்கேயிருந்த ஒரு பிள்ளையார் கோயிலுக்குள் சென்று பிள்ளையார் சிலையின் பின்னால் ஒளிந்துகொண்டோம்.

நீண்டநேரம் கழித்து வசுமதியின் அப்பா வந்துதான் எங்கள் எல்லோரையும் கூட்டிச் சென்றார். அந்த இடத்தில் இப்போது வயலும் இல்லை. சோலையும் இல்லை. ஓடையும் இல்லை. எல்லாம் ஒரே கட்டாந்தரையாகவும் வீடுகளாகவும் மாறிவிட்டது. இவ்வளவு குறுகிய காலத்தில் இந்த அளவுக்கு ஒரு இயந்திர மாற்றமா என்று ஆச்சரியமாகத்தான் இருக்கிறது.

வீட்டில் வாங்கிய அடிகளுக்கு வசுமதியுடன் விளையாடிய விளையாட்டுதான் ஆறுதல். மண்ணில் சின்னச் சின்ன சொம்புகள் செய்து காய வைத்து அதில் சமையல் செய்து விளையாடுவோம். ஒருநாள் வசுமதி அவள் அம்மாவுக்குத் தெரியாமல் வெல்லம் பருப்பு அரிசி எல்லாம் திருடிக் கொண்டு வந்தாள். கொல்லையில் பொங்கல் சமைத்துச் சாப்பிட்டோம். அப்போது எனக்கு என்ன வயது தெரியுமா? பத்து அல்லது பதினொன்று இருக்கும்.

கிருஷ்ணா நகரிலிருந்து பல்லாவரத்தில் இருக்கும் எங்கள் ஸ்கூலுக்கு குறுக்கே மண் பாதை வழியாக நடந்து போவோம். வழியில் ஒரு மாந்தோப்பு இருக்கிறது. அங்கே காத்தாயி என்று ஒரு பைத்தியம் இருந்தாள். மனிதர்களுக்கு மட்டும் ஏன்தான் பைத்தியம் பிடிக்கிறதோ? விலங்குகளுக்குப் பிடிக்கிறதா? நீயே சொல் சூர்யா. என் அம்மா என் தோழி வசுமதி. ஆமாம். (அவளுக்கும் பைத்தியம் பிடித்துவிட்டது. அதைப் பிறகு சொல்கிறேன்.) வசுமதியின் புக்ககத்தில் இருந்த இரண்டு சிறுவர்கள். இந்தப் பைத்தியக்காரர்கள் லிஸ்டில் நானும் சேர்ந்திருப்பேன். நல்லவேளையாக தெய்வம் என்மீது கருணை காட்டி உன்னை அனுப்பி வைத்துவிட்டது.

சரி. காத்தாயிக்கு அந்தப் பெயரை யார் வைத்திருப்பார்கள்? அவர்கள் இப்போது எங்கே? அவளுக்கு உறவு என்று சொல்ல யாருமே இல்லையா? ஏன் அவள் இப்படி அம்மணக்குண்டியாய் சுற்றித் திரிகிறாள்? யாராவது காத்தாயி என்று கூப்பிட்டால் திரும்பிப் பார்ப்பாள். அப்போது அந்தப் பெரிய கண்களில் தெரியும் மிரட்சியை என்னால் இன்னமும் மறக்க முடியவில்லை. அவள் அம்மணக்குண்டியாய் இருப்பதைப் பார்த்து எவனாவது ஒரு பையன் கல்லெடுத்து அடித்து விட்டால் தொலைந்தது. வினோதமான

சப்தங்களை எழுப்பியபடி எங்கள் எல்லோரையும் அடிக்க வந்துவிடுவாள்.

நானும் வசுமதியும் இன்னும் ஏழெட்டு பேரும் சேர்ந்து சைக்கிள் பந்தயம் வைத்துக்கொண்டு ஜாலியாக சைக்கிளில் பறப்போம். பாவாடையைக் கீழ்ப்பாய்ச்சு கட்டிக் கொண்டு கண்ணாமூச்சி விளையாடும்போது எவ்வளவு பெரிய சுவர்களாக இருந்தாலும் கண்ணிமைக்கும் நேரத்தில் தாண்டிவிடுவோம்.

மழைக்காலம் வந்தால் எங்கள் கொண்டாட்டத்துக்கு அளவே இருக்காது. ஏரி நிரம்பி வழியும். கரை உடைந்து விட்டால் ஊருக்குள் தண்ணீர் வந்து விடும் என்று அதன் மதகைத் திறந்து விடுவார்கள். ஏரியிலிருந்து அடித்துக்கொண்டு வரும் அந்தத் தண்ணீரில்தான் எத்தனை எத்தனை அழகான மீன்கள்! அவைகளைப் பிடித்து கிணற்றில் விடுவோம். ஒவ்வொரு நாளும் அந்த மீன்கள் எவ்வளவு வளர்ந்துள்ளது உயிருடன் இருக்கிறதா என்று சூரியன் பனிரெண்டு மணிக்கு உச்சியில் வந்து கிணற்றில் விழும்போது பார்த்து ரசிப்போம். பொறி வாங்கிப் போட்டு அந்த மீன்கள் அதைக் கவ்வித் தின்பதைப் பார்ப்போம். மாலை வேளைகளில் அந்த ஏரிக்கரை மீது உட்கார்ந்து பேசிக் கொண்டிருப்போம். கரையெல்லாம் முள்ளு டிசம்பர் பூக்கள் பூத்துக் குலுங்கிக் கிடக்கும். எல்லோரும் சேர்ந்து பறித்துத் தொடுத்து சரிசமமாய் வெட்டி வைத்துக்கொள்வோம்.

எங்கள் வீட்டுக்குப் பக்கத்தில் ஒரு கால்வாய் இருந்தது. அந்தக் கால்வாயில்தான் நீந்தக் கற்றுக் கொண்டோம். நீருக்கடியில் எவ்வளவு நேரம் இருக்க முடியும் என்று பந்தயம் வைத்துக்கொண்டு விளையாடுவோம்.

மழைக்காலமே சந்தோஷம்தான். அந்த மழையில் சொட்டச் சொட்ட நனைந்து கொண்டே விளையாடுவோம். கால்வாயில் நீந்துவோம். எருமையோட சேந்துண்டு நீங்களும் ஊர்றேளா ஆம்பளப் பசங்களுக்கு சரியா கொட்டம் அடிக்கிறேளோல்லியோ காதுதான் அறுந்து தொங்கப் போறது என்று வசுமதியின் அம்மா வந்து எங்களைத் திட்டுவாள்.

ஊரில் ஒரு பஞ்சாயத்து ஆபீஸ். அங்கே மதில் இல்லாத ஒரு

கிணறு இருக்கிறது. மழை பெய்து முடிந்தவுடன் ஒருமுறை அந்தக் கிணற்றில் தண்ணீர் எவ்வளவு உள்ளது என்று பார்க்கப் போய் கிணறு எது என்று தெரியாமல் வசுமதி அதில் விழுந்து விட்டாள். அண்ணாதான் உடனே கிணற்றில் குதித்து அவளைக் காப்பாற்றினான்.

மழை நாட்களில் தும்பிகளைப் பிடித்து விளையாடுவது எங்களுக்கு மற்றொரு பொழுதுபோக்கு. தும்பிகளைப் பிடித்து அவற்றை சின்ன கற்களைத் தூக்க வைத்து விளையாடுவதுதான் அந்த விளையாட்டு. வாலில் நூலைக் கட்டி பறக்க விடுவதும் உண்டு.

கோடை விடுமுறை என்றால் பட்டாம்பூச்சிகள். பட்டாம்பூச்சி களை பாட்டிலில் அடைத்தும் வேடிக்கை பார்ப்போம். அணில் குட்டியைப் பிடித்து வளர்ப்போம். அப்பாவுக்குத் தெரியாமலேயே நீண்ட நாட்கள் நான் ஒரு அணில் குட்டியை வளர்த்து வந்தேன். அதன் முதுகை வருடுவதுதான் எவ்வளவு மிருதுவாக இருக்கும் தெரியுமா? என் தோளிலேயேதான் உட்கார்ந்திருக்கும் அந்த அணில் குட்டி. அணில் குட்டிக்குப் பால் ரொம்பப் பிடிக்கும். பாலைக் கையில் எடுத்து அதன் வாயில் சொட்டு சொட்டாக விடும்போது சுவைத்துக் குடிக்கும் என் அணில் குட்டி. ஆனால் ஒருநாள் அப்பா அதை என் தோளில் பார்த்து விட்டு அதன் வாலைப் பிடித்துத் தூக்கியெறிந்து விட்டார். எனக்கும் செம உதை விழுந்தது. அத்தனை அடியையும் வாங்கிக்கொண்டு அப்பா மறைந்ததும் அணில் குட்டியை எடுத்து அதன் வாயில் தண்ணீர் ஊற்றினேன். வழக்கம்போலவே துள்ளிக் குதித்து விளையாடியது. நல்ல காலம். அடி பலமில்லை.

பிறகு அதை வசுமதிதான் வளர்த்தாள். வசுமதியின் வீட்டில் ஒன்றும் சொல்ல மாட்டார்கள். வசுமதியின் அப்பா அம்மாவுக்கு வசுமதி ரொம்பவும் செல்லம்.

கோடை விடுமுறையில் செடி வேட்டைக்குப் போவோம். எங்கெல்லாம் என்னென்ன செடிகள் கிடைக்குமோ அதையெல்லாம் கொண்டு வந்து வைத்து தண்ணீர் ஊற்றி வீட்டையே ஒரு சோலையாக மாற்றி விடுவோம்.

அந்த ஏரியாவில் நாங்கள் ஏறாத மரங்களே இல்லை என்று சொல்லி விடலாம். யார் வீட்டிலும் ஒரு மரமும் பழுத்துவிடக் கூடாது.

வீட்டுக்காரர்கள் குரங்குகளைக் கண்டு பயந்ததைவிட எங்களைக் கண்டு பயந்ததுதான் அதிகம்.

மதிய வேளையில் அவர்கள் தூங்கும்போது மாமரங்களின்மீது ஏறி மாங்காய்களைப் பறித்து மரத்தின் மேலேயே உட்கார்ந்துகொண்டு உப்பு மிளகாய்ப் பொடி தொட்டுச் சாப்பிடுவோம். அவர்கள் தூங்கி எழுவதற்கு முன் நாங்களே சிட்டாய்ப் பறந்து விடுவோம். அப்படி எங்களிடம் மாட்டிக் கொண்ட வீடுகளில் முக்கியமானது எங்கள் பக்கத்து வீடு. அங்கே ஒரு மாமரம் இருந்தது. அந்த மரத்து மாங்காய்கள் தித்திப்பாக இருக்கும். ஆனால் எங்கள் வீட்டுக்கும் பக்கத்து வீட்டுக்கும் இடையில் ஒரு பெரிய சுவர் நின்றது. நானும் அண்ணாவும் அந்தச் சுவரை ஏறிக் குதித்து மரத்தில் ஏறி காய்களைப் பறித்து விடுவோம்.

அடிக்கடி இப்படிக் காய்கள் திருடு போவதைப் பார்த்து பக்கத்து வீட்டுக்காரர்கள் சுவரின்மேல் கண்ணாடித் துண்டுகளைப் பதித்தார்கள். நாங்கள் அந்த கண்ணாடித் துண்டுகளையும் எடுத்துப் போட்டு விடுவோம். அப்படி எடுத்துப் போட்டு விட்டுத் தாண்டும்போது ஒரு முறை சுவரிலேயே தங்கிவிட்ட கண்ணாடித் துண்டு ஒன்று என் காலைக் கிழித்துவிட்டது. தொடையெல்லாம் ஒரே ரத்தம். ஆனால் எனக்கு வலியே தெரியவில்லை. இன்னமும் அந்தக் காயம் ஒரு நீண்ட கோடாக தொடையிலிருந்து கால் வரை ஓடுகிறது.

பக்கத்து வீட்டு மாமிக்கோ கண்ணாடித் துண்டுகள்கூட மாயமாய் மறைந்து விடுவது பற்றி ஒரே கவலை. திருடர்கள் இதைக்கூட எடுத்து விடுகிறார்களே என்று மாமியோடு சேர்ந்து நாங்களும் கவலைப்பட்டோம். ஆனால் மாமிக்கு பயமும் வந்துவிட்டது. கண்ணாடித் துண்டுகளையே எடுத்து விடும் திருடர்கள் கத்தியை எடுத்து வந்து குத்திவிட்டால் என்ன செய்வது என்று அடிக்கடி சொல்லி கவலைப்படுவாள். எங்களுக்குச் சிரிப்பாய் வரும்.

மாமரம் மட்டுமா? தென்னை மரம் பனை மரம் என்று உயரமான மரங்களையும் நாங்கள் விடுவதில்லை. அரிவாளை எடுத்து இடுப்பில் செருகிக்கொண்டு பனை மரத்தில் ஏறி நுங்குகளை குலைகுலையாய்ப் பறித்து ஓட்டை போட்டு உறிஞ்சிக் குடிப்போம். ஒரு முறை அப்படி நுங்கு வெட்டும்போது கையில் கட்டெறும்பு கடித்து விட்டது. எவ்வளவு

தட்டிவிட்டும் போகவில்லை. கடிக்கக் கடிக்க ரத்தமும் கொட்ட ஆரம்பித்தது. அந்த வலியுடனேயே மரத்தை விட்டு இறங்கினேன். என்ன செய்வதென்று புரியவில்லை. வசுமதி அம்மாவிடம் ஓடினேன். அவள் என் கையில் கட்டெறும்பு கடித்துக் கொண்டிருந்த இடத்தில் நெருப்பால் சூடு போட்டபோதுதான் அந்த எறும்பு கருகி விழுந்தது.

விளையாட்டைப் போலவே படிப்பிலும் நான் படுசுட்டியாக இருந்தேன். கவிதை எழுதுவேன். அப்பாவிடம் பயம் என்பதால் அவர் இல்லாதபோது எழுதுவேன். நான் பத்தாம் வகுப்பு படித்துக் கொண்டிருந்தபோது கீதா பக்கத்துத் தெரு பையன் ஒருவனை விரும்பினாள். அவன் எங்கள் வீட்டுக்கு தினமும் வர ஆரம்பித்தான். நான் பாட்டுக்கு எதையும் கவனிக்காமல் கவிதை எழுதிக்கொண்டிருப்பேன். இதைப் பற்றி அக்கம்பக்கத்தில் உள்ளவர்கள் அப்பாவிடம் சொல்லி விட்டார்கள். அதற்காகவும் அப்பாவிடமிருந்து எனக்குத்தான் திட்டும் உதையும் கிடைத்தது. நான் விஷயத்தை அவரிடமிருந்து மறைத்துவிட்டேனாம்.

அந்தச் சமயத்தில் அண்ணா மேல் படிப்புக்காக பெங்களூரில் என் மாமா வீட்டுக்குப் போய்விட்டான். நான் வயதுக்கு வந்து விட்டேன். கீதா வயதுக்கு வந்தபோது அப்பா அதை விமரிசை யாகக் கொண்டாடினார். ஆனால் எனக்கு ஒரு புதுச் சட்டைகூட வாங்கித் தரவில்லை. எப்போதும் கீதா அண்ணா வத்சலா மூவருக்கும் டிரஸ் வாங்கினால் எனக்கு வேலைக்காரிக்குக் கொடுப்பதைவிட மோசமான டிரஸ்தான் வாங்குவார் அப்பா.

கடைசித் தங்கை அனிதா நான் ஏழாம் வகுப்பு படிக்கும்போது பிறந்தவள். அம்மாவுக்கு அவள் ஒன்பதாவது குழந்தை. அம்மாவுக்கு மனநிலை சரியில்லாமல் போனபிறகு பிறந்ததே நாங்கள் ஐந்து பேர். அதில் நான்தான் முதலாவது. அனிதா கடைசி.

கீதா ஸ்கூல் படிப்பு முடிந்து மீனாட்சி காலேஜில் பி.யு.சி. சேர்ந்தாள். அந்தப் பையன் எங்கள் வீட்டிற்கு தினம் வருவதும் கீதாவுடன் சேர்ந்து கொண்டு கூத்தடிப்பதும் தொடர்ந்துகொண்டிருந்தது.

அப்போது எனக்கு பதிமூன்று வயது இருக்கும். ஒருநாள் அவள் என்னை பல்லாவரம் ரயில்வே ஸ்டேஷனில் உட்கார வைத்துவிட்டுச்

சென்றவள் மாலை வரை வரவேயில்லை. எனக்கு மாலை ஆனது கூடத் தெரியவில்லை. ஸ்கூலுக்குப் போகவில்லை. அங்கே இருந்த ஸ்டேஷன் மாஸ்டர்தான் என்னை வீட்டுக்கு அனுப்பி வைத்தார். வீட்டுக்கு வந்தால் கீதாவைக் காணோம். நான் இந்த விஷயத்தை அப்பாவிடம் சொல்லப்போக வழக்கமாகக் கிடைக்கும் திட்டும் அடியும்தான் கிடைத்தது. பிறகு எங்கெல்லாமோ தேடி அந்தப் பையன் வீட்டில் கீதாவைக் கண்டுபிடித்தார்கள்.

இந்தச் சம்பவத்திற்குப் பிறகு அப்பா நாங்கள் குடியிருந்த கிருஷ்ணா நகர் வீட்டைக் காலி செய்துவிட்டு அரும்பாக்கம் வந்துவிட்டார். அதனால் என் படிப்பு பாதிக்கப்பட்டது. இனிமேல் உன்னை ஸ்கூலுக்கு அனுப்ப மாட்டேன் நீயாக சாமர்த்தியம் இருந்தால் படித்துக்கொள் என்று சொல்லிவிட்டார் அப்பா.

வத்சலாவை மட்டும் சேத்துப்பட்டு சேவாசதன் பள்ளியில் சேர்த்து விட்டார். நான் என் பெரிய மாமாவிடம் அழுது அடம் பிடித்து என் மார்க்குகளைக் காட்டி சேவாசதன் பள்ளியில் சேர்ந்தேன். வகுப்பில் இறுதித் தேர்வில் முதல் மாணவியாகவும் வந்தேன்.

எல்லா அப்பாக்களும் தன் குழந்தைகள் படிக்க வேண்டும் நன்றாக இருக்க வேண்டும் என்றுதான் விரும்புவார்கள். ஆனால் என் விஷயம் என்னவோ வேறு மாதிரி இருந்தது. எப்போதும் நான் வேலை செய்துகொண்டே இருக்க வேண்டும். இல்லை யென்றால் அடி திட்டு. இதற்குப் பயந்தே நான் அப்பாவின் எதிரில் படிக்கவே மாட்டேன். ஒருநாள் பள்ளி இறுதித் தேர்வு நடந்து கொண்டிருந்தது. நான் படித்துக் கொண்டிருந்தேன். அப்போது அதைப் பார்த்துவிட்ட அப்பா என் புத்தகங்களை யெல்லாம் கிழித்துக் கொளுத்திவிட்டார். அப்படியும் நான் ஏற்கெனவே படித்ததையெல்லாம் வைத்து எழுதி வகுப்பில் முதலாவது மாணவியாக வந்துவிட்டேன்.

அண்ணா விடுமுறையில் பெங்களூரிலிருந்து வந்திருந்தான். ஒரு நாள் மேஜையின் மேல் ஏதோ பலூனைப் போல் ஒன்று இருந்தது. நான் அதை எடுத்து ஊதி விளையாடிக்கொண்டிருந்தேன். மாலையில் அண்ணாவும் அப்பாவும் வந்தார்கள். நான் அந்த பலூனை வைத்து விளையாடுவதைப் பார்த்துவிட்டு அப்பா என்னைக் கண்டபடி அடித்து

நொறுக்கிவிட்டார். எல்லாவற்றை யும் பார்த்துக் கொண்டேயிருந்தான் அண்ணா. திடீரென்று அப்பாவிடம்போய் கத்தினான். அம்மா ஒரு பைத்தியக்காரி என்றும் பார்க்காமல் இந்த அம்பத்தஞ்சு வயதிலும் உனக்கு சுகம் கேட்கிறது. நீ ஏன் அதை அறிவுகெட்டத்தனமாக மேஜைமேல் வைத்துவிட்டு பச்சைக் குழந்தையான அவளைப் போட்டு அடிக்கிறாய்?

அண்ணா இப்படிக் கேட்டதுதான் தாமதம். வீட்டில் பெரிய கலாட்டாவே ஆகிவிட்டது.

இதற்கிடையில் காரணமே இல்லாமல் அம்மாவின் முடியைப் பிடித்து மோதி அடிப்பார் அப்பா. அம்மாவின் பல் உடைந்து ரத்தம் கொட்டும். முகம் வீங்கிப் போகும். எனக்குப் பரிந்துகொண்டு வரும் ஒரே குற்றத்துக்காக அம்மாவும் என் கண்ணெதிரி லேயே அப்பாவிடம் எவ்வளவு சித்ரவதைகளை அனுபவித்துக்கொண்டிருந்தாள் தெரியுமா?

அண்ணா லீவு முடிந்து திரும்பவும் பெங்களூர் சென்றுவிட்டான். பெரியம்மாவும் பெரியப்பாவும் கீதாவுக்காக மாப்பிள்ளை பார்க்க ஆரம்பித்தார்கள். அவளுக்காக வரும் மாப்பிள்ளைகள் யாரும் என்னைப் பார்த்து கேட்டுவிடக் கூடாது என்று என்னை வெளியிலேயே விடமாட்டார்கள்.

அப்போது ஒரு அண்ணன் தம்பி வரன் வந்தது. சீர் செய்வதில் ஏதோ பிரச்னை வந்ததால் அந்த அண்ணன்காரர் கீதாவை கல்யாணம் செய்து கொள்ளவில்லை.

எனக்கு அப்போது பதினாறு வயது. அப்போது தம்பி எனக்கு எந்த சீரும் வேண்டாம் கல்யாணச் செலவைக்கூட நான் பார்த்துக்கொள்கிறேன் உங்கள் பெண்ணை எனக்குக் கொடுத்துவிடுங்கள் என்று என்னைக் கல்யாணம் செய்துகொள்வதற்காக ஒரு வருடம் கெஞ்சினார். அதற்கு அப்பா அவளுக்கு நான் கல்யாணமே செய்யப் போவதில்லை என்று சொன்னார்.

ஆமாம் சூர்யா. அதேபோலத்தான் நடந்தது. இன்றுவரை எனக்கு கல்யாணமே நடக்கவில்லை.

பிறகு சில ஆண்டுகள் கழித்து கீதாவுக்குக் கல்யாணம் நடந்தது. அப்போது அவளுக்கு இருபது வயது.

அவள் கணவன் சரியான குடிகாரன். சூதாடி. இன்னும் இது போல நிறைய பழக்கங்கள் உண்டு. இரண்டு வருடங்களில் அவளுக்கு ஒரு ஆண் குழந்தை பிறந்தது.

நான் என் பதினாறு வயதிலிருந்தே வேலைக்குப் போய்க்கொண்டிருக்கிறேன். காலையில் நான்கு மணிக்கு எழுந்தால் காலை வேலைகளை முடித்துவிட்டு டைப்ரைட்டிங் இன்ஸ்டிட்யூட் போய்விட்டு வந்து வேலைக்குக் கிளம்புவேன். கீதாவும் அவள் கணவரும் எங்கள் வீட்டில்தான் இருந்தார்கள். இருவருக்கும் அடிக்கடி தகராறு நடக்கும். ஒருநாள் தகராறு முற்றியது. அப்போது கிளம்பிச் சென்றவர்தான். அதற்குப் பிறகு கீதாவின் கணவர் திரும்பவே இல்லை. நாங்கள் அப்போது குடியிருந்த வீட்டின் சொந்தக்காரருக்கு ஒரு மகன் இருந்தான். நான் படும் கஷ்டங்களையெல்லாம் பார்த்துவிட்டு அவனுக்கு என்னைக் கல்யாணம் செய்து கொள்ளவேண்டும் என்ற ஆசை வந்து விட்டது. அவன் இதைத் தன் தந்தையிடம் சொல்லப் போக அவர் என் அப்பாவிடம் இதை வேறுவிதமாகச் சொல்லி விட்டார். எனக்கு ஜாதகம் நன்றாகப் பார்க்கத் தெரியும் அதனால் உங்கள் வீட்டில் எல்லாருடைய ஜாதகத்தையும் காண்பித்தால் நான் பிரச்னை என்ன என்று சொல்லிவிடுவேன் என்றார். அப்பாவும் எல்லாருடைய ஜாதகத்தையும் காண்பித்தார். அவர் எல்லாவற்றையும் பார்த்துவிட்டு உங்கள் பெண் அவந்திகாவின் ஜாதகத்தில்தான் தோஷம் இருக்கிறது அதனால்தான் உங்களுக்கு இவ்வளவு கஷ்டங்களும் நான் பரிகாரம் செய்கிறேன் எல்லாம் சரியாகிவிடும் என்றார்.

ஒரு அமாவாசை இரவு. அண்ணா பெங்களூரில் இருந்தான். அந்த ஆள் தன் மனைவியையும் மகனையும் ஊருக்கு அனுப்பி விட்டார். சுமார் பதினொரு மணி இருக்கும். கீதா என்னை எழுப்பினாள். நான் எதற்கு என்று கேட்டபோது சத்தம் போடாதே எல்லாரும் எழுந்து விடுவார்கள் அப்பா உன்னை உடனே கூப்பிடுகிறார் வெளியில் நிற்கிறார் என்றாள். அப்பா என்றதுமே நான் எழுந்து வெளியே சென்றேன். நான் வெளியே வந்ததும் கீதாவும் அப்பாவும் வீட்டுக்

கதவை வெளியே தாள் போட்டு பூட்டி விட்டார்கள்.

அந்த மாமா ஏதோ பூஜை செய்யப் போறார் நீ உள்ள போ நாங்க இங்கயே நிக்கறோம் என்றாள் கீதா. நான் உள்ளே போனேன். போனதும் அந்த ஆள் கதவை உள்ளே தாள் போட்டுவிட்டார். மாமி எங்கே உங்க மகன் எங்கே என்று கேட்டேன். அதற்கு அவர் ஊர்லெ இல்லை என்றார். சொல்லிவிட்டு உன் டிரஸ்ஸையெல் லாம் கழட்டிடு உன் ஒடம்பிலெ ஒரு பொட்டுத் துணிகூட இருக்கப்படாது என்றார்.

நான் ரகளை பண்ண ஆரம்பித்தேன். அவர் உடனே அப்பாவை யும் கீதாவையும் கூப்பிட்டு இவொ நான் சொல்ற பிரகாரம் கேட்க மாட்டேங்கிறா என்னால எதுவும் முடியாது என்றார்.

அப்பாவும் கீதாவும் என்னை அடித்தார்கள். அடி தாங்க முடியாமல் கீழே விழுந்தேன். இரண்டு பேரும் மாற்றி மாற்றி என்னைக் காலால் உதைத்தார்கள். எனக்கு மயக்கமே வந்துவிட்டது. அந்த ஆள் வந்து இரண்டு பேரையும் விலக்கி விட்டு என்னை எழுப்பி உட்கார வைத்துச் சொன்னார்.

உன் மர்ம உறுப்பிலேர்ந்து விந்து எடுத்து அதெ மையா செஞ்சு தாயத்திலெ அடைச்சு உங்காத்திலே எல்லாருக்கும் குடுத்தாதான் உங்காத்துப் பிரச்னை தீரும்னு உங்கப்பாவிடம் சொன்னேன். அவரும் ஒப்புத்துண்டுட்டார். அதனாலெ நான் சொல்றபடி நீ கேக்கலேன்னா ஒனக்குத்தான் கஷ்டம்.

வார்த்தைகள் எங்கோ தூரத்திலிருந்து கேட்பதுபோல் ஒலித்தன.

அப்பாவும் கீதாவும் வெளியே போனார்கள். அந்த ஆள் மறுபடி யும் அறைக் கதவை மூடித் தாளிட்டார்.

அவர் என் அருகில் நெருங்கியதுமே என் உடம்பு நடுங்க ஆரம்பித்தது. அப்போது அந்த ஆள் ஃபர்ஸ்ட் நைட்டுன்னா பால் பழம் எல்லாம் வைப்பா நான் உனக்கு பிஸ்கட் தர்றேன் என்று சொல்லி என் வாயில் எதையோ போட்டார். நான் சிறிது நேரத்தில் மயக்கம் அடைந்தேன்.

அதற்குப் பிறகு அவர் என்னை என்ன செய்தார் என்று எனக்குத் தெரியாது. மணி சுமார் ஒன்று இருக்கும். எனக்கு விழிப்பு வந்தது.

அவர் ஒரு வெற்றிலையில் வெள்ளையான பிசுபிசுப்பான பேஸ்ட் போன்ற ஒன்றைக் காண்பித்து இதுதான் நான் எடுத்தது என்றார். அப்பாவையும் கீதாவையும் கூப்பிட்டுக் காண்பித்தார். பிறகு என்னையும் அப்பாவையும் கீதாவையும் மொட்டைமாடிக்கு அழைத்துச் சென்று ஏதோ பூஜை செய்து மறுநாள் எல்லோருக்கும் ஒரு தாயத்து கொடுத்தார். நான் அதைக் கட்டிக் கொள்ள மறுத்து மறுபடியும் அப்பாவிடம் அடி வாங்கினேன்.

அவர் மனைவிக்கு ஏதோ புரிந்துவிட்டதுபோல் இருக்கிறது. அவளுக்கு இந்தக் கல்யாணத்தில் இஷ்டமில்லை. இதுவே அவர்களுக்குள் பெரிய பிரச்னையாகி நாங்கள் அந்த வீட்டைக் காலி செய்துவிட நேர்ந்தது.

அப்பா பொதுவாகவே மற்ற பெண்களிடம் அதிகம் பேசுவார். அப்படி ஒருமுறை அவர் பேசிக் கொண்டிருந்தபோது என் அம்மா பார்த்துவிட்டு வாயிலும் வயிற்றிலும் அடித்துக்கொண்டாள். நான் அப்போதுதான் வேலைக்குப் போய்விட்டு வீட்டுக்குத் திரும்பி வந்து கொண்டிருந்தேன். இந்த ரகளையைப் பார்த்துவிட்டு கொஞ்சம் துணிச்சலாக அம்மாவுக்குத்தான் பிடிக்கலையே நீ ஏன் பேசறே என்று கேட்டேன். உடனே அவர் என்னை அசிங்கமான வார்த்தைகளால் திட்டி அந்தப் பெண் எதிரிலேயே நடுத்தெருவில் வைத்து என்னைக் கண்மண் தெரியாமல் அடித்தார். நான் மயக்கமடைந்து விட்டேன். கே.எம்.சி.யில் அட்மிட் பண்ணினார்கள். அப்போதிருந்துதான் எனக்கு நெர்வஸ் ப்ராப்ளம் ஆரம்பமானது. ஒரு சிறு சப்தத்தைக் கூட என்னால் தாங்கிக் கொள்ள முடியாதவளாகி விட்டேன்.

டாக்டர் கார்டினால் மாத்திரைகள் கொடுத்தார். சிறிதளவுதான் குணம் தெரிந்தது. அண்ணா ஊரிலிருந்து வந்து விட்டான். என் உடல்நிலை சரியில்லாதது பற்றிக் கவலைப்பட்டான். அவன் வெளியே போயிருந்தபோது அப்பா என்னைத் திரும்பவும் அடித்தார். திட்டினார். நான் இருபது கார்டினால் மாத்திரைகளை விழுங்கினேன். சிறிது நேரத்தில் என் சுயநினைவு தப்பிவிட்டது. அண்ணாதான் என் நிலைமையைத் தெரிந்துகொண்டு எங்கள் குடும்ப டாக்டரை வரவழைத்துப் பார்த்து என்னை கே.எம்.சி. யில் அட்மிட் பண்ணிக்

காப்பாற்றிவிட்டான். பத்து தினங்கள் தூங்கிக் கொண்டே இருந்ததாக பிறகு தெரிந்து கொண்டேன். அதற்குப் பிறகு அப்பாவுக்கும் அண்ணாவுக்கும் அவ்வளவாக பேச்சுவார்த்தை இல்லாமல் போனது.

அண்ணா எப்போதெல்லாம் வீட்டில் இல்லையோ அப்போ தெல்லாம் சித்ரவதை நடக்கும். நான் ஏன்தான் உயிருடன் இருக்கிறேன் என்று தோன்றும். அண்ணா ஏன் என்னைக் காப்பாற்றிவிட்டான் என்று விசனமாக இருக்கும். அதனால் முடிந்த அளவு வீட்டில் இருக்கும் நேரத்தைக் குறைத்துக்கொண்டேன். எப்போதும் கோயில்களே கதி என்று கிடந்தேன். ஆபீஸ் போகும் நேரம் தவிர ஞாயிற்றுக்கிழமைகளில்கூட கோயில்தான். மாங்காடு குன்றத்தூர் திருவேற்காடு என்று கோயில் கோயிலாகச் சுற்றுவேன். அங்கே போய் தனிமையில் உட்கார்ந்து அழுவேன்.

அப்படி ஒருநாள் திருவேற்காடு சென்றிருந்தபோது அரவிந்தன் என்று ஒருவர் என்னை என் வீடு வரைக்கும் ஃபாலோ பண்ணி வந்திருக்கிறார். மறு ஞாயிறு நான் கோயிலுக்குப் போன பிறகு என் வீட்டுக்கு வந்து உங்கள் மகளை நான் திருமணம் செய்துகொள்ள விரும்புகிறேன் என்று சொல்லியிருக்கிறார்.

நான் கோயிலிலிருந்து வந்ததும் வழக்கமான பூஜைகள் நடந்தது. இது தினமும் நடப்பதுதானே என்று நினைத்துக்கொண்டு சும்மா இருந்துவிட்டேன். பிறகுதான் எனக்கு அந்த விஷயமே தெரிந்தது.

ஒரு இரண்டு வாரம் கழித்து அந்த நபர் என் ஆபீசுக்கே வந்து விட்டார். என்னிடம் நிறைய பேசினார். நானும் அவருடன் பழக ஆரம்பித்தேன். சிறிது நாட்களுக்குப் பிறகு நாங்கள் மகாபலிபுரம் சென்றோம். அவர் என்மீது காட்டிய அன்பினால் நான் அவர் என்ன சொன்னாலும் செய்யக் கூடிய நிலைமையில் இருந்தேன்.

அதனால் என் மகள் நித்யாவை என் வயிற்றில் சுமந்தேன்.

நான் கருவுற்று விட்டது தெரிந்ததும் அரவிந்தன் கருவைக் கலைத்து விடுமாறு சொன்னார். நாம்தான் திருமணம் செய்துகொள்ளப் போகிறோமே என்றேன். நான் சும்மாதான் ஆரம்பத் தில் அப்படிச் சொன்னேன் என்னால் உன்னைத் திருமணம் செய்து கொள்ள

முடியாது என்றார் அவர். இதற்கிடையில் என் வீட்டில் உள்ளவர்கள் அவரை ஆள் வைத்து மிரட்டி என்னை விட்டு விட்டுச் சென்றுவிட வேண்டும் என்று சொல்லியிருக்கிறார்கள். நான் கருவுற்றிருப்பது தெரிந்ததும் நீ அவனைக் கல்யாணம் செய்துகொண்டாலும் சரி இல்லையென்றாலும் சரி இந்த வீட்டில் இனிமேல் இருக்கக் கூடாது என்று சொல்லிவிட்டார் அப்பா.

நடப்பது நடக்கட்டும் என்று அரவிந்தனிடம் நான் கருவைக் கலைக்க மாட்டேன் இஷ்டம் இருந்தால் என்னைத் திருமணம் செய்துகொள் இல்லையென்றால் நீயும் போய்விடு நான் வீட்டை விட்டுவந்து ஏதாவது விடுதிக்குச் சென்றுவிடுகிறேன் என்றேன்.

நித்யா ஐந்து மாதக் கருவாக இருக்கும்போது என் வீட்டை விட்டு ஒரு பிச்சைக்காரியைப்போல் விரட்டப்பட்டேன். ஆமாம். அன்றுவரை நான் சம்பாதித்த என் சம்பளம் சேமிப்பு அவ்வளவையும் வாங்கிக் கொண்டு விட்டார் அப்பா.

என் தோழி ஒருத்தி எனக்காக வீடு எடுத்துக் கொடுத்தாள். நான் அரவிந்தனிடம் சொன்னேன். நீ இஷ்டம் இருந்தால் என்னுடன் வந்து இரு இல்லையென்றால் உன் வழியைப் பார்த்துக்கொண்டு போ என்று. அவனுக்கு என்ன தோன்றியதோ என்னோடு வந்தான்.

அன்று அமாவாசை. நானே ஒரு கடைக்குப் போனேன். ஏதோ ஒரு தாலி வாங்கினேன். மெட்டி வாங்கினேன். வீட்டுக்கு வந்தேன். அம்மனிடம் வைத்தேன். என் கழுத்தில் நானே கட்டிக்கொண்டேன்.

அதன் பிறகுதான் அரவிந்தனின் சுயரூபம் தெரிய ஆரம்பித்தது. அவனிடம் நான் வாங்காத உதை கிடையாது. நான் கர்ப்பிணி யாய் இருக்கும்போதே அவன் என்னை எட்டி உதைத்தான். சுவற்றில் மோதி சித்ரவதை செய்தான். கர்ப்பிணி என்றும் பார்க்காமல் நான் பிரசவத்திற்காக ஆஸ்பத்திரி சென்ற அன்றுகூட தன் வேட்கையைத் தீர்த்துக் கொண்டான்.

அப்போது நடந்த ஒரு சம்பவத்தை உன்னிடம் சொல்ல வேண்டும் சூர்யா. பிரசவத்திற்குப் பத்து நாட்கள் இருக்கும். அம்மாவுக்கு உடம்பு சரியில்லை ஊருக்குப் போக வேண்டும் என்றான். இதுபோல் அடிக்கடி

அவன் ஊருக்குப் போய் விடுவான் அம்மாவுக்கு உடம்பு சரியில்லை என்று. அம்மா வீடு வேலூரில். ஆனால் நான் யாரையும் பார்த்ததில்லை. என்னையும் அழைத்துச் செல்வதில்லை. இப்படியே மாதத்தில் பதினைந்து நாட்கள் வீட்டில் இருக்க மாட்டான். அவனுடைய வேலூர் முகவரியும் எனக்குத் தெரியாது. நியூ காலேஜ் ஹாஸ்டலில் தங்கி பி.ஜி. படிப்பதாகவும் ஒரு ஸ்கூலில் பார்ட் டைம் கெமிஸ்ட்ரி வாத்தியாராக இருப்பதாகவும் சொல்லுவான். அவன் நடவடிக்கைகள் எல்லாமே புதிராக இருக்கும். அதனால் நான் அதில் மண்டையைப் போட்டுக் குழப்பிக் கொள்வதில்லை.

இப்போது நான் ஊருக்குப் போக வேண்டும் வர பத்து நாள் ஆகும் உன்னை உன் அம்மா வீட்டில கொண்டுபோய் விடுகிறேன் என்றான்.

அது ஒத்து வராது என்று எனக்குத் தெரியும் என்பதால் நான் வேண்டாமென்று மறுத்தேன். நான் மறுக்க மறுக்க அவன் பிடிவாதம் அதிகமானது.

சரியென்று சம்மதித்து அவனுடன் எங்கள் வீட்டுக்குப் போனேன். கீதா எங்களை உள்ளேயே அனுமதிக்கவில்லை.

கண்ட தேவிடியாளையும் இந்தாத்லெ உள்ள விடறதுல்லே வந்த வழியெப் பாத்துண்டு போலாம்.

அரவிந்தனுக்கும் கீதாவுக்கும் சண்டை பிடித்துக் கொண்டது. வசவுகளைக் காது கொடுத்துக் கேட்க முடியவில்லை.

நான் வாயே திறக்கவில்லை.

முண்டச்சி நீ ஒம் புருசன் செத்து நடுத்தெருவிலெ நிப்பேடீ தாலியறுத்து.

கீதா எனக்குக் கொடுத்த சாபம் அந்தத் தெருவெங்கும் எதிரொலித்தது.

அதற்கு மேல் அரவிந்தன் அங்கே நிற்கவில்லை. என்னை அழைத்துக்கொண்டு வீட்டுக்கு வந்து உதைத்தான் பார் ஒரு உதை. அன்றைக்கு வாங்கிய உதையிலும் அடியிலும் நான் நார்நாராய்க் கிழிந்து போனேன். குழந்தைக்கு ஒன்றும் ஆகாமல் இருந்தது அதிசயம்தான்.

இந்தச் சாபமெல்லாம் எப்படித்தான் பலிக்கிறதோ சூர்யா. கீதாவின் சாபம் ஒரு வருடத்திற்குள்ளாகவே பலித்துவிட்டது. அதற்கு அப்புறமாக வருகிறேன். இப்போது இதைக் கேள்.

வழக்கம்போல் என்னைத் தனியாக விட்டுவிட்டுப் போய் விட்டான் அரவிந்தன். பத்து நாள் கழித்து வந்தவன் ஒரு மூட்டை அழுக்குத் துணியோடு வந்தான். ஹாஸ்டலை காலி செய்துவிட்டதாகவும் படிப்பு முடிந்துவிட்டதாகவும் சொன்னான்.

அன்று முழுவதும் நிறைவயிறைத் தள்ளிக் கொண்டு அந்த ஒரு மூட்டைத் துணியையும் துவைத்து முடித்தேன். பக்கத்து வீடு எதிர் வீட்டில் இருப்பவர்களெல்லாம் திட்டினார்கள்.

அன்று இரவே நித்யா பிறந்தாள். என் தோழியும் அவள் அம்மாவும் எனக்கு நிறைய உதவினார்கள். அரவிந்தன் இடையிடையே காணாமல் போய்விடுவான். திடீரென்று வருவான். அடிப்பான். உதைப்பான். நான் உழைத்துக்கொண்டு வரும் காசை பிடுங்கிக்கொண்டு போவான். நான் படாதபாடு பட்டு திருட்டுத்தனமாகக் கொஞ்சம் காசை மறைத்து வைத்து நித்யாவுக்குப் பால் பவுடர் வாங்குவேன்.

பிரசவம் ஆகி பத்தாம் நாளிலிருந்து இருபது நாட்கள் கையில் ஒற்றைக் காசு இல்லாமல் சாப்பிடாமல் வெறும் பச்சைத் தண்ணீரிலேயே உயிர் வாழ்ந்திருக்கிறேன் சூர்யா.

அப்போது நான் போஸ்டல் டிபார்ட்மெண்டில் RTP யாக இருந்தேன். ரிசர்வ்ட் ட்ரெய்ண்டு பூல். அதனால் மேடர்னிடி லீவ் எதுவும் கிடையாது. சொல்லப் போனால் எந்த லீவுமே கிடையாது. தினக்கூலி மாதிரிதான். ஒரு அவருக்கு ரெண்டு ரூபாய் எழுபத்தைந்து பைசா வீதம் எட்டு அவர். இந்தப் பணத்தில்தான் உயிர் வாழ்ந்து வந்தேன்.

அதுமட்டுமல்ல. எந்தெந்த போஸ்ட் ஆபீசுக்கு போகச் சொல்கிறார்களோ அந்தந்த போஸ்ட் ஆபீசுக்குப்போய் வேலை செய்ய வேண்டும். ஒருமுறை ஒரே மாதத்தில் பதினெட்டு போஸ்ட் ஆபீசில் வேலை செய்திருக்கிறேன். அரும்பாக்கம் அமிஞ்சிக்கரை சேத்துப்பட்டு ஃப்ளவர்ஸ் ரோடு பார்க் டவுன் சூளை வேப்பேரி பெரம்பூர் பேரக்ஸ் கீழ்ப்பாக்கம் அய்யனாவரம் ஜவஹர் நகர் வியாசர்பாடி

வண்ணாரப்பேட்டை நியூ ஆவடி ரோடு புரசைவாக்கம் டேங்க் ரோடு என்று இந்தப் பதினெட்டு போஸ்டு ஆபீஸ்களிலிருந்தும் நான் அங்கே வேலை பார்த்ததற் கான ஸ்டேட்மெண்ட் பார்க்டவுன் போஸ்ட் ஆபீசுக்கு எப்போது போய்ச் சேருகிறதோ அப்போதுதான் பார்க் டவுன் போஸ்ட் ஆபீசில் எனக்கு சம்பளம் போடுவார்கள். எந்தெந்த போஸ்ட் ஆபீஸ்களிலிருந்து ஸ்டேட்மென்ட் வந்து சேரவில்லையோ அங்கெல்லாம்போய் ஸ்டேட்மென்டை சீக்கிரம் அனுப்பி வைக்கச் சொல்லவேண்டும்.

இப்படியே போஸ்ட் ஆபீஸ் போஸ்ட் ஆபீசாக வேலை செய்தது போல சம்பள ஸ்டேட்மென்டுக்கும் அலைந்து கொண்டே இருக்க வேண்டும்.

இப்படியே RTP யாக எட்டு வருடங்கள் உழைத்திருக்கிறேன் சூர்யா. தினக்கூலி என்பதால் வீட்டுக்கு வர லேட்டாகும். அதற் குள் அரவிந்தன் வந்திருக்கவில்லையென்றால் பிழைத்தேன். அவன் வந்திருந்தால் ஏன் இவ்வளவு லேட் எவனுடன் போய் படுத்துவிட்டு வந்தாய் என்று கேட்டு தெருவிலேயே உதைத்துத் தள்ளிவிட்டு கதவை உள்ளே தாளிட்டு விடுவான். வாசலிலேயே குழந்தையை வைத்துக் கொண்டு தலைவலி மண்டையைப் பிளக்க இரவு எட்டு ஒன்பது வரை உட்கார்ந்திருப்பேன். பக்கத்து வீட்டு மும்தாஜ் ஆன்ட்டி வந்து கதவைத் தட்டி சமாதானம் சொன்னால்தான் என்னை உள்ளே விடுவான். நானாக கதவைத் தட்டிவிட்டேன் என்றால் மறுபடியும் அடி உதைதான். அதற்குப் பயந்தே கதவைத் தட்டாமல் உட்கார்ந்திருப்பேன். என்ன வாழ்க்கை இது? எனக்கு மட்டும் ஏன் மற்ற பெண்களைப் போல் ஒரு வாழ்க்கை அமையவில்லை? பதினைந்து வயதில் மந்திரவாதி. அதனாலேயே வீட்டைக் கண்டால் பயம். அம்மாவைக் கண்டால் பயம். அதனால்தான் இந்த அரவிந்தனிடம் இப்படி வந்து மாட்டிக்கொண்டு விட்டேனோ என்றெல்லாம் சிந்தனை ஓடும்.

நித்யாவுக்கு அப்போது ஒன்றரை வயது இருக்கும். திடீரென்று அரவிந்தனுக்குக் காசநோய். டாக்டரிடம் கூட்டிச் சென்று வைத்தியம் பார்த்தேன்.

அதற்கு இடையில் நடந்த ஒரு விஷயத்தைச் சொல்ல மறந்து

விட்டேன். நித்யா ஆறு மாதக் குழந்தையாக இருக்கும்போது சார்ட்டிங் ஆபீசுக்கு டெபுடேஷனில் போனேன். அங்கே திவாகர் என்பவரைச் சந்தித்தேன். அவரிடம் என் கதையைச் சொன்னேன். அவர் ஒரு நல்ல நண்பராக இருந்தார். ஆறு மாதம் அந்த ஆபீசில் இருந்தேன். அதன் பிறகு நான் அவரைப் பார்க்கவில்லை. அரவிந்தனுக்கு உடல்நிலை மோசமாகி வந்தது. ஹாஸ்பிடலில் அட்மிட் செய்தேன். பிழைப்பது கஷ்டம். இவருக்கு காசநோயுடன் மூளைக் காய்ச்சலும் வந்திருக்கிறது என்றார் டாக்டர். அரவிந்தன் வீட்டுக்குத் தந்தி கொடுத்து அவன் அப்பா அம்மாவை வரவழைத்தேன்.

அவர்கள் வந்து பார்த்தார்கள். ஆனால் ஒரு வார்த்தைகூடப் பேசவில்லை. டாக்டர் வந்து ஒரு முக்கியமான காஸ்ட்லியான ஊசி வாங்க வேண்டும் என்றார். எவ்வளவு ரூபாய் ஆகும் என்று கேட்டேன். 600 ரூபாய் இருக்கும் என்றார். என் கையில் அப்போது பத்து இருபது ரூபாய்க்கு மேல் எதுவுமில்லை. அரவிந்தனின் பெற்றோர் வாயையே திறக்கவில்லை. அவர்களை எதிர்பார்க்க முடியாது என்று தெரிந்துவிட்டது. திடீரென்று இந்த ரெண்டாங் கல்யாணத்தால்தான் எல்லா வினையும் வந்தது என்று என்னைப் பார்த்துத் திட்ட ஆரம்பித்து விட்டார்கள்.

ரெண்டாங் கல்யாணமா? எனக்கு ஒன்றும் புரியவில்லை. அதைப் பற்றிக் கவலைப்படவும் இப்போது நேரமில்லை. முதலில் ஊசியை வாங்க ஏற்பாடு செய்ய வேண்டும். அவசரமாக அங்கிருந்து கிளம்பினேன்.

அப்போது மணி ஐந்து இருக்கும். ஆட்டோ பிடித்து சூளைமேட்டில் உள்ள ஒரு சேட்டுக்கடைக்கு ஓடினேன். அடகு வைக்க என்னிடம் தங்கம் என்று எதுவும் இல்லை நானே என் கழுத்தில் கட்டிக்கொண்ட தாலியைத் தவிர. அதைக் கழற்றி அடகு வைத்து ஆயிரம் ரூபாய் வாங்கிக் கொண்டேன். மறுபடி யும் ஆட்டோ பிடித்து ஒவ்வொரு மெடிகல் ஷாப்பாகக் கேட்டுக்கொண்டே வந்தேன். அந்த ஊசி எங்குமே கிடைக்கவில்லை. அப்பல்லோ ஹாஸ்பிடல் வந்தேன். அங்கேதான் அந்த ஊசி இருந்தது. ஆனால் அவர்களின் அவசரத் தேவைக்கு வேண்டும். தரமுடியாது என்று கை விரித்துவிட்டார்கள். மீண்டும் அதே

ஆட்டோவில் ஏறி கடை கடையாக அலைந்து கடைசியில் நுங்கம்பாக்கத்தில் ஒரு கடையில் கிடைத்தது. ஆஸ்பத்திரிக்கு ஊசியுடன் திரும்பியபோது மணி ஒன்று ஆகியிருந்தது.

அந்த காஸ்ட்லியான ஊசி போட்டும் எந்த முன்னேற்றமும் தெரியவில்லை. கோமா ஸ்டேஜுக்குப் போய் விட்டான். அப்போது அங்கேயிருந்த ஒருவர் சொன்னார். இவனுடைய போட்டோ இருந்தால் பரிகாரம் செய்யலாம் என்று. நான் வீட்டுக்கு வந்து லா∴ப்டில் தேடப்போக எனக்கு ஒரே அதிர்ச்சியாக இருந்தது. அந்தப் பெட்டி நிறைய லவ் லெட்டர்ஸ் ∴போட்டோக்கள் டயரிகள். அதையெல்லாம் புரட்டிப் பார்த்தபோதுதான் அரவிந்தனின் பெற்றோர் சொன்ன விஷயமே எனக்குப் புரிந்தது. அரவிந்தனுக்கு ஏற்கெனவே வேலூரில் திருமணமாகி குழந்தை குட்டியெல்லாம் இருந்தது.

ஹாஸ்பிடலுக்குத் திரும்பி வந்தேன். அரவிந்தனுக்கு நினைவு திரும்பியது. என் கைகளைப் பிடித்துக்கொண்டு எப்படியாவது என்னைக் காப்பாற்றிவிடு நான் உனக்கு நிறைய கொடுமை செய்திருக்கிறேன் என்னை மன்னித்து விடு என்னைப் பிழைக்க வைத்துவிட்டால் உன்னுடனேயே வாழ்கிறேன் என்றான்.

நிச்சயமாக குணமாவீர்கள் ஆனால் நீங்கள் உங்கள் இஷ்டம்போல் அந்தப் பெண்ணுடனேயே சென்று வாழலாம் என்றேன்.

அதைக் கேட்டு அவன் மிகவும் சந்தோஷப்பட்டான். ஆனால் அதற்குப் பிறகு அவன் கண்ணைத் திறக்கவில்லை.

நான் மிகுந்த அமைதியுடன் அவன் கால்மாட்டில் உட்கார்ந்து பிரார்த்தித்தேன்.

இந்த ஆத்மா சாந்தியடையட்டும். எதிலும் திருப்தியுறாமல் அலைந்துகொண்டிருந்த இந்த மனிதனின் ஆத்மா இறந்த பிறகாவது சாந்தியடையட்டும்.

இரவு சுமார் இரண்டு மணி இருக்கும். அரவிந்தனின் பிணத்தை ஏற்றிக் கொண்டு அவரது உறவினர்கள் என்னை ஒரு வேனில் கூட்டிச் சென்றார்கள். ஈகா தியேட்டர் அருகே வந்தபோது என்னை பிணத்தோடு இறக்கி விட்டுவிட்டுப் போய்விட்டார்கள்.

இப்போதும் புரியவில்லை சூர்யா. ஏன் உலகம் இவ்வளவு கெட்டதாக இருக்கிறது? ஏன் எல்லோரும் என்னை இப்படி நடத்துகிறார்கள்? நான் யாரையும் புண்படுத்தியதில்லை. அதிர்ந்துகூட எனக்குப் பேசத் தெரியாது. ஆனாலும் எனக்கு மட்டும் ஏன் இப்படியே நடந்து கொண்டிருக்கிறது?

அரவிந்தனின் பிணத்துடன் ஈகா தியேட்டர் அருகே பூந்தமல்லி நெடுஞ்சாலையில் தனியாக நின்று கொண்டிருந்தபோது என் சிந்தனை இப்படியெல்லாம் ஓடியது. அப்போது நித்யாவை மும்தாஜ் ஆன்ட்டியிடம்தான் விட்டுவிட்டு வந்திருந்தேன். அந்த ஆன்ட்டிதான் எனக்கு அப்போது கிடைத்திருக்கும் ஒரே துணை.

எவ்வளவு நேரம் அரவிந்தனின் பிணத்துடன் நின்றேன் என்று தெரியவில்லை. அப்போது அந்தப் பக்கமாக ஒரு ஆட்டோ டிரைவர் வந்தாரோ நான் இன்று உயிருடன் இருக்கிறேனோ.

அப்படி என்னைத் தனியாக விட்டுவிட்டுப் போனவர்கள் பதினாறாம் நாள் சடங்கு செய்ய வேண்டுமென்று என் வீட்டுக்கு வந்து என்னை அழைத்துக்கொண்டு போனார்கள்.

வந்த கூட்டத்தில் ஒரு பெண்கூட இல்லை. இருபது ஆண்கள் இருந்தார்கள். யாரோ அரவிந்தனின் ஒன்றுவிட்ட அண்ணன் என்றார்கள். அந்த ஆளை நான் முன்பின் பார்த்ததில்லை. அது மட்டுமல்ல. அந்தக் கூட்டத்திலிருந்த யாரையுமே நான் அதற்கு முன் பார்த்ததில்லை.

அமிஞ்சிக்கரையில் சடங்குகள் நடக்கும் என்றார்கள். நான் தனியாகச் செல்ல பயப்படுவதைப் பார்த்துவிட்டு என் எதிர் வீட்டுப் பெண்ணும் எனக்காகத் துணையாக வந்தாள்.

அமிஞ்சிக்கரையில் ஏதோ ஒரு லாட்ஜ் மாதிரி இருந்தது அந்த இடம். என்னென்னவோ அர்த்தம் விளங்காத சடங்குகள். கடைசியில் முழங்கால் வரை நீண்டிருந்த என் கூந்தலை வெட்டி விட்டார்கள். அன்றிலிருந்து நான் முடியே வளர்ப்பதில்லை. வளர வளர வெட்டி விடுகிறேன். இதற்கு முன்னால் கூந்தல் பராமரிப்பை ஒரு கலையாகவே நினைத்துச் செய்து வந்தேன். இந்தச் சம்பவத்திற்குப்

பிறகு அதில் எனக்கு ஈடுபாடு போய்விட்டது.

அரவிந்தன் போனபிறகு நான் முற்றிலும் தனியாக விடப் பட்டேன். இதைக் கேள்விப்பட்டு அண்ணா வந்தான். அமிஞ்சிக் கரையில் எனக்கு வீடு பார்த்துக் கொடுத்தான்.

நடுவில் நான் பட்ட துன்பங்கள் நிறைய. குழந்தையைக் கொடுத்து விடும்படி அரவிந்தன் வீட்டிலிருந்து மிரட்டல்கள் வரவே நான் அரும்பாக்கத்திற்கு என் பெற்றோரின் வீட்டிற்கு அருகிலேயே ஒரு தனி வீட்டில் குடியேறினேன்.

அந்தச் சமயத்தில் அலுவலகத்திலும் எனக்கு ஒரு பிரச்னை ஏற்பட்டது. இதே மாதிரி பிரச்னையை நான் என் பதினாறாவது வயதில் முதல் முதலாக வேலைக்குப் போனபோதும் அனுபவித்திருக்கிறேன். அது ஒரு கெமிக்கல் கம்பெனி. ராதாகிருஷ்ண ஐயர் என்பவர்தான் முதலாளி. எனக்கு க்ளெரிகல் வேலை. மாதச் சம்பளம் 175 ரூபாய். அந்த ராதாகிருஷ்ணன் ஐயர் என்னிடம் தப்பான முறையில் நடந்துகொள்ள முயற்சித்ததால் அந்த வேலையை மூன்றே மாதத்தில் விட்டுவிட்டு ஒரு எலெக்ட் ரானிக்ஸ் கடையில் டைப்பிஸ்டாகச் சேர்ந்தேன். பிறகு அதையும் விட்டுவிட்டு நான் கற்றுக் கொண்டிருந்த டைப்ரைட்டிங் இன்ஸ் டிட்யூட்டிலேயே இன்ஸ்ட்ரக்டராகச் சேர்ந்தேன். அதிலேயே பல வருடங்கள் இருந்தேன். நான் எஸ்.எஸ்.எல்.சி.யில் வாங்கி யிருந்த மார்க்குகளின் அடிப்படையில் போஸ்டல் டிபார்ட்மென்டில் RTP குமாஸ்தாவாக வேலை கிடைக்கும்வரை.

ஆனால் அந்த மாதிரி ப்ரைவேட் ஆபீஸ்களில்கூட பார்த்திராத பிரச்னையை நான் அரசாங்க ஆபீசில் எதிர்கொள்ள வேண்டி யிருந்தது.

அழகேசன் என்று ஒரு அதிகாரி எங்கள் ஆபீசுக்கு வந்து சேர்ந்தான். அவன் ஒரு வடிகட்டின பெண்பித்தனாக இருந்ததுதான் எனக்குப் பிரச்னையாகப் போயிற்று. அப்போது நான் போஸ்ட் ஆபீஸ் போஸ்ட் ஆபீஸாக அலையாமல் நிலையாக ஒரு கோட்ட அலுவலகத்தில் இருந்தது அவனுக்கு மிகவும் வசதியாகப் போயிற்று. அவன்தான் கோட்டத்தின் தலைமை அதிகாரி.

நேரடியாக சுற்றி வளைக்காமல் விஷயத்துக்கு வருகிறேன். எனக்கு

ஒரே ஒரு முறை சுகம் கொடு நான் உனக்கு என்ன வேண்டுமானாலும் தருகிறேன் என்றான். அவன் அப்படிச் சொல்லும் போதெல்லாம் தலைகுனிந்தபடி அவன் அறையை விட்டு வெளியே வந்து விடுவேன்.

ஆனால் அவனும் விடாமல் என்னை அழைத்துக் கொண்டே இருப்பான். என் சீட்டிலிருந்து அவனுக்கு ஒவ்வொரு ஃபைலாக தேவைப்பட்டுக் கொண்டேயிருக்கும். அப்போதெல்லாம் என் பக்கத்து சீட்டிலிருக்கும் இன்ஸ்பெக்டர் சீனிவாசன்தான் ஆபத்பாந்தவனாக இருந்து என்னை இந்த இக்கட்டிலிருந்து மீளவைப்பார். அழகேசன் என்னைக் கூப்பிடும் போதெல்லாம் நான் உள்ளே போன சற்று நேரத்தில் ஏதாவது ஒரு ஃபைலை எடுத்துக் கொண்டு உள்ளே வந்துவிடுவார்.

அவ்வளவு பெரிய அதிகாரி நான் நிற்கும் பஸ் ஸ்டாண்டில் நின்று அதே பஸ்ஸில் ஏறி என் வீடு வரைக்கும் என்னைப் பின் தொடர்வான். ஒருநாள் சீனிவாசன் லீவ். அன்றைக்கு என்னை அவன் அறைக்கு வரவழைத்து ஒரு தங்க செயினை எனக்கு முன் போட்டு இது உனக்குத்தான் நாலு பவுன் செயின் ஒரே ஒரு முறை என் ஆசைக்கு இணங்கினால் போதும் என்றான். நான் வேர்க்க விறுவிறுக்க வெளியே ஓடி வந்துவிட்டேன். மறுநாள் என் பக்கத்து சீட் சாவித்திரி ஆபீசில் வைத்து ஒரு செயினைக் காண்பித்துக் கொண்டிருந்தாள். தன் சேமிப்பிலிருந்து இந்த நாலு பவுன் செயினை வாங்கியதாக எல்லோரிடமும் சொல்லிக்கொண்டிருந்தாள்.

ஒரு நாள் அழகேசன் என் வீட்டுக்கே வந்துவிட்டான். இவ்வளவு பெரிய அதிகாரி என்னைத் தேடி வீட்டுக்கே வந்தது பற்றி வீட்டில் இருந்தவர்களுக்கு ஒரே சந்தோஷம். நான்தான் சொன்னேன். அவன் ஒரு பொம்பளைப் பொறுக்கி இனிமேல் அவனை வீட்டுக்குள் விடாதீர்கள் என்று. அதற்கு வீட்டில் உள்ளவர்கள் என்னைத்தான் கோபித்துக் கொண்டார்கள். பாவம். வயதான அந்த ஆளைப் பற்றி நான்தான் இட்டுக்கட்டிச் சொல்கிறேனாம். அவரைப் பார்த்தால் ரொம்பவும் சாதுவாகத் தெரிகிறதாம்.

ஒரு நாள் அந்த சாது என்ன பண்ணியது தெரியுமா? அன்றைக்கு ஞாயிற்றுக்கிழமை. போஸ்ட்மேன் எக்ஸாம் இருந்தது. அதற்காக

என்னையும் சாமிக்கண்ணு க்ரூப் டீயையும் வரவழைத்திருந்தது சாது. எக்ஸாம் முடிந்து எல்லோரும் போய்விட்டார்கள். நானும் சாமிக்கண்ணுவும் அழகேசனும்தான். நான் எக்ஸாம் எழுதியவர்களின் பட்டியலைத் தயார் செய்து கொண்டிருந்தேன்.

அப்போது பார்த்து கடும் மழை கொட்ட ஆரம்பித்தது. மாலை ஐந்து மணிக்கே இரவு எட்டு மணியைப்போல் இருட்டிக் கிடந்தது. சீக்கிரம் ஓடிவிட வேண்டும் என்பதற்காக பரபரவென்று வேலையை முடித்துக் கொண்டிருந்தேன்.

அப்போது அழகேசன் அறையிலிருந்து காலிங் பெல் ஓசை கேட்டது. சாமிக்கண்ணு உள்ளே போனான். திரும்பி வரும்போது அவன் கையில் ஃப்ளாஸ்க் இருந்தது. மற்றொரு கையில் குடை.

எனக்குள் பயம் பரவியது. சாமிக்கண்ணுவும் காப்பி வாங்க கடைக்குப் போய்விட்டால்? என் எண்ண ஓட்டத்தைப் புரிந்துகொண்டு விட்டான் சாமிக்கண்ணு. நல்லவன். இன்ஸ்பெக்டர் சீனிவாசனைப் போல் அழகேசனிடமிருந்து என்னைக் காப்பாற்றும் இரண்டாவது ஆள் இந்த சாமிக்கண்ணு.

சைகையிலேயே சொன்னான் சாமிக்கண்ணு. பயப்படாதீங்க மேடம். இதோ நொடியில் ஓடி வந்துவிடுகிறேன்.

அவன் வெளியே போனதும் அழகேசன் தன் அறையிலிருந்து வெளியே வந்து என்னை நெருங்கினான்.

மழை பெய்தாலும் பரவாயில்லை ஒடி விடலாம் என்று எழுந்தேன். அதற்குள் முந்திக்கொண்ட அழகேசன் வேகமாகப் போய் படிக்கட்டு வாசலை மறைத்துக் கொண்டு நின்று விட்டான்.

என்ன செய்வதென்று யோசித்தேன். சாமிக்கண்ணு வர இன்னும் எப்படியும் பத்து நிமிடங்கள் ஆகும். எங்கள் ஆபீஸ் மேலே முதல் மாடியில் இருந்தது. கீழே இறங்க வேண்டுமானால் இப்போது இந்த அழகேசன் தடுத்து நின்று கொண்டிருக்கும் படிக்கட்டுகளைத் தாண்டினால்தான் உண்டு.

அப்போது எங்கிருந்துதான் என் உடம்புக்குள் அவ்வளவு ஆவேசம் வந்ததோ தெரியவில்லை. ஒரே தட்டாக அவனைத்

தட்டியெறிந்துவிட்டு தடதடவென்று படிகளில் இறங்கி கீழே வந்து நின்று கொண்டேன்.

சாமிக்கண்ணு காப்பியோடு வந்தான். எங்கள் இருவரையும் பார்த்தான்.

சரி காப்பி வேணாம் ஆட்டோ அழைச்சுக்கிட்டு வா ரொம்ப இருட்டிக்கிட்டு வருது என்று உத்தரவிட்டான் அழகேசன்.

ஆட்டோவில் ஏறும்போது மேடம் பதட்டமா இருக்காங்க நீ வேணா அவங்க பக்கத்துல ஒக்காந்துக்க சாமிக்கண்ணு என்றான் அழகேசன்.

எனக்கு ஒண்ணும் பதட்டம் இல்லை சார்தான் பதட்டமா இருப்பாரு ஜாக்ரதையா அவரைக் கொண்டுபோயி அவர் வீட்ல விடு நான் வழியில் இறங்கிக்குவேன் என்றேன் நான்.

மறுநாளிலிருந்து அவன் அவ்வளவாக என் வம்புக்கு வருவதில்லை.

இந்தப் பிரச்னையெல்லாம் இப்படித் தனியாக இருப்பதால் தானே என்று நினைத்தால் அழுகை அழுகையாக வரும். அம்மனைத்தான் அடிக்கடி வேண்டிக் கொள்வேன்.

அப்போது ஒருநாள். கவலைப்படாதே உன்னைக் காப்பாற்ற ஒருவர் வருவார் தெரிந்தவர்தான் அவரை நாளை பார்ப்பாய் என்ற வார்த்தைகள் அன்று பூராவும் காதுகளில் தொடர்ந்து ஒலித்துக் கொண்டே இருந்தது.

வழக்கம்போல் மறுநாள் ஆபீஸ் போனேன். சென்ற சில நிமிடங் களுக்குள் எனக்கு போன் வந்திருப்பதாகச் சொன்னார்கள். போனில் பேசியபோது ஆச்சரியப்பட்டேன். திவாகர்தான் அது. அரவிந்தன் இறந்து விட்டது பற்றிச் சொன்னேன்.

அன்று மாலை சந்தித்தோம்.

நேற்று முழுவதும் உன் முகம் நினைவுக்கு வந்து கொண்டே இருந்தது உன்னைப் போய் சந்திக்கும்படி ஏதோ ஒரு குரல் என்னிடம் சொல்லிக் கொண்டே இருந்தது அதனால்தான் வந்தேன் என்றார் திவாகர்.

நாஸ்திகனான உனக்கு இது ஆச்சரியமாக இருக்கலாம் சூர்யா. ஆனால் அப்படித்தான் நடந்தது. அது மட்டுமல்ல. உனக்குச் சொல்ல மறந்து விட்டேன். அரவிந்தனை முதன்முதலாக திருவேற்காடு அம்மன் கோயிலில் பார்க்கும் போதும் மிகத் தெளிவாக என் காதுகளில் அந்தக் குரல் ஒலித்தது. ஆனால் ஒரு ஆச்சரியம் சூர்யா. உன்னைப் பற்றி மட்டும் எனக்கு எந்த அறிவிப்பும் வரவில்லை. எந்தக் குரலையும் கேட்கவில்லை.

மனம் திறந்து பேசினார் திவாகர். நான் உன்னைக் கல்யாணம் செய்து கொள்ள முடியாது உனக்கு ஒரு மகள் இருக்கிறாள் அதனால் என் வீட்டில் உன்னை ஏற்றுக் கொள்ள மாட்டார்கள் ஆனால் வாழ்க்கை முழுவதும் உனக்கு நான் ஆதரவாக இருப்பேன் என்றார்.

நாங்கள் பழக ஆரம்பித்தோம். சில நாட்களிலேயே எங்கள் உறவின் நெருக்கம் அதிகரித்தது.

என் வீட்டில் என் அண்ணி ஆமாம். அண்ணாவுக்குத் திருமணம் ஆகிவிட்டது அப்பா கீதா எல்லோரும் என்னை மாறி மாறி கால்பந்தாட்டக்காரர்களிடம் சிக்கிய பந்தைப் போல் அடித்து துவம்சம் பண்ணினார்கள். எல்லாவற்றையும் திவாகரிடம் சொல்லி விடுவேன். நாங்கள் ஆபீஸில் மட்டுமே பார்த்துக்கொள்ள முடிந்தது. ஒன்றாகச் சேர்ந்து வாழ முடியவில்லை. திவாகர் தன் வீட்டைப் பற்றி அச்சப்பட்டார்.

அப்போதுதான் அண்ணி ஒரு சாலை விபத்தில் இறந்தது. அண்ணியின் கதை தனிக்கதை. இருந்தாலும் அதை உனக்கு சுருக்கமாகச் சொல்லி விடுகிறேன்.

அண்ணாவுக்குப் பல இடங்களில் பெண் பார்த்தார்கள். ஜாதகப் பரிமாற்றங்கள் நடந்தன. அப்போது நங்கநல்லூரிலிருந்து ஒரு குடும்பம் எங்கள் வீட்டுக்கு வந்து நைச்சியமாகப் பேசி எப்படியோ அப்பாவையும் அண்ணாவையும் சம்மதிக்க வைத்து விட்டார்கள். ஜாதகமும் கனப்பொருத்தம். பெண்ணுக்கு டீச்சர் வேலை. திருமணம் நடந்த பிறகுதான் தெரிந்தது அந்த வீட்டைப் பற்றியும் அண்ணியைப் பற்றியும். எடுத்ததற்கெல்லாம் அண்ணா வுடன் சண்டை போட்டாள் அண்ணி. வேலையிலிருந்து அப்பா ரிடையர் ஆகிவிட்டதாலோ

என்னவோ திடீரென்று அவருக்கு வயோதிகம் வந்துவிட்டது. அண்ணியின் காட்டு தர்பாருக்கு முன்னால் அவர் பேச்சும் அதிகாரமும் எடுபடவில்லை. அப்பாவை ஒரு மூலையில் உட்கார்த்தி வைத்துவிட்டாள் அண்ணி. என் வயதுதான் இருக்கும் அவளுக்கு. ஆனால் என்னையே அடிப்பாள். அண்ணா கேட்டால் போயிற்று. வீடே ரகளையாகி விடும்.

ஒருநாள் அப்படித்தான். அண்ணாவை காது கொடுத்துக் கேட்க முடியாத வார்த்தைகளால் வைதுகொண்டிருந்தாள் அண்ணி. சண்டைக்குக் காரணம் சண்டையின்போதே வெளிவந்து விட்டது. அண்ணி திருமணம் ஆவதற்கு முன்பே ஒருவனைக் காதலித்திருக்கிறாள். அந்தக் காதலை முறியடிப்பதற்காகவே அண்ணியின் வீட்டில் இவளுக்கு இந்தத் திருமணத்தை நடத்தி வைத்திருக்கிறார்கள்.

எங்கள் வீடு ஒரு பைத்தியக்காரக் கும்பல். இங்கே ஒரு பெண்ணால் பைத்தியம் பிடிக்காமல் வாழ முடியுமா? இப்போதும் அவளுக்கும் அவள் காதலனுக்கும் தொடர்பு இருந்து வருகிறது. அவன்தான் அவளுடைய புருஷன். எங்கள் அண்ணா ஒரு சோதா. எங்களால் அவளை ஒன்றுமே செய்ய முடியாது. நாங்கள் அவளைக் கொடுமைப்படுத்துவதாகவும் கொலை செய்து விடுவதாக மிரட்டுவதாகவும் ஏற்கெனவே அவள் பெற்றோருக்குத் தெரிவித்து வைத்திருக்கிறாள். எங்களால் அவள் மயிரைக்கூட பிடுங்க முடியாது. இப்படிப் பலவாறாக கத்திக்கொண்டேயிருந்தாள் அண்ணி.

அன்று இரவு அண்ணாவின் அறையிலிருந்து பெருங்கூச்சல் கேட்டது. அண்ணா எழுந்து வெளியே வந்துவிட்டான். பிறகு என்னிடம் மட்டும் தனியாகச் சொன்னான். அவன் ஆணுறை பயன்படுத்த வேண்டும் என்று சொல்லியிருக்கிறாள் அண்ணி. இதுவரை அப்படி இல்லையே இன்றைக்கு மட்டும் என்ன வந்தது என்று கேட்டானாம். நான் என் காதலன் மூலமாக கர்ப்பமாக வேண்டும் உன் மூலமாக அல்ல என்று பதில் சொல்லியிருக் கிறாள். இதுதான் விவகாரம்.

கடைசியில் அண்ணி ஏற்கெனவே கர்ப்பமாகியிருப்பதாகத் தெரிய வந்தது. டி அன்ட் சி செய்துகொள்ள எப்படியோ சம்மதித்து விட்டாள்.

டி அன்ட் சி செய்து கொள்ள ஆஸ்பத்திரி போனோம். அங்கே யிருந்த நர்ஸ் என்ன சொன்னாள் தெரியுமா? இவள் இதோடு இப்படி டி அன்ட் சி பண்ணிக் கொள்வது நாலாவது தடவை. இப்படியே பண்ணிக்கொண்டிருந்தால் இனிமேல் கர்ப்பப் பையே ஓட்டையாகி விடும். உங்களுக்கெல்லாம் அறிவில்லையா?

இந்த விஷயம் எதுவும் எங்களுக்கு இதுவரை தெரியாது. அண்ணாவுக்கும் தெரியாது. அண்ணாவுக்கு எப்படி இருந்திருக்கும்?

ஆஸ்பத்திரியிலிருந்து வந்த பிறகு அண்ணியின் கொட்டம் அதிகமாகி விட்டது என்றே சொல்ல வேண்டும்.

ஒருநாள் ஏதோ சண்டையில் கீதாவின் மகன் வாசுவைப் பார்த்து அண்ணி சொன்னாள் டேய் நீ ரோட்ல போறபோது லாரி அடிச்சித்தான்டா சாகப்போறே. உன் தலை நசுங்கிப் பொணமாப் போவேடா. ஒங்கம்மா ஒன் ஒடம்பை எடுத்து வச்சிண்டு அழறதுக்குக்கூட ஒன் ஒடம்பு கெடைக்காதுடா. கூழ் கூழா நசுங்கி சக்கையா கெடப்பேடா நீ...

கீதாவுக்கு எதிர்த்துப் பேசவே வரவில்லை. எல்லோரும் ஸ்தம்பித்துப்போய் நிற்கிறோம். அண்ணா அவள் கன்னத்தில் பலமாக ஒரு அறை விட்டான்.

உன்னை ஜெயிலுக்கு அனுப்பாம விடமாட்டேன்டா நாயே இந்த வீட்லயே தூக்கு மாட்டிண்டு செத்து உங்க எல்லாத்தையும் ஜெயிலுக்கு அனுப்பலேன்னா எம் பேரு கௌசல்யா இல்லே என்று அறையை வாங்கிக் கொண்டு எங்கள் எல்லோரையம் பிடித்துக் கொண்டாள் அண்ணி.

இப்படி ஒரு சாபத்தைத் தன் அத்தையிடமிருந்து வாங்கியபோது வாசுவுக்கு ஏழு வயது இருக்கும். அந்தச் சம்பவத்துக்குப் பிறகு வாசு வெளியே போனான் என்றாலே அவனுக்கு ஏகப்பட்ட செக்யூரிட்டி. முன்னால் ரெண்டு பேர் பின்னால் ரெண்டு பேர். இருந்தாலும் எங்களுக்கெல்லாம் ஒரே பயம்.

ஏதோ ஒரு துர்சம்பவம் நிகழப் போவதான பயத்தில் ஆழ்ந்திருந்தது வீடு. வீட்டைச் சுற்றிலும் ஏதோ ஓர் சாபத்திரை படர்ந்திருப்பதான

தோற்றம். யாரும் யாரோடும் பேசிக்கொள்வதில்லை. சொல்லி வைத்துவிட்டு வரும் மரணத்தை எப்படி எதிர்கொள்வதென்ற நடுக்கம்.

அண்ணி அந்தச் சாபத்தைக் கொடுத்து சரியாக ஏழாவது நாள். ஞாயிற்றுக்கிழமை காலை ஏழு மணி இருக்கும். வெளியே கிளம்பினாள் அண்ணி.

ஞாயிற்றுக்கிழமை ஏது ஸ்கூல் என்று கேட்டான் அண்ணா.

அதையெல்லாம் நான் யாருக்கும் சொல்ல வேண்டிய அவசிய மில்லை. என்னை ஹன்ரட் ஃபீட் ரோட்டில் கொண்டுவந்து விட்டால் போதும்.

அதற்கு மேல் அண்ணா பேசவில்லை. ஸ்கூட்டரை எடுத்துக்கொண்டு அண்ணியோடு கிளம்பினான்.

கிளம்பி கொஞ்ச நேரத்துக்கெல்லாம் அண்ணா மட்டும் வந்தான் அந்தச் செய்தியை எடுத்துக் கொண்டு.

பின்னால் வந்த லாரி ஒன்று ஸ்கூட்டரில் மோதி அண்ணா இடப்புறம் விழ அண்ணி வலப்புறம் விழ சக்கரத்துக்கு அடியில் சிக்கி விட்டாள் அண்ணி.

போஸ்ட் மார்ட்டம் செய்வதற்குக்கூட எதுவும் மிஞ்சவில்லை. கூழ் கூழாக நசுங்கிப்போன சதைப் பிண்டத்தைத்தான் உடம்பு என்று கொடுத்தார்கள்.

உடம்பு என்று கிடைத்ததை துணியால் மூடி வாசலில் கிடத்தி யிருந்தது. முகம் சிதைந்து உருக்குலைந்து போயிருந்தது. அப்போது அவள் அண்ணா வந்து அவள் முகத்தை சிறிது நேரம் உற்றுப் பார்த்தான்.

விருட்டென்றுபோய் யாரும் எதிர்பாராதவிதமாக அவள் காதுகளில் இன்னமும் தொங்கிக்கொண்டிருந்த ஜிமிக்கியை இழுத்தான். வரவில்லை. உடனே தன் பாக்கெட்டில் கை வைத்து நகவெட்டியை எடுத்து அதிலிருந்த பேனாக்கத்தியால் அந்தக் காதுகளை அறுத்து ஜிமிக்கியை எடுத்துக்கொண்டான்.

இதற்கு அடுத்த ஆண்டில் அதுவரை பல ஆண்டுகளாக கீதாவைப்

பிரிந்து வாழ்ந்த அவள் கணவன் ஏதோ ஒரு பெரிய தொழிற்சாலைத் தீ விபத்தில் கருகிச் செத்துவிட்டான் என்றும் எலும்புகூட மிஞ்சவில்லையென்றும் தகவல் வந்தது.

அண்ணி போனபிறகு வீட்டில் மீண்டும் அப்பாவின் ஆதிக்கம் தலைதூக்கியது.

இனிமேல் என்னால் தாங்க முடியாது செத்துப்போய் விடுவேன் என்று திவாகரிடம் சொல்லி அழுதேன்.

திவாகர் என்னைப் பறங்கிமலையில் குடி வைத்தார். அங்கே அவர் என் கணவன் என்றே அறிமுகப்படுத்திக் கொண்டார்.

ஆனால் அங்கே போனதும் எனக்குத் திரும்பவும் நெர்வஸ் ப்ராப்ளம் வந்துவிட்டது. கூடவே வலிப்பும்.

பிரக்ஞையற்றுப் பேச முடியாமல் கிடப்பேன். எவ்வளவு நேரம் என்று தெரியாது. கையும் காலும் நடுங்கிக் கொண்டேயிருக்கும். வாயில் நுரை நுரையாய்க் கொட்டும். நித்யாதான் தைரியமாக என் பக்கத்தில் இருந்து என் வாயில் சிறிதுசிறிதாக தண்ணீர் விட்டுக் கொண்டே இருப்பாள்.

திவாகர் அப்போது பறங்கிமலையில் வேலை செய்துகொண்டிருந்தார். ஆனால் வீடு சின்மயா நகரில் இருந்தது. எங்கள் வீட்டுக்குத் தினமும் வருவதில்லை. விடுமுறை நாட்களில் மட்டும்தான் வருவது. எனக்குக் குழந்தையை வைத்துக் கொண்டு தனியாக இருப்பது கஷ்டமாகி விட்டது. திவாகரிடம் சொன்னேன்.

அப்போது அண்ணா சின்மயா நகரில் வீடு வாங்கியிருந்தான். திவாகர் அண்ணாவிடம் பேசினார். பிறகு அண்ணா சொன்னபடி அண்ணா வீட்டு மாடிக்கே குடிவந்து விட்டேன்.

திவாகர் வருவது மிகவும் குறைந்துவிட்டது. திடீரென்று ஒரு நாள் வந்து சொன்னார். தன் அம்மாவுக்கு கர்ப்பப் பையில் கேன்ஸர் என்றும் அதனால் அவர் பேச்சைத் தட்ட முடியவில்லை என்றும்.

அப்படியென்றால்?

மறுநாள் அவருக்குத் திருமணம்.

பிறகுதான் எனக்குத் தெரியவந்தது. அவர் திருமணம் செய்து கொண்ட பெண் அவருடைய அம்மா பார்த்து வைத்த பெண் இல்லை. அவருடைய அலுவலகத்திலேயே வேலை செய்யும் பெண். இருவரும் நீண்ட நாள் பழகி இப்போது திருமணம் செய்து கொண்டார்கள்.

என்ன சூர்யா இது? எழுதவே எனக்கு அலுப்பாக இருக்கிறது. படிக்க உனக்கு அலுப்பாக இல்லையா? எத்தனை முறை திரும்பத் திரும்ப இப்படி?

திவாகரின் உறவு இப்படியாக முறிந்துபோனது. ஆனால் எழுதுவதைப்போல் வாழ்க்கை அவ்வளவு எளிமையாக இல்லை. திவாகரின் உறவினால் என் மனசிலும் உடம்பிலும் பட்ட ரணங்கள் இந்த ஜென்மத்தில் ஆறுமா என்று தெரியவில்லை.

திவாகர் என்னை முறைப்படி திருமணம் செய்துகொள்ளவில்லை என்பதால் அவருக்குக் குழந்தை பெற்றுக் கொள்ள இஷ்டமில்லை. அதனால் மூன்று முறை டி அண்ட் சி செய்து கொள்ள வேண்டி வந்துவிட்டது. காப்பர் டி போட்டுப் பார்த்தேன். ஏகப்பட்ட ப்ளீடிங் ஆகி அது ஒத்துக் கொள்ளவில்லை. டி அண்ட் சி செய்து கொண்டது என்னை உயிரோடு கொன்று போடுவதுபோல் இருந்தது. அம்மன் ஸ்தோத்திரத்தைப் படிப்பேன். அழுகை அழுகையாக வரும். திவாகரைக் கொல்ல வேண்டும்போல் இருக்கும்? அதுவும் ஒரு உயிர்தானே? எவ்வளவு சிறிதாக இருந்தாலும் அது பிறந்து வளர்ந்தால் அதுவும் நித்யாவைப் போல்தானே இருக்கும். உருவத்தில் என்னைப்போலவோ திவாகரைப்போலவோதானே இருக்கும்? இன்னும் அது மண்ணில் வந்து விழவில்லை என்பதற்காக அதைக் கொலை செய்யும் உரிமையை எனக்குக் கொடுத்தது யார்? சில நிமிட சந்தோஷத்துக்காக இப்படி ஒரு உயிரைக் கொலை செய்யத் தகுமா? தூக்கத்தில் கனவில் வந்து அம்மா என்னைக் கொன்று விடாதே என்னைக் கொன்று விடாதே என்று என்னைக் கெஞ்சுவாள் என் குட்டிப்பாப்பா. திவாகருக்கு நான் அனுபவிக்கும் இந்த வேதனை புரியுமா?

உயிரை உருவாக்கும் இந்த உடல் உயிர் அழிவிற்குத் துணை போவதா? டி அண்ட் சி என்ற வார்த்தையைக் கேட்டாலே என்

அஸ்தியில் ஜன்னி கண்டுவிடுகிறது. பிரசவம் பரவாயில்லை. ஒரு உயிரின் ஜனனம். அதுவே சந்தோஷம். அந்தப் பச்சை மண்ணின் வாசனைக்காகவே எவ்வளவு வலியையும் தாங்கிக்கொள்ளலாம். ஆனால் இது மரணம். இன்னும் சரியாகச் சொல்வதானால் கொலை. இந்தக் கொலையை எத்தனை தடவைதான் செய்வது? இதைச் செய்தபிறகு எஞ்சியிருக்கும் துக்கத்தையும் துயரத்தையும் யாரிடம் சொல்லி அழுவது?

மூன்றாவது முறை டி அண்ட் சி செய்து கொள்ளப் போனபோது டாக்டர் சொன்னாள். முப்பது நாள்தான் ஆகிறது இப்போது செய்தால் ஒருவேளை அது டியூபிலேயே இருந்து கருப்பையை சுத்தப்படுத்தியவுடன் அங்கே வந்து குடியேறிவிடும். அதனால் இன்னும் சில தினங்கள் பொறு.

பொறுத்த பிறகு போனேன். டேபிளில் படுக்க வைத்து ரத்த அழுத்தத்தைச் சோதித்தபோதே எனக்குள் அந்தச் சொல்ல முடியாத வலி ஏற்பட்டுவிட்டது. மயக்க மருந்து கொடுத்தும் சென்ற இரண்டு தடவைகளைப்போல் மயக்கம் வரவில்லை. பாதி நினைவு இருந்து கொண்டே இருந்தது. கர்ப்பப் பையின் வாயைத் திறந்து அதன் வழியே கருவியின் முனையில் ஸ்க்ராப்பரைப் பொருத்தி கர்ப்பப் பையினுள் செலுத்துவதை உணர முடிந்தது. கர்ப்பப் பையைச் சுரண்டிக் கொண்டிருந்தது ஸ்க்ராப்பர். அப்போது ஏற்பட்ட அந்த வலியை யாருக்கும் சொல்லி உணர வைக்கமுடியாது சூர்யா. ஒரு பெண்ணாக இருந்து அனுபவித்துப் பார்த்தால்தான் தெரியும். ரத்தம் ஆறாக ஓடியது. ஏன் இப்படிப் பெண்ணாகப் பிறந்தோம் என்று தோன்றியது. இந்த நிமிடமே செத்துவிடக் கூடாதா என்று இருந்தது. ஸ்க்ராப் பண்ணி எடுக்கும்போது கர்ப்பப் பையில் புண்கள் ஏற்பட்டு காயம் சரியாக ஆறாத நிலையில் ஜன்னி கண்டு செத்த பெண்கள் சிசுவின் சதைப் பிண்டங்கள் உள்ளே தேங்கி ரத்தப் போக்கு நிற்காமலேயே இறந்துபோன பெண்கள் அதைச் சுத்தம் செய்ய மறுபடியும் டி அண்ட் சி செய்யும்போது மரணத் தின் வாசலுக்கே சென்று திரும்புவது மட்டும் அல்லாமல் கர்ப்பப் பையில் ஓட்டை விழுந்துவிடும் பெண்கள் என்று எல்லாமும் ஞாபகம் வந்தது. சிலருக்கு இதனாலேயே மனச் சிதைவு ஏற்பட்டு விடுவதுண்டு. சிலருக்கு கர்ப்பப் பையையே

எடுத்துவிடுகிறார்கள்.

எனக்கு அந்தமுறை டாக்டர் சரியாகச் செய்யவில்லை போலிருக் கிறது. ஒரு மாதத்திற்கு ரத்தப்போக்கு நிற்காமல் கடைசியாகத் தான் பின்னால் எனக்குத் தோழியாகிவிட்ட டாக்டர் ஜெஸ்ஸி யைப் பார்த்தேன்.

அப்போதும் நான் கீகூகதான். லீவு கிடையாது என்பதால் அந்த ரத்தப்போக்குடனேயே ஆபீசும் போய்வந்து உடம்பே கிழிந்து போன கந்தல் துணியாய் ஆகிவிட்டது. ஜெஸ்ஸியின் அக்கறையும் அன்பும் மருத்துவமும்தான் என்னை அப்போது காப்பாற்றி யது.

நீயும் நானும் திருமணம் செய்துகொள்வதென்று முடிவெடுத்த பிறகு ஜெஸ்ஸியிடம் கேட்டேன். நான் குழந்தை பெற்றுக்கொள்ள முடியுமா என்று. சில சோதனைகள் செய்து பார்த்து விட்டுத்தான் சொல்ல முடியும் என்றாள். சோதனைகளின் முடிவு எப்படியிருக்கும்? என் கருப்பையையே அழித்துவிட்டுப் போய் விட்டானா அந்த திவாகர்? உன்னுடைய உயிரைச் சுமந்து உனக்குப் பரிசாகத் தரும் பாக்கியம் எனக்கு இல்லையா? தெரிய வில்லை சூர்யா.

எனக்குக் குழந்தையெல்லாம் வேண்டாம் நித்யா போதும். நீ போதும். எனக்கு இரண்டு குழந்தைகள் இருக்கும்போது இன்னும் எதற்குக் குழந்தைகள் என்று ஒரு சமயம் நான் குழந்தையைப் பற்றி பேச்செடுத்தபோது சொன்னாய். சூர்யா ஐ லவ் யூ டா.

ம்... இன்னொன்றையும் சொல்ல வேண்டும். திவாகர் பிரிந்த பிறகு நடந்த சம்பவம் அது. ஆபீஸ் விட்டு நித்யாவின் கையைப் பிடித்தபடி ரோட்டோரமாக வந்துகொண்டிருந்தேன். அப்போது எதிரே தாறுமாறாகப் படுவேகத்தில் வந்துகொண்டிருந்தது ஒரு கார். நித்யாவை அப்படியே வாரி இழுத்துத் தூக்கிக் கொண்டேன். ஆனால் கார் என் மீது இடித்து விட்டது. நான் பக்கத்திலிருந்த விளக்குக் கம்பத்தில் போய்விழுந்து தலையில் பலமாக அடிபட்டு ரத்தமாய்க் கொட்டி இரண்டு மாதம் படுத்த படுக்கை.

இந்த உடம்பு எவ்வளவுதான் தாங்கும்? அந்தச் சம்பவத்தி லிருந்து அடிக்கடி டிப்ரஷன். டிப்ரஷன் என்றால் என்ன ஆகும் என்று கேட்டாய்.

என்ன ஆகும்? கடலுக்குள் வெகு ஆழத்தில் மூழ்கும்போது தண்ணீரின் கனம் அழுத்துமாமே அப்படி ஒரு கனம் அழுத்தி நம் உடல் மன இயக்கத்தைத் தாறுமாறாக்கி விடும். நீ என்ன சொல்கிறாய் என்று எனக்கு விளங்காது. என்னிடமிருந்து வெளிப்படும் சொற்களைக் குறித்த பிரக்ஞை என்னிடம் இருக்காது. புலன்கள் மூளையின் கட்டுப்பாட்டிலிருந்து விலகி தன்னிச்சையாக செயல்படத் துவங்கும். சுமையின் அழுத்தம் தாங்க முடியாமல் பற்களைக் கடித்துக் கடித்து வலிப்பு வந்து கைகளும் முகமும் கோணல்மாணலாக இழுத்துக்கொள்ளும்.

இந்தச் சிதைவிலிருந்து தற்காலிகமாகத் தப்பிக்க அப்போது எனக்குக் கிடைத்தது Anti depressant மாத்திரைகள்தான். இந்த மாத்திரையைப் போட்டால் அப்புறம் இந்த மாத்திரைதான் நம் புலன்களை ஆளும். இதைப் போடாவிட்டால் நமது இயக்கம் சாத்தியமில்லை என்றாகிவிடும். தூக்கம் வராது. நரம்புகள் புடைத்து விண் விண்ணென்று தெறிக்கும்.

ஆனால் சூர்யா கடைசியில் என் வாழ்வில் அந்த அற்புதம் நிகழ்ந்துவிட்டது. உன்னைச் சந்தித்து விட்டேன். இனிமேல் எனக்கு மாத்திரைகள் தேவையில்லை. உன்னைச் சந்தித்ததிலிருந்தே எனக்கு அவ்வப்போது வரும் வலிப்பும் வருவதில்லை. டிப்ரஷனும் காணாமல் போய்விட்டது. உன் அன்பு ஒரு ஔஷதமாக என் சிதைவிலிருந்து என்னைக் காப்பாற்றிவிட்டது.

எல்லா துக்கத்திற்கும் பிறகு சந்தோஷப் பாட்டையின் வாயில் திறந்திருக்கிறது. என்னையும் என் வாழ்வையும் உன்னிடம் ஒப்புக் கொடுத்து விட்டேன். இமைத்தாலும் வலித்துவிடுமோ என இமைக்கத் தயங்கும் இமையாக என்னை உன் கண்ணுக்குள் வைத்துப் பாதுகாக்கிறாய். இதுபோதும் எனக்கு. இந்த சந்தோஷத்தை எழுத எனக்கு வார்த்தைகள் கிடைக்கவில்லை.

உன்

அவந்திகா.

பின் குறிப்பு: என் தோழி வசுமதியின் கதையை எழுத

மறந்துபோனேன். வசுமதியைக் கல்கத்தாவில் திருமணம் செய்து கொடுத்தார்கள். பெரிய இடம். மாப்பிள்ளை எஞ்சினியர். கல்யாணம் ஆன பிறகு ஒரு வருடம் கழித்து இங்கே வந்தபோது அவளைச் சந்தித்தேன். இனிமேல் கல்கத்தாவுக்கு போகவே மாட்டேன் என்று சொன்னாள். அம்மா வீட்டோடு வந்து விட்டேன். இங்கேயே ஒரு வேலை தேடிக்கொண்டு இருந்து விடப் போகிறேன் என்றாள்.

வழக்கமான மாமனார் மாமியார் கொடுமையோடு மேலும் ஒரு பிரச்னை. கணவரின் அக்காவும் அந்த வீட்டில்தான் இருந்தாளாம். அக்காவின் கணவர் துபாயில் தனியாகப் பணம் சம்பாதித்துக்கொண்டிருக்கிறார். தம்பதிகளுக்கு இரண்டு பையன்கள்.

அந்தப் பையன்கள்தான் மிகப் பெரிய பிரச்னை. அவர்களுக்குப் பணிவிடைகள் செய்வது போதாது என்று அவர்களின் அடி உதையையும் வாங்கிக் கொள்ள வேணும். சாப்பிடத் தெரியாது. சாப்பாடு பிசைந்து கொண்டுபோய் கொடுக்கப் போனால் தட்டைப் பிடுங்கி இவள் முகத்தில் வீசி விட்டானாம் ஒருத்தன். உதடு கிழிந்து ரத்தம் கொட்டியிருக்கிறது. ஆ... ரத்தம் ரத்தம்... என்று இரண்டுக்கும் ஒரே கொண்டாட்டமாம்.

ஒருநாள் இவள் குளித்துக்கொண்டிருந்தபோது பாத்ரூமில் வெளியே தாள் போட்டு விட்டார்களாம் இரண்டு பேரும். மாலையில் அவள் கணவன் வீடு திரும்பும்வரை அவள் பாத்ரூமிலேயே இருந்திருக்கிறாள். அவள் புருஷன் எதுவுமே நடக்காததுபோல் இருந்துவிட்டானாம். ஊர் சுற்றிவிட்டுத் திரும்பிய மாமனாரும் மாமியாரும் ஏதோ பெரிய ஜோக்கைக் கேட்டதுபோல் விழுந்து விழுந்து சிரித்திருக்கிறார்கள்.

வேறொரு நாள் ஸ்டவ்வில் கியாஸைத் திறந்துவிட்டு வீடு பூராவும் கியாஸ் சூழ்ந்து பெரிய விபத்திலிருந்து தப்பியிருக் கிறாள். அன்றைக்குத்தான் வாய் திறந்து சொன்னாளாம். இதுகளைக் கொண்டுபோய் ஆஸ்பத்திரியில் சேர்க்காமல் என்னை ஏன் இப்படி வதைக்கிறேள் என்று. அவ்வளவுதான் என் பேரப் பிள்ளைகளைப் பார்த்தா பைத்தியம்கிறே இருடீ உன்னைப் பைத்தியமாக்கி பைத்தியக்கார ஆஸ்பத்திரிக்கு அனுப்பி வைக்கிறேன் என்று கத்தினாளாம் மாமியார்.

அந்த வீட்டுக்கு இனிமேல் போகாதே என்று நானும் வசுமதிக்கு அட்வைஸ் பண்ணினேன். ஆனாலும் அவளுக்கு ஆறுதல் தேறுதல் சொல்லி அவளைத் திரும்பவும் கணவன் வீட்டிலேயே கொண்டுபோய் சேர்த்து விட்டிருக்கிறார்கள் வசுமதியின் பெற்றோர். கொண்டுபோய்விட்ட ஒரே வருடத்தில் அவளை முழுப் பைத்தியமாக்கி விட்டார்கள் அந்த வீட்டில் இருந்தவர்கள்.

அந்த வீட்டு வேலைக்காரிக்கு வீட்டில் ஒரு அறை எப்போதும் பூட்டிக் கிடப்பதைப் பார்த்து சந்தேகம். அறைக்குள்ளிருந்து சில சமயங்களில் அழுகைச் சத்தம். சிரிப்புச் சத்தம். பேச்சுச் சத்தம். ஒன்றும் புரியாமல் ஒருநாள் வீட்டில் யாருமில்லாத நேரம் பார்த்து சாவித் துவாரம் வழியே பார்த்திருக்கிறாள். உள்ளே ஒரு பெண் உடம்பில் பொட்டுத் துணிகூட இல்லாமல் தலைவிரி கோலமாய் உட்கார்ந்திருப்பதைப் பார்த்து பதறியடித்துக் கொண்டு ஓடிப்போய் போலீஸ் ஸ்டேஷனில் புகார் செய்திருக்கிறாள்.

போலீஸ் வந்து பார்த்தால் வசுமதிக்குத் தன் பெயரைக்கூடச் சொல்லத் தெரியவில்லை. எங்கள் மருமகள் பைத்தியம். வெளியே விட்டால் எங்களைக் கத்தியால் குத்த வருகிறாள் என்று சொல்லியிருக்கிறார்கள் கிழவனும் கிழவியும். பிறகு அவர்களிடமிருந்தே அட்ரஸ் வாங்கி வசுமதியின் பெற்றோருக்கு போலீசிடமிருந்து தகவல் வந்து கல்கத்தா போய் அவளை அழைத்து வந்திருக்கிறார்கள். உடம்பு பூராவும் தீப்புண்கள். மற்றவர்கள் இருக்கிறார்கள் என்ற உணர்வுகூட இல்லாமல் தன் பிறப்புறுப்பைக் காண்பித்து பேச இயலாமல் கேவிக் கேவி அழுதிருக்கிறாள் வசுமதி. உறுப்பிலும் அதைச் சுற்றிலும் புள்ளி புள்ளியாய்த் தீத்தழும்புகள். காயம்கூட ஆறாமல் புண்ணாகிக் கிடந்திருக்கிறது.

இப்போது வசுமதி சுயநினைவு அற்றவளாய் ஒரு மனநோய் மருத்துவமனையில் தங்கி சிகிச்சை எடுத்து வருகிறாள். வசுமதியைக் கல்யாணம் செய்துகொண்டவன் அவன் பெற்றோர் அவன் அக்கா என்று எல்லோருமாகச் சேர்ந்து இரண்டே வருடத்தில் அவளை இந்தக் கதிக்கு ஆளாக்கியிருக்கிறார்கள். ஏன் சூர்யா இப்படி? ஒரு ஆண் பெண்ணின் உடம்பைக் கொண்டாட வேண்டாமா? இப்படியா அந்த உடம்பை

ரணகளமாக்குவது? மனதைச் சிதைப்பது? வசுமதி எப்பேர்ப்பட்ட அழகி தெரியுமா? அவள் உடலும் மனமும் தேற நான் இப்போது என் அம்மனிடம் தொடர்ந்து பிரார்த்தித்து வருகிறேன்.

33

சூர்யா அவந்திகாவை முதன்முதலில் சந்தித்தபோது இப்பேர்ப்பட்ட அழகை நான் தமிழ்நாட்டில் சந்தித்ததே இல்லை நேற்றுதான் மத்திய ஆசியாவிலிருந்து கைபர் கணவாய் வழியாக வந்திறங்கியவள்போல் இருக்கிறாயே என்றான்.

நீ என்ன சொல்ல வருகிறாய் என்று எனக்குத் தெரிகிறது. எனக்கு ஜாதி மதத்திலெல்லாம் நம்பிக்கை இல்லை. நான் மனுஷி.

பிரபல தமிழ்ப்பட இயக்குனரின் பிரபலமான டயலாகை ஒத்திருக்கிறது நீ சொல்வது என்று சொல்லிச் சிரித்தான்.

மிகச் சில நாட்களிலேயே இருவரும் திருமணம் செய்துகொள்வதென முடிவு செய்தார்கள்.

சிந்திக்கும் வேலையை ஐரோப்பியர்களிடம் ஒப்படைத்து விட்டதாக விமர்சகர் தேவசர்மாவும் புரட்சியாளன் தமிழ்ச்செல்வனும் என்னைப் பற்றி நக்கல் அடித்திருக்கிறார்கள் இப்போது ஐரோப்பியப் பெண்ணைப்போல் இருக்கும் உன்னைத் திருமணம் செய்துகொண்டது தெரிந்தால் நான் தொலைந்தேன் என்றான் சூர்யா.

திருமணத்தைக் கோயிலில் வைத்துக் கொள்ள வேண்டும் தாலி கட்ட வேண்டும் என்றாள் அவந்திகா.

திருமண வேலைகளுக்கு உதவ அப்போது சூர்யாவுக்கு யாரும் இல்லை நிலாமகனைத் தவிர.

நிலாமகன் துப்பறியும் கதை எழுதும் பிரபலமான எழுத்தாளன். கையில் பணமில்லாவிட்டாலும் பியர் குடிக்கும் வழியை சூர்யாவுக்கு கற்றுக் கொடுத்தவன். நடிகைகளைப் பற்றி கிசுகிசுத் துணுக்கு எழுதி அதை பத்திரிகையில் கொடுத்து துணுக்குக்கு 45 ரூபாய் என்ற விகிதத்தில் வாங்கி பியர் குடிப்பதுதான் அந்தச் சுலபமான வழி. இதை சூர்யா ஆனமட்டும் ரகசியமாகவே வைத்திருக்க முயன்றான்.

ஆனாலும் எப்படியோ வெளிவந்து விட்டது விஷயம்.

அவ்வளவுதான். கொதித்து எழுந்தார்கள் சிறு பத்திரிகை எழுத்தாளர்கள். பியருக்காக இப்படியா கேவலப்படுவது என்று தார்மீகக் கோபம்கொண்டு அவனுடைய நட்பை முறித்துக் கொண்டார்கள். இருந்தாலும் அவனுடைய அத்யந்த நண்பன் திருமலையிடம் மட்டும் தான் அவந்திகாவைக் காதலித்து இப்போது திருமணமும் செய்து கொள்ளப் போகும் விஷயத்தைச் சொன்னான் சூர்யா. அடப் போடா இப்போது சொல்லுவாய் அவந்திகாவைப்போல் உண்டா அவள் தேவதையாக்கும் ஆ ஊ என்று இன்னும் ஒன்பதே மாதத்தில் நளினியே பரவாயில்லை இவள் ராட்சசி இவளை விவாகரத்து செய்யப் போகிறேன் என்று ஆரம்பித்து விடுவாய் பிறகு விவாகரத்து செய்துவிட்டு கன்ஃபைட் காஞ்சனா என்று கதை எழுதுவாய் அதை நாங்கள் படிக்க வேண்டும் தலையெழுத்துடா என்று கிண்டலாகச் சொன்னான் திருமலை. அதைக் கேட்டபிறகு சிறு பத்திரிகை நண்பர்கள் யாரிடமும் சூர்யா தன் திருமண விஷயத்தைச் சொல்லவில்லை. ஆனால் அதற்கு வேறு காரணமும் இருந்தது. சிறு பத்திரிகை நண்பர்கள் யாவரும் நளினிக்கும் நண்பர்களாக இருந்தார்கள். அதனால் திருமண விஷயம் நளினிக்குத் தெரிந்து விடும். ஆனால் இன்னும் ஒன்பது தினங்களுக்கு இந்த விஷயம் வெளியே தெரியக்கூடாது.

பிரச்னை இதுதான். திருமணத்தை அதிக தினங்கள் ஒத்திப் போட முடியாது. இனிமேலும் அவந்திகா anti depressant மாத்திரை களை நம்பி வாழ முடியாது. ஆனால் சூர்யாவிடமிருந்து விவாகரத்து கோரி கோர்ட்டில் நளினி விண்ணப்பித்திருந்த விவாகரத்து அனுமதி ஓலை கைக்குக் கிடைக்க வேண்டும். கோர்ட் குமாஸ்தாவுக்கு 90 ரூபாய் லஞ்சம் கொடுத்ததில் விவாக ரத்து ஓலை கிடைக்கும் சரியான தேதியைக் கக்கி விட்டான் அவன். அந்தத் தேதிக்கு அடுத்த நாளே முகூர்த்த நாள் குறிக்கப் பட்டது. ஆனால் அப்போது தில்லியில் புதிதாக ஆட்சிப் பொறுப்பை ஏற்றிருந்த கூட்டணி அரசு மூன்று தீர்க்கதரிசிகளின் பிறந்த நாள் மற்றும் மூன்று அரசியல் தலைவர்களின் பிறந்தாள் என்று அரசு விடுமுறை அறிவித்துவிட இடையில் சனி ஞாயிறு களும் சேர்ந்து எல்லாம் கூடி ஒன்பது தினங்கள் தொடர்ந்து அரசு விடுமுறையாகி விட்டதால் சூர்யாவுக்கு

விவாகரத்து ஓலை கிடைப்பதில் சற்று சுணக்கமாகி விட்டது. உள்ளே தள்ளிவிடு வார்கள் ஜாக்கிரதை என்று வேறு பயமுறுத்தியிருந்தான் திருமலை.

திருமலையை இனிமேல் பார்க்கவே கூடாது என்று சபதமே செய்திருந்தாலும் அவனை எங்கேயாவது ரோட்டில் சந்தித்துவிட நேர்கிறபோது இப்படி ஏதாவது வெடிகுண்டுகளைப் போட்டு விட்டுப் போவது திருமலையின் வழக்கம்.

அப்படித்தான் அன்றைக்கு அவந்திகாவை ம்யூசியம் தியேட்டர் வாசலில் சந்திக்க வேகமாக ஓடிக் கொண்டிருந்தபோது எல்.ஐ.சி. கட்டிடம் அருகே சூர்யாவைப் பார்த்துவிட்ட திருமலை பியர் குடிக்கலாம் வா என்று கூப்பிட்டான். அப்போது அவந்திகாவைச் சந்திக்கும் அவசர வேலை இருந்திருக்காவிட்டாலும் திருமலை யோடு சூர்யா பியர் குடிக்கப் போயிருப்பானா என்பது சந்தேகம் தான். நிரம்பக் குடித்துவிட்டு கண்மண் தெரியாத போதையிலும் கடைசியாக பாரை விட்டு வெளியே வரும்போது நீ எனக்கு 144 ரூபாய் கொடுக்க வேண்டும் பியருக்கு மட்டும் 135 ரூபாய் முட்டைக்கு 9 ரூபாய் மொத்தம் 144 ரூபாய் சிகரெட் செலவு 18 ரூபாய் அதை நீ கொடுக்க வேண்டாம் நான் போட்டுக்கொள்கிறேன் என்பான் திருமலை. இப்படி எதற்காகக் குடிக்க வேண்டும் என்று தோன்றும் சூர்யாவுக்கு.

கடைசியாக அவனுடன் குடித்த அனுபவத்தை சூர்யாவினால் மறக்க முடியாது. ஃபுல் மகாமுனி ரம்மைக் குடித்துவிட்டு வரும்போது திடீரென்று முகத்தை சீரியஸாக வைத்துக்கொண்டு ஆஸ்தியே பறிபோய்விட்ட குரலில் சூர்யா அவனுக்குத் தரவேண்டிய தொகை பற்றிய கணக்கைப் போட ஆரம்பித்தான் திருமலை. வழக்கம்போல் சிகரெட்டுக்குப் பைசா வேண்டாம் அது இலவசம் என்றான். ஆனால் சூர்யாவுக்கு நன்றாக ஞாபகம் இருந்தது. குடித்தது குவார்ட்டர் குவார்ட்டராக. முதல் குவார்ட்டருக்குப் பணம் கொடுத்தது சூர்யா இல்லை என்றான் திருமலை.

அல்தூஸர் லெவிஸ்த்ராஸ் ரொலான் பார்த் ஃபூக்கோ தெரிதா லியோதார் தெல்யூஸ் கோத்தாரி போல் ரிக்கோர் என்றெல்லாம் போய்க் கொண்டிருந்த விவாதம் திடீரென்று அரை நயா பைசா

கணக்கில் சொத்தென்று விழுந்து விட்டதில் கடும் எரிச்சலடைந் தான் சூர்யா. அது மட்டுமல்லாமல் முதல் குவார்ட்டருக்கு நாம்தானே பணம் கொடுத்தோம் என்ற எண்ணம் வேறு ஊசிய பண்டத்தில் மொய்க்கும் ஈயாய் தொந்தரவு செய்து கொண்டிருந்தது. உனக்கு ஞாபக சக்தியே போதவில்லை என்று நீதானே அடிக்கடி சொல்லிக் கொண்டிருப்பாய் இப்போது பார் உன்னையே கவிழ்க்கிறது என்று சூர்யா சொன்னதையே வைத்து அவனைக் கவிழ்த்தான் திருமலை. இப்போதெல்லாம் வல்லாரை லேகியம் கூட வேண்டாம் ஞாபக சக்திக்கு கேப்ஸ்யூலாகவே வந்து விட்டது என்று சீரியஸாகச் சொன்னான் திருமலை. இப்படித்தான் தன்னை எல்லோரும் ஏமாற்றிக் கொண்டிருப்பதாகத் தோன்றியது சூர்யாவுக்கு. தன்னிடமிருந்த எல்லாவற்றையும் பிடுங்கிக்கொண்டு தன்னை விரட்டி விடுகிறார்கள் மனைவி பெற்றோர் நண்பர்கள் நாம்தான் பிழைக்கத் தெரியாத முட்டாளாக இருக்கிறோம் என்றெல்லாம் கழிவிரக்கம் கொண்டான். கழிவிரக்கம் கொள்பவன் மனிதனே அல்ல மலப்புழு என்று நினைத்து இப்படி மலப்புழுவாகப் போய் விட்டோமே என்று அதற்காக வேறு கழிவிரக்கம் கொண்டான்.

அன்றைக்கும் வழக்கம்போல சபதம் செய்தான் சூர்யா. இனிமேல் திருமலையைப் பார்ப்பதில்லை அவனோடு தண்ணியடிப்பதில்லை என்று. இப்போது இந்த உச்சி வெயில் நேரத்தில் எல்.ஐ.சி. கட்டிடத்தின் அருகே நின்று கொண்டு திருமலை பியர் குடிக்க அழைத்தபோது இவ்வளவும் அவனுக்கு ஞாபகம் வந்தது.

வேண்டாமென்று மறுத்தான் சூர்யா.

சரி சிகரெட்டாவது குடித்துவிட்டுப் போகலாம் வா என்றான் திருமலை.

அவந்திகா எனக்காக ம்யூஸியம் தியேட்டர் வாசலில் காத்திருப்பாள் நான் அவசரமாக ஓடிக்கொண்டிருக்கிறேன்.

ம்... நீ குடியை நிறுத்திவிட்டாய். சிகரெட்டையும் விட்டு விட்டாய் என்று நினைக்கிறேன். ஆனால் உன் பொய்யை மட்டும் விடவில்லை. இந்த வெயிலில் ம்யூஸியம் தியேட்டர் வாசலில் காதலியா? ம்... இனிமேல் உனக்குப் பிரச்னை இல்லை. வீடு கட்டி விடுவாய்.

ஸ்கூட்டர் வாங்கி விடுவாய். டிப்பிகல் மிடில் க்ளாஸில் பொருந்தி விட்டாய்.

அவன் தலையை ஆட்டிக் கொண்டு சூர்யாவை நக்கலாகப் பார்த்தபடி அப்படிச் சொன்னது நீ நாசமாப் போவ பாடையிலெ போவ மாரியாத்தா ஒன்னெ வாரிகிட்டுப் போவ என்று குழாய்ச் சண்டையில் பெண்கள் விடும் வசவுச் சொற்களாக காதில் வந்து விழுந்தன. திரும்பிப் பார்க்காமல் ஓடினான் சூர்யா.

இப்படி சிறு பத்திரிகை எழுத்தாளர்களால் புறக்கணிக்கப்பட்டு அல்லது அவர்களை இவனே புறக்கணித்துவிட்டு தனிமையில் வாடியபோது சூர்யாவின் திருமண வேலைகளைத் தலையில் போட்டுக் கொண்டு செய்தவன் நிலாமகன்தான். ஆரம்பத்தில் அவனுடன் பழகியபோது நிலாமகனை சூர்யாவுக்குப் பிடிக்கவே இல்லை. இது என்ன பெயர் நிலாமகன் மடையன் என்று திட்டிக்கொண்டிருப்பான். பிறகு நிலாமகனின் அசட்டுத்தனம் சூர்யாவுக்குப் பிடித்துப்போய்விட்டது.

நிலாமகனின் பிராபல்யம் சூர்யாவுக்கு வேடிக்கையாக இருந்தது. ஜனரஞ்சகப் பத்திரிகைக்கு இருபத்தேழு வாரங்களுக்கு தொடர்கதை எழுதினால் அதற்கு அந்தப் பத்திரிகை கொடுக்கும் 900 ரூபாயை சலாம் போட்டு வாங்கிக் கொண்டான் நிலாமகன். ஆனால் அந்தத் தொடர்கதை பற்றிய அறிவிப்பை நிலாமகனின் கவர்ச்சிகரமான சிரிப்புடன் கலர் போஸ்டர் அடித்து தமிழ்நாடு முழுக்க ஒட்டியது அந்தப் பத்திரிகை.

சூர்யாவுக்குத் தெரிந்தே நிலாமகனுக்கு 36 கேர்ள் ஃப்ரண்ட்ஸ் இருந்தார்கள். திருமணம் ஆனவர்கள் ஆகாதவர்கள் விவாகரத்து ஆனவர்கள் விதவைகள் கன்னிப் பெண்கள் கல்லூரி மாணவிகள் டாக்டர்கள் என்று விதவிதமான கேர்ள் ஃப்ரெண்ட்ஸ். உங்களோடு இன்பம் அனுபவிக்க வேண்டும் முத்தமாவது கொடுக்க வேண்டும் கடந்த செப்டம்பர் மாதம் 27ம் தேதி நீங்கள் கொடுத்த முத்தத்தையே இன்னமும் நினைத்துக் கொண்டிருக்கிறேன் என் பெரிய பையன் ஒன்பதாவது படிக்கிறான் உங்களுடன் அனுபவித்த அந்த இன்பத்தை இன்னமும் என்னால் மறக்க முடியவில்லை என்று அவனுக்கு வரும் எண்ணற்ற காதல் கடிதங்களைப் படிக்கும்போது நாமும் இப்படி.

துப்பறியும் கதை எழுத்தாளனாக மாறிவிடலாமே என்று நப்பாசை தோன்றும் சூர்யாவுக்கு.

தன்னுடைய வறண்டுபோன இலக்கிய உலகத்தை நினைத்துப் பார்த்தான் சூர்யா. தான் கலந்துகொண்ட இலக்கிய செமினார் ஞாபகம் வந்தது. ஒலிபெருக்கியின் முன்னே நின்று அந்தக் கூட்டத்தைப் பார்த்தபோது அவனுக்குச் சட்டென்று தோன்றியது அங்கே பெண்களே இல்லை என்பது. இது ஏதோ gay club கூட்டம் மாதிரி இருக்கிறது. எனக்குப் பேசத் தோன்றவில்லை என்று சொல்லிவிட்டு வந்து அமர்ந்துவிட்டான். அன்றைக்கு அவன் அடி வாங்காத குறைதான்.

பெண்களே இல்லாத துறையில் வந்து இப்படி மாட்டிக்கொண்டோமே என்று நினைத்து அடிக்கடி விசனப்படுவான் சூர்யா. இருக்கும் சில பெண்களைப் பார்க்கும்போது இதைவிட gay club இல் மெம்பராகி விடுவதே உத்தமம் என்று தோன்றும். வேறு சிலர் ஆண்களின் உறுப்பை அறுத்து வஞ்சம் தீர்க்க கையில் குறுங்கத்தியுடன் அலையும் டெரரிஸ்டு ரகத்தினர். இவ்வளவு ஆபத்துகள் நிறைந்த இந்த இலக்கிய உலகம் தேவையா என்ற கேட்கும் சூர்யாவின் உள்மனம். ஆனாலும் சூர்யாவின் கெட்ட பழக்கம் என்னவென்றால் பழகிய எதையும் அவ்வளவு சுலபத்தில் அவனால் விட முடியாது. இலக்கியமும் அவனுக்கு அப்படித்தான் ஆகியிருந்தது.

நிலாமகனிடம் ஆச்சரியம் என்னவென்றால் எல்லாக் கடிதங் களுக்கும் அவன் பதில் எழுதிவிடுவதுதான். சூர்யாவுக்கு இதுதான் எல்லாவற்றையும்விட பெரிய ஆச்சரியம். எங்கேயோ களியக்காவிளை என்ற ஊரிலிருந்து கொர்த்தாஸாரின் சந்திப்பு என்ற சிறுகதையின் மொழிபெயர்ப்பு கேட்டு பிரபஞ்ச காலம் பத்திரிகை ஆசிரியர் வழிப்போக்கன் தனக்கு இதுவரை எழுதிய 63 போஸ்ட் கார்டுகளுக்குப் பதில் எழுதாமல் டிமிக்கி கொடுத்துக்கொண்டிருப்பதை நினைத்துப் பார்த்தான் சூர்யா. (ஆனால் இதற்கெல்லாம் மனம் தளராத வழிப்போக்கன் இன்னமும் போஸ்ட் கார்டுகள் அனுப்பிக் கொண்டிருப்பது வேறு கதை).

நிலாமகன் சூர்யாவின் திருமண வேலைகளில் மும்முரமாக ஈடுபட்டான். பைகமி ஜெயில் என்ற திருமலையின் ஆசீர்வாதத்துக்குப்

பிறகு தன் திருமண விஷயத்தை மேலும் ரகசியமாக்கினான் சூர்யா. விவாகரத்து ஓலை இல்லாமல் தாலி கட்டுவதால் கோயில் அதிகாரிகளிடம் தன் திருமணத்தை ரெஜிஸ்டர் செய்யக் கூடாது என்றான் சூர்யா. ரெஜிஸ்டர் செய்யாமல் இங்கு திருமணம் செய்துகொள்ளமுடியாது என்றார் கோயில் நிர்வாகி.

நிலாமகன் தனக்குத் தெரிந்த பத்திரிகை ஆசிரியரைப் பிடித்து அவர் மூலமாக காரியத்தைச் சாதித்தான். இதற்குத்தான் பெரிய மனிதர்களின் தயவும் சகவாசமும் வேண்டும் என்பது என்றான் நிலாமகன். ஆமென்று பலமாகத் தலையாட்டி வைத்தான் சூர்யா.

அடுத்து வாடகை வீடு தேடியும் திருமணச் செலவுக்கான பணத்துக்காகவும் மாறி மாறி அலைந்ததில் நிலாமகனுக்கு மைல்ட் ஹார்ட் அட்டாக். 27 தினங்கள் அசையாமல் ரெஸ்ட் எடுக்க வேண்டும் என்று அவனைப் படுக்கையில் கிடத்தி விட்டது நோய்.

திருமண நாள் வந்தது.

இலக்கிய நண்பர்கள் யாருக்கும் சொல்லாமல் உறவினர்களை யும் நிலாமகனின் நண்பர்களையும் மட்டுமே அழைத்திருந்தான் சூர்யா.

திருமணத்திற்கு வரும்போது தாலியையும் வாங்கி வரச் சொல்லி அம்மாவிடம் பணம் கொடுத்திருந்தான் சூர்யா. ஆனால் அவர்கள் யாரும் முகூர்த்த நேரமாகியும் வந்து சேராததால் நிலாமகனின் நண்பனிடம் பணத்தைக் கொடுத்து அவசரமாகத் தாலி வாங்கி வரச் சொல்லி அனுப்பினான். பதற்றமாக இருந்தது. நண்பன் தாலி வாங்கிவரக் கிளம்பிய வேளையில் வந்து சேர்ந்தார்கள் அம்மாவும் நைனாவும்.

ஹிஹி டீ குடிக்கப் போயிருந்தோம் அதான் லேட்டு என்றார் நைனா.

முதலில் தாலியைக் கொடுங்கள் என்று அம்மாவிடமிருந்து பிடுங்காத குறையாக வாங்கிக் கொண்டான் சூர்யா.

திருமலை சொன்னது சூர்யாவுக்குத் திரும்பத் திரும்ப ஞாபகம் வந்து கொண்டேயிருந்தது. பைகமி ஜெயில் பைகமி ஜெயில் என்று வாய் தன் பாட்டுக்கு முணுமுணுத்துக்கொண்டேஇருந்தது. தாலி

கட்டும் சமயத்தில்கூட தமிழ் சினிமாவில் நடப்பது போல் நளினி போலீஸ் பட்டாளத்துடன் வந்து திருமணத்தை நிறுத்தி தன்னைக் கைது செய்துவிடக் கூடுமோ என்று பயந்து நடுங்கிக் கொண்டிருந்தான்.

இதுபற்றி காலையிலேயே அவந்திகாவிடம் சொன்னபோது அப்படி ஏதும் நடந்து நீ ஜெயிலுக்குப் போனால் நான் அவளைக் கொலை செய்துவிட்டு உனக்கு முன்னே ஜெயிலுக்குப் போய் விடுவேன் கவலைப்படாதே என்று ஆறுதல் வார்த்தை சொல்வதாக எண்ணி சூர்யாவை மேலும் அதிகமாகக் கலவரப் படுத்தியிருந்தாள்.

சே என்ன இது நல்ல காரியம் நடக்கப் போற சமயத்துலெ குத்து வெட்டு கொலை ஜெயில்ன்னு அபசகுனமா பேசறே எல்லாரும் சந்தோஷமா இருக்கணும் அதானே நல்லது என்று பதில் சொல்லி வைத்தான் சூர்யா.

அப்படிச் சொன்னதிலிருந்தே தானும் அவந்திகாவும் வெவ்வேறு ஜெயில்களில் கம்பி எண்ணும் காட்சியே மனக்கண்ணில் வந்துகொண்டிருந்தது அவனுக்கு. இது எல்லாவற்றுக்குமே காரணம் திருமலைதான் என்று நினைத்தபோது அவன் மேல் கோபம் கோபமாக வந்தது.

ஆனால் சூர்யா பயந்தபடி எதுவும் நடக்கவில்லை. உத்தமத் தமிழ் எழுத்தாளன் மட்டும் விஷயத்தை எப்படியோ கேள்விப் பட்டு திருமணத்திற்கு வந்திருந்ததுதான் எதிர்பாராமல் நடந்தது. வந்தும் சும்மா இருக்காமல் சூர்யா இப்படி நீ கவுண்டர் கல்ச்சருக்கே பூணூல் மாட்டிவிட்டாயே வாழ்த்துக்கள் என்று கிண்டலடித் தான். சூர்யாவுக்கு பதில் எதுவும் சொல்லத் தோன்றவில்லை. திருமணம் முடிந்த ஒன்பதாவது நாள் அவனுக்கு நீதிமன்றத் திலிருந்து விவாகரத்து ஓலை கிடைத்தது. அப்போதுதான் சூர்யாவுக்கு ஜெயில் பயம் விட்டது.

உனக்கு நம்முடைய குழந்தையைப் பரிசாகத் தர விரும்புகிறேன் என்றாள் அவந்திகா.

வேண்டாமே அந்தப் பரிட்சையெல்லாம் நீயே எனக்கு குழந்தை தானே ஏன் மீண்டும் குழந்தை என்று சும்மாவேனும் டயலாக் அடித்துப் பார்த்தான் சூர்யா. அவந்திகா கேட்கவில்லை. ஆசுவாசம் அடைந்து

குழந்தையை ஆவலுடன் எதிர்பார்க்க ஆரம்பித்தான்.

ஆனால் சிசு கருப்பையில் சிதைந்துபோனது. திரும்பவும் வேறு வழியில்லாமல் டி அண்ட் சி செய்தாக வேண்டி வந்தது. இனிமேல் குழந்தையே வேண்டாம் சுவரை வைத்துத்தானே சித்திரம் எழுத முடியும் நீ எனக்கு வேண்டும் நீதான் எனக்கு முக்கியம் என்று இந்த முறை சீரியஸாகவே சொன்னான் சூர்யா. ஆனால் அவந்திகா கேட்கவில்லை. ஏதோ கடுமையான வேலை செய்ததால்தான் கருச்சிதைவு ஏற்பட்டிருக்க வேண்டும். இந்த முறை அப்படி ஆகாது என்று சொல்லிவிட்டு கரு உருவாகி விட்டது தெரிந்ததுமே சூர்யாவைப் பக்கத்தில் அண்டவிடா மலும் வேறு எந்தக் கடினமான வேலை செய்யாமலும் அதி சிரத்தையாகப் பாதுகாத்தாள். அப்படியும் சோதனையின்போது கரு சிதைந்து போய்விட்டதாகவே தெரிய வந்தது. டி அண்ட் சி செய்த டாக்டர் ஜெஸ்ஸி சூர்யாவைக் கூப்பிட்டு சிதைந்து போயிருந்த அந்த சிசுவைக் காண்பித்து இதுதான் கால் இதுதான் கை என்று விளக்கினாள். முன்பு எப்போதோ டி அண்ட் சி செய்தபோது சரியாகச் செய்யாமல் நீண்ட நாட்கள் ரத்தப்போக்கு இருந்ததாகச் சொல்லி இருக்கிறாள் அதன் காரணமாகத்தான் வைரஸ் சேர்ந்திருக்கிறது அதுதான் கருச்சிதைவுக்குக் காரணமாக இருக்குமென்று நினைக்கிறேன் அதனால் அதற்கான சோதனைகளைச் செய்து விடுங்கள் என்றாள் ஜெஸ்ஸி.

சிசுவின் சிதைவுக்கு ஒன்பது தினம் அழுதாள் அவந்திகா. என்னையும் உன்னையும் இணைத்துப் புதிய உயிரை உருவாக்கி உனக்குப் பரிசாகத்தர வேண்டுமென்று நினைத்தேனே சூர்யா இப்போது என் கருவறையே கல்லறையாக மாறிப் போனதே என்று விம்மி விம்மி அழுதாள்.

Torch toxoplasma rubella anti sperm anti body chlamydia antibody என்று பலவித சோதனைகள் செய்து பார்த்தபோது எல்லாவற்றிலும் பாஸிடிவ் என்றே வந்தது. வைரஸ்தான் என்று உறுதிப் படுத்தினாள் ஜெஸ்ஸி. அப்படியானால் நான் மலடியா என்று அழ ஆரம்பித்தாள் அவந்திகா.

சே சே என்ன இது குழந்தை மாதிரி நீ படித்த பெண்தானே இப்போதுதான் எல்லாவற்றுக்கும் மருந்து இருக்கிறதே இது என்ன

வெறும் வைரஸ் பிரச்னை உனக்குத்தான் கரு உருவாகிறதே அப்புறம் ஏன் கவலைப்படுகிறாய் வைரஸை சுலபமாக விரட்டி விடலாம் என்று ஆறுதல் வார்த்தை சொல்லி மருந்துகளை எழுதிக் கொடுத்தாள் ஜெஸ்ஸி.

வெளியே வரும்போது திவாகர் அவனுடைய புது மனைவியை அழைத்துக்கொண்டு ஜெஸ்ஸியைப் பார்க்க உள்ளே நுழைந்துகொண்டிருந்தான். அவன் மனைவியின் முழங்கைகள் வரை கலர் கலராகக் கண்ணாடி வளையல்கள் குலுங்கிக்கொண்டிருந்தன.

ருவாந்தாவில் முனியாண்டியின் நாடகக் குழுவிலிருந்த அவன் தோழி எழுதியிருப்பதற்கும் இப்போது இந்தத் துறவி என் கைகளில் கொடுத்திருக்கும் இந்தக் காகிதங்களுக்கும் பெரிய முரண்பாடாக இருக்கிறது. முனியாண்டி ருவாந்தாவில் இறந்து விட்டதாகக் கூறுகிறாள். ஆனால் அவன் இமயமலையில் இந்தத் துறவியைச் சந்தித்திருக்கிறான் என்பதை இதோ அவனுடைய கையெழுத்துப் படிகள் சொல்கின்றன. துறவியிடமிருந்து வேறு விபரங்கள் ஏதும் கிடைக்கவில்லை. மௌனத் துறவி. பேச்சை நிறுத்தி எத்தனையோ ஆண்டுகள் ஆகிவிட்டதாக லேசான கை அசைவின் மூலம் தெரிவிக்கிறார். அவரைப் பார்த்தால் மௌனமே ஸ்தூல உருக் கொண்டு வந்திருப்பதுபோல் தோன்றுகிறது. சருமத்தில் காலத்தின் ரேகைகளாய் கோடுகள். வற்றி உலர்ந்துவிட்ட தேகம். கண்களில் நம் உள்ளத்தை ஊடுருவும் ஒளி. அவருடன் நீண்ட நேரம் உடனிருக்க வேண்டுமெனத் தோன்றியது. ஆனால் காகிதங்களைக் கொடுத்துவிட்டு சடுதியில் சென்றுவிட்டார் துறவி.

இனி நானும் என் மகளுக்கான கவிதைகளும்

மை டியர் ஜெனஸிஸ்

உன்னை நேரில் பார்க்காமல் நேரில் பேசாமல் இக்கடிதத்தை எழுத நேர்வது விதிதான். அதுதான் நம் வாழ்க்கையை நகர்த்திச் செல்கிறதோ என இப்போதெல்லாம் ஐயுறுகிறேன். இந்தக் கடிதம் உனக்கு எப்போது யார் மூலமாகக் கிடைக்கும் என்று எனக்குத் தெரியாது. உன்னைப் பிரிந்து இருப்பதும் பார்க்க முடியாமல் இருப்பதுமே மகா பெரிய

வலியாக இருக்கும்போது வேறு எது பற்றியும் கவலை கொள்ள எனக்குத் தெம்பு இல்லை.

மகாபாரதத்தில் இந்தக் காட்சி. பீஷ்மரும் அர்ச்சுனனும் போரிட்டுக்கொண்டிருக்கிறார்கள். அப்போது அர்ச்சுனன் பீஷ்மரை நோக்கி கேள்விகள் கேட்கிறான். கேள்விக்கு இது நேரமில்லை உன் கேள்விகளே உனது பாணங்களாகட்டும் நாம் மொழியால் பேச வேண்டாம் பாணங்களால் பேசுவோம் என்கிறார் பீஷ்மர். என் பிரியத்துக்குரிய ஜெனீ... எனக்கு உன் மணம் மறந்துவிட்டது. கொஞ்ச காலத்துக்கு முன்பு வரை உன் பெயரை நினைத்ததும் அந்த மணம் எங்கிருந்தோ வந்து என்னைத் தொற்றிக் கொள்ளும். ஆனால் இப்போது அந்த மணத்தையும் என்னிடமிருந்து பிடுங்கிக்கொண்டு போய்விட்டது காலம். இப்போது என்னால் செய்ய முடிவதெல்லாம் இந்தக் கடிதம் மட்டும்தான். மொழியால் மட்டும்தான் உன்னோடு பேசியாக வேண்டும்.

இந்தக் கிறிஸ்துமஸ் தினத்தில் கிறிஸ்துமஸ் மரங்களுக்கிடையே இருந்து உன்னைப் பற்றி நினைக்க நேர்ந்தது அற்புதம். இந்த அற்புதமே என் முதல் கவிதையை எழுத முற்படுகிறது.

உறைந்து விட்ட காலம்

ஸ்தம்பித்துவிட்ட அண்டப் பெருவெளி

மலைகள் மரங்கள்

சலனமற்று சப்தங்களற்று இயற்கையின் தியானம்

துப்பாக்கிகளும் வெடிகுண்டுகளும் நிர்மூலமாக்கிக்

கொண்டிருக்கும் நிலம் நீர் காற்று மற்றும்

கடற்கரையில் சுண்டல் விற்கும் சிறுவன்

இன்னைக்கு என்ன செய்யலாம் சாம்பார் ரசம்

வெண்டைக்காய் பொரியல் சே என்ன எழவு இது

தினமும் இதேதானா எனச் சத்தம் போடப்

போகும் கணவனை நினைத்து அலுத்துக்கொண்டே

எல்.ஐ.சி. நிறுத்தத்தில் ஒன்.ஜேயில் ஏறும்

நடுத்தர வயதுப் பெண்
மனிதனின் மரணத்திற்குத் தன் requiem ஐ
சப்தமற்று பாடிக்கொண்டிருக்கும் கடவுள்
எனக்காக எங்கிருந்தோ அதை மொழிபெயர்த்துக்
கொண்டிருக்கும் சாக்கணாங்குருவி
மலைமுகட்டிலிருந்து குதித்துவிடத் தோன்றும்
மனம்
குழந்தையின் குதூகலச் சிரிப்பாய் வயலெட்
மற்றும் மெரூன் நிறப் பூக்கள்
கடவுள் தன் requiem ஐ நிறுத்தி விடுகிறான்
குளிராய் இறங்கும் வானத்துத் தேவதைகள்
எலும்புக் குருத்துகளுக்குள் ஊடுருவும் பனி
தாடிக்காரனிடம் ஒருவன் கேட்டான் உலகம்
உள்ளளவும் நிலைத்து நிற்கும் தத்துவம் எதுவென
தாடிக்காரன் சொன்னான் என் தத்துவம்
மட்டுமல்ல வேறெந்தத் தத்துவமும் நிலைக்காது
பீத்தோவனின் fifth symphony யைத் தவிர
கம்யூனிஸ்டுகள் மறந்துபோன அந்த
fifth symphony யை இசைத்துக்கொண்டிருந்தன
கிறிஸ்துமஸ் மரங்கள்

அந்த முகம் உனக்கும் எனக்கும் அழகானதாகத் தோன்றலாம். ஆனால் அந்தச் சிறுவனுக்கு அது மிகுந்த எரிச்சலைத் தந்தது. குமட்டலை ஏற்படுத்தியது. எங்கு திரும்பினாலும் பார்வையில் தென்படுகிற அதே முகம் வகுப்பறையிலும் காணவே பள்ளிக்குப் போவதை நிறுத்திக்கொண்டான். ஏதேதோ வேலைகள் செய்தான். தொழிற்சாலையில் கூலி வேலை செய்தபடியே கவிதை எழுத

ஆரம்பித்தான். கவிதைகள் அரசுக்கு எதிராக இருந்ததால் கைது செய்யப்பட்டான். அவனுடைய பயோ டேட்டா தருவிக்கப்பட்டது. நீதிபதிக்கு ஆச்சரியம். இலக்கியப் பயிற்சிப் பள்ளியில் படிக்காமல் இவன் எப்படிக் கவிதை எழுத முடியும். மேலேயிருந்து எனக்குக் கவிதைகளை அனுப்புகிறார் கடவுள் என்று பதில் சொன்னான் அவன். பாட்டாளி வர்க்க சர்வாதிகாரிகளின் சிப்பந்திகளுக்கு கவிஞனின் பதில் கோபத்தைத் தந்தது. அவன் நாடு கடத்தப்பட்டான். எனக்கும் இன்று கடவுள்தான் இந்தக் கவிதையை அனுப்பியிருக்கிறார் ஜெனீ...
நேற்றுதான் இந்த மலைக்கு வந்தேன். எழுபத்து இரண்டு கொண்டை ஊசி வளைவுகள் எல்லா வளைவுகளிலும் பாவத்தின் சம்பளம் மரணம் என்று எழுதியிருந்ததைப் பார்த்து இறங்கிவிடலாம் என்று சொன்னான் சூர்யா. அவன் குரலில் பயம் தெரிந்தது. காட்டுப் பாதையில் நடந்து அந்த அடர்த்தியான கானகத்தில் வழி தப்பிவிட்டோம். கானகத்தின் அழகு சூர்யாவின் பயத்தைக்கூடப் போக்கிவிட்டது. பலா மரங்களில் பலாப் பூக்களின் வெவ்வேறு பரிணாம நிலைகள். எங்கெங்கோ முட்டிமோதி பாறைவெளியில் வந்து அமர்ந்தோம். திடீரென்று பேரிரைச்சலாய் ஊழிச் சப்தம். அதிர்ச்சியுடன் திரும்பிப் பார்த்தால் லட்சக்கணக்கான தேனீக்களின் கூட்டம் இடம் பெயர்ந்து வந்துகொண்டிருந்தது. தரையோடு தரையாகப் படுத்துக்கொண்டோம். தேனீக்கள் எங்களைக் கடந்து சென்றதும் மீண்டும் வழிதேடி காட்டுக்குள் புகுந்தோம். தொலைதூரத்தில் ஊர் தெரிந்தது. மலையிலிருந்து ஊருக்குள் கீழே இறங்கும்போது எக்கச்சக்கமாய் அன்னாசிச் செடிகள். முட்கள் குத்திக் கிழித்தன. பசியில் மயக்கமே வந்துவிட்டது. எதிரே வந்த பெரியவரிடம் ஓட்டல் எங்கே இருக்கிறது என்று கேட்டோம். அது வெகுதூரம் வேறு ஊரில் இருக்கிறது என்று சொல்லி இது என் கொய்யா மரம்தான் ஏறிப் பறித்துக்கொள்ளுங்கள் என்றார். கொய்யாப் பழங்களைச் சாப்பிட்டு விட்டு இங்கே சோற்றுமரம் ஏதாவது உண்டா என்று கேட்டான் சூர்யா. பெரியவர் சிரித்துக்கொண்டே ஓட்டல் இருக்கும் ஊருக்கு வழிகாட்டினார். ஓட்டலுக்கு வந்து சேர்ந்தபோது அங்கே எல்லாம் தீர்ந்து விட்டிருந்தது. டீ கூட இல்லை. முட்டை மட்டும் இருந்தது. ஆம்லெட் போடச் சொல்லி சாப்பிட்டோம்.

அன்றைய தினம் நன்றாக ஓய்வெடுத்துவிட்டு அருவிக்குக் கிளம்பினோம். வானத்தைத் தொடும் மலைமுகடுகளுக்கு நடுவே பள்ளத்தாக்கு. அந்தப் பள்ளத்தாக்கிற்குப் போன பிறகுதான் அருவியையே பார்க்க முடிந்தது. அங்கே இறங்கிப் போக 720 படிகள். மிகவும் செங்குத்தான படிகள். ஆகாயத்திலிருந்து விழுந்து கொண்டிருந்தது அருவி. மனிதர்களின் வாடையே படாத இடம். அருவியை நெருங்க கொஞ்ச தூரம் நீச்சலடித்துக் கடக்க வேண்டும். என்ன சப்தம். என்ன ஆரவாரம். பாறையைப் பிடித்துக் கொண்டு அருவியின் கீழே நின்றேன். பரவசம் உன்னதம் அனுபூதி. கொஞ்சம் ஒதுங்கி வந்தபோது என்னைச் சுற்றிலும் வட்டமாய் வானவில்.

உனக்கு ஒன்பது வயது ஆகும்வரை உன்னை நான் பிரிந்தே இருந்ததில்லை ஜெனீ. எங்காவது ஊருக்குப் போகிற மாதிரி இருந்தால்கூட அப்பா நீ ஊருக்குப் போய்விட்டால் உன் ஞாபகமாகவே இருக்குமேப்பா என்று நீ கண்கலங்குவாய். நான் பயணத்தை ரத்து செய்துவிடுவேன். அலி ஷா போட்டு டான்ஸ் ஆடுவோம்.

என்னை அழுத்திக்கொண்டிருக்கும் உன் ஞாபகத்திலிருந்து மீள நினைத்து ராமாயணம் வாசிக்க ஆரம்பித்தேன்.

நீ ஏன் உறங்கிக்கொண்டே இருக்கிறாய் என்று அவனிடம் கேட்கப்பட்டபோது அவன் சொன்னான். அதர்மத்தைக் காணச் சகிக்காமல்தான் உறங்கிக்கொண்டே இருக்கிறேன். என்னால் என் தம்பியைப்போல் ராமனிடம் சரணடைய முடியாது. வாழ்ந்தாலும் வீழ்ந்தாலும் அது என் அண்ணனோடுதான்.

போர்க்களத்தில் தான் சாகும் தறுவாய் வந்துவிட்டதை உணர் கிறான் கும்பகர்ணன். அப்போது ராமன் அவனிடம் உனக்கு வரங்கள் தருகிறேன் கேள் என்கிறான். வீழ்ந்தான் கும்பன் என்ற பெயர் வரக்கூடாது எனக்கு. உன் பாணத்தினால் என் தலை கொய்யப்பட்டு அது கடலில் வீழட்டும். இந்தப் போர்க்களத்தில் வீழ வேண்டாம். அடுத்த வரம் என் தம்பி விபீஷணன் ராவணனை விட்டுவிட்டு உன்னிடம் வந்துவிட்டதைப்போல் மறுபடியும் உன்னை விட்டுப் போய்விட்டால் இப்போது நீ என்மீது பிரயோகிக்கும் பாணத்தை அவன் மீது பிரயோகித்து விடாதே. பாவம் அவன் அதைத் தாங்க மாட்டான்.

அவன் உயிரோடு இருக்கும்படி அவனை விட்டுவிடு.

இப்படிப்பட்ட அன்பை இன்றைய உலகில் நிலவச் செய்வது சாத்தியமா ஜெனீ...

என் பிரியத்துக்குரிய குட்டி இளவரசி ஜெனஸிஸ்...

உன் மீது நான் கொண்டிருக்கும் அன்பு என்னை வதைத்துக்கொண்டிருக்கிறது ஜெனீ... இந்தக் குளிரைப்போல்.

மிஸ்ரா முன்பதிவு இல்லாமலேயே வந்துவிட்டதால் அவனுக்கு பெர்த் கிடைக்கவில்லை. அதனால் பாதி நேரம் அவன் தூங்குவது பாதி நேரம் நான் தூங்குவது என்று ஏற்பாடு. வாக்மேன் எடுத்து வந்திருந்தான். கென்னிஜீ ரிச்சர்ட் க்ளேடர்மேன் எரிக் க்ளாப்டன் என்று கொஞ்ச நேரம் கழிந்தது.

அடுத்த இரவு. அதிகாலைப் பொழுது. ஜான்ஸி ஸ்டேஷன். குளிர் எலும்புகளுக்குள் ஊடுருவுகிறது. கை கால் விரல் நுனிகளில் பனி தீயாய் பரவுகிறது. கன்னம் செவி மடல் நெற்றி என்று பனியின் உக்கிரம். When Aurelia Buendia facing the firing squad he remembered the distant afternoon when he went with his father to discover ice. மரணமும் தீயும் ஞாபகமும் பனியும். அந்தக் குளிருக்கு சிகரெட் புகைக்க வேண்டும் போலிருந்தது. கடைக்காரரிடம் போய் பில்ஸ் ஹே என்றான் மிஸ்ரா. கடைக்காரரும் பில்ஸ் நஹி ஹே என்றார். இப்படியும் ஒரு மொழி பல் வலி வந்தவன் பேசுகிறாற்போல் என்று திட்டவும் செய்தான். அவனுக்கு அவன் மொழி பிடிக்காது. ஐ.பி. காலேஜ் பெண்கள் இந்தி பேசி நீ கேட்டதில்லையா என்றேன்.

கடைசியில் சிகரெட் கிடைக்காததால் அவன் தூங்கிவிட்டான். நான் அங்கேயே நின்றுகொண்டிருந்தேன். அப்போது உனக்கு சிகரெட் வேண்டுமா என்று கேட்டு நான் ஆமாமெனத் தலையசைக்கவும் சிகரெட் கொடுத்து அதைப் பற்றவும் வைத்து விட்டுப் போனான் அந்தப் பெயர் தெரியாதவன். குளிரும் பனியும் மனிதர்களிடையே தூரத்தைக் குறைத்துவிடுகிறது போலும். சிறிது நேரத்திற்குப் பிறகு குவாலியர் மண் குவளையில் தேநீர். மண்ணின் வாசனையையே அள்ளி அள்ளிப் பருகுவது போல் இருந்தது. ஆதி நினைவில் பூமியின்

கருவறைக்குள்ளேயே சென்று வந்ததான உணர்வு.

திரும்பவும் உன் நினைவு வந்து தொற்றிக் கொள்கிறது. பிரசவ விடுதியில் செவிலி உன்னை என் கைகளில் தவழவிட்ட தருணத்திலிருந்து ஒன்பது வயது வரை நான் உன்னைக் கீழேயே இறக்கவில்லை ஜெனீ. அதனால்தான் போலும் இந்தப் பிரிவு என்னை அப்படி வாட்டி எடுக்கிறது.

யாருடனும் பேசத் தோன்றாமல் காகிதங்களை எடுத்து வைத்துக்கொண்டு உனக்கு இதை எழுதிக் கொண்டிருக்கிறேன். மொத்த மனித வர்க்கமே காதலையும் அன்பையும் புறக்கணித்துவிட்டு பேரழிவில் ஈடுபட்டிருப்பதாகத் தோன்றுகிறது ஜெனீ. தேசங்களுக்கிடையே எல்லையும் ராணுவமும். மனிதர்களுக்கிடையே கண்ணுக்குப் புலப்படாத எண்ணற்ற தற்காப்புத் தந்திரங்களும் தாக்கும் உபாயங்களும். ஆண்டாளின் பாசுரங்கள் செவிகளில் ஒலிக்கின்றன.

குத்து விளக்கெரிய கோட்டுக்கால் கட்டில் மேல்

மெத்தென்ற பஞ்ச சயனத்தின் மேலேறிக்

கொத்தவர் பூங்குழல் நப்பின்னைக் கொங்கை மேல்

வைத்துக் கிடந்த மலர் மார்பா

கற்பூரம் நாறுமோ கமலப்பூ நாறுமோ

திருப்பவளச் செவ்வாய்தான் தித்தித்திருக்குமோ

மருப்பொசித்த மாதவன்தன் வாய்ச்சுவையும் நாற்றமும்

விருப்புற்றுக் கேட்கின்றேன் சொல் ஆழி வெண்சங்கே

சங்கு எல்லாமே வெண்ணிறம்தானே. அதற்கேன் வெண் சங்கு. வேளுக்குடி வரதாச்சாரியாரின் உபந்யாசத்தை நீ கேட்க வேண்டும் ஜெனீ. கண்ணனின் உதடுகள் சிவப்பென்றால் அப்படிச் சிவப்பாம். அவ்வளவு சிவந்த உதடுகளில் வெண் சங்கு வைக்கப்பட்டதும் அந்த வெண்மை இன்னமும் பன்மடங்கு வெள்ளையாகத் தெரிகிறதாம்.

படியாய்க் கிடந்து பவள வாய்க் காண்பேனே மலையில் படிக்கட்டுகளாய்க் கிடந்து மலையுச்சியில் உறையும் உனது பவள வாய்க் காண்பேனே என்று பக்திப் பரவசத்தில் உருகும்

வார்த்தைகளைப் பொருத்தமாகக் கொண்டுவந்து வைப்பார் வேளுக்குடி.

என் நண்பன் திருமலை சொன்ன வேறு கதை ஞாபகம் வருகிறது. பெருமாளிடம் வந்து டேய் ரங்கு எப்போதடா என்னை மோட்சத்துக்கு அனுப்பப் போகிறாய் என்கிறான் அவன். உன்னை எப்படி நான் மோட்சத்துக்கு அனுப்ப முடியும் மோட்சம் கிடைக்க ஞானமோ பக்தியோ கர்மமோ வேண்டும் உனக்கோ ஞானம் கிடையாது பக்தியோ அறவே இல்லை என்னையே டா போட்டுப் பேசுகிறாய் கர்மத்திலும் நீ தேற மாட்டாய் உன்னை எந்த விதத்தில் மோட்சத்துக்கு அனுப்புவது என்கிறார் பெருமாள். அட ரங்கா ரங்கா... உனக்கே நான் சொல்லித் தர வேண்டியிருக்கிறது பார் நான் சொல்லும் கதையைக் கேள் அந்த தனவான் தன்னிடமிருந்த தங்கக் காசுகளையெல்லாம் ஏழைகளுக்குக் கொடுத்து விடுவதென்று முடிவு பண்ணினார் காசுகளை வாங்க முறம் கொண்டு வந்தார்கள் பானை கொண்டுவந்தார்கள் சாக்கு கொண்டு வந்தார்கள் அவன் மட்டும் வெறும் கையோடு வந்துநின்றான் என்ன இது வெறும் கையோடு வந்திருக்கிறாய் என்று கேட்டார் தனவான் அதற்கு வந்தவன் சொன்னான் ஐயா நீங்கள் கொடுப்பதோ தங்கம் இவ்வளவு விலை உயர்ந்த தங்கத்தைத் தரும் நீங்களே முறத்தையோ சாக்குப் பையையோ பானையையோ சேர்த்துத் தரக்கூடாதா அதையேதான் ரங்கா நானும் சொல்கிறேன் நீ கொடுக்கப் போவதோ விலை மதிப்பில்லாத மோட்சம் அதையே கொடுக்கும்போது ஞான முறம் பக்திப் பை கர்மப் பானை என்றெல்லாம் கேட்டு என்னைக் கஷ்டப் படுத்தலாமா ஏதோ நீயே பார்த்து என்னை சீக்கிரம் மோட்சத்துக்கு அனுப்பிவை என்கிறான் இவன்.

அந்த ஆழ்வாருக்கு இருந்த நம்பிக்கை எனக்கு இல்லை ஜெனீ. கடவுளும் அன்பும் நம்பிக்கையும் இல்லாத காலத்தில் நான் வாழ்ந்து கொண்டிருக்கிறேன்.

ஏதோ வேற்றுக் கிரகத்துக்கு வந்துவிட்டவனைப்போல் இந்தக் காலகட்டத்தையும் மனிதர்களையும் சித்தாந்தங்களையும் பார்த்து அச்சம் கொள்கிறேன்.

என்னுடைய இந்தப் பயணம் எதை நோக்கியது என்று இதுவரை எனக்குத் தெரியாது. உன்னைத் திரும்பவும் காண முடியுமா என்றும்

தெரியவில்லை.

ரயில் வேகமாகச் சென்று கொண்டிருக்கிறது.

என் குட்டி இளவரசி ஜெனீ...

தில்லி வந்து சேர்ந்து விட்டேன். கடும் குளிர். அதிகாலையிலேயே எழுந்து பச்சைத் தண்ணீரில் குளித்துவிட்டு தனியாக நடக்க ஆரம்பித்தேன். Zero visibility. எல்லாமே வெள்ளையாகத் தெரிந்தது. நடைபாதைவாசிகள் குளிர் தாங்காமல் கட்டைகளையும் சருகுகளையும் போட்டு எரித்துக் குளிர் காய்ந்து கொண்டிருந்தார் கள். நானும் போய் நின்று கைகளைச் சூடாக்கிக் கொண்டேன்.

ஆச்சரியமாக வண்ணதாசனின் கவிதை ஞாபகம் வந்தது. சொற்கள் மாறி மாறி. அர்த்தம் மட்டுமாக. கிளி ஜோஸ்யன் சொன்னான் என் கிளிக்குப் பேசத் தெரியுமென்று. கிளி பேசலாகாது பறப்பதே பறவையின் இயல்பு. வேறு கவிதை. கூண்டுக்கிளிக்குப் பிறந்த கிளிக் குஞ்சுக்கு ஏன் சிறகுகள் முளைத்திருக்கின்றன.

நடந்தே கனாட் பிளேஸ் வந்து சேர்ந்தேன். இரைச்சலும் ஆரவாரமும் இல்லாத இந்தச் சூழல் பிடித்திருக்கிறது. திரும்பின இடமெல்லாம் மக்கள் முள்ளங்கியைக் கடித்துத் தின்றுகொண்டே சாவகாசமாக நடக்கிறார்கள். தோல் சீவி வெண்மை யாக்கி நடுவே அறுத்து மசாலா பொடி தூவி எலுமிச்சை சாறு பிழிந்து கொடுக்கிறார் அவர். நானும் மற்றவர்களைப்போல் அதைக் கடித்துக் கொண்டே நடக்கிறேன். ரீகல் சினிமா அருகே நின்றுகொண்டிருக்கும் காரைச் சுற்றி சில போலீஸ்காரர்கள். காரில் இருப்பவர்கள் பேப்பர் பிளேட்டில் வைத்து எதையோ தின்று கொண்டிருக்கிறார்கள். இவ்வளவு பிஸியான இடத்தில் காரை நிறுத்தலாமா லைசென்ஸை எடுங்கள் என்கிறார்கள் போலீஸ்காரர்கள். பசி தாங்க முடியவில்லை ஸாஹேப் அதனால்தான் சாப்பிடுகிறோம் என்கிறார்கள் அவர்கள். வாக்குவாதம் தொடர்கிறது. கடைசியில் கார்க்காரர் சொல்கிறார். சரி ஸாஹேப் இதோ பாருங்கள் இந்தக் கையில் பிளேட் அந்தக் கையில் சாப்பாடு எப்படி நான் லைசென்ஸை எடுப்பது இதோ உங்களிடம் விவாதித்துக்கொண்டிருக்கும் நேரத்தில் நான் சாப்பிட்டே முடித்திருப்பேன் உங்களால் கொஞ்சம் தாமதம் ஆனது இதோ

முடித்துவிட்டுக் கிளம்பி விடுகிறோம் என்று நாடக பாணியில் சொல்ல போலீஸ்காரர்கள் சிரித்துக்கொண்டே அந்த இடத்தை விட்டு நகர்கிறார்கள். அப்போது அந்த இடத்தில் யானையை ஓட்டி வருகிறான் யானைப்பாகன். யானையின் முதுகின்மேல் நீண்ட பட்டுத் துணியை கயிறாக முறுக்கி அதன் முனைகளில் பெரிய மணிகளைக் கட்டியிருக்கிறான். யானையின் அசைவில் அந்த மணிகள் டன் டன் என்று ஓசையெழுப்பிக்கொண்டிருந்தன.

திருமலை சொன்ன காளிதாசன் கவிதை இல்லை கதை ஞாபகம் வந்தது. உண்மையிலேயே அது காளிதாசனின் கவிதையில் இருப்பதா அல்லது வேறு ஏதாவது பாடலா என்று எனக்குத் தெரியவில்லை. திருமலை சில சந்தர்ப்பங்களில் பெயரை மாற்றி விடுவதும் உண்டு.

போஜ மன்னனின் அரண்மனையில் போஜனுக்கும் காளிதாசனுக்கும் இருந்த ஆழ்ந்த நட்பைக்கண்டு பொறாமைகொண்ட மற்ற புலவர்கள் டன் டன் டன் டன் டடன் டன் என்ற வரியைக் கொடுத்து இதை இறுதி வரியாகக்கொண்டு காளிதாசன் கவிதை புனையட்டும் அவன் மகா கவிஞன் என்பது உண்மையானால் என்றார்கள்.

போஜ ராஜனே உன் காதலி அப்போதுதான் குளித்துவிட்டுக் கரையேறுகிறாள் கையில் குடம் ஈர ஆடை உன்னை எதிர்பாராத நிலையில் அந்த இடத்தில் பார்த்துவிட்டாள் ஆச்சர்யம் சந்தோஷம் எல்லாவற்றுக்கும் மேல் வெட்கம் மருட்சியில் இடுப்பிலிருந்த குடம் நழுவிப் படிக்கட்டுகளில் உருண்டு ஓடுகிறது டன் டன் டன் டன் டடன் டன் கடைசி வரிக்கு இப்படி நான் அர்த்தம் சொன்னாலும் எனதருமை மன்னா அந்தக் கடைசி டன்னுக்கு நீதான் அர்த்தம் சொல்ல முடியும் ஏனென்றால் கடைசி டன்னின் சத்தம் குடம் விழுந்ததால் எழுந்ததா அல்லது விழுந்தது அவள் ஹ்ருதயமா என்று தெரியவில்லை நீதான் சொல்ல வேண்டும் என்கிறான் காளிதாசன்.

நம்முடைய தாஜ்மஹால் தினம் தினம் ஞாபகம் வருகிறது குட்டிப் பெண்ணே. காலை நேரம் ஷேவ் செய்துகொண்டிருக்கிறேன். நீ படுக்கையிலிருந்து எழுகிறாய். உன் முதல் கேள்வி அப்பா நீ எப்போது சாவாய். அதிகாலை நேரத்தில் இந்தத் திடீர்த் தாக்குதலை

எதிர்பாராமல் திரும்பியதால் கன்னத்தில் ரத்தம். எதற்கம்மா கேட்கிறாய். இல்லை நீ செத்த பிறகு உனக்கு தாஜ்மஹால் கட்டலாம் என்று நினைக்கிறேன் என்று சொன்னாய். நினைவிருக்கிறதா ஜெனீ... இந்தப் பிரியத்துக்கு நான் என்ன செய்ய முடியும் கண்மணி ஜெனஸிஸ். அம்மாவின் சிநேகிதர்களுக்காக சிகரெட் வாங்கப் போவது எனக்குப் பிடிக்கவில்லை என்று நீ என்னிடம் சொல்லி அழுத தருணம் மீண்டும் மீண்டும் ஞாபகத்தில் வந்து மோதி என் நெஞ்சுக் கூட்டை உடைக்கிறது உள்ளே.

என் குட்டி இளவரசிக்கு...

இங்கே இரவுகள் மிகவும் சாகஸங்கள் நிறைந்ததாகப் போய்க்கொண்டிருக்கின்றன. நேற்று முன்தினம் அசோகா ஓட்டலில் இருந்து கரோல் பாக் வரை நடு இரவில் நடந்தே போனோம். கிட்டத்தட்ட ஒன்பது கிலோமீட்டர். நேற்று இரவு பிரகதி மைதானில் விருந்தில் கலந்து கொள்ளச் சென்றோம். 450 கிழவர்கள். கிழவிகள். சில இளம் நடிகைகள் இந்தக் கிழட்டு காண்டாமிருகங்களுக்கு மத்தியில் நின்று செயற்கையாகப் புன்னகை சிந்த சிந்திய புன்னகையை புகைப்படம் எடுத்துக்கொண்டிருந்தார்கள். ஆனால் சூர்யா மைதானத்துக்கு வெளியே நின்று கொண்டிருந்தான். அவனை உள்ளே விடவில்லை. உள்ளே போய் அனுமதிச் சீட்டு ஏற்பாடு செய்து அனுப்புகிறேன் என்று சொல்லி உள்ளே வந்தேன். சொல்லியபடி அனுமதிச் சீட்டையும் வெளியே அனுப்பினேன். அப்படியும் அவன் வரவில்லை. அதனால் நானும் வெளியே வந்து விட்டேன். ஏன் இப்படி லொள்ளு பண்ணுகிறாய் என்று கேட்டதற்கு மகாபாரதக் கதையை அவிழ்த்து விடுகிறான். பாண்டவர்களின் வனவாசத்தின்போது அவர்கள் தடாகத்தைத் தாண்ட வேண்டியிருந்தது. தடாகத்தையோ யட்சன் காத்து நிற்கிறான். என் கேள்விகளுக்கு நீங்கள் பதில் சொன்னால்தான் நீங்கள் இத்தடாகத்தில் இறங்கி இதைக் கடக்க முடியும் இல்லாவிட்டால் மூழ்கி விடுவீர்கள் என்கிறான் யட்சன். தருமனைத் தவிர மற்றவர்கள் போடா இவனே என்று பழிப்புக் காட்டிவிட்டு தங்கள் வீரத்தை நம்பி இறங்க தடாகம் அவர்களை முழுங்கி விடுகிறது. தருமன் நான் பதில் சொல்கிறேன் என்று முன்வருகிறான். அதற்காக தருமனை மெச்சிய யட்சன் வரம் கேள் தருகிறேன் என்கிறான்.

அப்படியானால் சகாதேவனை பிழைக்கச் செய்யுங்கள் ஐயா என்கிறான் தருமன். இது என்ன ஆச்சரியம். உன் சொந்த சகோதரர்களை விட்டுவிட்டு சகாதேவனைக் கேட்கிறாயே என்கிறான் யட்சன். ஆமாம் ஐயா எங்கள் தாய்க்குப் பிறந்தவர்களில் நான் பிழைத்திருக்கிறேன். அதுபோல மற்ற தாய்க்குப் பிறந்த பிள்ளைகளில் யாராவது மிஞ்ச வேண்டாமா என்பதால் தான் சகாதேவனைக் கேட்டேன். இந்த பதிலைக் கேட்ட யட்சன் மகிழ்ந்துபோய் எல்லாச் சகோதரர்களையும் பிழைக்க வைத்து விடுகிறான். எமனை எவர் வெல்ல முடியும். அதனால்தான் தருமனையும் யாராலும் வெல்ல முடியவில்லை. தடாகத்தில் நின்றிருந்த யட்சனும் யமன்தான்.

அதுபோல நம் குழுவில் நீ கொடுத்தனுப்பிய அனுமதிச் சீட்டை நம்மோடு சேர்ந்த மற்ற குழுவுக்குக் கொடுத்துவிட்டேன் என்றான் சூர்யா. பார்ட்டியில் கலந்து கொள்ளாமல் பஸ் பிடித்து ஜே.என்.யூவுக்கு அருகில் உள்ள முனிர்காவுக்கு வந்தோம். நடுநிசி. கடந்துபோன எல்லா கார்களிலும் லி.ஃப்ட் கேட்டோம். யாருமே நிறுத்தவில்லை. ரத்தத்தையே உறைய வைத்துவிடும் போலிருந்தது குளிர். மனிதர்களிடம் இப்படியா அன்பு வற்றிப் போய்விட்டது.

இந்நேரம் இந்த இடத்துக்கு தாஸ்தயேவ்ஸ்கி காரில் வந்திருந் தால் மன்னியுங்கள் நண்பர்களே நான் கொஞ்சம் முன்னால் வந்திருந்தால் நீங்கள் இப்படி சிரமப்பட்டிருக்க நேர்ந்திருக்காது வாருங்கள் உங்களை எங்கே கொண்டுபோய் விட வேண்டும் நான் என்று கேட்டிருப்பார் இல்லையா என்றான் சூர்யா.

சில தினங்களுக்கு முன்னால் காசிக்குப் போனோம். அங்கே பார்த்த அந்த சாமுண்டி கோயிலை வாழ்நாளில் மறக்க முடியாது. அவள் வயிற்றில் கடித்துக் கொண்டிருக்கும் பெரிய தேள். அவள் கண்கள் கோடிக்கணக்கான இந்தியப் பெண்களின் சோக வரலாற்றைச் சொல்லிக் கொண்டிருப்பதாகத் தோன்றியது எனக்கு.

தினமும் டாபாவில்தான் சாப்பிட்டுக் கொண்டிருக்கிறோம். மிஸ்ராவுக்கு அன்றைக்கு தயிர் தேவைப்பட்டது. டாபாவில் தயிர் இல்லை. அதனால் சோட்டுவைக் கூப்பிட்டு ஒன்பது ரூபாய் கொடுத்து தயிர் வாங்கி வரச் சொன்னான் மிஸ்ரா. ரூபாயை வாங்கிக் கொண்டு

போனவன் போனவன்தான். திரும்பவே இல்லை. ஏதாவது சினிமா பார்த்துவிட்டுத் திரும்பி விடுவான் என்று நினைத்தோம். பயல் மறுநாளும் வரவில்லை. இப்படி ஒன்பது ரூபாயைக் கொடுத்து எங்கள் சோட்டுவை விரட்டி விட்டீர்களே என்று சிரித்துக்கொண்டே கேட்டார்கள் கடை முதலாளியும் மாஸ்டரும். அநேகமாய் அந்த ஒன்பது ரூபாயில் அவன் தன் கிராமத்துக்கு டிக்கட் எடுத்துக் கொண்டு ஓடியிருப்பான் கிராமத்தில் போய் பட்டினிதான் கிடப்பான். பெச்சாரா இங்கேயாவது மூன்று வேளையும் அவனுக்கு ரொட்டி கிடைத்துக் கொண்டிருந்தது என்று வருத்தப்பட்டார் சமையல் மாஸ்டர். ஒன்பது ரூபாயில் விடுதலை. தில்லிக்காரன் ஏமாற்றி விட்டான் என்று சென்னையில் போய் சொல்வீர்கள்தானே என்று கேட்டார் மாஸ்டர். இல்லையென்றேன். அவர் தன் கதையைச் சொல்ல ஆரம்பித்தார். அவர் சென்னையில் ஒன்பது மாதம் இருந்தாராம். தினச் சம்பளம் தொண்ணூறு ரூபாய். ஆனால் அவரால் அங்கே தாக்குப் பிடிக்க முடியவில்லை. மக்கள் அவ்வளவு சீரியஸாக இருக்கிறார்கள் என்றார். தில்லி மாதிரி வருமா என்றேன். ஆஹா. ஆஹா... தில்லி த்தோ தில் வாலேங் கா ஹே என்று ஆனந்தமடைந்தார் மாஸ்டர்.

உனக்கு ஞாபகம் இருக்கிறதோ இல்லையோ ஜெனீ... அப்போது நீ என்னுடன் இருந்தாய். முதல் வகுப்பில் படித்துக் கொண்டிருந்தாய். உன் அம்மா வீட்டுக்குப் போய்விட்டு வந்திருந்தாய். வந்தவுடன் அப்பா மைக்கேல் ஜாக்ஸன் கேசட் கேட்க வேண்டும் என்று சொல்லும்போதே நீ தேம்பித் தேம்பி அழுதுவிட்டாய். உன் அம்மா இசை ரசிகை. ஜஸ்ராஜ் மல்லிகார்ஜுன் மன்ஸூர் டாகர் பிரதர்ஸ் என்று நாள் முழுவதும் இந்துஸ்தானி சாஸ்த்ரீய சங்கீதம் பொழிந்துகொண்டிருக்கும். நீ மைக்கேல் ஜாக்ஸன் கேட்க வேண்டும் என்று சொல்லியிருப்பாய். அது என்ன வல்கர் ம்யூஸிக் என்று அதட்டல். இல்லாவிட்டால் கன்னத்தில் திருகு. விரல் நகங்கள் பட்டுப் பட்டு உன் கன்னமெல்லாம் காயமாக இருந்ததே ஜெனீ... இப்போது நீ எப்படி இருக்கிறாய். உன்னைப் பார்ப்பதற்காக நீ படிக்கும் பள்ளிக்கு வந்திருந்தேன். ஆனால் அன்றைய தினம் நீ வரவில்லை. மறுநாள் உன்னை குழந்தைகள் காப்பகத்தில் சந்தித்தேன். மருண்ட கண்களோடு அம்மா இருக்கும்போது வாயேன் அம்மா இருக்கும்போது வாயேன்

என்ற வார்த்தைகளைத் தவிர வேறு எந்த வார்த்தையும் உன்னிடமிருந்து அன்று வரவில்லை. மிகப் பெரிய வாயாடியான நீயா அப்படிப் பொறியில் சிக்கிய எலியாக மாற நேர்ந்தது என்று நினைத்து நினைத்து அழுதேன். மறுநாள் உன் அம்மா எனக்கு போன் செய்து ஏன்டா நான் இல்லாதபோது வந்து என் பெண்ணைப் பார்த்தாய் என்று மிரட்டினாள். உன்னைப் பார்ப்பதற்கும் உன்னோடு பேசுவதற்கும் சட்டத்தின் உதவியை நாடுவது பற்றி நான் யோசித்துக் கொண்டிருந்தபோது வேறு சில அச்சுறுத்தல்களும் மிரட்டல்களும் உன் அம்மாவிடமிருந்து எனக்கு வந்தன. ரவுடிகளோடு மோதும் மனப்பக்குவம் எனக்கு இல்லை. உன்னைப் பார்க்காமலும் இருக்க முடியவில்லை. அதனால்தான் இப்படி ஊர் ஊராய்த் திரிந்து கொண்டிருக்கிறேன் ஜெனஸிஸ்.

அதிகாரமும் எதிர்பார்ப்புகளும் நிபந்தனைகளும் அற்ற எளிமையான இயல்பான அன்பும் மனித உறவுகளும் இன்று சாத்தியமே இல்லை என வாழ்க்கை எனக்குத் திரும்பத் திரும்ப நிரூபித்துக்கொண்டே இருந்தாலும் மனசு என்னவோ விக்ரமாதித்தனின் வேதாளம் மாதிரி திரும்பத் திரும்ப அன்பு அன்பு அன்பு என்றே உசாவுகிறது.

Desparado இழைந்து கொண்டிருக்கிறது. பியானோவும் சாக்ஸஃபோனும் மனதை உருக்க கண்கள் பனிக்கின்றன. உன் ஞாபகங்களால் ஆன இந்த உலகம் மறைந்து விடுகிறது. Sax மட்டும் உன் குரலை ஞாபகப்படுத்துகிறது. உன்னுடைய மியூசிக் மாஸ்டர் உன் குரல் புல்லாங்குழலைப்போல இருக்கிறது என்று சொன்னது உனக்கு ஞாபகம் இருக்கிறதா ஜெனீ.

எனதுயிரினும் இனிய ஜெனஸிஸ்... இப்போது நீ என்னைப் பற்றி என்ன நினைப்பாய். இவ்வளவு பிரியமாக வளர்த்த அப்பா நம்மைப் பார்க்காமலேயே இருக்கிறாரே வேறு திருமணம் செய்துகொண்டு நம்மை முற்றிலுமாக மறந்துவிட்டாரே என்றுதானே. இல்லை. தூக்கத்தில்கூட உன் பெயரைத்தான் புலம்பிக்கொண்டிருக்கிறேன் என்கிறாள் உன்னுடைய இந்தப் புதிய அம்மா ஜெனிஃபர். ஆமாம்.

உன் ஞாபகமாகவே அவளுக்கு ஜெனிஃபர் என்று பெயரிட்டேன். என் மகளை நான் இன்னமும் பார்க்கக்கூட முடியவில்லையே என்று

புலம்புகிறாள் அவள். நான் சென்னையில் இருக்கும்போது தினமும் மாலை நேரத்தில் உனக்கு போன் செய்வேன். ஆனால் எந்தப் பதிலும் இருக்காது. தெரியும் எனக்கு. வீடு பூட்டப்பட்டிருக்கும். நீ அண்டை அயலார் வீடுகளில் இருப்பாய். ஆனால் இரவு போன் செய்ய எனக்கு மனம் வராது. உன் அம்மா எடுத்துவிட்டால் போனிலேயே நாய்ச்சண்டை போட வேண்டியிருக்கும். அதனால் தினந்தோறும் மாலைப் பொழுதில் அந்தக் குறிப்பிட்ட நேரத்தில் உனக்கு போன் செய்து உன் குரலைக் கேட்கக் காத்திருப்பது எனக்கு வழக்கமாக இருந்தது.

அந்தப் பத்திரிகையாசிரியர் சொன்னார் எல்லாம் டிராமா என்று. வேறு கல்யாணம் செய்துகொண்டு வசதியாக உங்கள் மகளை மறந்து விட்டீர்கள் என்று. நான் பதில் சொல்லவில்லை ஜெனி. உன்னைப் பார்க்க முடியாமல் நான் படும் அவஸ்தையும் வலியும் பார்க்க முயன்றால் உன் அம்மாவிடமிருந்து வரும் அச்சுறுத்தல்களும் மிரட்டல்களும் ஜெனி ஃபருக்கு மட்டுமே தெரியும். வேறு யாருக்கும் தெரியாது. பொதுவாகவே நமது துக்கம் மற்றவர்களுக்கு நகைச்சுவையாய் தோன்றுகிறது.

அந்த மறக்க முடியாத கோடைக் காலத்தில் நானும் நீயுமாகத் தனியே வாழ்ந்தபோது உனக்கு அம்மை நோய் கண்டு அல்லலுற்றபோது வெக்காளம் தாங்காமல் அழுதாய். அழுகை அல்ல அது. கதறல். உன் அழகான சின்ன உயிர்த்தளம் முழுவதும் கொப்புளங்கள். வலி தாங்காமல் உருண்டு உருண்டு நீ அழுதபோது முதுகிலும் நெஞ்சிலும் இருந்த கொப்புளங்கள் உடைந்து நீர் கசிந்தது. கொப்புளம் உடையக் கூடாது என்பார்கள். அம்மை போட்டால் இப்படியா வலிக்கும். எனக்கு எதுவும் புரியவில்லை. உன் வேதனையைக் காணச் சகிக்கவில்லை. அழுகிறேன். நீ அழுதால் எனக்குப் பயமாக இருக்கிறது அப்பா என்கிறாய் நீ. அழுகையை அடக்கிக்கொண்டு சாமியை வேண்டிக் கொள் வலி குறையும் என்கிறேன். நீதானேப்பா என் சாமி என்று சொன்னாயடி என் கண்ணே ஜெனீ...

சென்ற வருடம் உன்னுடைய பிறந்த நாள் அன்று உன்னை நான்

சந்திக்க முயற்சிக்கவில்லை. உன் பிறந்த நாளில் உன்னைப் பிரிந்து இருக்க நேர்ந்த முதல் அனுபவம். பிறந்த நாளில் உன்னைச் சந்தித்து உன் அம்மாவின் மூலம் உனக்கு மனக் கஷ்டத்தை ஏற்படுத்திவிட நான் விரும்பவில்லை. ஆனால் பிறந்த நாளுக்கு முந்தின தினமாவது உன்னைச் சந்தித்து உனக்குப் பிறந்த நாள் பரிசு தர நினைத்திருந்தேன். அதற்காகவே உன்னை அன்று நான் குழந்தைகள் காப்பகத்தில் சந்தித்தேன். மிரண்டுபோயிருந்த நீ எனக்கு எதுவும் வேண்டாம் என்றாய். என்னிடம் இருந்தபோது ஆகாய விமானத்திலிருந்து கப்பல் வரை உலகிலுள்ள அத்தனைப் பொருட்களையும் பிறந்தநாள் பரிசாகக் கேட்டு என்னிடம் அடம் பிடிக்கும் நீ அப்போது எதுவும் வேண்டாம் என்று சொன்னாய். வற்புறுத்திக் கேட்டபோது என்னிடமிருந்து எதையும் வாங்கினால் அம்மா உன் தொடையில் சூடு போட்டு விடுவதாகச் சொல்லியிருந்ததை என்னிடம் அழுதுகொண்டே சொன்னாய். அம்மாவிடம் நான் பேசிக்கொள்கிறேன் உனக்கு என்ன வேண்டும் சொல் என்று கேட்டபோது தயங்கிக்கொண்டே கொலுசு என்றாய். அன்றைய தினமே உன் அழகிய பொற் பாதங்களுக்குக் கொலுசு வாங்கினேன். ஆனால் மறுதினம் தான் உன் அம்மாவிடமிருந்தும் உன் அம்மா சார்ந்துள்ள அமைப்புகளிலிருந்தும் எனக்குத் தொலைபேசி மிரட்டல்கள் வந்தன. அந்தக் கொலுசு இன்னமும் என்னிடமே இருக்கிறது கண்ணே.

உன் பிறந்தநாளின்போதுகூட உன்னைப் பார்த்து வாழ்த்துச் சொல்ல முடியாமல் உனக்காக வாங்கிய கொலுசின் சுமையுடன் நிறைய குடித்தேன். எப்போதும் அளவாகவே குடிக்கும் நான் அன்றைய தினம் அளவுக்கு மீறி குடித்தேன். குடித்துவிட்டு இரவு ஒன்பது மணிக்கு மேல் என் கவி நண்பனுக்கு போன் செய்து நாற்பத்தைந்து நிமிடங்கள் புலம்பினேன். கவலைப்படாதே உன் சார்பாக நான் உன் மகளுக்குப் பிறந்தநாள் வாழ்த்துகளைச் சொல்லிவிடுகிறேன் என்றான் அவன். அன்று உன்னை போனில் தொடர்பு கொண்டானா வாழ்த்துகளைச் சொன்னானா என்று நான் கேட்கவில்லை. இன்று வரை நான் அவனைத் தொடர்புகொள்ளவே இல்லை. அவன் சொல்லப் போகும் பதிலைத் தாங்கும் தைரியம் எனக்கு இல்லை.

அவன்தான் எனக்கு சுக்கிரன் கதையைச் சொன்னான். பல

தினங்கள் அவனோடு கால்நடையாகத் தமிழ்நாட்டை சுற்றித் திரிந்து கொண்டிருந்த காலம் அது. சுற்றி முடித்துவிட்டு கடைசியாக குமுளிக்குப் போனோம். குமுளியில் எங்களுக்குத் தெரிந்த நண்பன் இருக்கிறான். அவனையும் அழைத்துக் கொண்டு தேக்கடிக் காடுகளில் சுற்றிக் கொண்டிருந்தபோது சுக்கிரனின் கதையை உச்ச போதையில் சொன்னான் என் கவி நண்பன். சுக்கிரன் தன் மகள் தேவயானியின் மீது கொண்டிருந்த எல்லையற்ற பாசத்தைப் பற்றி அப்போதுதான் நான் தெரிந்துகொண்டேன். போதை தெளிந்த பிறகு மறுநாள் சொன்னான் இந்தக் கதையை திடீரென்று உன்னிடம் சொல்லத் தூண்டியது எது என்று யோசித்துப் பார்த்தேன் இப்போதுதான் புரிந்தது என்று. சுக்கிரன் தன் மகள்மீது கொண்டிருந்த பாசத்துக்கு நிகரான பாசத்தை என்னிடம் பார்த்ததாகவும் அதுதான் அந்தக் கதையை என்னிடம் சொல்லத் தூண்டியதாகவும் சொன்னான் அவன். இதை நான் வேறு சமயத்தில் திருமலையிடம் சொல்ல நேர்ந்தபோது அவன் இது என்ன சென்டிமென்டல் பாச மலராக இருக்கிறதே என்று நக்கல் பண்ணினான்.

உன்னைப் பார்க்க வந்த அந்த அதிகாலைப் பொழுது இப்போதும் என் நினைவில் தங்கியிருக்கிறது. எப்போதாவது உன் அம்மா வின் வீட்டில் வந்து உன்னை நான் சந்திக்கலாம் என்ற நீதிமன்ற உத்தரவை உன் அம்மா மதித்து வந்த காலம் அது. அதிகாலை வேளையிலேயே உன்னைப் பார்த்து விடலாமென்று திட்டமிட்டு அதற்காக முந்தின இரவே என் நண்பனின் அறையில் தங்கிவிட்டேன். அதிகாலையில் எழுந்து சிகரெட் டைப் பற்ற வைத்துக்கொண்டு கிளம்பினேன். அப்போது எதிர்பாராத விதமாக தவறான திசையில் வந்த ஆளில்லாப் பேருந்து கடும் வேகத்தில் என்னை உரசிச் சென்றதில் கையிலிருந்த சிகரெட் மட்டும் அடித்துக் கொண்டுபோக நான் மயிரிழையில் உயிர் தப்பினேன். அந்த அதிர்ச்சியிலிருந்து மீண்டு உன்னைப் பார்க்க நான் நடந்து வந்து கொண்டிருந்தபோது என்ன ஆச்சரியம். தொலைதூரத்தில் ஆளில்லாத அந்தச் சாலையின் விளிம்பில் புள்ளியாய் உன் குட்டி உருவம். தனியே நடந்து வந்துகொண்டிருக்கிறாய் நீ. அந்தக் காட்சி இன்னமும் பசுமையாக என் நெஞ்சை விட்டு அகலாதிருக்கிறது. என்ன ஜெனீ இவ்வளவு காலையில் எங்கே போய்க்கொண்டிருக்கிறாய் என்று கேட்டபோது சிரித்தபடி வாக்கிங் என்று சொன்னாய். மைலாப்பூர்

நாகேஸ்வர ராவ் பார்க்கில் எத்தனை தினங்கள் நீயும் நானும் காலையில் வாக்கிங் போயிருக்கிறோம். அந்தப் பழக்கம்தான் இன்னமும் தொடர்கிறதா ஜெனீ.

ஆவியோ நிலையில் கலங்கி யாக்கை அகத்ததோ புறத்ததோ அறியேன் என்கிற வில்லிப்புத்தூராரின் வரிகள் இப்போது ஞாபகம் வருகின்றன. போர்க்களத்தில் கர்ணன் வீழ்ந்து கிடக்கிறான். அப்போது அவனிடம் அவன் செய்த தர்மத்தின் பலனை கிருஷ்ணன் யாசிக்க வரும் நேரத்தில் கர்ணன் சொல்கிறான். என் உயிர் கலங்கி என் நெஞ்சுக் கூட்டுக்குள் இருக்கிறதா அல்லது புறத்தே போய்விட்டதா தெரியவில்லை. இந்த நிலையில் நான் தங்களுக்கு என்ன தர முடியும்.

எனதுயிரும் என் அகத்தே இருக்கிறதா புறத்தே போய்விட்டதா என்று தெரியவில்லை. எனக்குள்தான் இருக்கிறதா அல்லது உனது ஞாபக மௌனப் பாறைகளின் இண்டு இடுக்குகளுக்குள் போய் புகுந்துகொண்டுவிட்டதா என்று தெரியவில்லை ஜெனீ...

எனது இருள் படர்ந்த மன விதானங்களில் வௌவால்களாகத் தொங்கிக் கொண்டிருக்கும் நமது உறவின் ஞாபகங்களை நான் கவிதையாக்க முயற்சி செய்து கொண்டிருக்கிறேன்.

திலோத்தமையின் கதை தெரியுமா ஜெனஸிஸ். எள். உத்தமம். இந்த உலகின் உத்தமமான விஷயங்கள் அத்தனையிலிருந்தும் எள்ளத்தனை எள்ளத்தனை எடுத்துப் படைக்கப்பட்டவள்தான் திலோத்தமை. குழந்தையின் மழலை காலையில் மரத்திலிருந்து இறக்கப்பட்டு நுரைத்துத் ததும்பும் தென்னங்கள் ப்ளடி மாரி உள் வாங்கும் கடல் புல்லிதழின் பனித்துளியில் பட்டுத் தெறிக்கும் சூர்ய ஒளி மூன்றாம் பிறை மொட்டை மாடியில் முழு நிலவொளியில் கிடைக்கும் தனிமை தந்திக் கம்பியில் அமர்ந்திருக்கும் சிட்டுக் குருவி மலை முகட்டில் உன்னைத் தழுவிச் செல்லும் மேகக் கூட்டம் மானின் மருட்சி தூக்கணாங் குருவியின் தனித்த ஒலி தனித்துச் செல்லும் மாட்டு வண்டியின் சலங்கை சப்தம் தொலை தூரத்து அருவி நட்சத்திரம் கானகம் நிசப்தம் கோடை மழை மண் வாசம் ஸால்வதோர் தாலி உன் முதல் ஓவியத்தை எப்போது வரைந்தாய் என் தாயின் கருவறைச் சுவர்களில் நான் எனது முதல் ஓவியத்தை

வரைந்தேன் காதலியின் முதல் ஸ்பர்ஸம் முலைப்பால் என்று கோடானுகோடி உத்தமங்களிலிருந்து எள்ளளவு எடுத்துப் படைக்கப்பட்டவள் என் ஜெனஸிஸ்.

உன்னோடு நான் நட்சத்திரங்களை அள்ளி இறைத்து சோளி விளையாடவேண்டும். நிலவை எட்டி உதைத்து ஓடிப் பிடித்தாட வேண்டும். காற்றைக் கயிறாகத் திரித்து ஊஞ்சல் கட்டி ஆடித் திளைக்க வேண்டும். வானத்தை வலையாக்கி மீன் பிடித்து ஏக வேண்டும். கடலை உறிஞ்சி உனது முகத்தில் ஊதி உன்னை மூச்சு முக்காடச் செய்ய வேண்டும் ஜெனீ...

ஜெனீ... என் குட்டி இளவரசி... உயிர் கசிந்து உருகிக்கொண்டிருக்கும் தருணத்தில் கொலைக்கும் தற்கொலைக்கும் இடையே என்னுயிர் ஊடாடிக் கொண்டிருக்கச் செய்து என்னைப் பித்தனாக்கி விட்ட ஜெனஸிஸ்...

தினமும் உனக்கு எழுதி குப்பையில் போட்டுக் கொண்டிருக்கிறேன். சில வேளைகளில் தபாலிலும் சேர்க்கிறேன். தபாலில் சேர்ப்பவை எதுவும் உன்னைச் சேராமல் உன் அம்மாவின் கண்காணிப்பில் குப்பையில் சேர்ந்து விடுகின்றன என்று உன் பதிலிலிருந்து தெரிந்துகொண்டேன். நான் எழுதும் கடிதங்களும் வாழ்த்து அட்டைகளும் உனக்குக் கிடைக்கிறதா என்று நான் எப்போதோ கேட்டபோது நீ இல்லை என்று சொன்னாய். அதனால் இந்தக் காகிதங்களை நான் நேநோவிடம் கொடுத்து விடலாம் என்று இருக்கிறேன். அவள் எப்படியும் இதை உன்னிடம் சேர்ப்பித்து விடுவாள்.

என் உயிரை மாய்த்துக் கொண்டால்தான் உன் ஞாபக வதையிலி ருந்து மீள முடியும் என்று தோன்றுகிறது. என் ஞாபகத்தையே கொன்றுவிட முடியுமானால் சூன்யத்தின் உள்மௌனத்தில் என்னையே இழந்துவிட முடியுமானால்.

இத்துடன் எனது கவிதைகள். எதுவும் என்னுடையதல்ல. கடன் வாங்கப்பட்ட வார்த்தைகள். உனது பிரியத்தால் உனது பொய்களால் உனது கிண்டலால் கவிதைகளாகியிருக்கின்றன.

இத்தனை நாள் உன்னை வானத்தில் பார்த்தது
இந்தக் கணத்தில் என்னைச் சுற்றி வட்டம் போட்டு
விளையாடிப் பார்க்கிறாய்
கைக்குள் அகப்பட்டுக் கொள்வாயென நெருங்கினேன்
முன்னே முன்னே ஓடி
உன் வட்டத்துக்குள்ளேயே என்னைக் கட்டிப்போட்டு
ஆட்டம் ஆடி
கெக்கலி கொட்டிச் சிரிக்கிறாய்
உனக்கும் எனக்கும் இடைப்பட்ட வெளியைக் கடப்பது
எப்போது
வானத்து நட்சத்திரங்களை
பூமியில் கொட்டி இறைத்த
விளையாட்டுக்காரன் எவன்
கைக்குள் சிக்கவில்லை
இருந்தும்
தன் முதல் கவிதையை எழுதிக் கொண்டிருக்கிறது
மொழி

மொழிக்கு அப்பால்

புட்டிக்குள் அடைப்பட்டிருக்கிறது மொழி
வெளியே வர வேண்டும் ஆனால்
புட்டியை நீ உடைக்கலாகாது

என்றாய்

மரணமுற்று

புழுக்களாய் வெளியேறியது மொழி

என்றேன்

உயிரின் சிதைவு கண்டு

உருகிய நீ

வேறோர் வழியும் உண்டு

என்றாய்

புரியாது குழம்பினேன்

நீயோ மௌனித்துவிட்டாய்

மொழியின் மொழி கவிதை

உனது மொழி மௌனம்

இதோ

இந்தக் கணத்தில்

மிதமான ஸ்காட்ச்

கெனிஜியின் சாக்ஸஃபோன்

தனித்திருக்கிறேன் நான்

இந்த உலகம்

கடல்களாலும் நதிகளாலும்

மரங்களாலும் மனிதர்களாலும்

காற்றினாலும் நிரம்பியிருக்கிறது.

நாலாயிரம் வாசித்தேன்

சித்தனைப் பயின்றேன்

கவிதையெழுத முயன்று

நிறைந்து போயிற்று
சாம்பல் கிண்ணங்கள்
எழுதிய காகிதங்களும்
தொலைந்து போயிற்று
கவிதையெனக்கு வசப்படுமா
எனக் கேட்டவளிடம்
அவன் சொன்னான்
கவிதை கவிதை எழுதுமா
என
இந்த நட்சத்திரம்
இந்தக் கணத்தில் இருக்கிறதா
இல்லையா
இது இறந்து எத்தனை காலமிருக்கும்
இருப்பதும் இல்லாததுமான
முரணில்தான்
நீ
இருக்கிறாயா
புனைவுச் சுடரின்
நிஜ நிழலில்
சிக்கித் தவிக்கும்
எனதுயிரின் துடிப்பைக்
கேட்கிறாயா
வார்த்தைகளால் ஆனது
வாழ்க்கை
வார்த்தைகளால் ஆனது

காதல்
வார்த்தைகளால் ஆனது
மொழி
வார்த்தைகளால் ஆனது
கவிதை
வார்த்தைகளால் ஆனது
உயிர் மூச்சு
வார்த்தைகளால் ஆனது
கண்ணீர்
வார்த்தைகளால் ஆனது
பால்வீதி
வார்த்தைகளால் ஆனது
கலவி
வார்த்தைகளால் ஆனது
ஸ்நேகம் பயம் அன்பு நம்பிக்கை துரோகம்
பசி பட்டினி கொலை குருதி தற்கொலை நிணம்
சளி துவேஷம் சீழ் தியாகம் கற்பு காமம் வலி
சாகசம் வெறி அநுபூதி உல்லாசம் பரவசம்
துக்கம் பித்தம் பிரமை கலை போர் தத்துவம்
ஒளி அறிவு சௌந்தர்யம் இருள் ஆகாயம்
வார்த்தைகளால் ஆனது
குரல்
வார்த்தைகளால் ஆனது
முலை
வார்த்தைகளால் ஆனது

நாபிச் சுழியிலிருந்து கீழிறங்கும் ரோமக்கோடு
ஈரம் பளபளக்கும் உதடு செவ்வரியோடிய
கண் புடைத்துத் தெரியும் பச்சை நரம்பு
பிருஷ்டம் உமிழ்நீர் நுதல் புருவம் கன்னக்
கதுப்பு சுரோனிதச் சுவை கூந்தல் இமைப்பீலி
தோள் தொடை மச்சம் அக்குள் நாசிநுனி கைகளின்
ரேகை இடுப்பின் வளைவு முதுகு செவி மடல்
கணுக்கால் நிதம்பக் குழி விரல் மணிக்கட்டு
பாதம் பின் கழுத்து
வார்த்தைகளால் ஆனது வார்த்தைகளால் ஆனது
வார்த்தைகளால் ஆனது
வார்த்தைகளால் ஆனது
வார்த்தை

எனது ஜன்னலுக்கு வெளியே கடல் இல்லை நிலவோ நட்சத்திரங்களோ மேகக் கூட்டங்களோ இல்லை சூன்யத்தின் மௌனம் ததும்பிய கல்லறைதான் இருக்கிறது எனது பிறந்தநாளில் நீ வருவாயென வாங்கி வைத்திருந்த பூச்செடி என்னிடம் சொன்னது கல்லறைகளின் ஊடாக இருக்கிறது உனது பெயர் பொறித்த கல்லறை என சொல்லிவிட்டு மரித்துப்போன அந்தப் பூச்செடிக்கு நீரூற்றி நீரூற்றி நீரூற்றி நீரூற்றி உயிர்ப்பிக்க முயல்கின்றேன் ஒவ்வொரு இலையாகக் காய்ந்து காய்ந்து வீழ நம்பிக்கை தளராமல் நீரூற்றல் தொடர்கிறது செத்துவிட்ட செடிக்கு நீரூற்றும் பித்தனென நகைக்கின்றான் நண்பன் மரணத்துக்கும் சித்தப்பிரமைக்கும் இடையே ஊடாடிக்கொண்டிருக்கிறது எனதுயிர் ஜன்னல் கம்பிகளுக்குள்ளிருந்து பீடி புகைத்தபடி தேடுகின்றன கண்கள் எனது பெயர் பொறித்த கல்லறையை...

போர்ஹேஸின் கதாபாத்திரம் தேடிச் சென்று
கண்டடைய முடியாத

உலகின் மிகப்பெரிய ஒற்றைச் சொல் கவிதை
நீ
பழமையின் வடுக்களை
அடையாளங் கொண்டிருந்த அந்த
ஓட்டு வீட்டின் திண்ணையில்
அவனை உற்றுப் பார்த்து
முறைத்துக் கொண்டிருந்தது
அளவில் பெரிதானதொரு
பச்சைத் தவளை
விரட்டி விரட்டிப் பார்த்து
சைகை பாஷையின் பொருள்கூட
விளங்காத அந்த அசட்டுத்
தவளையை பிளாஸ்டிக் குவளையால்
மூடினான்
இப்போது
குவளையை நகர்த்திக் கொண்டிருக்கும்
அந்தத் தவளைக்குத் தெரியுமா
சர்ப்பங்கள் ரெண்டு அவனிடம்
அடிபட்டுச் சாக
மூன்றாவது சர்ப்பம்
அடியுடன் தப்பித்து
அவன் மீது
வஞ்சங்கொண்டு அலையும் விஷயம்.
பனங்கையின்
செல்லரித்துச் சிதைந்த

இடுக்கின் வழி சென்று
விரிச்சலுற்றிருந்த சுவரில்
குஞ்சு பொரித்து
கவிதை எழுதிக்கொண்டிருந்த
அவனைப் பார்த்து
இருப்பின் பயங்கொண்டு
வெளிக்கும் உள்ளுக்குமாக
தத்தளித்துக்கொண்டிருந்த சிட்டுக்குருவி
நான் இன்னமும்
இருக்கிறேன் நீ இருக்கிறாயா
எனக் கேட்டு எழுதாமலேயே
காணாமல் போய்விட்ட
சிநேகிதன்
காரணம் சொல்லாமல்
வீட்டுக்கு வருவதைத் தவிர்த்த
சிநேகிதி
சத்தில்லாக் கவிதையெழுதும்
உன்னைச் சீந்த மாட்டேனெனச்
சொல்லிப் புறக்கணிக்கும் மொழி
எழுத நினைத்து
எழுதாமல் விட்ட
கவிதையின் பொருளை
அவளிடம் விளக்க
தன்னிரக்கம் தன்னிரக்கம்
எனச் சொல்லி

தலையிலடித்துக் கொண்டே
ஓடினாள் சிநேகிதி

குட்டி இளவரசியுடன் வழிப்போக்கன் நிகழ்த்திய முடிவற்ற உரையாடல்

காலாதீதத்தின் விளிம்பையும் கடந்த
அனந்தகோடி நிழல்களைக்கொண்டிருந்த
குட்டி இளவரசியிடம் வழிப்போக்கன் ஒருவன்
கேட்டான் எனக்கு உந்தன் நிழலுருவில்
ஒன்றைக் கொடு என
அங்காடி ஏலத்தில் எத்தனையோ
நிழலுருக்கள் உள
உனக்கு இசைவான ஒன்றை
எடுத்துக் கொள்ளென
நகைப்புடன் பகன்றாள்
குட்டி இளவரசி
உன் கரத்தின் தீராத மணம் கொண்ட
நிழலுரு ஒன்று
எனக்கே எனக்கென வேண்டுமென்று
மேலும் சொன்னான் வழிப்போக்கன்
வழிப்போக்கனுக்கெதற்கு
ஸ்தூல அடையாளங்களும்
ஞாபகத்தின் வெறித்தனமும்
எனக் கேட்டாள் குட்டி இளவரசி

பதிலறியும் தருணத்தில்
என் பயணம் முடிந்துவிடும்
அதுவரையேனும்
உனது நிழல் பிரதியொன்று வேண்டும் தா
எனக் கேட்டான் வழிப்போக்கன்
மூலப் பிரதியிடம்
விளக்கம் சொல்ல வேண்டுமேயென
கைகளைப் பிசைந்தாள்
குட்டி இளவரசி
உனக்குப் பிடித்த சங்கீதம்
உனக்குப் பிடித்த கவிதை
உனக்குப் பிடித்த மலர்
உனக்குப் பிடித்த சிநேகிதன்
எல்லாவற்றுக்கும் மூலப் பிரதியிடம்
விளக்கம் சொல்ல முயலாதே
உனக்கான வெளியில்
உனக்கான காலத்தில்
உனக்கான காற்றை சுவாசித்து
உனக்கான வாழ்வை
நேசித்தலின் பொருள் வழங்குதல்
என்றது சாமுண்டி
இசைப் பேழைகளையும்
இனிப்பு மிட்டாய்களையும் வழங்கினான்
கலகலவென நகைப்பொலி கேட்டு
வெட்கித்து அதனிடம் கேட்கலானான்

இரைச்சல் மிகுந்த
ஆரவாரங்கூடிய
அர்த்தமற்ற
ஊதிப் பெருத்த
என் வார்த்தைகளைத் தவிர
வேறு எதை வழங்க முடியும்
என் குட்டி இளவரசிக்கு
பூர்ணத்துக்கு வழங்க
சூன்யத்திடம் ஏதுமுண்டா
அண்டத்துக்கு வழங்க
பிண்டத்திடம் ஏதுமுண்டா
வழங்குதலின் பொருள் புரியா
அவனிடம் சாமுண்டி சொன்னது
வழங்கு அவளுக்கு
உனது கனவுகளை
உனது கண்ணீரை
உனது புன்னகையை
உனது மௌனத்தை
உன்னை
சூன்ய வித்தையை
என் மீது ஏவி விட்டிருக்கும்
சூன்யக்காரி நீ
நீர்வழிப்படூஉம் புணையாய்
மிதந்து கொண்டிருக்கும் நீதான்
என் உருமாற்றத்தையும் நிகழ்த்தியிருக்கிறாய்

இப்போது
அதீத நேசம் உனைக் கொல்லும்
என்னைத் தொடராதே என்கிறாய்
பட்டுப் போய்விட்ட செடிக்காகவும்
துக்கித்துக் கதறும்
எனது இருப்பில்
உனது பிம்ப நிழல்கள் படிந்திருக்கின்றன.
என்னை நீ நேசிக்கவில்லையா
எனக் கேட்டேன்
இல்லையெனச் சொன்னது
உனது குரல்
எனது கண்களைப் பார்த்து
இதைச் சொல்வாயா
பதிலொன்றும் சொல்லாமல்
கேவலுடன்
கண்ணாடியுள் சென்று
கனவாய்
ஒளிந்து விட்டாய்
கண்ணாடியுள்ளிலிருந்து
உனை விடுவிக்கும்
மாயாஜாலமேதும் அறியாத நான்
உனது மௌன இரைச்சல்
செவிகளில் கிழிபட
உன் ஞாபகங்களற்று
மலையடிவாரமாய் நீண்டிருக்கும்

எனது தனிமையின் வாடை படிந்த
நிலவெளி ஒன்றுக்குக்
கிளம்ப யத்தனித்தேன்
கிளம்பும் வேளையில்
நரம்புகள் அதிர்ந்தன
குருதி நாளங்கள்
வெடித்துத் தெறித்தன
எலும்புகளைத் துளைத்து
ஊருடுவியது வலி
சுயத்தின் இருப்பை
உன் கருவிழி வளையத்துள்
தொலைத்து விட்ட பின்
பிரிவது எங்ஙனம்
அண்டப் பெருவெளியில்
மிதக்கும் துகள்களின்
சந்திப்பு
காலவெளிப் புள்ளியொன்றில்
நிகழ
ஆளற்ற ரயில் நிலையத்தில்
சிமெண்ட் பெஞ்ச் ஒன்றில்
நீ தனித்திருக்கிறாய்
மற்றொரு பெஞ்சில் அமர்ந்து
கவிதையெழுதிக் கொண்டிருக்கும் நான்
பார்வைகள் சந்தித்தும்
அடையாளங் காண்பதில்லை நீ

எழுந்து நின்று
பிளாட்பாரத்தின் விளிம்பு வரை சென்று
திரும்பி வந்து அமர்கிறாய்
ஏனிந்தப் பதற்றம்
காத்திருத்தலின்...
முடிக்கவில்லை நீ
காத்திருத்தலின் காரணத்தில்
பதியவில்லை மனம்
கவிதை தொடர்கிறது
காத்திருத்தலும்
பதற்றமும்
கவிதையே நிஜமாகி
நிஜத்தைக் கனவாக்கியது
நிஜமா
நிஜத்தின் நிழலா
நிழலின் கனவா
கனவின் கவிதையா
ரயில் நிலையத்தை
யாரோ
இடித்துப் போட்டிருக்கிறார்கள்
அழுது அழுது
ஓயவில்லை கவி
இருப்பே இல்லாது போகுமோ
என
கருத்த நிறத்தில்

குட்டி குட்டியாய்
முயல்ரோம மென்மை கொண்டிருக்கும்
முளைக்கீரை விதைகளை
அளைந்து அளைந்து பழகும் கைகள்
ஸ்பர்ஸத்தின் காமப்பரவசம்
விரல்களில் பரவ
கடல் மணலில்
வெறும் காலில் நடந்திருக்கிறாயா
மழைத்துளியின்
ஊசிமுனைக் குத்தல்
உன் மேனியில் உணர்ந்திருக்கிறாயா
தக்காளிச் செடியின் வேருக்கருகில்
பன்றி எருவைப் போடுகிறான் சிறுவன்
வேலியற்ற தோட்டத்தை
ஹதம் செய்தன ஆடுகள்
இளமையில் கண்டது
இருப்பின்மையின் அபத்தம்
ரயில் நிலையத்தை
யாரோ
இடித்துப் போட்டிருக்கிறார்கள்
ஏகாந்தத்தின் விளிம்பில்
வட்டமடிக்கும்
ஒற்றைப் பறவை
மலையடிவாரத்தில் மறையும்
சூர்யன்

கூட்டுக்குத் திரும்பும்
பட்சிகளின் சப்தம்
சர்ப்பங்களாய் நீண்டு ஓடும்
தண்டவாளங்கள்
தக்காளிச் செடியின்
மணத்தில்
ஜெனீயின் ஞாபகம்
கனவாய் ஒளிர்கிறது
என்பதாக
கவிதை
தன் முதல் வாக்கியத்தை
எழுதத் துவங்குகிறது

மரண வெளிக் குறிப்புகள்

எனக்கென கிடைத்த
பதுங்கு குழியில்
உறக்கமும் விழிப்புமற்ற நிலையில்
மூழ்கிக் கிடந்து
யானியின் இசை வழி மேலேறி
வெளிப் போந்தேன்
முன் மதியத்தில்
திண்ணையொன்றில் அமர்ந்திருக்கும் சிறுவனாய்
வெயில் காய்ந்து கொண்டிருக்கிறது

தன் காதலனை முத்தமிட்டபடி
சிதறிக் கிடக்கும் ஒரு
பெண்ணின் சடலம்
நட்சத்திரங்களற்ற
ஒற்றை நிலவாய்
தனித்துக் கிடக்கிறது
குழந்தையின் கொலுசு ஒன்று
சிதறுண்ட முகமொன்றில்
விறைத்துக் கிடந்த விழிகள்
தொலைதூரத்து நாயின் ஊளை
உறைந்து கிடக்கும் குருதிப் படலம்
உனது
காலத்தைக் கவிதையில் பிடி
என்றது குட்டி இளவரசியின் குரல்
காலத்தை கவிதைகளில் பிடிக்கலாகுமா
உயிர்ச்சடலங்கள் இலக்கற்று
நடந்து கொண்டிருக்கும் காலமிது
தலையற்ற முண்டமொன்றில்
குத்திட்டு நின்ற
ஆண்குறி கண்டு
விக்கித்து ஒதுங்கினேன்
காதலைப் பாடும்
முட்டாள் கவிகளின்
ஆணுறுப்புகளை அறுத்தெறியுங்கள்
எனக் கோஷமிட்ட பெண்ணியவாதியின்

ஞாபகம் தொற்ற
நடை துரிதமாயிற்று
என் குட்டி இளவரசியின்
காலடித் தடங்களின் கீழே
புதைந்துவிட விருப்பமுற்று
அவளின்
பூமியின் ஈரம் தோய்ந்த
சுவாசக் காற்று
இந்தப் பிரேத வெளியில்
கலந்து கிடப்பதாய்
பாவனைகொண்டு
தேடலுற்றபோது
சவங்களினூடே
குழந்தையொன்று
அழுதபடி
தவழ்ந்து வரக் கண்டேன்

ப்ரணயச் சதி

அன்றொரு நாள்
ஊமைச் சோதிடன் ஒருவன்
சைகையில் சொன்னான்
நீ உன்னையும்
உனது பிரதிகளையும்

மறுதலிப்பாய்
கவிதை செத்துவிட்டதெனச்
சொல்லும் நீ ஒருநாள்
கவிதையில்
வாழ்வாய்
என
காரணமேதும் சொன்னானில்லை
இற்றைத் திங்கள்
எனதுயிரும் குருதியும்
கவிதையாகிறது
எனச் சொன்னால்
நைந்துபோன வார்த்தைகளால்
கொல்லாதேயென
நகைப்பாய்
உனது மௌனமா
எழுத்தா
வியப்புற்று விரியும்
கண்களா
உனது புதிர் வட்ட ஞாபகப்
பாதையிலிருந்து பரவும்
காந்த அலைகளா
என் சூன்யம் நிரப்பி
கவிதையெழுதுவதுயெது
நீயென்பது நீயா
சாமுண்டியா

பௌதிகமழிந்த
சூட்சுமக் குறியீடா
பித்தனின் பிதற்றலென
நகைக்காதே
எனது மரணத்தை
கவிதையால்
ஒத்திப் போடுகிறேன்
முந்தின பிறவியில் நீ என் காதலியாக இருந்தாய்
அதற்கும் முந்தின பிறவில் நீ என் தாயாக
இருந்தாய் அதற்கும் முந்தின பிறவியில் நீ என்
சகோதரியாக இருந்தாய் அதற்கும் முந்தின
பிறவியில் நீ என் சாமுண்டித் தெய்வமாக இருந்தாய்
அதற்கும் முந்தின பிறவியில் முந்தின பிறவியில்
முந்தின பிறவியில்
யுக யுகாந்திரமாய் நான் உன்னை நேசித்துக்
கொண்டிருக்கிறேன்
நீ என்னிடம் சொன்னாய் அடுத்த பிறவியில்
நான் உனக்கு மகளாய்ப் பிறப்பேன் என
நம்பிக் கிடந்தேன்
பிறக்கப் போகும் மகளைப் பற்றி
நட்சத்திரங்களிடம் சொல்லி வைத்திருந்தேன்
நிலவிடமும்தான்
முதுகில் உனைச் சுமந்தபடி
வனங்களில் திரிவதாக
கற்பிதங் கொண்டிருந்தேன்

என்னைச் சுமப்பதால் உன் முதுகு பலப்படும் என
என் செவிகளில் நீ கிசுகிசுத்து நகைப்பதாய்
கனவு கண்டிருந்தேன்
இயற்கையின் கோர விளையாட்டில்
ஜனிக்கும்போதே சுவாசத்தைத்
தொலைத்துவிட்டு மரணித்துக் கிடக்கிறாய்
மூடிக் கிடக்கும் உன் பச்சிளம் விரல்களை
முத்தமிட்டேன்
கண்ணாடித் துண்டினால்
எனதுடலைக் கிழித்து
கொப்பளித்து வழியும் குருதியினால்
உன்னைக் குளிப்பாட்டினேன்
எனது ஒற்றைக் கண்ணைப் பிடுங்கி
உனது மூடிய விரல்களுக்குள் பொதித்தேன்
மரணித்தே பிறந்தாலும்
பூமிக் கருவறைக்குள்
உன்னை இறக்கும் முன்
நான் உனக்கொரு பெயரிட்டாக வேண்டுமென
மூதாதையர் குரல் ஒலிக்க
திடுக்கிட்டேன்
என்ன பெயர் வைக்கலாமென
யோசித்துக் குழம்பினேன்
வழிப்போக்கனாய் வந்த கடவுள் சொன்னான்
உன் பெயர் ஜெனஸிஸ் என
ஜெனீ ஜெனீ ஜெனீ ஜெனீ

ஜெனீ ஜெனீ ஜெனீ ஜெனீ

ஜெனீ

உச்சி முதல் பாதத்தின் விளிம்பு வரை

முத்தித்துக் கதறினேன்

உன் திருப்பவள வாய் திறந்து

என் பேர் சொல்லி அழைப்பாயோ

கமலக் கண் திறந்து

எனைக் காண்பாயோ

திருமலர்ப் பாதத்தால்

எனை உதைப்பாயோ

உன் தீண்டலின் சுகமும்

பவளவாய்ச் சுவையும்

என் ஞாபகம் பற்ற

ரணத்தின்

வலியில்

கதறலானேன்

சாமுண்டியைக் குறித்து மகளுக்கு கவிஞன் சொன்ன கதை

மரணித்துக் கிடந்தவனின்

சூன்யவெளியை நிரப்பிய மொழி

அவன் தசைத்திணுக்களை

கவிதையாய் மாற்றிவிட்டு

மௌனப் பாறையாய்

உறைந்து போயிற்று
நூற்றாண்டு வாதை
நெருப்புக் குழம்பாய்
மௌனப் பாறையுள்
மையங் கொண்டிருந்தது
சூன்யமொழி
சீழ்பிடிக்க
ஒற்றைக் கண்ணிலிருந்து
ஒழுகியது
கவிதை
விருச்சிகம் வயிற்றில் கவ்வ
மரணவாதையின் விளிம்பில் நின்று
ஒற்றைக் கண்ணைப்
பிடுங்கி எறிந்தான்
தூள் தூளாய் வெடித்துச் சிதறியது
பாறை
பாறைக் குடைவின்
இருள்களினூடே
ரயிலில் பயணித்துக்கொண்டிருந்த
சோதிடன் சொன்னான்
அவள்
இந்த உலகத்திற்கு
கடவுளால் வழங்கப்பட்ட
கொடை
என

மெய் தொட்டுப் பயில்தல்

சூன்யத்தில்
சூன்யம் கொண்டிருந்தாள்
சக்தி
சூன்யச் சுமை கனக்க
வாதை தவிர்க்க
அண்டமும் பிண்டமும்
ஆக்கினாள்
கிரகங்களும்
நட்சத்திர மண்டலங்களும்
அக்னியும்
கடலும்
காற்றும்
மண்ணும் மலரும்
வனமும் பாலையும்
மிருகங்களும் பட்சிகளும்
அநேகம் அநேகம்
ஆக்கினாள் சக்தி
வனத்தில் திரிந்தாள்
கடல்களின் கரைகளில்
தனித்து அமர்ந்திருந்தாள்
நட்சத்திரங்களைத் துணைக்கழைத்தாள்
சூன்யப் பாலையின்
பாழ்வெளி வாதை

சேதனமும் அசேதனமும்
உதவிக்கு வாராதெனப் புரிதலுற்று
ஆணைப் படைத்தாள்
அவனும் உடன் வர
வனங்களில் திரிந்தாள்
கடல்களின் கரைகளில்
அவனோடு அமர்ந்திருந்தாள்
நட்சத்திரங்களைக் காட்டினாள்
பொருள் விளங்கா
ஜடத்துணையை விட்டுவிட்டு
வனமேகிய ஒருநாள்
அந்திப் போதில்
சர்ப்பங்கள் ரெண்டு
கலவியுற்றுக்
கூடிக் கிளர்ந்தன
அண்ட சராசரமும்
கிடுகிடாய்த்துப் போக
ஊழிப்புயலோ
பரவசத் தாண்டவமோ
பேரழிவுக் கூத்தோ
என வியந்து
சூன்யப் பாலையின்
காரணம் புரிந்து
ஆணை அழைக்கலானாள்
கலவி கொள்ளலாமென

பீதியுற்று மறுத்தான்
ஆணாகப்பட்டவன்
சலிப்புற்று சக்தி
வேறொர் ஆணைப் படைத்து
அவனை அழைக்கலானாள்
சர்ப்பங்களின் கதையைச் சொல்லி
கலவி கொள்ளலாமென
கூடித் திளைக்கலாமென
அவனும் பீதியுற்று
விலகிச் செல்ல
மூன்றாவது ஆணும்
படைக்கப்பட்டான்
அழைப்புக்கு மறுத்து
ஓடிப் போனான் அவனும்கூட
இருப்பின் தனிமை நொந்து
விலகிச் சென்றாள் சக்தி
மூன்றாமவன் முதலாமவனிடம்
கூறலானான்
முத்தொழில் புரிந்து
வல்லமைதனை
தன்னில் கொண்டிருக்கும்
சக்தியைப் புணர்
சக்தியை அபகரி
சக்தியற்றவளாக்கு
சக்தியைப் புணர்ந்து

தந்திரம் புரிந்து
முத்தொழில் சக்தியை
ஏமாற்றிப் பிடுங்கி
பகிர்ந்து கொண்ட
ஆண்கள் மூவரும்
முத்தொழில் புரிந்து
களைப்புற்றுத் திரும்பி
சக்தியிடம் வினவியது
சப்பாத்தி எங்கேயென
இன்றைய தினம்
விசேஷித்த தினம்
கடவுள் தனது குட்டி இளவரசியை
உலகிற்கு வழங்கிய தினம்
அறிந்தவர்களுக்கும்
அறியாதவர்களுக்கும்
வழங்குவதற்கு ஏதுமற்ற
வனவாசி
நிலவிடம் கேட்டான்
குட்டி இளவரசிக்கு
வழங்க
என்னிடம் ஏதுண்டா
குட்டி இளவரசியின்
கோபத்திற்கு ஆளாகாதே
என எச்சரித்தது நிலவு
எச்சரிக்கைகள் பொருட்படுத்தக் கூடியவையல்ல

என முணுமுணுத்தன
வனவாசியின் உதடுகள்
இதோ
இந்தத் தினம்
இந்தத் தருணம்
இந்தப் பொருள்
எந்தவித அடையாளத்தின்
குறியீடும் அல்ல
அற்புதம்
எளிமை
உன் பாதத் தூளி பட்ட
தூசு

35

இது நாவலா நாவலுக்கான குறிப்புகளா நேநோ முனியாண்டி சூர்யா மிஸ்ரா கி.பி. ஒன்பதாம் நூற்றாண்டு செத்த மூளை தாயுமானவன் ஜெனஸிஸ் நீனா ஷிரீன் அவந்திகா ஃபக்ருன்னிஸா ஆர்த்தி கோட்டிக்குப்பன் ஆனந்தசாமி திருமலை உத்தமத் தமிழ் எழுத்தாளன் மோனிகா தீப்தி கவிதா எல்லாம் வெறும் பெயர்களா வெறும் குறிப்புகளாய் சிதறிக் கிடக்கும் இந்தக் காகிதங்களில் கற்பிதமாகப் படைக்கப்பட்ட கதாபாத்திரமான நேநோ முனியாண்டியை நோக்கிக் கேட்டாள் நீ உன்னை உருவாக்கியதன் மூலம் உன் தடயத்தை இங்கே விட்டுச் செல்ல விரும்புகிறாயா அவன் ஞாபகத்தில் கடந்த காலத்தின் சுவடுகள் பதிவதில்லை எதிர்காலம் குறித்த எவ்விதக் குறிப்புகளும் கிடைப்பதில்லை அவன் எப்போதுமே பூஜ்ய கணத்திலேயே இருந்து கொண்டிருக்கிறான் எண்ணற்ற எண்ணற்ற புள்ளிகளாலான கோட்டில் கண்ணுக்குப் புலப்படாத ஏதோ மாயப்புள்ளியாய் நகர்கிறது இக்கணம் இத்தனை பக்கங்களையும் நீ பொறுமையாய் வாசித்து வந்திருக்கிறாய் இதை நீ வாசித்துக் கொண்டிருக்கும் தருணத்தில் நான் இமயமலைப் பனிச் சிகரங்களினூடே நகர்ந்து கொண்டிருப்பேன் உன்னைப் பிரியப் போகிறேன் உணர்வுகளின் ஆதிக்கத்திலிருந்து வெளியேறி விட்டதால் உன்னைப் பிரியும் துக்கமில்லை என்ன செய்வது இந்தக் காகிதங்களில் சிதறிக் கிடக்கும் வார்த்தைக் கூட்டங்களுக்கிடையே முடிவுறாத அர்த்தத்தைத் தேடிச் செல்ல முடியும் இக்குறிப்புகளை முடிக்க நினைக்கிறேன் முடிவுறாமல் தொடர்கிறது வார்த்தை உன்னுடன் நான் நிகழ்த்தும் இந்த உரையாடல் முடிக்கப்படாமல் வேறு புள்ளி இதைத் தொடரலாம் அல்லது

பனிச் சறுக்கு விளையாட்டு நடந்துகொண்டிருக்கிறது 189 மீட்டர் தூரத்தைத் தாண்டுகிறான் ஸ்டைனர் 1 இன்னும் 9 மீட்டர் அதிகம்

தாண்டியிருந்தால் அவன் இறந்திருக்கக் கூடும் ஆனால் அது உலக சாதனை

நான் அண்டங்காக்கை வளர்த்து வந்தேன் திடீரென்று அதற்கு சிறகுகளெல்லாம் உதிர்ந்துவிட்டன அப்போது அது தனியாக மொட்டை மாடியில் உலவிக் கொண்டிருந்தபோது மற்ற அண்டங்காக்கைகள் எங்கிருந்தோ வந்த அதைத் தாக்கத் துவங்கின எவ்வளவோ விரட்டியும் அண்டங்காக்கைகள் என் காக்கையை விடவில்லை பாய்ந்து பாய்ந்து கொத்தின உள்ளே போய் என் துப்பாக்கியை எடுத்து வந்து என் காக்கையைச் சுட்டுவிட்டேன் இந்த உலகில் நான் தனியாக இருக்க விரும்புகிறேன் மனிதர்கள் எனக்கு அச்சமூட்டுகிறார்கள் இந்தப் பனிச் சிகரங்கள் என்னை அரவணைத்துக்கொள்கின்றன

ஆஸ்திரியாவின் காரகோரம் மலைத் தொடர்ச்சியில் தனியாக ஏறிக் கொண்டிருக்கிறான் அவன்[2] மலையேறுவது அவனுக்குப் பிடித்திருக்கிறது செங்குத்தான பனிப்பாறைகளில் ஏறி சிகரத் தைத் தொடுவதுதான் அவன் வாழ்க்கை வாழ்நாள் முழுவதும் சிகரங்களை நோக்கிப் பனிப்பாறைகளில் ஏறிக்கொண்டே இருக்க விரும்புகிறான் இந்தச் சிகரம் முடிந்ததும் அடுத்த சிகரம் அந்தச் சிகரம் முடிந்ததும் அதற்கடுத்த சிகரம்

ஆகாயத்தை நோக்கிச் சென்று கொண்டிருக்கிறது பனிமலை பதினெட்டாயிரம் அடி என்பது வெறும் எண்ணிக்கை ஆனால் இதோ என் கண் முன்னால் ஆகாயமும் கடலும் மலையும் நகர்ந்து நகர்ந்து சென்று கொண்டிருக்கின்றன மறிமான் கூட்டங்கள் ஆட்டு இனத்தையும் சாராமல் மான் இனத்தையும் சாராமல் இந்தப் பனிப்பாலைகளைக் கடந்து ஓடிக்கொண்டிருக்கும் antelopesக்கு மறிமான் என்று பெயர் வைத்து யார்

எத்தனை நாட்கள் கடந்திருக்கும் என்ற

கணக்கு தப்பிவிட்டது

மறிமான் கூட்டங்கள் அலை அலையாய் நிழல்

ரூபமென பாய்ந்து சென்று கொண்டிருக்கின்றன

1. The great ecstacy of Sculptor Steiner Film by Werner Herzog

2. Renhold Messner in The Dark Glow of the Moutains Film by Werner Herzog

பனிச்சிகரங்களில் லயமாகி நிற்கிறேன்
நிசப்தம்
வார்த்தைகள் அற்றுப்போன ஏதுமற்ற
சூன்யம்
கருந்துளைக் கணம்
புறச்சூழலின் மிதக்கும் நுரைத்தன்மையிலிருந்து
விலகிவிடத் துடிக்கிறேன்
இந்த வாழ்வின் அத்தனை வார்த்தைகளையும்
தள்ளிவிட்டு இதோ இங்கே மண்டியிட்டு
நிற்கிறேன் உன்னை நேசித்தபடி
இந்தக் கணத்தில் சுவாசமும் உறைந்து
போகுமோ
சொல்

ஸீரோ டிகிரி

Zero Degree

by Charu Nivedita©

Kizhakku First Edition: December 2012
Previous Edition: 1998, 2002, 2006,
264 Pages

e-ISBN: 978-81-8493-849-4

This digital edition published in 2013 by

Kizhakku Pathippagam
177/103, First Floor, Ambal's Building,
Lloyds Road, Royapettah,
Chennai 600 014, India.
Ph: +914442009603

Kizhakku Pathippagam is an imprint of New Horizon Media Pvt. Ltd.

Email: support@nhm.in
Web: www.nhmreader.in

First published in print in: 1998

All rights relating to this work rest with the copyright holder. Except for reviews and quotations, use or republication of any part of this work is prohibited under the copyright act, without the prior written permission of the publisher of this book.

This e-book is sold subject to the condition that it shall not, by way of trade or otherwise, be lent, resold, hired out, or otherwise circulated without the publisher's prior written consent in any form of binding or cover other than that in which it is published. No part of this publication may be reproduced, stored in or introduced into a retrieval system, or transmitted in any form or by any means, whether electronic, mechanical, photocopying, recording or otherwise, without the prior written permission of both the copyright owner and the above-mentioned publisher of this book. Any unauthorised distribution of this e-book may be considered a direct infringement of copyright and those responsible may be liable in law accordingly.
All rights relating to this work rest with the copyright holder. Except for reviews and quotations, use or republication of any part of this work is prohibited under the copyright act, without the prior written permission of the publisher of this book.